ஸ்ரீகுரு ஜகன்னாததாஸரின்
ஸ்ரீராகவேந்திர விஜயம்

தமிழில் அர்த்த விளக்கங்களுடன்
எழுதி வெளியிட்டவர்:

‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
380, 2A Main, 16th Cross, JP Nagar 4th Phase
Bengaluru : 560078
https://jagannathakesava.blogspot.com
httis://dasa-sahitya.blogspot.com
Ph: 8904458276. haridasa.vijayam@gmail.com

ஸ்ரீகுரு ஜகன்னாததாஸரின்
ஸ்ரீராகவேந்திர விஜயம்
தமிழில் அர்த்த விளக்கங்களுடன்

ஸ்ரீஹரிவாயு குருகளின் அருளால், ஸ்ரீபுரந்தரதாஸரின் ஆராதனை நாளான, புஷ்ய அமாவாசை, 21-01-2023 அன்று இந்த புத்தகம் பகவந்தனின் பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

தமிழில் உரை எழுதி வெளியிட்டவர்:

ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
பெங்களூரு
Ph: 89044 58276
haridasa.vijayam@gmail.com

இந்தப் புத்தகம் வெளிவருவதற்கு பொருளுதவி புரிந்த அனைத்து ஹரிபக்தர்களுக்கும் நன்றிகள்.

ஶ்ரீகுரு ஜகன்னாததாஸரின் ஶ்ரீராகவேந்திர விஜயம்

முன்னுரை

ஶ்ரீகுரு ஜகன்னாததாஸர்
(கோஸிகி தாஸர் – 1837 – 1918)

குரு பூர்வ ஜகன்னாத தாஸாஸ்யமித தேஜஸ: |
தஸ்ய பாதாப்ஜ ஸம்பூத ரஜாம்ஸி ஷிரஸாவஹே ||

ஒந்தின கனஸினலி அப்பா ஹாகு அண்ணனவர தர்ஷன
அந்தெ அனு நயதி அண்ணனவரிந்த பாட பிரவசன
தந்தெ குருகோபால விட்டலதாஸரிந்த அங்கித ப்ரதான
முந்தெ குரு ஜகன்னாத விட்டலனெந்து அபிதான
திந்த ஸ்துதிஸிஹரு தேவ மங்களாங்க ஹரி விட்டலன ||

இயற்பெயர் : ஸ்வாமிராய ஆச்சார்
பெற்றோர் : வெங்கடகிரி ஆசார்ய & ஸீதம்மா
பிறந்த இடம் : கௌஷிகி (மந்திராலயம் அருகில்)
வாழ்ந்த இடம் : கௌதள (ராய்ச்சூர் அருகில்).
ஆராதனை : ஆஸ்விஜ பகுள பிரதமை
உபதேச குரு : ஶ்ரீகிருஷ்ண தாஸர். இவரது அங்கிதம் தந்தெ கோபாலவிட்டல.
சிஷ்யர்கள் : ஶ்ரீவரத விட்டலா, ஶ்ரீனிவாஸ விட்டலா, ஆனந்த விட்டலா.
சமகால யதிகள் : ஶ்ரீஸத்யஞான தீர்த்தர். ஶ்ரீவித்யா ரத்னாகர தீர்த்தர்
சமகால ஹரிதாஸர்கள்: மொதகலல்லு ஶ்ரீசேஷதாஸர். ஶ்ரீகுரு பிராணேஷ தாஸர்.

குருராயரின் அத்யந்த பக்தராக இருந்த ஸ்ரீகுருஜகன்னாத தாஸர், தமது வாழ்க்கையில் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியுள்ளார். குருராயரின் மேல் பல்வேறு பாடல்களைப் பாடி அவரை போற்றியுள்ளார்.

ராகவேந்திர விஜயம் பற்றிய குறிப்பு

ராக[4]வேந்தி[3]ரர விஜய பேளுவெ
ராக[4]வேந்தி[3]ரர கருண ப[3]லத[3]லி
ராக[4]வேந்தி[3]ரர ப[4]குதராத[3]வரித[3]னு கேளுவுது[3] ||

என்று மூன்று வரிகளில் ஒரு பல்லவியையும், தொடர்ந்து 9 ஸந்திகளில், மொத்தம் 232 பாமினி ஷட்பதி பத்யங்களையும் கொண்டுள்ளது இந்த தீர்க்க கிருதி.

ஸந்தி 1 :
பிரார்த்தனை வடிவமாகவும், சம்ஸ்கிருத ராகவேந்திர ஸ்தோத்திரத்தின் மொழிபெயர்ப்பாகவும் இருக்கும் இந்த முதல் ஸந்தியில் 15 பத்யங்கள் இருக்கிறது.

ஸந்தி 2 :
பிரகலாத சரித்திரம். பூதேவியின் வேண்டுகோளின்படி பிரம்மன் ஸ்ரீஹரியை வேண்டுதல், ஸ்ரீஹரி தான் அவதாரம் எடுப்பதாக வாக்களித்தல், சங்குகர்ணனை முன்னதாக அனுப்புதல், பிரகலாதனின் அவதாரம், பின் அவருடைய வேண்டுதலின்படி நரசிம்ம அவதாரம், ஹிரண்யகசிபுவின் வதம், பிரகலாதரின் அரசாட்சியின் சிறப்புகள், அவருடைய பொன்மொழிகள் / உபதேசங்கள், பின் தாஸரின் பிரார்த்தனை ஸ்லோகங்கள் என மொத்தம் 32 பத்யங்கள் இந்த சந்தியில் உள்ளன.

ஸந்தி 3 :
ஸ்ரீவ்யாஸதீர்த்தர் பிறந்த பன்னூர் கிராம வர்ணனை; அவரின் பெற்றோர் அறிமுகம்; ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் பன்னூருக்கு வருகை; இவர்களுக்கு ஆசிர்வாதம்; அந்தப் பெண்

(ஸ்ரீவ்யாஸதீர்த்தரின் பூர்வாசிரம தாய்) கர்ப்பவதி ஆகுதல்; அவருடைய நிலையை (கர்ப்பத்தில் குழந்தை இருந்தபோது) மிகவும் அழகாக வர்ணித்தல்; பின் வ்யாஸதீர்த்தரின் அவதாரம்; ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் குழந்தையை அழைத்துச் சென்று வளர்த்தல்; அக்குழந்தையின் பால லீலைகள் என 32 பத்யங்கள் இந்த சந்தியில் உள்ளன.

ஸந்தி 4 :
ஸ்ரீவ்யாஸராஜர் பெரியவராகி ஸ்ரீஸ்ரீபாதராஜரிடம் கல்வி கற்றல்; ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் பிருந்தாவனஸ்தர் ஆதல்; ஸ்ரீவ்யாஸராஜர் தம் சிஷ்யர்களுக்கு பாடம் எடுப்பதான ஸ்ரீமதாசார்யரின் தத்வங்கள் என 26 பத்யங்களில் இந்த சந்தி 4 இருக்கிறது.

ஸந்தி 5 :
ஸ்ரீவ்யாஸராயரின் மகிமைகள் இந்த சந்தியிலும் தொடர்ந்து விளக்கப்பட்டுள்ளன. அவர் வ்யாஸத்ரய கிரந்தங்களை இயற்றுதல், அவற்றின் சிறப்புகள், பத ஸுளாதிகளை இயற்றுதல், அவருக்கு ஸ்ரீகிருஷ்ணனே வந்து அங்கிதம் அளித்தல்; கனகதாஸரின் அறிமுகம்; ஸ்ரீவ்யாஸராயரின் உபதேசம்; கோணவின் செயல்கள்; திருப்பதியில் 12 ஆண்டுகள் பூஜை; கிருஷ்ணதேவராயரின் சபையை அலங்கரித்தல்; யந்த்ரோத்தாரக ஹனுமந்தனை நிறுவுதல் ஆகியவற்றை இங்கு பார்க்கலாம். 24 பத்யங்கள்.

ஸந்தி 6:
ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமைகள் மேலும் இந்த சந்தியில் தொடர்கின்றன. துவக்கத்தில் ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீபுரந்தரதாஸர், ஸ்ரீகனகதாஸர் ஆகியோர் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவத்தை விளக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர். 29 பத்யங்கள்.

ஸந்தி 7:
ஸ்ரீராயரின் மகிமைகள், பல்வேறு உதாரணங்களுடன் / ஒப்பீடுகளுடன் இந்த சந்தியில் விளக்கப்பட்டுள்ளது. 25 பத்யங்கள்.

ஸந்தி 8:
ஸ்ரீராயரின் நற்குணங்கள் மகிமைகளை, பலவித உதாரணங்கள் / ஒப்பீடுகளுடன் இந்த சந்தியில் மிகவும் அற்புதமாக விளக்கியுள்ளார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர். 23 பத்யங்கள்.

ஸந்தி 9:
ஸ்ரீராயரின் மகிமைகளை பல்வேறு உதாரணங்கள் / ஒப்பீடுகளும் இந்த கடைசி சந்தியில் செய்திருக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர். 24 பத்யங்கள்.

இத்தகைய அற்புத கிருதியை நமக்குக் கொடுத்த ஸ்ரீகுருஜகன்னாத தாஸரை வணங்கியவாறு, இந்த ராகவேந்திர விஜயத்தை படித்து, ஸ்ரீகுருராயரின் அருளையும் வேண்டிக் கொள்வோம்.

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
89044 58276

பெங்களூரு
10-01-2023

ஶ்ரீகுரு ஜகன்னாததாஸரின் ஶ்ரீராகவேந்திர விஜயம்

ஶ்ரீகுரு ஜகன்னாததாஸர் (கோஸிகி தாஸர் – 1837 – 1918)

குரு பூர்வ ஜகன்னாத தாஸாஸ்யமித தேஜஸ: |
தஸ்ய பாதாப்ஜ ஸம்பூத ரஜாம்ஸி ஷிரஸாவஹே ||

ஒந்தின கனஸினலி அப்பா ஹாகு அண்ணனவர தர்ஷன
அந்தெ அனு நயதி அண்ணனவரிந்த பாட பிரவசன
தந்தெ குருகோபால விட்டலதாஸரிந்த அங்கித ப்ரதான
முந்தெ குரு ஜகன்னாத விட்டலனெந்து அபிதான
திந்த ஸ்துதிஸிஹுரு தேவ மங்களாங்க ஹரி விட்டலன ||

சந்தி - 1

சந்தி 1ன் விஷய சுருக்கம்:
ஶ்ரீஅப்பண்ணாசார்யரின் ஶ்ரீராகவேந்திர ஸ்தோத்திரத்தின் தமிழாக்கமாகவே இந்த முதல் சந்தி இருக்கிறது. அதில் உள்ள பல விஷயங்களை இங்கு சொல்லி, ஶ்ரீராயரின் மகிமைகளை விளக்கி, பிரார்த்தனை ரூபமாக இந்த ஶ்ரீராகவேந்திர விஜயத்தை துவக்குகிறார் ஶ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ராக^{4}வேந்தி^{3}ரர விஜய பேளுவெ
ராக^{4}வேந்தி^{3}ரர கருண ப^{3}லத^{3}லி
ராக^{4}வேந்திரர ப^{4}குதராத^{3}வரித^{3}னு கேளுவுது^{3} ||

ராகவேந்திரர விஜய பேளுவெ - ஶ்ரீராகவேந்திரரின் வரலாற்றினை / மகிமைகளை கூறுவேன்; ராகவேந்திரர கருண பலதலி - ஶ்ரீராகவேந்திரரின் அருளாலேயே; ராகவேந்திரர பகுதராதவரு -

ஸ்ரீராகவேந்திரரின் பக்தர்கள் அனைவரும்; இதனு கேளுவுது - இதனை கேளுங்கள்.

ஹரிகதாம்ருதஸார பல்லவியைப் போலவே இங்கும் மூன்று வரிகளில் ஒரு பல்லவியைக் கொடுத்துள்ளார் ஸ்ரீதாஸர். இதனை ஒவ்வொரு சந்தியின் துவக்கத்திலும், முடிவிலும் சொல்வது வழக்கமாக உள்ளது.

ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மகிமைகளை நான் கூறுகிறேன். அது அவருடைய அருளாலேயே கூறுகிறேன். ஸ்வாமிகளின் பக்தர்கள் அனைவரும் இதனை கேளுங்கள்.

ஸ்ரீரமண ஸிரிதே³வி பொ³ம்ம ஸ
மீர வாணி பா⁴ரதி விப
நூருத³ஶமுக² உரக³பூ⁴ஷண ராணியர பத³கெ
ஸாரி நமனவ மாடி³ ப⁴க்த்யனு
ஸார கு³ருவர ராக⁴வேந்தி³ரரு
தா³ர விஜயவ பேள்வெ ஸுஜனரு கேளி மோதி³பது³ ||1

ஸ்ரீரமண - ஸ்ரீஹரி; ஸிரிதேவி - ஸ்ரீலட்சுமிதேவி; பொம்ம - பிரம்ம; ஸமீர - வாயு; வாணி பாரதி - சரஸ்வதி பாரதியர்; விப - கருட; நூருதஶமுக - 100*10 = 1000 முகங்களைக் கொண்ட சேஷதேவர்; உரகபூஷண - ருத்ரர்; ராணியர - இந்த மூவரின் மனைவியரின் (முறையே - ஸௌபர்ணி, வாருணி, பார்வதி) ; பதகெ - பாதங்களில்; ஸாரி நமனவ மாடி - விழுந்து வணங்கி; பக்த்யனுஸார - மிகுந்த பக்தியுடன்; குருவர ராகவேந்திரர - சிறந்த குருவான ஸ்ரீராயரின்; உதார விஜயவ - அபாரமான மகிமைகளை; பேள்வெ - கூறுகிறேன்; ஸுஜனரு - ஸஜ்ஜனர்கள் (ஸ்ரீராயரின் பக்தர்கள்); கேளி மோதிபது - (மகிழ்ச்சியுடன்) கேட்டு இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஸ்ரீஹரியிலிருந்து துவங்கி தாரதம்யத்தில் தேவதைகளை வணங்கியவாறு, இந்த கிருதியை துவக்குகிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீஹரி, ஸ்ரீலட்சுமிதேவி, பிரம்மன், வாயு, சரஸ்வதி பாரதி, கருட, சேஷ, ருத்ர, பின் அவர்களது மனைவியரான ஸௌபர்ணி, வாருணி, பார்வதி ஆகியோரின் பாதங்களில் விழுந்து வணங்கி, மிகுந்த

பக்தியுடன் ஸ்ரீராயரின் அபாரமான மகிமைகளை கூறுகிறேன். ஸஜ்ஜனர்கள் இதனை மகிழ்ச்சியுடன் கேட்டு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஹரிகதாம்ருதஸாரத்தில் முதல் பத்யத்தைப் போலவே இதுவும் உள்ளது என்பதை அறியலாம்.

ஸ்ரீரமணிகர கமல பூஜித
சாருசரண சரோஜ பிரம்ம ச
மீர வாணி பணீந்திர வீந்த்ர பவேந்த்ர முக வினுத |

க[4]ன்ன கு[3]ணக[3]னரன்ன நிலயா
பன்னபால விஶால மஹிமா
என்ன யோக்[3]யதெ திளிது[3] திளிஸித[3] தன்ன மஹமஹிமெ
முன்ன பேளெலோ எந்து[3] அப[4]யவ
க[4]ன்ன க்ருபெயலி நீடி[3] க்ருதியனு
என்ன மனத[3]லி நிந்து பேளித[3] தெரதி[3] பேளிதெ[3]னு ||2

கன்ன - அனைத்து / சிறந்த ; குணகனரன்ன நிலயா - மிகச் சிறந்த குணங்களின் இருப்பிடமான; ஆபன்னபால பக்தர்களை காப்பவன்; விஶால மஹிமா - அபாரமான மகிமைகளைக் கொண்டவரான (ஸ்ரீராயர்); என்ன யோக்யதெ திளிது - என்னுடைய தகுதியை தான் அறிந்து; திளிஸித - எனக்கும் அறிய வைத்தார்; முன்ன - அடுத்து; தன்ன மஹமஹிமெ - தன்னுடைய மகிமைகளை; பேளெலொ எந்து - சொல்வாயாக என்று; கன்ன க்ருபெயலி - அற்புதமான கருணையால்; அபயவ நீடி - எனக்கு அபயம் அளித்து; க்ருதியனு - இந்த ஸ்ரீராகவேந்திர விஜயம் என்னும் கிருதியை; என்ன மனதலி நிந்து - என் மனதில் நின்று; பேளித தெரதி - அவரே கூறியதைப் போலவே; பேளிதெனு - கூறுகிறேன்.

ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸரின் வாழ்க்கையில் பார்த்தபடி, ஸ்ரீராயரே இவருக்கு கனவில் வந்து உபதேசம் / பாடங்களை சொல்லியிருக்கிறார். அதையே இங்கு ஸ்ரீதாஸர் விளக்குகிறார்.

அனைத்து மிகச் சிறந்த குணங்களின் இருப்பிடமான, பக்தர்களை காப்பவரான, அபாரமான மகிமைகளைக் கொண்டவரான ஸ்ரீராயர்,

என்னுடைய தகுதியை தான் அறிந்து, எனக்கும் அறிய வைத்தார். அடுத்து, தன்னுடைய மகிமைகளை மக்களுக்கு / தன் பக்தர்களுக்கு சொல்வாயாக என்று தன்னுடைய அற்புதமான கருணையால் எனக்கு அபயம் அளித்து, இந்த ஸ்ரீராகவேந்திர விஜயம் என்னும் கிருதியை, என் மனதில் நின்று, அவரே கூறியதைப் போல, நான் கூறுகிறேன்.

வேத³ ஶாஸ்த்ர புராண கதெக³ள
நோதி³ கேள்த³வனல்ல தத்வத³
ஹாதி³ திளித³வனல்ல பு³த³ ஜனஸங்க³ மொத³லில்ல
மோத³ தீர்த்த² பதா³ப்³ஜமது³கர
ராத³ ஸ்ரீகு³ரு ராக⁴வேந்தி³ரர
பாத³ பத்³மபராக³ லேஶத³ ஸ்பர்ஶ மாத்ரத³லி ||3

வேத ஶாஸ்த்ர புராண கதெகளனு - வேத, சாஸ்திர, புராண கதைகளை; ஓதி கேள்தவனல்ல - நான் படித்து / கேட்டவன் இல்லை; தத்வத ஹாதி - தத்வங்களின் வழியை (ரகசியங்களை); திளிதவனல்ல - அறிந்தவன் அல்ல; புத ஜனஸங்க - அறிஞர்களின் நட்பு; மொதலில்ல - முதலிலிருந்தே எனக்கு இருந்ததில்லை; மோத தீர்த்த - ஸ்ரீமதானந்த தீர்த்தரின்; பதாப்ஜ மதுகரராத - பாதம் என்னும் மலரை தேனியைப் போலவே சுற்றி வருபவரான; ஸ்ரீகுரு ராகவேந்திரர - ஸ்ரீகுரு ராயரின்; பாத பத்மபராக - பாத பத்மங்களின் தூளியை; லேஶத ஸ்பர்ஶ மாத்ரதலி - லேசாக தொட்டதாலேயே.. (அடுத்த பத்தியில் தொடர்கிறது).

ஸ்ரீதாஸரின் வாழ்க்கை வரலாற்றின்படி, அவரது சுமார் 20-22 வயது வரை அவர் எதையும் கற்று அறிந்தவர் இல்லை என்று தெரிகிறது. அவரது தந்தையான ஸ்ரீவெங்கடகிரி ஆச்சார் ஒரு சிறந்த பண்டிதராக இருந்தாலும், நமது ஸ்ரீதாஸர் அவரிடமிருந்து எதையும் கற்கவில்லை. அதையே இந்த இரு பத்யங்களில் விளக்குகிறார்.

வேத சாஸ்திர புராண கதைகளை நான் படித்து அறிந்தவன் அல்ல. தத்வங்களின் வழிகளை / அதன் ரகசியங்களை அறிந்தவன் அல்ல. அறிஞர்களின் நட்பு முதலிலிருந்தே எனக்கு இருந்ததில்லை. ஸ்ரீமதானந்த தீர்த்தரின் பாதம் என்னும் மலரை, தேனியைப் போலவே சுற்றி வருபவரான ஸ்ரீகுரு ராயரின் பாத பத்மங்களின் துளியை லேசாக தொட்டதாலேயே.. (அடுத்த பத்யத்தில் தொடர்கிறது).

க்ருதிய மாடு³வ ஶகுதி புட்டிது
மதிய மாந்த்³யவு தானே போயிது
யதனவில்லதெ³ ஸகல வேத³க³ளர்த்த² திளிதி³ஹது³
பதிதபாவனராத³ கு³ருக³ள
அதுளமஹிமெயவனாவ ப³ல்லனு
மதிமதாம்வர பு³த⁴ரிக³ஸத³³ள நரர பாடே³னு ||4

க்ருதிய மாடுவ - இந்த கிருதியை இயற்றும்; ஶகுதி புட்டிது - சக்தி கிடைத்தது; மதிய மாந்த்யவு - புத்திக்கு வந்த கெட்ட மயக்கங்கள்; தானே போயிது - தானே விலகியது; யதனவில்லதெ - எவ்வித முயற்சியும் இல்லாமல்; ஸகல வேதகளர்த்த - அனைத்து வேதங்களின் அர்த்தமும்; திளிதிஹது - எனக்கு தெரிந்தது; பதிதபாவனராத - பக்தர்களை காப்பவரான; குருகள - ஸ்ரீராயரின்; அதுளமஹிமெய - அற்புத மகிமைகளை; ஆவ பல்லனு - யாருக்குதான் தெரியும்? ; மதிமதாம்வர - நல்ல அறிவுக் கூர்மை உள்ள; புதரிகெ - ஞானிகளுக்கு; அஸதள - மட்டுமே இது புரியக்கூடியது; நரர பாடேனு - (என்னை போன்ற) சாதாரண பாமர மனிதனின் பாடு என்ன?

அந்த ஸ்ரீராயரின் அருளாலேயே இந்த அனைத்தும் நடக்கிறது என்று ஸ்ரீராயரிடம் தனக்கு உள்ள பக்தியை / சரணாகதியை காட்டுகிறார்.

(ஸ்ரீராயரின் அருளாலேயே) இந்த கிருதியை இயற்றும் சக்தி எனக்கு கிடைத்தது. எனக்கு வந்த கெட்ட மயக்கங்கள் விலகியது. எவ்வித முயற்சியும் இல்லாமல், அனைத்து வேதங்களின் அர்த்தமும் எனக்கு தெரிந்தது. பக்தர்களை காப்பவரான ஸ்ரீராயரின் அற்புத மகிமைகளை யார்தான் அறிவர்?. நல்ல அறிவுக் கூர்மை உள்ள ஞானிகளுக்கு மட்டுமே இது புரியக்கூடியது. அப்படியிருக்கையில், என்னைப் போன்ற சாதாரண பாமர மனிதனின் பாடுதான் என்ன?

பரஸு ஸோகலு லோஹ ஹேமவு
அரஸு முட்டலு தா³ஸி ரம்பெ³யு
ஸரஸ கு³ருக³ள பாத³து³³ளிய ஸ்பரிஶ மாத்ரத³லி
பரம பாமரனாத³ நரனு
ஹரன தெரத³லி ஞானயெய்து³வ
து³³ரிதராஶிய து³³ரமாடு³வ து³³ரிதவனதா³வ ||5

பரஸு ஸோகலு - பரசுவை தேய்த்தால்; லோஹ - இரும்பு; ஹேமவு - தங்கம் ஆகிறது; அரஸு முட்டலு - ஒரு அரசனானவன் தொட்டால்; தாஸி - ஒரு சாதாரண பணிப்பெண்; ரம்பெயு - ரம்பை ஆகிறாள்; ஸரஸ - அன்பான; குருகள பாததூளிய - குருகளின் பாததூளியை; ஸ்பரிஸ மாத்ரதலி - தொட்ட உடனேயே; பரம பாமரனாத நரனு - மிகவும் பாமரனான மனிதன்; ஹரன தெரதலி - பரம வைஷ்ணவரான ருத்ரதேவரைப் போல; ஞானயெய்துவ - ஞானம் பெறுகிறான்; துரிதராஸிய - கஷ்டங்களின் கும்பலை; தூரமாடுவ - விலக்கும்படியான; துரிதவனதாவ - பெரும் காட்டுத் தீயைப் போன்றது;

பரசுவை தேய்த்தால், இரும்புகூட தங்கம் ஆகிறது. ஒரு அரசனானவன் தொட்டால், தாஸிகூட ரம்பை ஆகிறாள். அன்பான குருகளின் பாததூளியை தொட்ட உடனேயே, மிகவும் பாமரனான மனிதன், பரம வைஷ்ணவரான ருத்ரதேவரைப் போல ஞானம் பெறுகிறான். கஷ்டங்களின் கும்பலை விலக்கும்படியான பெரும் காட்டுத் தீயைப் போன்றது (ஸ்ரீராயரின் கருணை) ஆகும்.

* பரசு என்னும் ஒரு திரவம் / பவுடர். இதனை ரசவாதம் என்கின்றனர். ஆங்கிலத்தில் philosopher's stone எனலாம். இதன் மூலம் இரும்பினை தங்கம் ஆக்கும் ஆராய்ச்சியில் உள்ளவர்களை alchemists என்கிறார்கள்.
* த்ரிவக்ரையான குப்ஜையை ஸ்ரீகிருஷ்ணன் தொட்டவுடன், அவள் ரம்பையைப் போல ஆகிறாள். இதையே இந்த பத்யத்தில் சொல்லியிருப்பதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

ஆவ கு³ரு³க³ள பாத³தோயதி³
தே³வ நதி³ மொத³லாத³ தீர்த்த²க³
ளாவ காலத³லிந்த³ தாவெ பெ³ரெது நிந்தி¹ஹவோ
ஸ்ரீவரனு தா சக்ரரூபதி³
ஜீவரோத்தம ப்ராண தே³வனு
ஸாவிராஸ்யனெ ராயரெந்து³ ஸுரு நிந்தி¹ஹரு ||6

ஆவ குருகள - எந்த குருகளின்; பாததோயதி - பாதோதகத்தில்; தேவ நதி - கங்கை; மொதலாத தீர்த்தகளு - முதலான நதிகள்; ஆவ காலதிந்த - அனைத்து காலங்களிலும்; தாவெ பெரெது நிந்திஹவோ - தாமாகவே வந்து சன்னிதானம் கொண்டிருக்கின்றனவோ (அவ்வளவு

பவித்ரமானது இந்த பாதோதகம்); அந்த இடத்தில் (பிருந்தாவனத்தில்); ஸ்ரீவரனு தா சக்ரரூபதி - ஸ்ரீஹரியானவன், தன் ஒரு அம்சத்திலும்; ஜீவரோத்தம ப்ராண தேவனு - ஜீவரோத்தமரான ப்ராண தேவர்; ஸாவிராஸ்யனெ - ஆயிரம் தலைகளைக் கொண்ட சேஷதேவர் போன்ற ; ராயரெந்து - அவர்களின் ஆவேசமே இவரில் இருக்கிறது என்று; ஸுரரு நிந்திஹரு - பல தேவதைகள் இங்கு இருக்கின்றனர்;

எந்த குருகளின் பாதோதகத்தில், கங்கை முதலான நதிகள், அனைத்து காலங்களிலும் தாமாகவே வந்து சன்னிதானம் கொண்டிருக்கின்றனவோ, (இந்த பாதோதகம் அவ்வளவு பவித்ரமானது என்று கூறுகிறார்); அந்த இடத்தில் (பிருந்தாவனத்தில்), ஸ்ரீஹரியானவர், தன் ஒரு அம்சத்திலும் (சக்ர ரூபத்தில்), ஜீவோத்தமரான ஸ்ரீபிராண தேவர் மற்றும் ஆயிரம் தலைகளைக் கொண்ட ஸ்ரீசேஷதேவரின் ஆவேசம் இருக்கிறது என்று நாம் அறிகிறோம். இவ்வாறு பல தேவதைகள் இங்கு இருக்கின்றனர்.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரத்தில் வரும் இந்த வரிகளின் கன்னட விளக்கமாகவே இந்த பத்யம் இருக்கிறது என்று அறியலாம்.

யத் பாதோதக ஸஞ்சய ஸுர நதி முக்யா பகாஸாதிதா
ஸங்க்யானுத்தம புண்ய ஸங்க விலஸத் ப்ரக்யாத புண்யாவஹ:

அலவ போத[4] ஸுதீர்த்த[2] முனிக[3]ளு
ஹலவு காலதி[3] நிந்து ஜனரக[4]
வளிது[3] கீருதியித்து லோகதி[3] க்[2]யாதி மாடி[3]ஹரு
ஸுலப[4] ஸாத்[4]யனு தன்ன ஜனரிகெ[3]
ப[2]லக[3]ளீவனு ஸர்வ ஜனரிகெ[3]
ஒலியனீதனு எந்தி[3]கா[3]த[3]ரு மந்த[3]பா[4]க்[3]யரிகெ[3] ||7

அலவ போத - ஸ்ரீமன் மத்வாசார்யர்; ஸுதீர்த்த முனிகளு - மற்றும் (ஸ்ரீராயர் மட பரம்பரையில் இவருக்கு முன் வந்த) அனைத்து யதிகளும் ; ஹலவு காலதி நிந்து - பல காலமாக இந்த பிருந்தாவனத்தில் சன்னிதானம் கொண்டு; ஜனரகவளிது - மக்களின் கஷ்டங்களைப் (பாவங்களை) போக்கினர்; கீருதியித்து - அவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து; லோகதி க்யாதி மாடிஹரு - உலகில் புகழைக் கொடுத்தனர்; தன்ன ஜனரிகெ - தன் பக்தர்களுக்கு; ஸுலப ஸாத்யனு -

ஸ்ரீராயரானவர், மிகவும் சுலபமாக வரம் அளிப்பவர்; ஸர்வ ஜனரிகெ - தன்னை நம்பி வணங்குபவர்களும் அனைவருக்கும்; பலகளீவனு - நற்பலன்களைக் கொடுக்கிறார்; மந்தபாக்யரிகெ - ஆனால், தன்னை நம்பாதவர்களுக்கு / சேவை செய்யாதவர்களுக்கு; எந்திகாதரு - என்றுமே; ஒலியனீதனு - இவர் தரிசனம் அளிப்பதில்லை / அருள்வதில்லை.

ஸ்ரீராயரின் பிருந்தாவனத்தில் ஸ்ரீஹரி, வாயுதேவர் முதலான பல தேவதைகள் இருக்கின்றனர் என்பதை பார்த்தோம். அதைப் போலவே, ஸ்ரீமன் மத்வாசார்யர் மற்றும் ஸ்ரீராயர் மட பரம்பரையில் ஸ்ரீராயருக்கு முன் வந்த அனைத்து யதிகளின் சன்னிதானமும் இருக்கின்றன என்பதை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீமன் மத்வாசார்யர் மற்றும் (ஸ்ரீராயர் மடத்து பரம்பரையில் இவருக்கு முன் வந்த) அனைத்து யதிகளும் பல காலமாக இந்த பிருந்தாவனத்தில் சன்னிதானம் கொண்டு மக்களின் கஷ்டங்களைப் (பாவங்களை) போக்கினர். அத்தகைய ஸ்ரீராயரின் பக்தர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து, உலகில் புகழைக் கொடுத்தனர். ஸ்ரீராயரானவர், தன் பக்தர்களுக்கு மிகவும் சுலபமாக வரம் அளிப்பவர். தன்னை நம்பி வணங்குபவர்களு நற்பலன்களைக் கொடுக்கிறார். ஆனால், தன்னை நம்பாதவர்களுக்கு / சேவை செய்யாதவர்களுக்கு, என்றுமே இவர் தரிசனம் அளிப்பதில்லை / அருள்வதில்லை.

ஈதனொலியலு ப்ராணனொலிவனு
வாதனொலியலு ஹரியு ஒலிவா
ஈத ஸகலகெ முக்²ய காரணனாகி³ இருதிப்ப
ஈதனே ப³லவந்த லோகதி³
ஈதனே மஹாதாத ஜனரிகெ³
ஈதனங்க்⁴ரி ஸரோஜ காமிதப²லகெ காரணவு ||8

ஈதனொலியலு - இத்தகைய ஸ்ரீராயர் மகிழ்ந்தால் (அருளினால்); ப்ராணனொலிவனு - முக்ய ப்ராண தேவர் மகிழ்கிறார் (அருள்கிறார்); வாதனொலியலு - ப்ராணதேவர் மகிழ்ந்தால் (அருளினால்); ஹரியு ஒலிவா - ஸ்ரீஹரி அருள்கிறான்; ஈத ஸகலகெ - இவரே (ஸ்ரீராயரே) அனைத்திற்கும்; முக்ய காரணனாகி இருதிப்ப - முக்கிய காரணமாக இருக்கிறார்; ஈதனே பலவந்த லோகதி - இவரே உலகில் சிறந்த

ஆளுமை கொண்டவர் (இவரே கதி என்று நம்பினவர்களுக்கு அருள்கிறார்); ஈதனே மஹாதாத ஜனரிகெ - இவரே மக்களுக்கு மிகச்சிறந்த குருவாக இருக்கிறார்; ஈதனங்க்ரி ஸரோஜ - இவருடைய பாத கமலங்களே; காமிதபலகெ காரணவு - விரும்பிய பலன்களைப் பெறுவதற்கான காரணம் ஆகும்;

குருகளின் அருள் இருந்தால், பகவந்தனின் அருள் சுலபமாக கிடைக்கும் என்னும் விஷயத்தை இந்த பத்யத்தில் விளக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாததாஸர்.

இத்தகைய ஸ்ரீராயர் மகிழ்ந்தால் (அருளினால்), முக்ய ப்ராண தேவர் மகிழ்கிறார் (அருள்கிறார்). ப்ராணதேவர் மகிழ்ந்தால் (அருளினால்), ஸ்ரீஹரி அருள்கிறான். இவரே (ஸ்ரீராயரே) அனைத்திற்கும் முக்கிய காரணமாக இருக்கிறார். இவரே உலகில் சிறந்த ஆளுமை கொண்டவர் (இவரே கதி என்று நம்பினவர்களுக்கு அருள்கிறார்). இவரே மக்களுக்கு மிகச்சிறந்த குருவாக இருக்கிறார். இவருடைய பாத கமலங்களே, விரும்பிய பலன்களைப் பெறுவதற்கான காரணம் ஆகும்.

இதே விஷயத்தை விளக்கும்படியான பல்வேறு ஹரிதாஸர்களின் பாடல்களும் உள்ளன.
* ஹனுமன மதவே ஹரிய மதவோ, ஹரிய மதவே ஹனுமன மதவோ
* நம்பி கெட்டவரில்லவோ, குருகள நம்பதெ கெட்டரெ கெடலி

ராயரங்க்[4]ரி ஸுதோய கணக[3]ளு
காயத[3]லி ஸல்லக்[3]னவாக[3]லு
ஹேயகுஷ்ட ப[4]க[3]ந்த[4]ராதி[3] ஸமஸ்த வ்யாதி[4]க[3]ளு
மாய மயபூ[4]தாதி[3] பா[3]த[4]வ
பாய தானே பொம்ப[3]போபத[3] (பொந்தி[3]போபத[3])
ஜேய தன்னய ஷக்தியிந்த[3]லி கார்ய மாடு[3]வனு ||9

ராயரங்க்ரி ஸுதோய கணகளு - ஸ்ரீராயரின் பாதோதகத்தின் துளிகள்; காயதலி ஸல்லக்னவாகலு - நம் தேகத்தில் பட்டால்; ஹேயகுஷ்ட பகந்தராதி - கொடுமையான குஷ்டம், மூலம் போன்ற; ஸமஸ்த வ்யாதிகளு - அனைத்து நோய்களும்; மாய மய - மறைந்து போகின்றன; பூதாதி பாதவ - பூத, பிசாசு போன்றவற்றின்; அபாய தானே

- கஷ்டங்கள் தானாகவே; பொந்திபோபத - விலகிப் போகின்றன; ஜேய - எஜமானன் (அந்த மனிதன்); தன்னய ஷக்தியிந்தலி - தானாகவே (யாரொருவரின் உதவி இல்லாமல்); கார்ய மாடுவனு - செயல்களை செய்யத் துவங்குகிறான்.

ஸ்ரீராயரின் பாதோதகத்தின் மகிமைகளை இந்த பத்யத்தில் விளக்கியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீராயரின் பாதோதகத்தின் துளிகள், நம் தேகத்தில் பட்டால் கொடுமையான குஷ்டம், மூலம் போன்ற அனைத்து நோய்களும் மறைந்து போகின்றன. பூத, பிசாசு போன்றவற்றின் கஷ்டங்கள் தானாகவே விலகிப் போகின்றன. அந்த மனிதன், தானாகவே (யாரொருவரின் உதவி இல்லாமல்), தன் செயல்களை செய்யத் துவங்குகிறான்.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரத்தில் இதற்கான பல ஆதாரங்கள் உள்ளன.
* ஸ்ரீராகவேந்திர ஸகல ப்ரதாதா ஸ்வபாத கஞ்சத்வய பக்தி மத்ப்ய: |
* தஸ்ய குஷ்டாதி ரோகாணாம் நிவ்ருத்தி ஸ்த்வரயா பவேத் ||

த்³ருஷ்டியெம்ப³ ஸுவஜ்ரதி³ந்ததி³
பெ³ட்டத³ந்திஹ பாபராஸிய
அட்டிக³ளிஸுவ தூ³ரதே³ஷகெ³ துரித க³ஜஸிம்ஹ
முட்டி தனபத³ ஸேவெமாட³லு
இஷ்ட காமித ஸித்³தி⁴ நீடு³வ
கஷ்டகோடிய ஸுட்டு பி³டு³வனு ஸர்வகாலத³லி ||10

த்ருஷ்டியெம்ப - ஸ்ரீராயர், அருட்பார்வை என்னும் தன்னுடைய; ஸுவஜ்ரதிந்ததி - பலமான ஆயுதத்தினால்; பெட்டதந்திஹ - மலையைப் போல உள்ளதான; பாபராஸிய - பாவங்களின் மூட்டைகளை; துரித - வேகமாக; தூரதேஷகெ - வெகு தூரமாக; அட்டிகளிஸுவ - ஓட்டி துரத்திவிடுகிறார்; கஜஸிம்ஹ - யானையைப் போல / சிங்கத்தைப் போன்றவர் இவர்; தனபத - ஸ்ரீராயரின் தேகத்தை, பாதங்களை; முட்டி - தொட்டு; ஸேவெமாடலு - சேவை செய்தால்; இஷ்ட காமித - நாம் விரும்பியவற்றை; ஸித்தி நீடுவ - அருள்கிறார்; கஷ்டகோடிய - ஏராளமான கஷ்டங்களை; ஸுட்டு பிடுவனு - சுட்டுப்

பொசுக்குகிறார்; ஸர்வகாலதலி - அனைத்து காலங்களிலும் (எப்போதும்);

ஸ்ரீராயரின் அருட்பார்வை நம் மேல் விழுந்தால் என்ன ஆகிறது என்பதை இந்த பத்யத்தில் விளக்கியுள்ளார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஸ்ரீராயர், அருட்பார்வை என்னும் தன்னுடைய பலமான ஆயுதத்தினால், மலையைப் போன்றதான பாவங்களின் மூட்டைகளை வேகமாக, வெகு தூரமாக ஓட்டி துரத்திவிடுகிறார். யானையைப் போல / சிங்கத்தைப் போன்றவர் இவர். ஸ்ரீராயரின் தேகத்தை தொட்டு சேவை செய்தால், நாம் விரும்பியவற்றை அருள்கிறார். ஏராளமான கஷ்டங்களை சுட்டுப் பொசுக்குகிறார்.

* ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரத்தில் இதற்கான பல ஆதாரங்கள் உள்ளன.
அந்தோபி திவ்யத்ருஷ்டி: ஸ்யாத் ஏடமூகோऽப் வாக்பதி: |

* கஜகேஸரியாக ஸ்ரீராயர் இருக்கிறார் என்பதை ஸ்ரீவ்யாஸதீர்த்தரின் சரம ஸ்லோகத்திலேயே நாம் பார்க்கிறோம்.
அர்த்தி கல்பித கல்போயம் ப்ரத்யர்த்தி கஜகேஸரி |
வ்யாஸ தீர்த்த குருர்பூயாத் அஸ்மத் இஷ்டார்த்த ஸித்தயே ||

இந்து³ ஸூர்யக³ரஹண பர்வவு
ப³ந்த³ காலதி³ நேம பூர்வக
பொந்திதா³ஸனத³ல்லி குளீதஷ்டோத்தராவர்த்தி
ஒந்தெ³ மனத³லி மாடெ³ கு³ருவர
நந்த³த³லி ஸகலார்த்த² ஸித்தி³ய
தந்து³கொடு³வனு தன்ன ஸேவக ஜனர ஸந்ததிகெ³ ||11

இந்து ஸூர்யக்ரஹண பர்வவு - சந்திர / சூரிய கிரகண பர்வ காலங்கள்; பந்த காலதி - வந்த காலத்தில்; நேம பூர்வக - விதிப்படி; பொந்திதாஸனதல்லி - ஒரு தக்க ஆசனத்தில்; குளிது - அமர்ந்து; அஷ்டோத்தராவர்த்தி - 108 முறை; ஒந்தெ மனதலி மாடெ - ஒரே மனதுடன் (கவனத்துடன்) செய்தால்; குருவர - குருவரனானவர்; நந்ததலி - மிக்க மகிழ்ச்சியுடன்; தன்ன ஸேவக ஜனர ஸந்ததிகெ - தன்னுடைய சேவையை செய்பவரின் வம்சத்திற்கு; ஸகலார்த்த

ஸித்திய - அனைத்து விதமான சுகங்களையும்; தந்துகொடுவனு - கொடுக்கிறார்.

சந்திர / சூரிய கிரகண பர்வ காலங்களில், விதிப்படி ஒரு தக்க ஆசனத்தில் அமர்ந்து, ஓம் ஸ்ரீராகவேந்திராய நம: என்னும் நாம மந்திர ஜபத்தினை, 108 முறை ஒரே மனதுடன் செய்தால், குருவரனானவர், மிக்க மகிழ்ச்சியுடன் தன்னுடைய சேவையை செய்பவர்களின் வம்சத்திற்கு, அனைத்து விதமான சுகங்களையும் கொடுக்கிறார்.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரத்தில் இதற்கான ஆதார வரிகள் இவ்வாறு:
ஸோம ஸூர்யோ பராகேச புஷ்யார்க்காதி ஸமாகமே
யோனுத்தம மிதம் ஸ்தோத்த்ரம் அஷ்டோத்தர ஷதம் ஜபேத்
பூத ப்ரேத பிஷாசாதி பீடா தஸ்ய ந ஜாயதே ||

தனயரில்லத[3] ஜனகெ ஸுதரனு
மனியு மானினி வ்ருத்தி க்ஷேத்ரவு
கனக த[4]ன ஸந்தான ஸம்பது இனிதெ ப[2]லக[3]ளனு
ஜன ஸமூஹகெ இத்து தோஷதி[3]
வினயபூர்வக ஸலிஸி காவனு
அனுபமோபம சரித ஸத்கு[3]ண ப[4]ரித யதினாத[2] ||12

தனயரில்லத ஜனகெ ஸுதரனு - மக்கள் இல்லாதவர்களுக்கு வாரிசினையும்; மனியு - வீடு; மானினி - மனைவி; வ்ருத்தி க்ஷேத்ரவு - வேலை செய்ய ஒரு இடம்; கனக - தங்கம்; தன - செல்வம்; ஸந்தான - வாரிசு; ஸம்பது - செல்வம்; இனிதெ பலகளனு - ஆகிய பலன்களை; ஜன ஸமூஹகெ - மக்களுக்கு (தன் பக்தர்களுக்கு) ; தோஷதி - மகிழ்ச்சியுடன்; இத்து - அருளி; வினயபூர்வக - மரியாதைகளுடன்; ஸலிஸி - வழங்கி; காவனு - காக்கிறான்; அனுபமோபம சரித - யாருடனும் ஒப்ப முடியாத சரித்திரத்தைக் கொண்டவரான; ஸத்குண பரித - நற்குணங்கள் நிரம்பியவரான; யதினாத - யதிகளில் சிறந்தவரான ஸ்ரீராயர்.

ஸ்ரீராயரின் மகிமைகளை தொடர்ந்து இந்த பத்யத்தில் விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

மக்கள் இல்லாதவர்களுக்கு வாரிசு; வீடு, மனைவி, வேலை செய்ய ஒரு இடம், தங்கம், செல்வம், வாரிசு, செல்வம் ஆகிய பலன்களை, தன் பக்தர்களுக்கு மகிழ்ச்சியுடன், மரியாதைகளுடன் வழங்கி காக்கிறார் ஸ்ரீராயர். இவர் யாருடனும் ஒப்ப முடியாத சரித்திரத்தைக் கொண்டவரான, நற்குணங்கள் நிரம்பியவரான, யதிகளில் சிறந்தவராக இருக்கிறார்.

ஸந்தான ஸம்பத் பரிஷூத்த பக்தி
விக்ஞான வாக்தேஹ ஸுபாடவாதீன் தத்வா |
என்று ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திர வரிகள் இதற்கு ஆதாரமாக உள்ளன.

ஶாபானுக்³ரஹ ஶக்தனொப்³ப³னு
லோபவாக³து³ நுடி³த³ வாக்யவு
வ்யாபகனு தானாகி³ இப்பனு ஸர்வகாலத³லி
கோபவில்லவோ ஞானமய ஸுக²
ரூப ஸந்தத ஸாது³வர்த்தியு
பாப நாஶக கவிகுலோத்தம புண்யமய காய ||13

ஶாபானுக்³ரஹ ஶக்தனொப்³ப³னு - இவர் சாபங்களை போக்கி, அருள் புரியத் தக்கவர்; லோபவாகது நுடித வாக்யவு - இவர் கூறிய வார்த்தைகள் வீண் ஆகாது (பலிக்காமல் போகாது); வ்யாபகனு - பகவந்தனின் அருளால் அனைத்தையும் செய்யத் தக்கவர்; தானாகி இப்பனு ஸர்வகாலதலி - அனைத்து காலங்களிலும் எல்லா இடங்களிலும் இருப்பவர்; கோபவில்லவோ - இவருக்கு கோபம் என்பதே கிடையாது; ஞானமய - ஞானமே வடிவானவர்; ஸுக ரூப - பார்க்க ஸுக ஸ்வரூபமுடையவர்; ஸந்தத ஸாதுவர்த்தியு - எப்போதும் அற்புதமான சரித்திரத்தைக் கொண்டவர்; பாப நாஸக - நம்முடைய பாவங்களை போக்கத் தக்கவர்; கவிகுலோத்தம - பரிமள போன்றதான பல அற்புதமான கிரந்தங்களை படைத்தவர்; புண்மய காய - புண்ணியத்தின் ஸ்வரூபமான தேகத்தையே கொண்டவர்.

ஸ்ரீராயரின் ஸ்வரூப தேக வர்ணனை இவ்வாறு உள்ளது.

ஸ்ரீராயர், சாபங்களை போக்கி அருள் புரிபவர். இவர் கூறிய வார்த்தைகள் வீண் ஆகாது (பலிக்காமல் போகாது). பகவந்தனின்

அருளால் அனைத்தையும் செய்யத் தக்கவர். அனைத்து காலங்களிலும் எல்லா இடங்களிலும் இருப்பவர். இவருக்கு கோபம் என்பதே கிடையாது. ஞான வடிவானவர். ஸுக ஸ்வரூபி. அற்புத சரித்திரத்தைக் கொண்டவர். நம்முடைய பாவங்களை போக்கத்தக்கவர். பரிமள முதலான பல அற்புத கிரந்தங்களை படைத்தவர். புண்ய ஸ்வரூப தேகம் கொண்டவர்.

ஷாபானுக்ரஹ ஷக்தோன்யோ ராகவேந்திரான்ன வித்யதே - என்று ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம் சொல்கிறது.

ஸ்ரீகமலேஷ விட்டலதாஸர் இயற்றிய துங்கா தீர விராஜம் என்னும் கீர்த்தனையில்:

மங்களகர மந்திராலய வாஸம்,
ஷ்ருங்கானானன விலாஸித ஹாஸம்;
கரத்ருத தண்ட கமண்டலு மாலம்,
சுருசிர சேலம் த்ருதமணி மாலம்;
நிருபம சுந்தர காய சுஷீலம்,
வர கமலேஷார்ப்பித நிஜ ஸகலம்

என்று ஸ்ரீராயரின் தேக வர்ணனையை செய்திருக்கிறார் என்பதை பார்க்கிறோம்.

பூ⁴த ப்ரேத பிஸாசி யக்ஷிணி
பீ⁴தி ப³ட³³கர பீ⁴தி பி³டி³ஸீ
மாதெயந்த³³தி³ பொரெவ ஸந்தத பீ⁴திவர்ஜிதனு
தா³த என்னய மாது லாலிஸோ
யாதகீ தெர மாட³³த்யோ குருவர
போத நா நினக³ல்லெ யதிகுலனாத² ஸர்வக்ஞ ||14

பூத ப்ரேத பிஸாசி யக்ஷிணி - ஆகிய; பீதி படகர - கெட்ட நடவடிக்கைகளின்; பீதி பிடிஸி - பயத்தினை விலக்கி; மாதெயந்ததி பொரெவ - ஒரு தாயைப் போல காக்கிறார்; ஸந்தத பீதிவர்ஜிதனு - எப்போதும் எவ்வித பயமும் இல்லாதவர்; தாத என்னய மாது லாலிஸோ - தந்தையே, என்னுடைய வேண்டுதல்களைக் கேள்; யாதகீ தெர மாட்த்யோ - எதற்காக இவ்வாறு செய்தாய்? குருவர - குருவரனே;

போத நா நினகல்லெ - நான் உன் மகன் அல்லவா?; யதிகுல நாத - யதிகளில் சிறந்தவரே; ஸர்வக்ஞ - அனைத்தும் அறிந்தவரே.

ஸ்ரீராயரின் மகிமைகளை மேலும் விவரிக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

பூத, ப்ரேத, பிசாசு, யக்ஷிணி ஆகிய கெட்ட நடவடிக்கைகளின் பயத்தினை விலக்கி, ஸ்ரீராயரானவர், நம்மை ஒரு தாய் போல காக்கிறார். அவர் எப்போதும் எவ்வித பயமும் இல்லாதவர். தந்தையே, என்னுடைய வேண்டுதல்களைக் கேட்பாயாக. நான் உன் மகன் அல்லவா? ஏன் இவ்வாறு செய்தாய்? யதிகளில் சிறந்தவரே. அனைத்தும் அறிந்தவரே.

* யோऽனுத்தமமிதம் ஸ்தோத்த்ரமஷ்டோத்தரஷதம் ஜபேத் |
பூதப்ரேத பிஷாசாதி பீடா தஸ்ய ந ஜாயதே ||27
என்று ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரத்தில் பூத, ப்ரேத பயங்களை போக்குபவர் என்று ஸ்ரீஅப்பண்ணாசார்யர் சொல்லியிருக்கிறார்.

* ஸ்ரீதாஸரின் அங்கித உபதேசத்தின் முந்தைய சமயத்தில் நடந்த விஷயங்களை இங்கு குறிப்பிடுகிறார் என்று சிந்திக்கலாம். ஏன் என்னை இவ்வாறு மதி கெட்டவனாக இருக்கச் செய்தாய்? ஏன் எனக்கு விரைவில் அருளாமல், அப்படி நேரத்தை வீண் அடிக்கச் செய்தாய்? என்றவாறு பல கேள்விகளை இங்கு கேட்டிருக்கிறார்.

மாத பித ஸூத ப்[3]ராத்ரு பா[4]ந்த[3]வ
தூ[3]த ஸதிகு[3]ரு நாத[2] க[3]தி மதி
நீத ஸக[2] முக[2]வ்ராத ஸந்தத எனகெ[3] நீனய்ய
பூ[4]திதா[3]யக ஸர்வலோகதி[3]
க்[2]யாத கு[3]ருபவமான வந்தி[3]த
தா[3]த கு[3]ருஜக[3]ன்னாத[2] விட்டலன ப்ரீதி படெ[3]தி[3]ருவி ||15

மாத பித ஸூத ப்ராத்ரு பாந்தவ - தாய், தந்தை, மகன், சகோதரன், உறவினர்; தூத ஸதிகுரு நாத - தூதன், மனைவி, குரு, தலைவன்; கதி மதி நீத ஸக - கதி, புத்தி, வழி, நண்பன்; முக - முகம்; வ்ராத - குழு (கூட்டம்); ஸந்தத எனகெ நீனய்ய - எனக்கு என்றுமே நீங்கள்தான்; பூதிதாயக - செல்வத்தைக் கொடுப்பவரே; ஸர்வலோகதி - அனைத்து

உலகங்களுக்கும்; க்யாத குரு - புகழ்பெற்ற குருவான / ஜகத்குருவான; குருபவமான - ஸ்ரீமுக்ய பிராணர்; வந்தித - வணங்குபவரான; தாத குருஜகன்னாத விட்டலன - தந்தையான ஸ்ரீகுரு ஜகன்னாத விட்டலனின்; ப்ரீடி படெதிருவி - அருளை / நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்.

ஸ்ரீராயரே தனக்கு (நமக்கு) அனைத்தும் என்று இந்த பத்யத்தில் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

தாய், தந்தை, மகன், சகோதரன், உறவினர், தூதன், மனைவி, குரு, தலைவன், கதி, புத்தி, வழி, நண்பன், முகம், குழு (கூட்டம்) என அனைத்தும் - எனக்கு என்றுமே நீங்கள்தான்.. செல்வத்தைக் கொடுப்பவரே, அனைத்து உலகங்களுக்கும் புகழ்பெற்ற குருவான / ஜகத்குருவான ஸ்ரீமுக்ய பிராணர் வணங்குபவரான, தந்தையான ஸ்ரீகுரு ஜகன்னாத விட்டலனின் அருளை / அன்பினை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்.

மாதா ந்ருஸிம்ஹஸ்ச பிதா ந்ருஸிம்ஹோ
ப்ராதா ந்ருஸிம்ஹஸ்ச ஸகா ந்ருஸிம்ஹோ
வித்யா ந்ருஸிம்ஹோ த்ரவிணம் ந்ருஸிம்ஹோ
ஸ்வாமி ந்ருஸிம்ஹோ ஸகலம் நரசிம்ம:
என்று நரசிம்ம ஸ்வாமியை கொண்டாடுவதைப் போலவே இங்கும் ஸ்ரீராயரை வணங்கியிருக்கிறார் என்று அறியலாம்.

ஹரிரேவ பரோ ஹரிரேவ குரு:
ஹரிரேவ ஜகத் பித்ரு மாத்ரு கதி:
என்று ஸ்ரீமதாசார்யர் த்வாதச ஸ்தோத்திரத்தில் சொல்லியிருக்கிறார்.

ஹனும நம்ம தாயி தந்தெ பீம நம்ம பந்து பளக
ஆனந்த தீர்த்தரு நம்ம கதி கோத்ரவய்யா
என்று ஹரிதாஸர்களும் இதே அனுசந்தானத்தில் பல பாடல்களை பாடியிருக்கின்றனர்.

***

ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸரின்
கன்னட ஸ்ரீராகவேந்திர விஜயம்
சந்தி - 2

சந்தி 2ன் விஷய சுருக்கம்

பிரகலாத சரித்திரம். பூதேவியின் வேண்டுகோளின்படி பிரம்மன் ஸ்ரீஹரியை வேண்டுதல், ஸ்ரீஹரி தான் அவதாரம் எடுப்பதாக வாக்களித்தல், சங்குகர்ணனை முன்னதாக அனுப்புதல், பிரகலாதனின் அவதாரம், பின் அவருடைய வேண்டுதலின்படி நரசிம்ம அவதாரம், ஹிரண்யகசிபுவின் வதம், பிரகலாதரின் அரசாட்சியின் சிறப்புகள், அவருடைய பொன்மொழிகள் / உபதேசங்கள், பின் தாஸரின் பிரார்த்தனை ஸ்லோகங்கள் என இந்த சந்தியில் மொத்தம் 32 பத்யங்கள் உள்ளன.

ராக⁴வேந்தி³ரர விஜய பேளுவெ
ராக⁴வேந்தி³ரர கருண ப³லத³லி
ராக⁴வேந்தி³ரர ப⁴குதராத³வரித³னு கேளுவுது³ ||

ஆதி³யுக³த³லி தரணி மானினி
ஆதி³ தை³த்யர பா³தெ⁴ தாளதெ³
வேத³னங்க்⁴ரிய ஸார்து³ தன்னய வ்யஸன பேளித³ளு
ஆதி³கவி சதுராஸ்யனீபரி
மேதி³னீ ஸ்ரம வசன லாலிஸி
பா³தெ⁴ பரிஹர மாள்பெனெந்து³ நுடி³து³ தா நடெ³த³ ||1

ஆதியுகதலி - க்ருத யுகத்தில் (ஸத்ய யுகத்தில்); தரணி மானினி - தரணி தேவி; ஆதி தைத்யர பாதெ தாளதெ - ஹிரண்யாக்ஷ / ஹிரண்யகசிபு என்னும் தைத்யர்களின் தொந்தரவினை பொறுக்காமல்; வேதனங்க்ரிய ஸார்து - பிரம்மனை வணங்கி; தன்னய வ்யஸன பேளிதளு - தன்னுடைய பிரச்னைகளை கூறினாள்; ஆதிகவி சதுராஸ்யனு - ஆதிகவியான சதுர்முகன்; ஈபடி - இவ்வாறாக கூறிய; மேதினீ ஸ்ரம வசன லாலிஸி - அவளுடைய கஷ்டமான சொற்களை கேட்டுக் கொண்டு; பாதெ - அவளுடைய கஷ்டங்களை; பரிஹர மாள்பெனெந்து - பரிகாரம் செய்கிறேன் என்று; நுடிது தா நடெத - சொல்லி, தான் புறப்பட்டுச் சென்றான்.

ஸ்ரீபிரகலாத சரித்திரத்தின் கதையை க்ருத யுகத்தில் துவக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

க்ருத யுகத்தில் (ஸத்ய யுகத்தில்), தரணிதேவியானவர், ஹிரண்யாக்ஷ / ஹிரண்யகசிபு ஆகிய தைத்யர்களின் தொந்தரவினை பொறுக்காமல், பிரம்மனை வணங்கி, தன்னுடைய பிரச்னைகளை கூறினாள். ஆதிகவியான சதுர்முகன், இவ்வாறாக கூறிய பூமாதேவியின் கஷ்டமான சொற்களை கேட்டுக் கொண்டு, அவளுடைய கஷ்டங்களை பரிகாரம் செய்கிறேன் என்று சொல்லி, தான் புறப்பட்டுச் சென்றான்.

தரணிதேவி - 25ம் கக்ஷையின் வருபவர். இவரில் ஸ்ரீலட்சுமி தேவியின் அம்சம் உள்ளது. இவரே ஸ்ரீலட்சுமிதேவி என்று நினைக்கக் கூடாது.

ஶ்வேத தி³வியனு ஸார்து³ லகுமி ஸ
மேத ஹரியனு துதிஸி பூ⁴மிய
பீ⁴தி தா பரிஹரஸோகோ³ஸுக³ ஹரிய பெ³ஸகொ³ண்ட³
நாத²! தி³திஜர பா⁴ரவதிஶய
கா⁴திபரு தாவாரோ திளியேனு
தாத! நீ பரிஹார மாடி³ பீ⁴தி பி³டி³ஸுவது³ ||2

ஶ்வேத திவியனு ஸார்து - ஷ்வேத த்வீபத்தை அடைந்து; லகுமி ஸமேத ஹரியனு - லட்சுமி ஸமேதனான ஸ்ரீஹரியை; துதிஸி - வணங்கி; பூமிய பீதி - பூமாதேவியின் பிரச்னைகளை; தா பரிஹரஸோகோஸுக - பரிகாரம் செய்ய வேண்டும் என்று; ஹரிய பெஸகொண்ட - ஸ்ரீஹரியை இவ்வாறு வேண்டிக் கொண்டார்; நாத - தலைவனான ஸ்ரீமன் நாராயணனே. திதிஜர பாரவதிஶய - அசுரர்களின் தொந்தரவு மிகவும் அதிகமாக இருக்கிறது; காதிபரு தாவாரோ திளியேனு - இதனை யாரால் பரிகரிக்க முடியும் என்று தெரியவில்லை; தாத - என் தந்தையே; நீ பரிஹார மாடி - நீ இதனை பரிகாரம் செய்து; பீதி பிடிஸுவது - பூமியின் / எங்களின் பயத்தினை போக்குவாயாக.

ஸ்ரீஹரியிடம் பிரம்மதேவரின் பிரார்த்தனையை இந்த பத்யத்தில் சொல்கிறார் ஸ்ரீதாஸர்.

பிரம்மதேவர் அங்கிருந்து ஸ்ரீஹரியின் இருப்பிடமான ஷ்வேத த்வீபத்தை அடைந்து, லட்சுமி ஸமேதனான ஸ்ரீஹரியை வணங்கி, பூமாதேவியின் பிரச்னைகளை பரிகாரம் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். ஸ்ரீமன் நாராயணனே, அசுரர்களின் தொந்தரவு மிகவும் அதிகமாக இருக்கிறது. இதனை யாரால் பரிகரிக்க முடியும் என்று தெரியவில்லை. என் தந்தையே, நீ இதனை பரிகாரம் செய்து எங்களின் பயத்தினை போக்குவாயாக.

புருட லோசன ஸ்வர்ண கஶிபு
உருடு தை³த்யரு ஸர்வ ஜனரன
சரட ஹாரிஸி ஸகல லோககெ து⁴க்க² கொடு³திஹரு
உருடு மாது³க³ளல்ல ஶிரத³லி
கரத³ ஸம்புட மாடி³ பே³டு³வெ
ஜடர தைத்யர தரிது³ பூ⁴மிகெ³ ஸுக²வ நீடெ³ந்தெ³ ||3

புருட லோசன - ஹிரண்யாக்ஷ; ஸ்வர்ண கஶிபு - ஹிரண்யகசிபு; உருடு தைத்யரு - கடுமையான தைத்யர்கள்; ஸர்வ ஜனரன - அனைத்து மக்களையும்; சரட ஹாரிஸி - கஷ்டப்படுத்தி; ஸகல லோகக்கெ துக்க கொடுதிஹரு - கஷ்டத்தை கொடுத்து வருகின்றனர். உருடு மாதுகளல்ல - நான் சொல்வது எதுவும் பொய் / கற்பனை அல்ல; ஸிரதலி கரத ஸம்புட மாடி பேடுவெ - தலை மேல் கை குவித்து வேண்டிக் கொள்கிறேன்; ஜடர தைத்யர தரிது - இந்த கெட்ட தைத்யர்களை அழித்து; பூமிகெ ஸுகவ நீடெந்தெ - பூமிக்கு சுகத்தை அருள்வாயாக, என்னும் பிரம்மனின் வேண்டுகோளை கேட்டு (அடுத்த பத்யத்தில் தொடர்கிறது)

பிரம்மதேவரின் பிரார்த்தனை மேலும் இந்த பத்யத்தில் தொடர்கிறது.

ஹிரண்யாக்ஷ, ஹிரண்யகசிபு என்னும் இரு கடுமையான தைத்யர்கள், அனைத்து மக்களையும் கஷ்டப்படுத்தி, துக்கம் கொடுத்து வருகின்றனர். நான் சொல்வது எதுவும் பொய் / கற்பனை இல்லை. என் தலை மேல் கை குவித்து வேண்டிக் கொள்கிறேன். இந்த கெட்ட தைத்யர்களை அழித்து, இந்த பூமிக்கு சுகத்தை / அமைதியை அருள்வாயாக. என்று பிரம்மன் கேட்க...

சதுரவத³னன வசன கேளீ
சதுர பு⁴ஜ தானாத³ ஹரியு
சதுர தனத³லி நானெ ஸம்ஹர மாள்பெ சதுராஸ்ய
த்⁴ருததி³ நடெ³யலோ நின்ன ஸ்தா²னகெ
யதன மாடு³வெ ஷீக்⁴ரவாகி³
ஜதன மாட³லோயன்ன வசனவு எந்தி³குஸியல்ல ||4

சதுரவதனன வசன கேளி - பிரம்மனின் வேண்டுகோளினை கேட்டு; சதுர் புஜ தானாத ஹரியு - சதுர்புஜனான ஸ்ரீஹரி; நானெ - (அவர்களை) நானே; சதுர தனதலி - மிகவும் புத்திசாலித்தனத்துடன்; ஸம்ஹர மாள்பெ - அவர்களை அழிப்பேன்; சதுராஸ்ய - ஹே பிரம்மனே; த்ருததி - கவலைப்படாமல்; நின்ன ஸ்தானகெ - உன் இடத்திற்கு; நடெயலோ - நடப்பாயாக; ஷீக்ரவாகி - வெகு விரைவில்; யதன மாடுவெ - இதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன்; ஜதன மாடலோ - சந்தேகப்படாதே; என வசனவு - என் வாக்கு; எந்திகுஸியல்ல - என்றும் பொய்க்காது; (ஸத்ய ஸங்கல்ப);

பிரம்மனின் வேண்டுகோளினைக் கேட்டு, பகவந்தன் சொல்வது இந்த பத்யத்தில் உள்ளது.

பிரம்மனின் வேண்டுகோளினைக் கேட்டு, சதுர்புஜனான ஸ்ரீஹரி இவ்வாறு கூறுகிறார். அத்தகைய துஷ்டர்களை, மிகவும் புத்திசாலித்தனத்துடன், நானே அழிப்பேன். ஹே பிரம்மனே, நீ கவலைப்படாமல் உன் இடத்திற்கு செல்வாயாக. வெகு விரைவில் இதற்கான நடவடிக்கைகளை நான் எடுப்பேன். இதில் சந்தேகம் வேண்டாம். என் வாக்கு என்றைக்கும் பொய்க்காது (நான் ஸத்ய ஸங்கல்பன்).

பரித்ராணாய ஸாதூனாம் வினாஷாய ச துஷ்க்ருதாம் |
தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ||
என்று ஸ்ரீகிருஷ்ணன் பகவத் கீதையில் சொல்லியபடி, கெட்டவர்களை அழிக்க, தர்மத்தை நிலை நாட்ட, ஸ்ரீஹரி தான் அவ்வப்போது அவதாரம் எடுப்பேன் என்று கூறியிருக்கிறார். அதையே இங்கும் சொல்கிறார் என்று எண்ண வேண்டும்.

தானெ அவதர மாடோ³கோ³ஸுக³
ஏனு நெவனவ மாட³லெந்து³
நான யோசனமாடி³ யுகுதிய தெகெ³த ஹரி தானு
ஸானு ராக³தி³ ஸேவெ மாடு³த
தீ⁴னதொ³ளகி³ருதிப்ப விஷ்வ
க்ஸேன நாமக வாயுபுத்ரனு ஶேஷனவதார ||5

தானெ அவதர மாடோகோஸுக - தானே அவதாரம் செய்வதற்காக; ஏனு நெவெனவ - என்ன காரணத்தை; மாடலெந்து - சொல்லலாம் என்று; நான யோசனமாடி - பற்பல யோசனைகளை செய்து; யுகுதிய தெகெத ஹரி தானு - ஸ்ரீஹரி ஒரு தக்க வழியை தேர்ந்தெடுத்தான்; ஸானு ராகதி - எப்போதும்; ஸேவெ மாடுத - செய்து கொண்டு வரும்; தீனதொளகிருதிப்ப - பக்தராக இருப்பவரான; விஷ்வக்ஸேன நாமக வாயுபுத்ரனு - விஷ்வக்ஸேன என்னும் வாயுபுத்திரன்; ஶேஷனவதார - இவரில் சேஷனின் ஆவேசமும் இருந்தது; (அடுத்த பத்யத்தில் தொடர்கிறது).

தானே அவதாரம் செய்வதற்காக, என்ன காரணத்தை சொல்லலாம் என்று பற்பல யோசனைகளை செய்து, ஸ்ரீஹரி ஒரு தக்க வழியினை தேர்ந்தெடுத்தான். எப்போதும் தனக்கு சேவை செய்பவரும், பக்தருமான, வாயுபுத்திரனின் மகனான விஷ்வக்ஸேனனை அழைத்து... (இவரில் சேஷனின் ஆவேசமும் இருந்தது).

* ஸ்ரீஹரி ஸ்வரமணன் ஆகிறார். எந்த செயலை செய்வதற்கும் அவருக்கு யாருடைய உதவியும் தேவைப்படுவதில்லை. ஆனால், ஒரு நாடகத்திற்காக, இவ்வாறு சிந்திக்கிறார் எனலாம்.
* விஷ்வக்ஸேனனும் சங்குகர்ணனும் ஒருவரே என்று அறிய வேண்டும். இவருக்கே முன்னர் பிரம்மதேவர் கொடுத்த சாபம் இருந்தது. அந்த சாபத்தை தற்போது அனுபவிக்க வேண்டும் என்பதற்காக, ஸ்ரீஹரி அவரை பூலோகத்திற்கு அனுப்புகிறார்.

எந்தி³கா³த³ருநின்னொளிப்பெனு
நந்த³த³லெ நா பஞ்ச ரூபதி³
குந்த³த³லெ தா மினுகு³திப்பது³ ப்ராணநாவேஶ
பொந்தி³ ஶோபி⁴தனாகி³ ஈ புர
தி³ந்த³ ஜாக³ரதி³ பூ⁴மிதளகே

இந்து³ நீ நடெ³யெந்து³ ஸ்ரீஹரி நுடி³த³ தூ³தனிகெ³ ||6

எந்திகாதரு நின்னொளிப்பெனு - நான் எப்போதும் உன்னில் இருப்பேன்; நந்ததலெ - குறையாமல் (விலகாமல்); நா பஞ்ச ரூபதி - நான் அனிருத்தாதி பஞ்ச ரூபத்தில்; குந்ததலெ தா - என்றைக்கும் குறையாமல்; மினிகுதிப்பனு - ஒளிர்ந்து கொண்டிருக்கும்; ப்ராணநாவேஶ - பிராணதேவரின் ஆவேசம் இருக்கும்; பொந்தி - இவற்றை அடக்கிக் கொண்டு; ஶோபிதனாகி - ஒளி பொருந்தியவாறு; ஈ புரதிந்த - இந்த உலகிலிருந்து; ஜாக்ரதி - பத்திரமாக; பூமிதளகெ - பூமிக்கு; இந்து நீ நடெயெந்து - இன்று நீ நடப்பாயாக என்று; தூதனிகெ - தன் தூதனுக்கு; ஸ்ரீஹரி நுடித - ஸ்ரீஹரி கூறினான்;

அந்த விஷ்வக்ஸேனனிடம் ஸ்ரீஹரி இவ்வாறு கூறுகிறார்.

நான் எப்போதும், அனிருத்தாதி பஞ்ச ரூபத்தில் உன்னில் இருப்பேன். என்றைக்கும் குறையாமல் பிராணதேவரின் ஆவேசமும் உன்னில் இருக்கும். இவற்றை வைத்துக்கொண்டு, நீ பூமிக்கு இன்று செல்வாயாக என்கிறார்.

ஸ்வாமி லாலிஸோ நின்ன ஶுபதம
தா⁴ம ஶிரி வைகுண்ட²தி³ந்த³லி
ஆ மஹத்தர து³க்க² நீடு³வ லோக நானொல்லெ |
ஸ்ரீ மனோஹர தூ³தனொசனவ
ஸீமவில்லதெ³ எனகெ³ நுடி³த³தி
தாமஸாத்மக தை³த்ய குலத³ல்லி ஜனிஸு போகெ³ந்த³ ||7

அந்த தேவதை இவ்வாறு சொல்கிறார். ஸ்வாமி லாலிஸோ - ஹே ஸ்வாமியே, கேள்; நின்ன ஶுபதம தாம - உன் சுபங்களை தரக்கூடிய இருப்பிடமான; ஶிரி வைகுண்டதிந்தலி - ஸ்ரீவைகுண்டத்திலிருந்து; ஆ - அந்த; மஹத்தர துக்க நீடுவ - அதிகமான துக்கத்தை தரக்கூடியதான; லோக நானொல்லெ - உலகிற்கு (பூலோகத்திற்கு) நான் போக மாட்டேன்); ஸ்ரீமனோஹர - ஸ்ரீஹரியானவர்; தூதனொசனவ - தூதனின் வசனத்தை (கேட்ட ஸ்ரீஹரி, இவ்வாறு கூறுகிறார்); அதி தாமஸாத்மக தைத்ய குலதல்லி - மிகவும் தாமஸாத்மகமான தைத்ய குலத்தில்; ஜனிஸு - பிறப்பாயாக; ஸீமவில்லதெ எனகெ நுடித -

எல்லையில்லாமல் (தொடர்ந்து) என்னை புகழ்வாயாக; போகெந்த - (என்று) கூறினார்.

ஸ்ரீஹரியின் ஆணையைக் கேட்ட விஷ்வக்ஸேனன் (சங்குகர்ணன்) இவ்வாறு கூறுகிறார். ஹே ஸ்வாமியே கேள். சுபங்களை தரக்கூடிய உன்னுடைய இருப்பிடமான ஸ்ரீவைகுண்டத்திலிருந்து, அந்த அதிகமான துக்கங்களை தரக்கூடிய் உலகிற்கு (பூலோகத்திற்கு) நான் செல்ல மாட்டேன். இதனைக் கேட்ட ஸ்ரீஹரி இவ்வாறு கூறுகிறார். மிகவும் தாமஸாத்மகமான தைத்ய குலத்தில் பிறப்பாயாக. அப்படி பிறந்தாலும், நீ தொடர்ந்து என்னை புகழ்வாயாக. இப்போது செல் - என்றார்.

என்ன ஶாபத³லிந்த³ நீ த்வர
முன்ன புட்டெலோ தை³த்யராக்³ரணி
ஸ்வன்ன கஶிபுன த⁴ர்மஸதியள ஜட²ர மந்தி³ரதி³
நின்னகோ³ஸ்க³ நானெ நரம்ருக³
க⁴ன்ன ரூபவ தாளி அஸுரன
சென்னவாகீ³ ஸதெ³து³ லோகதீ³ கீர்த்தி நினகி³ப்பெ ||8

ஸ்ரீஹரி அந்த தேவதையிடம் இவ்வாறு கூறுகிறார். என்ன ஶாபதலிந்த - என்னுடைய சாபத்தின் பலனாக; நீ த்வர முன்ன - வெகு விரைவில் (சீக்கிரமாக); தைத்யராக்ரணி ஸ்வன்ன கஸிபுன - தைத்யர்களில் முதன்மையானவனான ஹிரண்யகசிபுவின்; தர்மஸதியள - மனைவியின் (கயாது); ஜடர மந்திரதி - வயிற்றில்; புட்டெலோ - சென்று பிறப்பாயாக; நின்னகோஸுக - உனக்காக (உனக்கு அருள்வதற்காக); நானெ - நானே; நரம்ருக கன்ன ரூபவ தாளி - ஸ்ரீ நரசிம்மனாக சிறப்பான அவதாரத்தை எடுத்து; அஸுரன - அந்த ஹிரண்யகசிபுவை; சென்னவகி ஸதெது - நன்றாக வதம் செய்து; லோகதி - உலகத்தில்; கீர்த்தி நினகிப்பெ - உனக்கு புகழினைத் தருவேன்.

ஸ்ரீஹரி தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார். என்னுடைய சாபத்தின் பலனாக நீ சீக்கிரமாக சென்று, தைத்யர்களில் முதமையானவனான ஹிரண்யகசிபுவின் மனைவியின் வயிற்றில் பிறப்பாயாக. உனக்காக (உன்னை அருள்வதற்காக) நானே ஸ்ரீ நரசிம்ம அவதாரம் எடுத்து, அந்த

ஹிரண்யகசிபுவை வதம் செய்து, உலகத்தில் உனக்கு புகழினைத் தருவேன்.

* நாரஸிம்ஹனெம்போ தேவனு என்னும் கீர்த்தனையில் ஸ்ரீபுரந்தரதாஸர் இவ்வாறு ஒரு பத்தியில் சொகிறார்.
நவமாஸகளு தும்பலு கயாது ஆக புத்ர ரத்னவன்னு படெதளு
நாமகரணவன்னு மாடி விப்ரரன்னு கரெஸி பேக
தைத்ய தன்ன சுதனிகெ பிரகலாதனெந்து கரெஸிதனு

* பிரகலாதனின் அழைப்பிற்கு நான் வந்தேன்; அசுரர்களை வதம் செய்தேன் -- என்று சொல்லி, ஹிரண்யகசிபுவின் வதத்தின் கீர்த்தியை உனக்கு தருகிறேன் என்றார் ஸ்ரீஹரி.

அந்த³ ஸ்ரீஹரி நுடி³ய மனகெ
தந்து³ விஷ்வக்ஸேன மொத³லே
ப³ந்து³ ஜனிஸித³னஸுர நிஜ ஸதியுத³ர தே³ஹத³லி
தந்தெ³ ஸம்ப்³ரமதி³ந்த³ தன்னய
கந்த³னனு தா ஊரு தே³ஹதி³
தந்து³ கூடி³ஸி கேள்த³ ஸுரரொளகா³வனுத்தமனு ||9

அந்த ஸ்ரீஹரி நுடிய - என்று கூறிய ஸ்ரீஹரியின் வாக்கினை; மனகெ தந்து - மனதில் நினைத்தவாறு; விஷ்வக்ஸேன - விஷ்வக்ஸேன தேவதை; மொதலெ பந்து - உடனடியாக வந்து; அஸுர நிஜ ஸதியுதர தேஹதலி - ஹிரண்யகசிபுவின் மனைவியின் வயிற்றில்; ஜனிஸித - பிறந்தான்; தந்தெ - தந்தையான ஹிரண்யகசிபு; ஸம்ப்ரமதிந்த - மிகவும் விமரிசையுடன்; தன்னய கந்தனனு - தன் மகனை; தா ஊரு தேஹதி - தன் தொடையில்; தந்து கூடிஸி - வரவழைத்து அமர்த்திக் கொண்டு; ஸுரரொளகெ - தேவதைகளில்; ஆவனுத்தமனு - யார் உத்தமன்; கேள்த - என்று கேட்டான்.

ஸ்ரீஹரியின் ஆணையை ஏற்று, விஷ்வக்ஸேன தேவதை உடனடியாக பூலோகத்திற்கு வந்து, ஹிரண்யகசிபுவின் மனைவியான கயாதுவின் வயிற்றில் பிரகலாதனாக பிறந்தான். (பிரகலாத ஜனனம் ஆகி, தற்போது அவனுக்கு ஐந்து வயது ஆகிறது). அப்போது தந்தையான ஹிரண்யகசிபு, மிகவும் மகிழ்ச்சியுடன் / விமரிசையுடன்,

தன் மகனை தன் தொடையில் அமர்த்திக் கொண்டு, தேவதைகளில் யார் உத்தமன்? யார் சிறந்தவர்? என்று கேட்கிறான்.

* நாரஸிம்ஹனெம்போ தேவனு என்னும் கீர்த்தனையில் ஸ்ரீபுரந்தரதாஸர் இவ்வாறு ஒரு பத்தியில் சொகிறார்.
ஓம் நம சிவாய எனுதலி அசுர தன்ன ஸுதன பரெது தோரு யென்னலு
நரஹரிய நாமவன்னு நகுனகுதலி பரெயுதிரலு
யெடத தொடெய மேலித்த ஷிஷுவ படிது தரெகெ நொக்கிதனு

வாரிஜாஸன விஷ்ணு பஶுபதி
மூரு ஜனரொளகா³வனுத்தம
தீ⁴ர நீ பேளெனகெ³யெனுதலி தானெ பெ³ஸகொ³ண்ட³
ஸுரி தா ப்ரஹ்லாத நுடி³த³னு
நாராயணன உளிது³ ஸுரரொளு
ஆரு உத்தமரில்லவெந்தி³கு³ ஹரியெ உத்தமனு ||10

வாரிஜாஸன - பிரம்ம; விஷ்ணு - ஸ்ரீஹரி; பஶுபதி - சிவன் ; மூரு ஜனரொளகாவனுத்தம - இந்த மூவரில் யார் உத்தமன்; தீர நீ பேளெனகெ - மகனே, நீ எனக்குச் சொல்; எனுதலி - என்று சொல்ல; தானெ பெஸகொண்ட - தானே ஒரு முடிவுக்கு வந்த; ப்ரஹ்லாத நுடிதனு - ப்ரகலாதன் இவ்வாறு கூறினான்; நாராயணன உளிது - ஸ்ரீமன் நாராயணனைத் தவிர; ஸுரரொளு - தேவதைகளில்; ஆரு உத்தமரில்ல - வேறு யாரும் உத்தமர்கள் இல்லை; எந்திகு ஹரியெ உத்தமனு - என்றைக்கும் ஸ்ரீஹரியே உத்தமன்.

ஹிரண்யகசிபு தன் மகனிடம் இவ்வாறு கேட்கிறான். பிரம்ம, ஸ்ரீஹரி, சிவன் இந்த மூவரில் யார் சிறந்தவர்?. மகனே, நீ எனக்குச் சொல். அதற்கு பிரகலாதன் இவ்வாறு கூறினான். ஸ்ரீமன் நாராயணனைத் தவிர, தேவதைகளில் வேறு யாரும் உத்தமர்கள் இல்லை. என்றைக்கும் ஸ்ரீஹரியே உத்தமனாக இருக்கிறான்.

ஸர்வகு³ண க³ண பூர்ண ஸர்வக³
ஸர்வபாலக தே³வ ஸர்வக³
ஸர்வரந்தர்யாமி தானெ ஸ்வதந்த்ர பரிபூர்ண
ஷர்வ மொத³லாத³ மரரெல்லரு
ஸர்வகாலதி³ ஹரியதீ³னரு

ஸர்வலோகக்கெ ஸார்வபௌ²மனு லகுமி வல்லப²னு ||11

ஸர்வகுண கண பூர்ண - அனைத்து குணங்களையும் பூரணமாக கொண்டவன்; ஸர்வக - அனைத்து இடங்களிலும் இருப்பவன்; ஸர்வபாலக - அனைவரையும் காப்பவன்; தேவ - ஸ்வாமி; ஸர்வக ஸர்வரந்தர்யாமி - அனைவருக்குள்ளும் இருப்பவன்; தானே ஸ்வதந்த்ர - ஸ்வதந்த்ரன், ஸ்வரமணன்; பரிபூர்ண - பரிபூர்ணன்; ஷர்வ மொதலாத - இந்திரன் முதலான; அமரரெல்லரு - தேவதைகள் அனைவரும்; ஸர்வகாலதி ஹரியதீனரு - எப்போதும் ஹரிக்கு அதீனமானவர்கள்; லகுமி வல்லபனு - ஸ்ரீலட்சுமியின் பதியானவன்; ஸர்வலோகக்கெ ஸார்வபௌமனு - அனைத்து உலகங்களுக்கும் மங்களத்தைக் கொடுப்பவனாக இருக்கிறான்.

பிரகலாதன் மேலும் ஸ்ரீஹரியின் மகிமைகளை இவ்வாறு விளக்குகிறான்.

ஸ்ரீஹரியானவன், அனைத்து குணங்களையும் முழுமையாகக் கொண்டிருக்கிறான். அவன் அனைத்து இடங்களிலும் இருக்கிறான். அனைவரையும் காக்கிறான். அனைவருக்கும் ஸ்வாமியாக, அனைவரிலும் அந்தர்யாமியாக அவனே இருக்கிறான். அவனே ஸ்வதந்த்ரன், ஸ்வரமணன், பரிபூர்ணன். இந்திரன் முதலான தேவதைகள் அனைவரும் எப்போதும் ஸ்ரீஹரியின் அதீனரே ஆகின்றனர். ஸ்ரீலட்சுமியின் பதியானவன், அனைத்து உலகங்களுக்கும் மங்களத்தை கொடுப்பவனாக இருக்கிறான்.

ஸுதன மாதனு கேளி தை³த்யர
பதியு கோபதி³ தோரிஸனலு
விததனாஹரி ஸர்வதே³ஶதி³ இருவ நோடெ³ந்தா³
பதித தை³த்யனு கம்ப³ தோரீ
யதன பூர்வக ப³டி³யலாக்ஷண
ஸ்ரிதன வசனவ ஸத்யமாடு³வெனெந்து³ தா ப³ந்த³ ||12

ஸுதன மாதனு கேளி - மகனான பிரகலாதனின் பேச்சினைக் கேட்டு; தைத்யர பதியு - அசுரர்களின் தலைவனானவன்; கோபதி தோரிஸனலு - கோபத்துடன், அந்த ஹரியை காட்டு என்று சொல்ல; விததனாஹரி - அனைத்து உலகங்களிலும் இருப்பவனான ஹரி; ஸர்வதேஶதி இருவ

- அனைத்து இடங்களிலும் இருக்கிறான்; நோடெந்தா - பார் என்றான்; பதித தைத்யனு - கெட்டவனான அந்த அசுரன்; கம்ப தோரி - ஒரு கம்பத்தை காட்டி; யதன பூர்வக - மிகவும் பலமாக; படியலாக்ஷண - அந்த கம்பத்தை அடிக்க, அதே நொடியில்; ஸ்ரிதன வசனவ - தன் பக்தனின் வசனத்தை; ஸத்யமாடுவெனெந்து - உண்மை ஆக்குவேன் என்று சொல்லி; தா பந்த - ஸ்ரீஹரி தானே வந்தான்.

ஸ்ரீ நரசிம்ம அவதாரம் நடப்பதை விளக்கும் பத்யம் இது.

மகனான பிரகலாதனின் பேச்சினைக் கேட்டு, அசுரர்களின் தலைவனான ஹிரண்யகசிபு, கோபத்துடன், அந்த ஹரியைக் காட்டு என்று சொல்ல, பிரகலாதனோ - அனைத்து உலகங்களிலும் இருப்பவனான ஸ்ரீஹரி, அனைத்து இடங்களிலும் இருக்கிறான் பார் என்றான். கெட்டவனான அந்த அசுரன், ஒரு கம்பத்தைக் காட்டி மிகவும் பலமாக அடிக்க, அதே நொடியில் - தன் பக்தனின் வசனத்தை உண்மை ஆக்குவேன் என்று சொல்லி, ஸ்ரீஹரி நரசிம்ம ரூபமாக அங்கு தோன்றினான்.

* நாரஸிம்ஹனெம்போ தேவனு என்னும் கீர்த்தனையில் ஸ்ரீபுரந்தரதாஸர், நரசிம்ம அவதாரம் நடந்த விவரத்தினை இரு பத்திகளில் சொகிறார்.
நின்ன தேவ இத்த எடெயனு தோரு யெனுத
பிதனு தன்னு சுதன கோரலு
என்ன தேவ இல்லதந்த எடெகளுண்டெ லோகதல்லி
கம்பதல்லு இருவனெந்து கைய முகிது தோர்தனாங்க

வரகம்பவன்னு ஒதெயலு நரஹரியு உக்ர கோபவன்னு தாளித
கடகடெம்ப த்வனிய மாடி நககளிந்த பிடிது ஒத்தி
கருள பகெது மாலெ ஹாகி கந்த பக்தனப்பிகொண்ட

* பக்தனின் வசனத்தை உண்மை ஆக்குவதற்காக ஸ்ரீஹரி, நரசிம்ம ரூபமாக வந்தான் என்பதை சொல்வதான பாகவத ஸ்லோகம் இது.
ஸத்யம் விதாதும் நிஜ ப்ருத்ய பாஷிதம்
வ்யாப்திஞ்ச பூதேஷ்வகிலேஷு சாத்மன: |
அத்ருஷ்யதாத் அத்யத்புத ரூபமுத்வஹன்
ஸ்தம்பே ஸபாயாம் ந ம்ருகம் ந மானுஷம் ||

நரம்ருகா³க்ருதி தாளி து³ருளன
கருளு ப³கி³தா³ நாரஸிம்ஹனு
தருள நின்னனு பொரெத³னாக³லெ கருணவாரிதி⁴யு
ஸரள என்னனு காயோ ப⁴வதொ³ளு
மருளமதி நானாகி³ ஸந்தத
இருளு ஹக³லொந்தா³கி³ பரிபரிமாள்பெ து³ஷ்கர்ம ||13

நரம்ருகாக்ருதி தாளி - நர, மிருக என்னும் இரு உருவத்தையும் தாங்கி; துருளன கருளு பகிதா - அந்த தைத்யனின் குடலை கிழித்தான்; நாரஸிம்ஹன் - நரசிம்மன்; தருள நின்னனு பொரெதனு - சிறுவனான பிரகலாதனை காத்தான்; ஆகலே கருணவாரிதியு - கருணையே வடிவானவன், உன்னுடைய சொல்லினை உண்மையாக்குவதற்காக கம்பத்திலிருந்து வந்து உன்னை காத்தான்; ஸரள என்னனு காயோ - என்னை மேலும் தொடர்ந்து காப்பாயாக; பவதொளு - சம்சாரம் என்னும் இந்த சாகரத்தில்; மருளமதி நானாகி - மந்த மதியான நான் கஷ்டப்பட்டு விழுந்து கிடக்கிறேன்; ஸந்தத இருளு ஹகலு - இரவும் பகலும் எப்போதுமாக (தொடர்ந்து); பரிபரிமாள்பெ துஷ்கர்ம - எப்போதும் கெட்ட செயல்களை செய்து கொண்டிருக்கிறேன்.

ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர், பிரகலாத ராஜரிடம் செய்யும் பிரார்த்தனை வடிவமாக இந்த பத்யம் இருக்கிறது. இதுவே நமது பிரார்த்தனையாகவும் இருக்க வேண்டும்.

நர மிருக என்னும் இரு உருவங்களையும் தாங்கி, ஸ்ரீ நரசிம்மன், அந்த தைத்யனின் குடலை கிழித்தான். சிறுவனான பிரகலாதனை காத்தான். அந்த கருணையே வடிவானவன், பக்தனான பிரகதலாதனின் வசனத்தை காப்பதற்காக, கம்பத்திலிருந்து வந்து உன்னை காத்தான். என்னையும் தொடர்ந்து நீ காப்பாயாக. சம்சாரம் என்னும் இந்த சாகரத்தில் மந்தமதியான நான் கஷ்டப்பட்டு விழுந்து கிடக்கிறேன். இரவும் பகலும் எப்போதுமாக தொடர்ந்து கெட்ட செயல்களையே செய்து கொண்டிருக்கிறேன்.

ஆ யுக³தி³ ப்ரஹ்லாத நாமக
ராயனெனிஸி ஹரிய ப⁴ஜிஸி
தோயநிதி⁴ பரிவஸன மண்ட³லவாள்தெ³ ஹரிப⁴லதி³
ராயகுலத³லி ஸார்வபௌ⁴மன

ஜேய மஹிமனு ஸதத ஜக³த³ல
மேய தி³ஷணனுயெந்து³ ஸுரமுனி மாட்³த³னுபதே³ஶ ||14

ஆ யுகதி - அந்த க்ருத யுகத்தில்; ப்ரஹ்லாத நாமக ராயனெனிஸி - பிரகலாத ராஜன் என்னும் பெயரில்; ஹரிய பஜிஸி - ஸ்ரீஹரியை வணங்கியவாறு; ஹரிபலதி - அந்த ஸ்ரீஹரியின் அருளாலேயே; தோயநிதி பரிவஸன மண்டலவாள்தெ - கடல் நீரால் சூழப்பட்டுள்ள மண்டலத்தை (பூமண்டலத்தை) ஆண்டாய்; ராயகுலதலி ஸார்வபௌமன - அரசர்களில் மிகப்பெரிய அரசனாகி; அஜேய மஹிமனு - யாராலும் வெல்லப்பட முடியாத வீரனாகி; ஸதத ஜகதல - எப்போதும் அனைத்து உலகங்களிலும்; அமேய - எண்ணப்படமுடியாத அளவிலான; திஷணனுயெந்து - ஞானத்தைக் கொண்டவனாக ஆவாய்; ஸுரமுனி மாட்தனுபதேஶ - என்று ஸுரமுனிகளான நாரதர், பிரகலாதன் கயாதுவின் கர்ப்பத்தில் இருந்தபோதே உபதேசம் செய்திருந்தார்.

நாரதர் செய்த உபதேசத்தினை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

முன்பு, கிருத யுகத்தில், பிரகலாத ராஜன் என்னும் பெயரில் ஸ்ரீஹரியை வணங்கியவாறு, அந்த ஸ்ரீஹரியின் அருளாலேயே, நீ இந்த பூமண்டலத்தை ஆண்டாய். அரசர்களில் மிகப்பெரிய அரசனாகி, யாராலும் வெல்லப்பட முடியாத வீரனாகி, எப்போதும் அனைத்து உலகங்களிலும் அபாரமான ஞானத்தைக் கொண்டவனாக ஆவாய் என்று இந்த பிரகலாதன் கயாதுவின் கர்ப்பத்தில் இருந்தபோதே ஸுரமுனிகளான நாரதர் உபதேசம் செய்திருந்தார்.

க³ர்ப்ப⁴த³லெ பரதத்வ பத்³த⁴தி
நிர்ப்ப⁴யதி³ நீ தி³ளிது³ ஆவெ
த³ர்ப்பி⁴ ரமணனெ ஸர்வருத்தமனெந்து³ ஸ்தா²பிஸிதெ³
து³ர்ப⁴கா³தி³கவாத³வகெ³ ஸம
த³ர்ப்ப⁴வாகோ³தெ³ நின்ன ஸேவா
நிர்ப்ப⁴ராக³து³ நின்ன ஜனரிகெ³ ஸுல⁴பவாகி³ஹதோ³ ||15

கர்ப்பதலெ - நீ கர்ப்பத்தில் இருந்தபோதே; பரதத்வ பத்ததி - பகவந்தனைப் பற்றிய ஞானத்தை (தத்வ ஞானத்தை); நிர்ப்பயதி நீ தி³ளிது - எவ்வித பயமும் (சந்தேகமும்) இன்றி நீ அறிந்து; வைதர்ப்பி

ரமணனெ - விதர்ப்ப ராஜனின் மகளான ருக்மிணியின் ரமணனே (ஸ்ரீகிருஷ்ணனே); ஸர்வருத்தமனெந்து - ஸர்வோத்தமன் என்று; ஸ்தாபிஸிதெ - நீ நிறுவினாய்; துர்பகாதிகவாதவகெ - பாவங்கள் அதிகம் உள்ளவர்களுக்கு (அசுரர்களுக்கு / ஹிரண்யகசிபுவிற்கு); நின்ன ஸேவா - உன்னுடைய இந்த ஞானம்; ஸந்தர்ப்பவாகோதெ - புரியுமா?; நிர்ப்பராகது - முழுமையாக புரியாது; நின்ன ஜனரிகெ - உன்னுடைய பக்தர்களுக்கு (உன்னை சேர்ந்தவர்களுக்கு); ஸுலபவாகிஹதோ - இது மிகவும் சுலபமாக புரியக்கூடியதாகும்.

பிரகலாதராஜரை ஸ்ரீதாஸர் கொண்டாடுவதாக இருக்கிறது இந்த பத்யம்.

நீ கர்ப்பத்தில் இருந்தபோதே, பகவந்தனைப் பற்றிய தத்வ ஞானத்தை, யதார்த்த ஞானத்தை அறிந்து, ஸ்ரீகிருஷ்ணனே ஸர்வோத்தமன் என்று நிறுவினாய். பாவங்கள் அதிகம் உள்ளவர்களுக்கு, உன்னுடைய இந்த ஞானம் புரியுமா? புரியாது. உன்னுடைய பக்தர்களுக்கு மட்டும் இது மிகவும் சுலபமாக புரியக்கூடியதாகும்.

தி³திஜ பா³லரிகெ³ல்ல தத்வதி³
மதிய புட்டிஸி நித்யத³லி ஸ்ரீ
பதியெ ஸர்வோத்தமனுயெம்பீ³ ஞான போ³தி⁴ஸிதெ³
இதர விஷய விரக்தி புட்டிது
மதி விசாராஸக்தராத³ரு
ஸிதனஸுதரு பேள்து³தெ³ல்லனு மனகெ தரலில்ல ||16

திதிஜ பாலரிகெல்ல - திதியின் மக்களான அனைத்து அசுரர்களுக்கும்; தத்வதி - நல்ல தத்வத்துடனான; மதிய புட்டிஸி - அறிவினை ஊட்டி / கொடுத்து; நித்யதலி - எப்போதும் / எக்காலத்திலும்; ஸ்ரீபதியே ஸர்வோத்தமனு - ஸ்ரீஹரியே சர்வோத்தமன்; எம்பீ ஞான போதிஸிதெ - என்னும் ஞானத்தை உபதேசம் செய்தாய்; இதர விஷய விரக்தி புட்டிது - (அந்த ஞானத்தைப் பெற்றதால்) மற்ற லௌகீக விஷயங்களில் விரக்தி பிறந்தது; மதி விசாராஸக்தராதரு - மேலும் மேலும் ஞானத்தைப் பெறக்கூடியவர்கள் ஆனார்கள்; ஸிதனஸுதரு - சுக்ராசார்யரின் மக்கள் (ஷண்ட & அமர்க); பேள்துதெல்லனு - கூறிய பாடங்களை / உபதேசங்களை; மனகெ தரலில்ல - அந்த பாலகர்கள் படிக்கவில்லை / ஏற்றுக் கொள்ளவில்லை.

திதியின் மக்களான அனைத்து அசுரர்களுக்கும் நல்ல தத்வத்துடனான அறிவினை ஊட்டி, எப்போதும் ஸ்ரீஹரியே ஸர்வோத்தமன் என்னும் ஞானத்தை நீ உபதேசம் செய்தாய். ஆகையால், அவர்களுக்கு மற்ற லௌகிக விஷயங்களில் விரக்தி பிறந்தது. மேலும் மேலும் ஞானத்தைப் பெறக்கூடியவர்கள் ஆனார்கள். சுக்ராசார்யரின் மக்களான (ஷண்ட & அமர்க) இருவரும் கூறிய பாடங்களை / உபதேசங்களை அந்த பாலகர்கள் படிக்கவில்லை / ஏற்றுக் கொள்ளவில்லை.

*ஸிதனஸுதரு - ஸித என்றால் வெண்மை, அதாவது ஷுக்ர. ஷுக்ர ஸுதரு என்றால் சுக்ராசார்யரின் மக்களான ஷண்ட & அமர்க இருவர்.
* ஸ்ரீஹரியே ஸர்வோத்தமன் என்றும், அவனுக்கு நாம் செய்ய வேண்டிய நவவித பக்திகளையும் பிரகலாதராஜர் அனைவருக்கும் உபதேசம் செய்தார்.
சிரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாத ஸேவனம் |
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் சக்யம் ஆத்ம நிவேதனம் ச ||

நின்ன மதவனுஸரிஸி பா³லரு
க⁴ன்ன போ³த⁴ ஸுப⁴க்தி படெ³த³³ரு
த⁴ன்யராத³³ரு ஹரிய ப⁴குதருயெனிஸி தாவந்து³
நின்ன மஹிமெகெ³ நமன மாடு³வெ
என்ன பாலிஸோ ப⁴வதி³ பரிபரி
ப³ன்ன படுவெனோ தா³ரிகாணதெ³ நின்ன நம்பி³தெ³னோ ||17

நின்ன மதவனுஸரிஸி - நீ கூறிய ஹரி ஸர்வோத்தம என்னும் மதத்தையே பின்பற்றி; பாலரு - அந்த சிறுவர்கள் / மாணவர்கள்; தாவந்து - அவர்கள் அன்று; கன்ன போத - சிறப்பான ஞானம்; ஸுபக்தி படெதரு - நல்ல திடமான பக்தியைப் பெற்றனர்; ஹரிய பகுதருயெனிஸி - ஸ்ரீஹரியின் பக்தர்கள் என்று சொல்லிக்கொண்டு; தன்யராதரு - தான் தன்யர் ஆயினர்; நின்ன மஹிமெகெ நமன மாடுவ - உன் மகிமைக்கு நான் வணங்குகிறேன்; என்ன பாலிஸோ - என்னை காப்பாற்றுவாயாக / அருள்வாயாக; பவதி பரிபரி - இந்த சம்சார சாகரத்தில் விதம்விதமாக; பன்ன படுவெனோ - கஷ்டப்படுகிறேன்; தாரிகாணதெ - வழி தெரியாமல்; நின்ன நம்பிதெனோ - உன்னையே நம்பியிருக்கிறேன்.

பிரகலாதராஜரைக் குறித்தான தாஸரின் பிரார்த்தனை வடிவமாக இந்த பத்யம் தொடர்கிறது.

நீ கூறிய ஹரி ஸர்வோத்தம என்னும் மதத்தையே பின்பற்றி, அந்த சிறுவர்கள் அன்று சிறப்பான ஞானத்தைப் பெற்றனர். ஸ்ரீஹரியின் பக்தர்கள் என்று சொல்லிக்கொண்டு தன்யர் ஆயினர். அத்தகைய உன் மகிமைக்கு நான் வணங்குகிறேன். என்னை காப்பாற்றுவாயாக. இந்த சம்சார சாகரத்தில் விழுந்து விதம்விதமாக கஷ்டப்படுகிறேன். இதிலிருந்து வெளியில் வரும் வழி தெரியாமல் உன்னையே நம்பியிருக்கிறேன்.

பரம பாவன ரூபி நீனு
ஹரிய ஶாபதி[3] அஸுரபா[4]வவ
த[4]ரிஸி தை[3]த்யனுயெனிஸிகொண்டெ[3]யோ ஸுரவரோத்தமனு
ஹரிகெ[3] ஹாஸிகெ[3]யாத[3] காரண
ஹரிவிபூ[4]திய ஸன்னிதா[3]னவு
நிருத நின்னலி போர்ச்சி மெரெவரு மருதனொட[3]கூடி[3] ||18

பரம பாவன ரூபி நீனு - மிகவும் பவித்ரமான ரூபம் நீ; ஹரிய ஶாபதி - ஸ்ரீஹரியின் சாபத்தினால்; அசுரபாவவ தரிஸி - அசுர பிறவியை எடுத்து; தைத்யனுயெனிஸி கொண்டெயோ - உன்னை தைத்யன் என்று சொல்லிக் கொண்டாய்; ஸுரவரோத்தமனு - ஸுரர்களில் நீயே உத்தமன்; ஹரிகெ ஹாஸிகெயாத காரண - ஸ்ரீஹரிக்கு படுக்கை ஆன காரணத்தினால்; ஹரி விபூதிய ஸன்னிதானவு - ஸ்ரீஹரியின் விபூதி சன்னிதானம் (சேஷன் அம்சம்); நிருத - எப்போதும்; நின்னலி போர்ச்சி - உன்னில் நிலைத்திருந்து; மருதனொடகூடி - வாயுதேவரின் ஆவேசம் கூட சேர்ந்து; மெரெவரு - உன்னில் நிரம்பியிருக்கிறது.

பிரகலாதராஜரைக் குறித்தான தாஸரின் பிரார்த்தனை இங்கும் தொடர்கிறது.

மிகவும் பவித்ரமான ரூபம் நீ. ஸ்ரீஹரியின் சாபத்தினால் அசுர பிறவியை எடுத்து உன்னை தைத்யன் என்று சொல்லிக் கொண்டாய். ஸுரர்களில் நீயே உத்தமனாக இருக்கிறாய். ஸ்ரீஹரிக்கு படுக்கையான சேஷனின் அம்சமும், வாயுதேவரின் ஆவேசமும் உன்னில் நிரம்பியிருக்கிறது.

விஷ்வக்ஸேனனுக்கு ஸ்ரீஹரி அளித்த வாக்கினையே இங்கு ஸ்ரீதாஸர் மறுபடி கூறி வணங்குகிறார் என்று அறிய வேண்டும்.

ப்ராணனிஹ பிரஹ்லாத³னொளகெ³ அ
பான நிஹ ஸஹ்லாத³னொளு தா
வ்யானனிஹ கல்ஹாத³னொளுதான நிந்திஹனு
தா³னவாக்³ரணி ஹ்லாத³னொளு ஸ
மான தானனுஹ்லாத³னொளகீ³
ஸ்ரீனிவாஸன ப்ராண ப⁴ஜிஸுவ பஞ்சரூபத³லி ||19

ப்ராணனிஹ பிரஹ்லாதனொளகெ - பிரகலாதனில் பிராணன் இருக்கிறார்; அபான நிஹ ஸஹ்லாதனொளு - ஸஹ்லாதனுக்குள் அபான இருக்கிறார்; தா வ்யானனிஹ கல்ஹாதனொளு - கல்ஹாதனுக்குள் வ்யானன் இருக்கிறார்; உதான நிந்திஹனு தானவாக்ரணி ஹ்லாதனொளு - தானவர்களில் சிறந்தவனான ஹ்லாதனில் உதானன் இருக்கிறார்; ஸமான தானு அனுஹ்லாதனொளகு - அனுஹ்லாதனில் ஸமானன் இருக்கிறார்; ப்ராண - இந்த அனைத்து பிராணர்களும்; ஸ்ரீனிவாஸன - ஸ்ரீஹரியை; பஞ்சரூபதலி - ஐந்து ரூபங்களில்; பஜிஸுவ - பஜிக்கிறார்கள்.

பிரகலாதன் உடன் பிறந்தவர்களில் வாயுதேவரின் ஆவேசம் இருக்கும் விஷயத்தினை இந்த பத்யத்தில் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

பிரகலாதனில் பிராணன் இருக்கிறார்;
ஸஹ்லாதனில் அபானன் இருக்கிறார்;
கல்ஹாதனில் வ்யானன் இருக்கிறார்;
அஹ்லாதனில் உதானன் இருக்கிறார்;
அனுஹ்லாதனில் ஸமானன் இருக்கிறார்.
இந்த ஐந்து பிராணர்களும், ஸ்ரீஹரியை, அனிருத்தாதி ஐந்து ரூபங்களில் வணங்குகிறார்கள்.

ஜவரொளு ஹரி வாயு கருணவு
ஈ விதா⁴னதி³ பேர்ச்சி இருவுது³
ஆவ ஜன்மத³ புண்யப²லவோ ஆரிக³ளவல்ல
தே³வ தே³வனு நின்னதீ⁴னனு
ஆவ காலகு தொலக³னாதனு

ஸேவகாக்³ரணி தெரதி³ நிம்மனு காது³கொண்டி³ஹனு ||20

ஜவரொளு - இந்த பிரகலாதன் முதலான ஐந்து சகோதரர்களில், ஹரி வாயு கருணவு - ஹரி வாயுகளின் கருணையானது; ஈ விதானதி பேர்ச்சி இருவுது - இப்படியாக நிலைத்திருக்கிறது; ஆவ ஜன்மத புண்யபலவோ - இந்த கருணையானது எந்த பிறவியின் புண்ணிய பலனோ; ஆரிகளவல்ல - யாருக்கும் தெரியவில்லை; தேவ தேவனு நின்னதீனனு - ஸ்ரீஹரியானவன் உன் அதீனனாகவே இருக்கிறான்; ஆவ காலகு தொலகனு - எந்த காலத்திலும் உன்னை விடமாட்டான்; ஆதனு ஸேவகாக்ரணி தெரதி - சேவகர்களில் முதன்மையானவனைப் போல, அவன்; நிம்மனு - உன்னை; காதுகொண்டிஹனு - காக்கிறான்.

இந்த பிரகலாதராஜரின் சகோதர்களில் ஸ்ரீஹரியின் கருணை எப்படி இருக்கிறது என்பதை இங்கு விளக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

இந்த பிரகலாதன் முதலான ஐந்து சகோதரர்களில் ஹரி வாயுகளின் கருணையானது இப்படியாக நிலைத்திருக்கிறது. இந்த கருணையானது, எந்த பிறவியின் புண்ய பலனோ யாருக்கும் தெரியாது. ஹே பிரகலாதராஜரே. ஸ்ரீஹரியானவன், உன் அதீனனாகவே இருக்கிறான். எந்த காலத்திலும் உன்னை விடமாட்டான். தலைமைச் சேவகன் போல அவன் உன்னை காக்கிறான்.

ஸ்ரீஹரியானவர் தன் பக்தர்களை எப்படி காக்கிறார் என்பதை ஸ்ரீஜகன்னாததாஸர், ஹரிகதாம்ருதஸாரத்தில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

ஹிந்தெமுந்தெடபலதி ஒளஹொர
கிந்திரேஷனு தன்னவர னெ
ந்தெந்து சலஹுவனாகசத வோலெத்த நோடிதரு ||24

லகுமி நின்னனு எத்திதோரலு
ஸகல ஸுரவரரெல்ல நோட³லு
ப⁴க்தவத்ஸலனாத³ நரஹரி நினகெ³ வஜனாகெ³
வ்யகுதவாயிது நின்ன மஹிமெயு
நிகி²ள ஸுரவரரெல்ல பொக³ளலு

ப⁴குதி பூர்வக கரெத³ராக³லெ குஸும வ்ருஷ்டியனு ||21

லகுமி நின்னனு எத்திதோரலு - (ஸ்ரீ நரசிம்மன் யாருக்கும் சமாதானம் / சாந்தம் ஆகாதபோது), லட்சுமிதேவி உன்னை முன்னே சென்று ஸ்ரீ நரசிம்மனை சாந்தப்படுத்துமாறு கேட்டுக் கொண்டபோது, ஸகல ஸுரவரரெல்ல நோடலு - அனைத்து தேவதைகளும் பார்க்கையில்; பக்தவத்ஸலனாத நரஹரி - பக்தவத்ஸலனான ஸ்ரீ நரசிம்மன், நினகெ வஶனாகெ - உனக்கு வசம் ஆனான்; வ்யகுதவாயிது நின்ன மஹிமெயு - அப்போது அனைவருக்கும் உன் மகிமை தெரிந்தது; நிகிள ஸுரவரரெல்ல பொகளலு - அங்கிருந்த அனைத்து தேவதைகளும் உன்னைப் புகழ்ந்தனர்; பகுதி பூர்வக - பக்தியுடன்; குஸும வ்ருஷ்டியனு - புஷ்ப வ்ருஷ்டியை; ஆகலெ - அப்போதே; கரெதரு - பொழிந்தனர்.

ஸ்ரீபிரகலாதராஜரை, தேவதைகள் அனைவரும் புகழ்ந்த விதத்தினை இந்த பத்யத்தில் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீநரசிம்மன் யாருக்கும் சமாதானம் / சாந்தம் ஆகாதபோது, லட்சுமிதேவியானவர் உன்னை முன்னே சென்று, அவரை சாந்தப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். அனைத்து தேவதைகளும் பார்க்கையில், பக்தவத்ஸலனான ஸ்ரீஹரி, உன் வசம் ஆனான். அப்போதே உன் மகிமை அனைவருக்கும் புரிந்தது. அங்கிருந்த தேவதைகள் அனைவரும் உன்னைப் புகழ்ந்தனர். பக்தியுடன் உன் மேல் புஷ்ப வ்ருஷ்டியினை பொழிந்தனர்.

* இதனால் லட்சுமிதேவியைவிட / தேவதைகளைவிட, பிரகலாதன் சிறந்தவர் என்று அர்த்தம் அல்ல. இது அவர்கள் செய்த நாடகமே என்பதை அறிய வேண்டும்.
* பிரகலாதராஜரை தேவதைகள் புகழ்ந்தனர் என்பதை, அவரது அவதாரங்களான ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீராயர் ஆகியோருக்கும் பொருத்திப் பார்த்து, அவர்களின் மகிமைகளை புரிந்து கொள்ள வேண்டும்.

தே³வ து³ந்து³பி³ வாத்⁴ய நப⁴தலி
தீவிதாக³லெ தி³விஜரெல்லரு
பா⁴விஸி பரி ஜயது ஜயஜயவெனுத நிந்திஹரு

ஈ வஸுமதி தளகெ நரவர
தே³வ பட்யவக³ட்டி ராஜ்யவ
ஒவிஸுவதுயெந்து³ ஸுரகு³ரு பொ³ம்ம பேளித³னு ||22

நபதலி - ஆகாயத்தில்; தேவ துந்துபி வாத்ய- தேவ துந்துபி வாத்தியங்கள்: தீவிது - ஒலித்தன / கேட்டன; ஆகலெ - அப்போதே; திவிஜரெல்லரு - தேவதைகள் அனைவரும்; ஈ பரி பாவிஸி - (உன்னை புகழ்ந்தவாறு) அந்த சிந்தனையை செய்தவாறு; ஜயது ஜயஜயவெனுத - ஜய ஜய என்றவாறு; நிந்திஹரு - நின்றனர்; ஈ வஸுமதி தளகெ - இந்த பூமண்டலத்தில்; நரவர தேவ - சக்ரவர்த்தியாக; பட்யவகட்டி - பட்டாபிஷேகம் செய்து; ராஜ்யவ ஒவிஸுவதுயெந்து - அரசாட்சி செய்ய வேண்டும் என்று; ஸுரகுரு பொம்ம - தேவதைகளின் தலைவரான பிரம்மதேவர்; பேளிதனு - கூறினார்.

தேவதைகள் பிரகலாதராஜரை போற்றிய விதம் மேலும் இந்த பத்யத்தில் தொடர்கிறது.

ஆகாயத்தில் தேவ துந்துபி வாத்தியங்கள் ஒலித்தன. அப்போதே தேவதைகள் அனைவரும் உன்னைப் புகழ்ந்தவாறு, ஜய ஜய என்றவாறு நின்றனர். இந்த பூமண்டலத்தில் சக்ரவர்த்தியாக உனக்கு பட்டாபிஷேகம் செய்து நீயே அரசாட்சி செய்ய வேண்டும் என்று தேவதைகளின் தலைவரான பிரம்மதேவர் கூறினார்.

இதே காட்சியை ஸ்ரீபுரந்தரதாஸர் - நாரஸிம்ஹனெம்போ தேவனு என்னும் கீர்த்தனையில் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்தரிக்ஷதல்லி அமரரு நோடி ஆக புஷ்பவ்ருஷ்யன்னெ கரெதரு
அஜன படெத தேவி பந்து தொடெய மேலெ குளிதிரலு
அமரபதியரெல்லர நோடி அஞ்சபேடெந்த அபயவித்த ||
நாரஸிம்ஹனெம்போ தேவனு
நம்பிதந்த ஜனரிகெல்ல வரவ கொடுவனு

ராய ராஜ்யவ மாடு³திரல
ந்யாயவில்லதெ³ ஸர்வஜனரு
ந்யாய மார்க்க³தி³ நடெ³த³ராக³லெ ராஜனாக³யத³லி
மாய ட²க்கு ட²வளி மஸிக³ள

பாய மொத³லாகி³ப்ப தோ³ஷவு
தோய ஜாதன உருபு ஜனரலி ஜனிஸதா³புரதி³ ||23

ராய ராஜ்யவ மாடுதிரலு - ஸ்ரீபிரகலாதராஜர் அரசாட்சி செய்யும்போது; ஸர்வஜனரு - அனைத்து மக்களும்; ராஜனாக்யதலி - அரசனின் ஆணைப்படி; அநியாயவில்லதெ - அநியாய மார்க்கத்தில் செல்லாமல்; ந்யாய மார்க்கதி - நியாயமான வழியில்; நடெதராகலெ - நடந்தனர்; மாய - மாய மந்திரக்காரர்களின்; டக்கு டவளி மஸிகள - பயன்படுத்தும் மை ஆகியவற்றின்; அபாய - அபாயம்; மொதலாகிப்ப தோஷவு - ஆகிய தோஷங்கள் அனைத்தும்; தோய ஜாதன - பிரம்மதேவனின்; உருபு ஜனரலி - செலுத்தப்படும் மக்களில் (அவரின் அருள் பெற்ற மக்களுக்கு); ஜனிஸது - வராது; ஆ புரதி - அந்த நகரத்து மக்களில் இவை எவ்வித பாதிப்பினையும் ஏற்படுத்தாது.

ஸ்ரீபிரகலாதராஜரின் அரசாட்சியின் சிறப்பினை இங்கு விளக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஸ்ரீபிரகலாதராஜர் அரசாட்சி செய்யும்போது, அனைத்து மக்களும் அநியாய மார்க்கத்தில் செல்லாமல், அரசனின் ஆணைப்படி, நியாய வழியிலேயே நடந்தனர். மாய மந்திரக்காரர்கள் பயன்படுத்தும் மை ஆகியவற்றின் அபாயம் ஆகிய தோஷங்கள் எவையும், பிரம்மதேவனின் அருள் பெற்ற மக்களுக்கு வராது. அந்த நகர மக்களுக்கு இவை எவ்வித பாதிப்பினையும் ஏற்படுத்தாது.

இந்த பத்யத்தில் வரும் 'டக்கு டவளி' என்பதான பதத்தினை ஸ்ரீகுருகோவிந்த விட்டலதாஸர் தனது கோவிந்தாஷ்டகம் என்னும் கிருதியில் இவ்வாறு பாடியிருக்கிறார்.

ஹ்ருத்க³த தமனாஷ கோவிந்த | என்ன
ஹ்ருத்கு³ஹதொ³ஸ்ரு தோரோ கோவிந்த ||ப
ட²க்கு ட²வளிகார கோவிந்த | நம்ம
ட²க்கிஸி ஹாகதி³ரோ கோவிந்த ||

நீ மோசக்காரர்களைவிட பெரிய மோசக்காரன். (நிந்தா ஸ்துதி). எங்கள் பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்வாயாக., எங்களை தவறான பாதையில் செலுத்திவிடாதே / அனுப்பிவிடாதே கோவிந்தனே.

ராஜ்யகார்யவ ப⁴ரதி³ மாடு³த
வாஜி மேத⁴த³ ஶத
ராஜ ராஜர தேஜோ நிதி⁴ தானெனிஸி ராஜிஸித³
மாஜத³லெ ஸ்ரீஹரிய பத³யுக³
பூஜெ மாடி³த³ புண்யப²லதி³ வி
ராஜமான மஹானுபா⁴வனு லோக மூரரலி ||24

ராஜகார்யவ பரதி மாடுத - அரசாட்சியை செவ்வனே செய்தவாறு; ஶத - நூறு; வாஜி மேதத - அஷ்வ மேத யாகத்தினை; பூர்த்திஸி - செய்து முடித்து; ராஜ ராஜர - சக்ரவர்த்திகளில்; தேஜோ நிதி - வீரன்; தானெனிஸி ராஜிஸித - தானே என்று சொல்லி, அரசாட்சி செய்தான்; மாஜதலெ - அப்போதும் தவறாமல்; ஸ்ரீஹரிய பதயுக - ஸ்ரீஹரியின் பாதங்களை; பூஜெ மாடித - பூஜை செய்த; புண்யபலதி - புண்ணியங்களின் பலனால்; மஹானுபாவனு - மஹானுபாவனான பிரகலாத ராஜர்; லோக மூரரலி - மூன்று உலகங்களிலும்; ராஜமான - சிறப்பாக அரசாட்சி செய்தார்.

ஸ்ரீபிரகலாத ராஜரின் அரசாட்சியின் சிறப்பு மேலும் தொடர்கிறது.

அரசாட்சியை செவ்வனே செய்தவாறு, நூறு அஷ்வமேத யாகத்தினை செய்து முடித்து, சக்ரவர்த்திகளில் சிறந்தவன் என்று சொல்லி, அரசாட்சி செய்தார். ஸ்ரீஹரியின் பாதங்களை பூஜை செய்த புண்ணியங்களின் பலனால், மஹானுபாவனான பிரகலாத ராஜர், மூன்று உலகங்களிலும் சிறப்பாக அரசாட்சி செய்தார்.

ஸாது⁴ ஜனததி போஷ ஶுப⁴தம
வாத³ த்⁴ருத நிஜ வேஷ ஸந்தத
மோத³மய ஸத்கார்ய நிர்ஜித தோ⁴ஷ கு³ணபூ⁴ஷா
பாத ப⁴ஜிஸலு இச்செ பூர்த்திப
னாதி காலத³லிந்த³ ஜனகெ
போ³த⁴ஸுக² மொத³லாத³ வித³வித³ பூர்ணப²ல நீட்³த³ ||25

ஸாது ஜனத்தி போஷ - ஸஜ்ஜனர்களை / ரிஷி முனிவர்களை உபசரிப்பவனே / காப்பவன்; ஶுபதமவாத த்ருத நிஜ வேஷ - சுபகரமான, திடமான தேகம் கொண்டவன்; ஸந்தத மோதமய ஸத்கார்ய - எப்போதும் மகிழ்ச்சியை தரக்கூடிய நற்செயல்களை

செய்பவன்; நிர்ஜித தோஷ - தோஷங்கள் அனைத்தையும் வென்றவன்; குணபூஷா - நற்குணங்களால் அலங்கரிக்கப்பட்டவன்; பாத பஜிஸலு - உன்னை யார் வணங்குகிறார்களோ / உன் பாதங்களை யார் பஜிக்கிறார்களோ; இச்செ பூர்த்திப - அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றுகிறாய்; அனாதி காலதலிந்த - எப்போதுமே; ஜனகெ - உன் மக்களுக்கு; போதஸுக - சிறப்பான சுகங்கள்; மொதலாத - முதலான; விதவித பூர்ணபல நீட்த - பற்பல முழுமையான சுகங்களை / பலன்களை கொடுக்கிறாய்.

ஸ்ரீபிரகலாத ராஜரைக் குறித்தான பிரார்த்தனை ஸ்லோகமாக இது இருக்கிறது.

ஸஜ்ஜனர்களை ரிஷி முனிவர்களை உபசரிப்பவனே / காப்பவனே. சுபகரமான திடமான தேகம் கொண்டவனே. எப்போதும் மகிழ்ச்சியை தரக்கூடிய நற்செயல்களை செய்பவனே. எவ்வித தோஷங்களும் அற்றவனே. நற்குணங்களைக் கொண்டவனே. உன்னை யார் வணங்குகிறார்களோ, உன் பாதங்களை யார் பஜிக்கிறார்களோ, அவர்களுடைய விருப்பங்களை நீ நிறைவேற்றுவாய். எப்போதும் உன் மக்களுக்கு (பக்தர்களுக்கு) சிறப்பான சுகங்கள் முதலான பற்பல முழுமையான சுகங்களை / பலன்களைக் கொடுக்கிறாய்.

இதே சிறப்புகளை / பிரார்த்தனைகளை ஸ்ரீவ்யாஸராஜருக்கும் / ஸ்ரீராயருக்கும் பொருத்தி பார்த்துக் கொள்ளலாம்.

தி³திஜரெல்லரு நின்ன கோ³வின
ஸுதனமாடி³ ஸர்வரஸக³ள
மிதியுயில்லதெ³ த⁴ரெய கோ³வின மாடி³ கரெஸித³ரு
ரதுன ஹேம ஸுமெளக்திகாவளி
ததிய ஸந்ததயெய்தி³ போ⁴க³தி³
விததராத³ரு நின்ன கருணவயெந்து1 வர்ணிஸலி ||26

திதிஜரெல்லரு - அசுரர்கள் அனைவரும்; தரெய கோவின மாடி - பூமாதேவியை பசுவாக ஆக்கி; நின்ன கோவின ஸுதனமாடி - உன்னை கன்றுக்குட்டியாக ஆக்கி; மிதியுயில்லதெ - எவ்வித எல்லையும் இன்றி (அபாரமாக); ஸர்வரஸகள - அனைத்து ரஸங்களையும் (பால் / ஞானம்); கரெஸிதரு - கறந்தனர் (பெற்றனர்); ரதுன ஹேம சுமெளக்திக

ஆவளி ததிய - ரத்ன, தங்க, முத்துக்களின் வரிசை போன்றதான (மிகச் சிறந்த); போகதி - போகங்களை; ஸந்ததயெய்தி - எப்போதும் பெற்று; விததராதரு - தன்யர் ஆயினர்; நின்ன கருணவயெந்து வர்ணிஸலி - உன் கருணையை நான் எவ்வாறு வர்ணிப்பேன்? (வர்ணிப்பது சாத்தியம் இல்லை).

பிரகலாதராஜரின் பொன்மொழிகள் / உபதேசங்கள் ஆகியவற்றின் மகிமைகளை இங்கு போற்றுகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

அசுரர்கள் அனைவரும் பூமாதேவியை பசுவாக ஆக்கி, உன்னை கன்றுக்குட்டியாக ஆக்கி, எவ்வித எல்லைகளும் இன்றி, உன்னிடமிருந்து அனைத்து ரஸங்களையும் (ஞானம்) கறந்தனர். ரத்ன, தங்க, முத்துக்களின் வரிசை போன்றதான மிகச் சிறந்த போகங்களை எப்போதும் பெற்று தன்யர் ஆயினர். உன் கருணையை நான் எவ்வாறு வர்ணிப்பேன்? (அப்படி வர்ணிப்பதே சாத்தியம் இல்லை).

ஸ்ரீபிரகலாத ராஜரின் உபதேசங்கள் மிகவும் புகழ் பெற்றவை. பாகவதத்தில் இவை விளக்கப்பட்டுள்ளன. சில குறிப்புகளை மட்டும் இங்கு பார்ப்போம். இவற்றை மிகவும் அற்புதமாக உபதேசம் செய்திருக்கிறார் ஸ்ரீபிரகலாத ராஜர்.

* நவவித பக்தி முறைகள்
* காம கிரோதங்களை விடுங்கள்
* ஐஹிக பதார்த்தங்கள் அனைத்தும் தற்காலிகமே
* விஷய சுகங்களில் ஈடுபாடு தேவையில்லை
* ஸ்ரீஹரியின் உபாஸனை மிகவும் சுலபம்

நின்ன நம்பி³த³³ ஜனகெ ந்யூனதி
இன்னு தா³வித⁴தி³ந்த³³ பா³ரது³
உன்ன தாகோ³து³³ நிகி²ள பா⁴க்³யவு மிதியுயில்லத³³லெ
க⁴ன்ன நின்னய பாத³³யுக³³ளவ
மன்னத³³லெ நா ப⁴ஜிபெ ஸர்வத³³
என்ன பாலிஸுயெந்து³³ ப்ரார்த்தனெ மாடி³³ பே³டு³³வெனு ||27

நின்ன நம்பித ஜனகெ - உன் பக்தர்களுக்கு / மக்களுக்கு; ந்யூனதி - எவ்வித குறைகளும்; இன்னு தாவிததிந்த பாரது - இன்னும் எவ்விதத்திலும் வராது; உன்ன தாகோது - அவர்களுக்கு நல்லதே

நடக்கிறது; நிகிள பாக்யவு - அபாரமான பாக்கியங்கள்; மிதியுயில்லதலெ - எவ்வித எல்லைகளும் இன்றி கிடைக்கிறது; கன்ன - சிறந்தவனே; நின்னய பாதயுகளவ - உன்னுடைய பாதங்களை; மன்னதலெ - இடைவிடாமல்; நா பஜிபெ - நான் வணங்குவேன்; ஸர்வத - எப்போதும்; என்ன பாலிஸுயெந்து - என்னை காப்பாற்று / எனக்கு அருள்வாயாக என்று; ப்ரார்த்தனெ மாடி - பிரார்த்தனை செய்து; பேடுவேனு - வேண்டிக் கொள்வேன்.

ஸ்ரீபிரகலாதராஜரைக் குறித்தான பிரார்த்தனையை செய்கிறார் ஸ்ரீதாஸர்.

உன் பக்தர்களுக்கு எவ்வித குறைகளும், எவ்விதங்களிலும் வராது. அவர்களுக்கு நல்லதே நடக்கிறது. அபாரமான பாக்கியங்கள் அவர்களுக்கு எவ்வித எல்லைகளும் இன்றி கிடைக்கிறது. சிறந்தவனே, உன்னுடைய பாதங்களை இடைவிடாமல் நான் வணங்குவேன். எப்போதும் என்னை காப்பாற்று / எனக்கு அருள்வாயாக என்று பிரார்த்தனை செய்கிறேன்.

கோ³வு பங்கதி³ மக்³னவாகி³ரெ
காவ நரனனு காணதீ³பரி
தா⁴வி ஸ்யாக³லெ ப³ப்ப நரனிகெ³ உஸரலுத³னவனு
பா⁴வி ஸாக்ஷண வ்யஸன களெயதெ³
தீவி கொண்டத³ரல்லி முளுகி³ஸெ
கோ³வு மாடு³வவேனு தே³வனெ நீனே பா³லக³னு ||28

கோவு - பசுவானது; பங்கதி மக்னவாகிரெ - சேற்றில் மாட்டிக் கொண்டிருந்தால்; காவ நரனனு - அதனை காப்பாற்றுபவனான மனிதனை; காணதெ - காணாமல் தவிக்க; தாவிஸி - பாய்ந்து; ஆகலே - அப்போதே உடனடியாக; பப்ப நரனிகெ - வரும் மனிதனுக்காக; உஸரலு - காத்திருக்க; அதனவனு - வந்த அவன், அந்த பசுவை; பாவிஸி - பார்த்து கவலைப்பட்டு; ஆக்ஷண - உடனடியாக; வ்யஸன களெயதெ - அதன் துயரத்தை போக்காமல்; தீவி கொண்டதரல்லி - எங்கு இருக்கிறதோ, அதிலேயே (சேற்றிலேயே); முளுகிஸெ - மூழ்கடித்தால்; கோவு மாடுவவேனு - அந்த பசு என்னதான் செய்யும்? தேவனே - ஸ்வாமியே; நீயே பாலகனு - நீயே காப்பவன்;

ஸ்ரீஹரியைக் குறித்தான ஸ்ரீதாஸரின் பிரார்த்தனை இங்கிருந்து இந்த சந்தி முடியும்வரை நடக்கிறது. ஈஷ தாஸ பாவத்தினை, பகவந்தனின் பக்தவத்ஸல என்னும் குணத்தை குறிப்பிடும்படியாக இந்த பத்யங்கள் இருக்கின்றன.

பசுவானது சேற்றில் மாட்டிக் கொண்டிருந்தால் அதனை காப்பாற்றுபவனான மனிதனை காணாமல் தவிக்க, அவனுக்காக காத்திருக்க, அப்போது அங்கு வரும் அந்த மனிதன், உடனடியாக அதன் துயரத்தை போக்காமல், அந்த பசு எங்கு இருக்கிறதோ (சேற்றில்), அதிலேயே அதனை மூழ்கடித்தால், அந்த பசு என்னதான் செய்யும்? ஸ்வாமியே, நீயே என்னை காப்பவன்.

* சம்சார ஸாகரத்திலிருந்து காப்பவனான பகவந்தன், தன்னை காக்காமல், மறுபடி இதிலேயே மூழ்கடித்தால், நான் என்னதான் செய்வது என்று வேண்டுவதாக இந்த பத்யம் இருக்கிறது.

* தீவி கொண்டதரல்லி - என்னும் சொல்லினை, ஹரிகதாம்ருதஸாரத்தில் ஸ்ரீஜகன்னாததாஸர் ஒரு இடத்தில் பயன்படுத்தியிருக்கிறார் என்பதை பார்க்கிறோம்.

தீவிகொண்டி[3]ஹவல்லி மஜ்ஜ க
லேவரதி[3] அங்கு[3]லிய பர்வத[3]
டா[2]வினலி முன்னூரு அரவத்தெனிப த்ரிஸ்த[2]ஸதி[3] |
(ஜீவப்ரகரண சந்தி 9-29)

ஸ்வாதி வ்ருஷ்டிகெ[3] பா[3]யி தெரெதி[3]ஹ
சாதகாஸ்யதொ[3]ளக்[3]னி கண ஜீ
மூத நாத[2]னு கரெயலாக்ஷண அத[3]ர தப்பேனோ
நீத கு[3]ருவர நீனே என்னனு
ப்ரீதிபூர்வக பாலிஸெந்தெ[3]டெ[3]
மாது லாலிஸதி[3]ரலு என்னய யதனவேனித[3]கெ ||29

ஸ்வாதி வ்ருஷ்டிகெ - ஸ்வாதி நட்சத்திரத்தின் மழைக்கு; பாயி தெரதிஹ - வாய் திறக்கும்; சாதகாஸ்யதொளு - சாதக பக்ஷியின் வாயில்; அக்னி கண - நெருப்பினை; ஜீமூத நாதனு - பகவந்தன் ஆனவன்; கரெயலாக்ஷண - வைத்தால்; அதர தப்பேனோ - இதில்

அதன் தவறு என்ன?; நீத குருவர - சிறந்த குருவான; நீனே என்னனு - நீயே என்னை; ப்ரீதிபூர்வக - மிகவும் அன்புடன்; பாலிஸி - என்னை காத்து; எந்தெடெ மாது லாலிஸதிரலு - என்னுடைய எல்லா (அர்த்தமற்ற) பேச்சினையும் பொருட்படுத்தாமல் விட; என்னய யதனவேனிதகெ - இதில் என் முயற்சி என்ன இருக்கிறது? (எதுவும் இல்லை).

ஸ்வாதி நட்சத்திரத்தின் மழைக்கு வாய் திறக்கும் சாதக பக்ஷியின் வாயில் பகவந்தன் நெருப்பினை வைத்தால், அதில் அந்த பறவையின் தவறு என்ன?. சிறந்த குருவான நீயே என்னை மிகவும் அன்புடன் காத்து, என்னுடைய அர்த்தமற்ற பேச்சினை பொருட்படுத்தாமல் இருந்தால், இதில் என்னுடைய தவறு / முயற்சி என்ன? (எதுவும் இல்லை).

* ஸ்வாதி நட்சத்திரத்திலேயே முதல் தூய்மையான மழை வரும் என்ற நம்பிக்கை. அந்த மழைக்காக சாதக பறவை காத்திருக்கும் என்றும் சொல்கிறோம்.
* இதில் ஜீவர்களின் அஸ்வதந்த்ரத்தையும், பகவந்தன் ஒருவனே ஸ்வதந்த்ரன், ஸர்வோத்தமன் மற்றும் அனைத்தையும் செய்து செய்விப்பவன் என்னும் கருத்துகளையும் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

ஜனனி தனயகெ³ விஷவ நீட³லு
ஜனக தனயர மாரிகொள்ளலு
ஜனப வ்ருத்தி க்ஷேத்ர களெத³ரெ ஆரிகு³ஸருவுது³
க⁴ன ஷிரோமணி நீனெ என்னனு
மனகெ தாரதெ³ தூ³ர நோட³லு
இனதெ ஸ்ரமவனு களெது³ பாலிபராரோ பேளனெகெ³ ||30

ஜனனி தனயகெ விஷவ நீடலு - தாயானவள் தன் குழந்தைக்கு விஷம் கொடுத்தால்; ஜனக தனயர மாரிகொள்ளலு - தந்தையானவன் தன் மக்களை விற்றுவிட்டால்; ஜனப - ஒரு அரசனானவன்; வ்ருத்தி க் ஷேத்ர - தன் நாட்டினை; களெதரெ - விற்றுவிட்டால்; ஆருகுஸருவது - (அவர்கள்) யாரிடம் போய் சொல்வது?; கன ஷிரோமணி - சிறந்த ஸர்வோத்தமனான; நீனெ என்னனு - நீயே என்னை; மனகெ தாரதெ - மனதில் நினைத்துக் கொள்ளாமல்; தூர நோடலு - வேறு புறம் பார்த்தால்; இனதெ - இவ்வளவு (அதிகமாக உள்ள) ; ஸ்ரமவனு களெது

- என் கஷ்டங்களை போக்கி; பாலிபராரோ - என்னை காப்பாற்றுபவர்கள் யார் இருக்கிறார்கள்?; பேளனெகெ - (என்று) எனக்கு சொல்வாயாக.

காப்பாற்ற வேண்டிய பகவந்தனே நம்மை கஷ்டப்படுத்தினால், நாம் யாரிடம் சென்று முறையிடுவது?. நாம் அஸ்வதந்த்ரர் ஆயிற்றே என்று ஸ்ரீஹரியிடம் பிரார்த்தனை செய்கிறார் ஸ்ரீதாஸர்.

தாயானவள் தன் குழந்தைக்கு விஷம் கொடுத்தால், தந்தையானவன் தன் மக்களை தானே விற்றுவிட்டால், ஒரு அரசனானவன் தன் நாட்டினை எதிரிகளுக்கு விற்றுவிட்டால், பாதிக்கப்பட்டவர்கள் யாரிடம் போய் முறையிடுவது?. சிறந்த ஸர்வோத்தமனான நீயே என்னை மனதில் நினைத்துக் கொள்ளாமல், வேறு புறம் பார்த்தால், இவ்வளவு அதிகமாக உள்ள என் கஷ்டங்களை போக்கி என்னை காப்பாற்றுபவர்கள் யார் இருக்கிறார்கள்?. நீயே சொல்.

நினகெ³ தப்பது³ என்ன காய்வது³
எனகெ³ தப்பது³ நின்ன ப⁴ஜிஸோது³
ஜனும ஜனுமகெ ஸித்³த⁴வெந்தி³கு³ புஸிய மாதல்ல
கனஸிலாத³ரு அன்யதே³வர
நெனஸெனெந்தி³கு³ நின்ன பத³யுக³
வனஜவல்லதெ³ பெரதெ எனகே³னுண்டோ ஸர்வக்ஞ ||31

நினகெ தப்பது என்ன காய்வது - என்னைக் காப்பது உன் கடமையாகும்; எனகெ தப்பது நின்ன பஜிஸோது - உன்னை வணங்குவது என் கடமையாகும்; ஜனும ஜனுமகெ - அனைத்து பிறவிகளுக்கும்; ஸித்தவெந்திகு - இதுவே நிச்சயமான வழியாகும்; புஸிய மாதல்ல - இது பொய் அல்ல; கனஸிலாதரு - என் கனவில் கூட; அன்யதேவர - வேறு தெய்வங்களை; நெனஸெனெந்திகு - என்றைக்கும் நான் நினைக்க மாட்டேன்; நின்ன பதயுக வ்னஜவல்லதெ - உன் பாதங்கள் என்னும் தாமரையைத் தவிர; பெரதெ - அதற்கு மாற்றாக; எனகேனுண்டோ - எனக்கு என்ன இருக்கிறது?; ஸர்வக்ஞ - ஸர்வக்ஞனே.

பகவந்தன் மற்றும் பக்தனிடையே இருக்கும் உறவினை, இங்கு உரிமையுடன் நிலை நாட்டுகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

என்னைக் காப்பது உன் கடமையாகும். உன்னை வணங்குவது என் கடமையாகும். அனைத்து பிறவிகளுக்கும் இதுவே நிச்சயமான வழியாகும். இது பொய் அல்ல. என் கனவில் கூட வேறு தெய்வங்களை என்றைக்கும் நான் நினைக்க மாட்டேன். உன் பாதங்கள் என்னும் தாமரையைத் தவிர, எனக்கு வேறு கதி என்ன இருக்கிறது?.

எனகு ஆணெ ரங்கா நினகு ஆணே
எனகு நினகு இப்பரிகு நின்ன பக்தராணே
என்னும் பாடல் முழுக்க இவ்வாறே உரிமையுடன் பகவந்தனிடம் முறையிட்டிக்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர். அதையே இங்கு நம் ஸ்ரீதாஸரும் பின்பற்றியிருக்கிறார்.

பீ⁴திகொ³ளிஸெளவ ப⁴வத³ தாபகெ
பீ⁴தனாதெ³னோ என்ன பாலிஸோ
பூ⁴த நாத²னு ப⁴வதி³ தொளலுவ என்ன பாடே³னு
பூ⁴தத³யபரனாத³ காரண
பூ⁴தி நீ எனகி³த்து ப⁴வப⁴ய
பீ⁴தி பரிஹர மாடோ³ கு³ரு ஜகன்னாத²விட்டலனெ ||32

பீதிகொளிஸெளவ - பயமுறுத்தி நம்மை இழுக்கும்; பவத தாபகெ - சம்சார சுழற்சிக்கு; பீதனாதெனோ - நான் பயப்படுகிறேன்; என்ன பாலிஸோ - என்னை காப்பாற்றுவாயாக; பூத நாதனு - தேவர்களின் தலைவனே; பவதி தொளலுவ என்ன பாடேனு - இதில் மூழ்கி கஷ்டப்படும் என் பாடு என்ன?; பூததயபரனாத காரண - அனைத்து பிராணிகளிடமும் நீ கருணை காட்டுவதால்; பூதி - வரம்; நீ எனகித்து - நீ எனக்கு அளித்து; பவபய பீதி - சம்சார சாகரத்தின் பயத்தினை; பரிஹர மாடோ - பரிகாரம் செய்வாயாக; குரு ஜகன்னாத விட்டலனெ - ஹே குரு ஜகன்னாத விட்டலனே.

இந்த சந்தியின் கடைசி பத்யத்தில் தனது பிம்பரூபியிடம் பிரார்த்தனை செய்து முடித்து வைக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

பயமுறுத்தி நம்மை இழுக்கும் சம்சார சுழற்சிக்கு நான் பயப்படுகிறேன். என்னை காப்பாற்றுவாயாக. தேவர்களின் தலைவனே. இதில் மூழ்கி கஷ்டப்படும் என் பாடு என்ன?. அனைத்து பிராணிகளிடமும் நீ

கருணை காட்டுவதால், எனக்கும் நீ வரம் அளித்து சம்சார சாகரத்தின் பயத்தினை பரிகாரம் செய்வாயாக, ஹே குருஜகன்னாத விட்டலனே.

****

ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸரின் கன்னட ஸ்ரீராகவேந்திர விஜயம்

சந்தி - 3

சந்தி 3ன் விஷய சுருக்கம்

ஸ்ரீவ்யாஸதீர்த்தர் பிறந்த பன்னூர் கிராம வர்ணனை; அவரின் பெற்றோர் அறிமுகம்; ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் பன்னூருக்கு வருகை; இவர்களுக்கு ஆசிர்வாதம்; அந்தப் பெண் (ஸ்ரீவ்யாஸதீர்த்தரின் பூர்வாசிரம தாய்) கர்ப்பவதி ஆகுதல்; அவருடைய நிலையை (கர்ப்பத்தில் குழந்தை இருந்தபோது) மிகவும் அழகாக வர்ணித்தல்; பின் வ்யாஸதீர்த்தரின் அவதாரம்; ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் குழந்தையை அழைத்துச் சென்று வளர்த்தல்; அக்குழந்தையின் பால லீலைகள் என இந்த சந்தியில் 32 பத்யங்கள் உள்ளன.

வ்யாஸதீர்த்தர ஒலுவோ விட்டலோபாஸக ப்ரபுவர்ய புரந்தரதாஸரார்யர தயவோ திளியது என்று ஸ்ரீதவிட்டல தாஸரும் (ஹரிகதாம்ருதஸார பலஸ்ருதி) பல்வேறு ஹரிதாஸர்களும் ஸ்ரீவ்யாஸதீர்த்தரின் மகிமைகளைப் பற்றி பாடியுள்ளனர்.

ராக⁴வேந்தி³ரர விஜய பேளுவெ
ராக⁴வேந்தி³ரர கருண ப³லத³லி
ராக⁴வேந்திரர ப⁴குதராத³வரித³னு கேளுவுது³ ||

ஆ நமிபெ கு³ருராயனங்க்⁴ரிகெ³
ஸானுராக³தி³ ஸர்வகாலகெ
தீ³னஜனருத்தா³ரி ஜனரக⁴ஹாரி ஶுபகாரி
நீனெயெனுதலி தீ³னனாகீ³
நானெ நின்னனு பே³டி³கொம்பே³னு
நீனே பாலிஸு ப்ரபு³வெ ஸ்வாஸ்ரித ஜனர ஸுரதருவெ ||1

குருராயனங்க்ரிகெ - குரு ராயரின் பாத கமலங்களுக்கு; ஆ நமிபெ - விழுந்து வணங்குவேன்; ஸர்வகாலகெ - அனைத்து காலங்களிலும்; ஸானுராகதி - பக்தி மரியாதைகளுடன்; தீனஜனருத்தாரி - எளிய மக்களை காப்பாற்றுபவர்; ஜனரகஹாரி - மக்களின் துன்பங்களை போக்குபவர்; ஸுபகாரி - அனைத்து நலன்களையும் வழங்குபவர்; நீனெயெனுதலி - என் அனைத்தும் நீயே என்று சொல்லியவாறு; தீனனாகி - உன் பக்தனாகி; நானெ நின்னனு பேடிகொம்பெனு - நான் உன்னை வணங்குகிறேன்; நீயே பாலிஸு ப்ரபுவே - ஸ்வாமியே, நீயே என்னை காப்பாற்று; ஸ்வாஸ்ரித ஜனர - உன்னை நம்பிய பக்தர்களின்; ஸுரதருவெ - கல்பவ்ருக்ஷமே.

ஸ்ரீகுருராயரைக் குறித்தான பிரார்த்தனை வடிவமாக இந்த முதல் பத்யம் இருக்கிறது.

குருராயரின் பாத கமலங்களுக்கு நான் விழுந்து வணங்குகிறேன். இவர் அனைத்து காலங்களிலும், பக்தி மரியாதைகளுடன், எளிய மக்களை காப்பாற்றுபவராக, அவர்களின் துன்பங்களை போக்குபவராக இருக்கிறார். அனைத்து நலன்களையும் வழங்குகிறார். என் அனைத்தும் நீயே என்று சொல்லியவாறு, உன் பக்தனாக நான் உன்னை வணங்குகிறேன். ஸ்வாமியே. உன்னை நம்பிய பக்தர்களின் கல்பவ்ருக்ஷமே நீயே என்னை காப்பாற்று.

பஜதாம் கல்பவ்ருக்ஷாய நமதாம் காமதேனவே -- என்று ஸ்ரீராயரை நாம் சொல்வதையே இந்த பத்யத்தில் சொல்லி புகழ்ந்திருக்கிறார் ஸ்ரீதாஸர்.

ஆ யுக³தி³ ப்ரஹ்லாத நாமக
ராயனீ யுக³த³ல்லி வ்யாஸா
ராயனாக³யவதரிஸி தꣳமதிமதவ ஸ்தா²பிஸித³
தோயஜாம்ப³க லகுமிபதி நா
ராயணனெ தா ஸர்வருத்தம
தோயஜாஸன தி³விஜரெல்லரு ஹரிகெ³ ஸேவகரு ||2

ஆ யுகதி ப்ரஹ்லாத நாமக ராயனு - அந்த (க்ருத) யுகத்தில் பிரகலாதன் என்னும் பெயர் கொண்ட அரசன்; ஈ யுகதல்லி வ்யாஸராயனாகெ - இந்த கலி யுகத்தில் வ்யாஸராஜராக அவதரித்து; தꣳமதிமதவ

ஸ்தாபிஸித - ஸ்ரீமத்வாசார்யரின் மதத்தை நிறுவினாய்; தோயஜாம்பக லகுமிபதி நாராயணனே - தாமரைக்கண்ணனான லட்சுமிபதியான ஸ்ரீமன் நாராயணனே; தா ஸர்வருத்தம - ஸர்வோத்தமன்; தோயஜாஸன திவிஜரெல்லரு - அந்த ஸ்ரீமன் நாராயணனின் தேவதைகள் அனைவரும்; ஹரிகெ ஸேவகரு - ஸ்ரீஹரிக்கு சேவகர்களே ஆவர்.

ஸ்ரீவ்யாஸராஜ அவதாரத்தினைப் பற்றி ஒரு சிறு அறிமுகத்தை இங்கு தருகிறார் ஸ்ரீதாஸர்.

அந்த க்ருத யுகத்தில் பிரகலாதன் என்னும் பெயர் கொண்ட அரசனாக இருந்து, பின் இந்த கலி யுகத்தில் வ்யாஸராஜராக அவதரித்து, ஸ்ரீமன் மத்வாசார்யரின் மதத்தை நிறுவினாய். தாமரைக்கண்ணனான லட்சுமிபதியான ஸ்ரீமன் நாராயணனே ஸர்வோத்தமன், அந்த ஸ்ரீமன் நாராயணனின் தேவதைகள் அனைவரும் அவனின் சேவகர்களே ஆவர்.

* ஸ்ரீவ்யாஸராஜராக அவதரித்து, ஹரி ஸர்வோத்தமத்வத்தையும், பஞ்சபேத, தாரதம்ய போன்ற த்வைத மத கருத்துக்களை பரப்பினாய் என்கிறார் ஸ்ரீதாஸர்.

* ஸ்ரீவ்யாஸராஜர் இயற்றிய மத்வ பிரமேய ஸ்துதி இவ்வாறு இருக்கிறது.

ஸ்ரீமன் மத்வ மதே ஹரி: பரதர: ஸத்யம் ஜகத் தத்வதோ
பேதோ: ஜீவகணா: ஹரே: அனுசரா: நீசோச்ச பாவம் கத:
முக்திர்னைஜ ஸுகானுபூதிரமலா பக்திஸ்ச தத்ஸாதனம்
ஹ்யக்ஷாதி த்ரிதயம் ப்ரமாணமகிலம் நாயைக வேத்யோ ஹரி:

இனிது ஶாஸ்த்ரத ஸார தெகெ³து³
வினயதி³ந்த³லி தன்ன ப⁴ஜிஸுவ
ஜனர ஸந்ததிக³ருஹி முகுதிய பத²வ தோரிஸித³
முனிகுலோத்தம யதிஷிரோமணி
கனகதா³ஸன ப்ரியனு ஸம்யமி
க³ணகெ ராஜனு யதுவரேஶன ப⁴ஜிஸி தா மெரெத³ ||3

இனிது ஶாஸ்த்ரத ஸார தெகெது - சாஸ்திரங்களின் (ஸர்வமூல கிரந்தங்களின், ஸ்ரீமன் நியாய ஸுதாவின்) ஸாரங்களை எடுத்து தொகுத்து; தன்ன பஜிஸுவ - தன்னை வணங்குபவர்களான; ஜனர ஸந்ததிகெ - தன் பக்தர்களுக்கு / தன்னை பின்தொடர்பவர்களுக்கு; வினயதிந்தலி - மிகவும் பக்தி மரியாதைகளுடன்; அருஹி - கொடுத்து அருளி; முகுதிய பதவ தோரிஸித - அவர்களுக்கு முக்தியின் வழியை காட்டினார்; முனிகுலோத்தம - முனிவர்களில் சிறந்தவர்; யதிஷிரோமணி - யதிகளில் சிறந்தவர்; கனகதாஸன ப்ரியனு - கனகதாஸருக்கு மிகவும் பிரியமானவர்; ஸம்யமி கணகெ - யதிகளின் குழுவிற்கு தலைவர்; யதுவரேஶன பஜிஸி - யது குலத்தின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணனை; பஜிஸி தா மெரெத - வணங்கி, இந்த உலகில் திகழ்ந்தார் / சஞ்சரித்தார்.

ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமைகளை இங்கு சுருக்கமாக சொல்லி, அடுத்த பத்யத்திலிருந்து அவர் பிறந்த கதையினை அதன் சிறப்பினை அழகாக விளக்குகிறார் ஸ்ரீகுருஜகன்னாத தாஸர்.

ஸர்வமூல கிரந்தங்களின், ஸ்ரீமன் நியாய ஸுதாவின் ஸாரங்களை எடுத்து தொகுத்து, தன்னை வணங்குபவர்களான தன் பக்தர்களுக்கு / தன்னை பின்தொடர்பவர்களுக்கு, மிகவும் பக்தி மரியாதைகளுடன் கொடுத்து அருளி, அவர்களுக்கு முக்தியின் வழியை காட்டினார். முனிவர்களில் சிறந்தவரான, யதிகளில் சிறந்தவரான, கனகதாஸருக்கு மிகவும் பிரியமானவரான, யதிகளின் குழுவிற்கு தலைவரான ஸ்ரீவ்யாஸராஜர், யது குலத்தின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணனை வணங்கி, இந்த உலகில் திகழ்ந்தார்.

ஈத புட்டித சர்யவருஹுவெ
பூ⁴தளதொ³ளாஶ்சர்யவெந்தி³கு³
பூ⁴த பா⁴வி ப்ரவர்த்தகாலத³ல்லில்ல நரரொளகெ³
ஜாதனாத³ரு ஜனவிலக்ஷண
வீததோ³ஷ விஶேஷ மஹிமனு
க்²யாதனாத³னு ஜக³தி³ ஸர்வத³ ஜனன மொத³லாகி³ ||4

ஸ்ரீவ்யாஸராஜர் பிறந்த சரிதம், அவரது பெற்றோர் ஆகியோரைப் பற்றிய சம்பவங்களை இந்த பத்யத்திலிருந்து விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

ஈத புட்டித சர்வருஹுவெ - இத்தகைய ஸ்ரீவ்யாஸராஜர் பிறந்த சரிதத்தை சொல்கிறேன்; பூதளதொளு - அதுவே இந்த பூலோகத்தில்; ஆஶ்சர்யவெந்திகு - மிகவும் வியப்பான விஷயமாகும்; பூத பாவி ப்ரவர்த்தக காலதல்லில்ல - இறந்த, எதிர், நிகழ் காலங்களில் (இத்தகைய ஆச்சரியம் எங்கும்) இல்லை; நரரொளகெ - மனிதர்கள் (இத்தகைய விஷயத்தை கேள்விப்பட்டதில்லை); ஜாதனாதரு - பிறந்தார் (அவதரித்தார்); ஜனவிலக்ஷண - மக்களில் ஒரு அற்புதர்; வீததோஷ - தோஷங்கள் அற்றவர்; விஶேஷ மஹிமனு - அற்புதமான மகிமைகளைக் கொண்டவர்; ஜனன மொதலாகி - பிறந்த அந்த நொடியிலிருந்தே; ஸர்வத - எப்போதும் (அனைத்து காலங்களிலும்); ஜகதி - உலகில்; க்யாதனாதனு - புகழ் பெற்றார்.

இத்தகைய ஸ்ரீவ்யாஸராஜர் பிறந்த சரித்திரத்தை சொல்கிறேன். அதுவே இந்த பூலோகத்தில் மிகவும் வியப்பான விஷயமாகும். இறந்த, நிகழ், எதிர் காலங்களில் இத்தகைய ஆச்சரியம் வேறெங்கும் இல்லை. மனிதர்கள் இத்தகைய விஷயத்தை கேள்விப்பட்டதில்லை. மக்களில் ஒரு அற்புதர்; தோஷங்கள் அற்றவர்; அற்புதமான மகிமைகளை கொண்டவர்; அவர் பிறந்த அந்த நொடியிலிருந்தே இந்த உலகில் புகழ் பெற்றார்.

த³க்ஷிணதி³ ப³ன்னூரு க்³ராமதி³
த³க்ஷநெனிஸித³ தே³ஶமுகரலி
லக்ஷ்மி நாயகனெனிஸி லோகதி³ க்²யாதனாகி³ப்ப
யக்ஷனாத²ன தனதி³ தானு
லக்ஷிகரிஸனு யெனிபனாதகெ
லக்ஷணாங்கிதளாத³ ஜயவதியெம்ப ஸதியுயுண்டு ||5

தக்ஷிணதி - தென்னிந்தியாவில்; பன்னூரு க்ராமதி - பன்னூரு என்னும் கிராமத்தில்; தக்ஷநெனிஸித தேஶமுகரலி - சிறந்தவரான; தேஶமுகரலி - அந்த கிராமத்து அதிகாரியானவரில்; லட்சுமி நாயகனெனிஸி - மிகவும் செல்வந்தனாக; லோகதி க்யாதனாகிப்ப - அந்த பகுதியில் புகழ் பெற்றவராக இருந்தார்; யக்ஷனாதன தனதி - குபேரனின் செல்வத்திற்கு; தானு லக்ஷிகரிஸலு - அதை பொருட்படுத்தாமல் (வைராக்கியத்துடன் என்றும் சொல்லலாம்); எனிபனாதகெ - என்று வாழ்ந்து வந்த அவருக்கு; லக்ஷணாங்கிதளாத - மிகவும் அழகான லட்சணங்களைக் கொண்ட; ஜயவதியெம்ப

ஸதியுண்டு - ஜயவதி என்னும் மனைவி இருந்தாள். (ஜயவதி என்னும் இந்தப் பெயரானது உவமையாகவும் இருக்கலாம்).

ஸ்ரீவ்யாஸராஜர் பிறந்த பன்னூரு மற்றும் அவரது பெற்றோரின் அறிமுகத்தினை இங்கு செய்கிறார் ஸ்ரீகுருஜகன்னாத தாஸர்.

தென்னிந்தியாவில் (தென் கர்னாடகாவில்), பன்னூரு என்னும் கிராமத்தில் அதன் தலைவனான, அந்த கிராமத்து அதிகாரி இருந்தார். அவர் மிகவும் செல்வந்தனாக, அந்த பகுதியில் புகழ்பெற்றவராக இருந்தார். குபேரனின் செல்வத்தினை பொருட்படுத்தாமல் (மிகவும் வைராக்கியத்துடன்) வாழ்ந்து வந்த அவருக்கு மிகவும் அழகான லட்சணங்களைக் கொண்ட ஜயவதி என்னும் மனைவி இருந்தாள்.

ஜலஜ ஜயிஸுவ வத³ன நைத³லி
கெ³லுவ நிர்மல நயனயுக³ளவு
லலித சம்பகனாஸ த³ர்பணகத³பு ஶுபகரண
சலுவதா³டி³ய ரத³ன பங்க்தியு
கலிதரக்தாத⁴ரதி³ மினுகு³த
சலிபமந்தஸ்மிததி³ ஶோபி³ப சுபுக ராஜிபுது³ ||6

ஜலஜ ஜயிஸுவ வதன - தாமரையை வெல்வதான முகம்; நைதலி கெலுவ நிர்மல நயனயுகளவு - குவளை மலர்களைப் போல தூய்மையான இரு கண்கள்; லலித சம்பகனாஸ - அழகான சம்பங்கி பூவினைப் போன்றதான மூக்கு; தர்பண கதபு - கன்னங்கள் கண்ணாடியைப் போல பளபளவென்று ஒளிர்ந்தன; ஸுபகரண - மங்களமான காதுகள்; சலுவதாடிய - அழகான தாடை; ரதன பங்க்தியு - முத்துப் போன்ற பற்கள்: கலித ரக்தாதரதி மினுகுத - ரத்தச் சிவப்பாக ஒளிர்ந்தவாறு; சலிப மந்தஸ்மிததி - புன்னகையுடன் கூடியவாறு; ஶோபிப சுபுக ராஜிபுது - அந்த அழகான கழுத்துடன்; (அவர் இருந்தார்);

ஸ்ரீவ்யாஸராஜரின் பூர்வாசிரம தாயின் சிறப்பு தோற்ற வர்ணனையை செய்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

தாமரையை வெல்வதான முகம். அதில் குவளை மலர்களைப் போன்ற தூய்மையான இரு கண்கள். அழகான சம்பங்கி பூவினைப் போன்றதான மூக்கு. கண்ணாடியைப் போல கன்னங்கள்

பளபளவென்று ஒளிர்ந்தன. மங்களமான காதுகள், அழகான தாடை, முத்துப் போன்ற பற்கள், ரத்தச் சிவப்பாக ஒளிர்ந்தவாறு, புன்னகையுடன் கூடியவாறு அவர் இருந்தார்.

கம்பு[3] போலுவ கண்ட[2]தே[3]ஶவு
கும்பி[4] ஶுண்ட[3] ஸமான பா[3]ஹு
அம்பு[3]ஜோபம ஹஸ்தயுக[3]ளவு காஞ்சனாப[4]ரண
ரம்பெ[4]யள குசயுக[3]ள ஸுந்த[3]ர
கும்ப[4] போல்வவு உத[3]ரதே[3]ஶவு
ரம்ப[4]ப[1]ரண ஸுரோமராஜித மூரு வளியொப்பெ ||7

கம்பு போலுவ கண்ட - சங்குக் கழுத்து; கும்பி ஶுண்ட ஸமான பாஹு - யானையின் தும்பிக்கையைப் போன்ற நீளமான கைகள்: அம்புஜோபம ஹஸ்தயுகளவு - தாமரை போன்ற இரு கைகள்: காஞ்சனாபரண - அழகான ஆபரணங்களை தரித்திருக்கிறார்; ரம்பெயள குசயுகள ஸுந்தர கும்ப போல்வவு - கும்பத்தைப் போன்ற, ரம்பைக்கு ஒப்பான முலைகள்; உதரதேஶவு - வயிற்றுப் பிரதேசம்; ரம்பபரண - மூங்கிலைப் போல; ஸுரோமராஜித - சிறு மயிற்க்கால்களுடன்; மூரு வளியொப்பெ - மூன்று வரிகளைக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீவ்யாஸராஜரின் பூர்வாசிரம தாயின் சிறப்பு தோற்ற வர்ணனையை தொடர்ந்து இந்த பத்யத்தில் செய்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

சங்குக் கழுத்து, யானையின் தும்பிக்கையைப் போன்ற நீளமான கைகள், தாமரை போன்ற இரு கைகள், அழகான ஆபரணங்களை அணிந்திருக்கிறார். கும்பத்தைப் போன்ற, ரம்பைக்கு ஒப்பான முலைகள், வயிற்றுப் பிரதேசம் மூங்கிலைப் போல சிறு மயிர்க்கால்களுடன், மூன்று வரிகளைக் கொண்டிருக்கிறது.

கு[3]ம்ப[4]னாபி[4]ய ஸுளியு ஸுரநதி[3]
யம்பு[3]ஸுளியந்த[3]த[3]லி நாரி நி
தம்ப[3]புலினவு கத[3]லிஊரு ஜானுகன்னடி[3]யு
ஶம்ப[3]ராரிய தோண ஜங்க[4]யு
அம்பு[3]ஜோபமசரண புத்த[2]ளி
பொ[3]ம்பெயந்த[3]தி[3] ஸகல பூ[4]ஷணதி[3]ந்த[3]லொப்பித[3]ளு ||8

கும்பனாபிய - கும்பத்தைப் போல ஆழமாக இருக்கும் நாபியின்; ஸுளியு - ஆழமானது; ஸுரநதியம்பு ஸுளியுவந்ததலி - கங்கை நதியில் இருக்கும் சுழல் சுழல்வதைப் போல; நாரி - அந்தப் பெண்மணியின்; நிதம்ப - பின்புறமானது; புலினவு - மணல் குன்றினைப் போல இருந்தது; கதலி - வாழைத் தண்டு போல; ஊரு - தொடைகள்; ஜானு - முழங்கால்கள்; கன்னடியு - கண்ணாடியைப் போல இருந்தது; ಮಂಪರಾರಿಯ - மன்மதனின்; தூணி - அம்பறாத்தூணியைப் போன்ற; ஜங்கயு - துடைக்கும் முட்டிக்கும் நடுவில் உள்ள பகுதி; அம்புஜோபமசரண - கால்கள் தாமரையைப் போல இருக்கின்றன; புத்தளி பொம்பெயந்ததி - தங்க விக்ரகத்தைப் போல; ஸகல பூஷணதிந்தலு - அனைத்து வித அலங்காரங்களினால்; ஒப்பிதளு - அவள் ஜொலித்தாள்.

ஸ்ரீவ்யாஸராஜரின் பூர்வாசிரம தாயின் சிறப்பு தோற்ற வர்ணனையை தொடர்ந்து இந்த பத்யத்திலும் செய்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

கும்பத்தைப் போல ஆழமாக இருக்கும் நாபியின் ஆழமானது, கங்கை நதியில் இருக்கும் சுழல் சுழல்வதைப் போல இருந்தது. அந்தப் பெண்மணியின் பின்புறமானது, மணல் குன்றினைப் போல இருந்தது. அவரின் துடைகள், வாழைத்தண்டு போல, முழங்கால்கள் கண்ணாடியைப் போல இருந்தன. துடைக்கும் முட்டிக்கும் நடுவில் உள்ள பகுதி, மன்மதனின் அம்பறாத்தூணியைப் போல இருந்தது. கால்கள் தாமரையைப் போல இருக்கின்றன. அவள் அனைத்து வித அலங்காரங்களை அணிந்து கொண்டு, ஒரு தங்க விக்ரகத்தைப் போல ஜொலித்தாள்.

ಶಿರಿಯೋ ಪಾ⁴ಕ್³ಯದಿ³ ಸಲ್ವಿನಿಂದ³
ಪ್ಸರಯೋ ರೂಪದಿ³ ರತಿಯೋ ಕ್ಷಮದ³ಲಿ
ದ⁴ರೆಯೋ ದ³ಯದ³ಲಿ ನಿರುತ ವರಮುನಿ ಸುತಿಯೋ ಪೇಳ್ವರ್ಕೆ³
ಅರಿಯದ³ಂತಾ ನಾರಿ ಶಿರೋಮಣಿ
ಪಿರಿಯ ಶಿರಿಕು³ಣರೂಪದಿ³ಂದ³ಲಿ
ಮೆರೆಯುದಿಪ್ಪಳು ರಾಜಸುತ³ನದಿ³ ಲಕುಮಿ ತೆರೆದ³ಂತೆ ||9

பாக்யதி - இத்தகைய செல்வச் செழிப்பினால் ஸ்ரீதேவியோ; சல்வினிந்த அப்ஸரயோ - அழகினால் அப்ஸரஸ்ஸோ; ரூபதி ரதியோ - இவள் ரூபத்தில் ரதியோ; க்ஷமதலி தரெயோ - மன்னிக்கும்

குணத்தில் (பொறுமையில்) இவள் பூமாதேவியோ; தயதலி நிருத வரமுனி ஸதியோ - கருணையில் இவள் வரமுனிவர்களின் மனைவியோ; பேள்வர்கெ அரியதந்தா நாரி ಶಿரோமணி - யாரும் கேள்விப்படாத அற்புதப் பெண்மணியாக; ப்ரிய ಶ್ರಿகுணரூபதிந்தலி - அருமையான செல்வ, குண, ரூபத்தினால்; ராஜஸதனதி லகுமி தெரெதந்தெ - அரண்மனையில் லட்சுமிதேவி (செல்வச் செழிப்பு) இருப்பதைப் போல; மெரெயுதிப்பளு - இருந்தாள்;

ஸ்ரீவ்யாஸராஜரின் தாயின் சிறப்பு தோற்ற வர்ணனையை தொடர்ந்து இந்த பத்யத்தில் செய்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

இத்தகைய செல்வச் செழிப்பினால் இவள் ஸ்ரீதேவியோ; அழகில் அப்ஸரஸ்ஸோ; இவள் ரூபத்தில் ரதியோ; மன்னிக்கும் குணத்தில் (பொறுமையில்) இவள் பூமாதேவியோ; கருணையில் இவள் வரமுனிவர்களின் மனைவியோ என சொல்வதைப் போல இருந்தாள். அருமையான செல்வ, குண, ரூபத்தினால், அரண்மனையில் செல்வச் செழிப்புடன் இருப்பதைப் போல, இவள் இருந்தாள்.

தே³ಙபதியதி வ்ருத்³த⁴ நாதகெ³
கூஸுயில்லதெ³ ப³ஹள யோசிஸெ
தே³ಙ திருகு³த ப³ந்த³னா பி³ரம்மண்ய முனிராய
வாஸகெ³ய்ஸலு தன்ன மனியலி
மாஸனாலக³ரல்லி யதிவர
ஈಙ ஸேவெயமாடி³ தானா முனிய பெ³ஸகொ³ண்ட³ ||10

தேஙபதியதி வ்ருத்த நாதகெ - கணவனான, மிகவும் வயதானவனுக்கு; கூஸுயில்லதெ - குழந்தை பாக்கியம் இல்லாமல்; பஹள யோசிஸெ - மிகவும் கவலைப்பட்டவாறு இருக்க; பிரம்மண்ய முனிராய - பிரம்மண்ய தீர்த்தர்; தேஙு திருகுத பந்தனு - தேச சஞ்சாரத்தில் அங்கு வந்தார்; தன்ன மனியலி - தன் வீட்டிலேயே; வாஸகெய்ஸலு - அவர் தங்கியிருக்க; மாஸ நாலகரல்லி - அடுத்த நான்கு மாதங்களில்; யதிவர ஈಙ ஸேவெயமாடி - அந்த யதிவரருக்கு அற்புதமான சேவையை செய்து; தானு - அந்த பிராமணன்; ஆ முனிய பெஸகொண்ட - அந்த முனிவரிடம் இவ்வாறு வேண்டினான்.

அவர்களின் வீட்டிற்கு ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் வருகை நடக்கிறது என்கிறார் ஸ்ரீதாஸர்.

தன் கணவனான, மிகவும் வயதானவனுக்கு, குழந்தை பாக்கியம் இல்லாமல் மிகவும் கவலைப்பட்டவாறு இருக்க, ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் தேச சஞ்சாரத்தில் அங்கு வந்தார். தன் வீட்டிலேயே அவர் தங்கியிருக்க, அடுத்த நான்கு மாதங்களில், அந்த பிராமணன், அந்த யதிவரருக்கு அற்புதமான சேவையை செய்து, முனிவரிடம் இவ்வாறு வேண்டினான்.

எனகெ³ ஸுத ஸந்தானவில்லவோ
ஜனும ஸார்த்தக வாகோ³ ப³கெ³யு
எனகெ³ தோரது³ நீவெ யோசிஸி ஸுதன நீடு³வது³
எனலு நரவர வசனலாலிஸி
முனிகுலோத்தம நுடி³த³ நரவர!
நினகெ³ ஸந்ததியுண்டு கிருஷ்ணன ப⁴ஜிஸு ஸதிஸஹித ||11

எனகெ ஸுத ஸந்தானவில்லவோ - எனக்கு மக்கள் வாரிசு இல்லை; ஜனும ஸார்த்தக வாகோ பகெயு எனகெ தோரது - இந்த வாழ்க்கை ஸார்த்தகம் ஆகும் வழியும் எனக்குத் தெரியவில்லை; நீவெ யோசிஸி ஸுதன நீடுவது - நீங்கள் கருணை புரிந்து வாரிசு உண்டாவதற்கு ஒரு வழி சொல்ல வேண்டும்; எனலு - என்று கேட்க; நரவர வசனலாலிஸி - அந்த சிறந்த பிராமணரின் வசனத்தைக் கேட்டு; முனிகுலோத்தம நுடித - அந்த முனிகுலோத்தமர் இவ்வாறு கூறினார்; நரவர - ஹே சிறந்தவனே. கிருஷ்ணன பஜிஸு ஸதிஸஹித - உன் மனைவியுடன் சேர்ந்து ஸ்ரீகிருஷ்ணனை வணங்குவாயாக; நினகெ ஸந்ததியுண்டு - உனக்கு மக்கள் உண்டு;

அந்த தம்பதிகளுக்கு ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் அருள் / ஆசிர்வாதம் கிடைத்ததை இந்த பத்யத்தில் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

எனக்கு மக்கள் வாரிசு இல்லை. இந்த வாழ்க்கை ஸார்த்தகம் ஆகும் வழியும் எனக்குத் தெரியவில்லை. நீங்கள் கருணை புரிந்து வாரிசு உண்டாவதற்கு ஒரு தக்க வழியை சொல்ல வேண்டும் என்று அந்த பிராமணன் கேட்க, அந்த முனிகுலோத்தமர் இவ்வாறு கூறினார். ஹே

சிறந்தவனே, உன் மனைவியுடன் சேர்ந்து ஸ்ரீகிருஷ்ணனை வணங்குவாயாக. உனக்கு வாரிசு கிடைக்கும்.

எந்து[3] முனிவர சந்ததி[3]ந்த[3]லி
ஒந்து[3] ப[2]லவபி[4] மந்த்ரிஸித்து
முந்தி[3]னீதி[3]னகொப்[3]ப[3] தனயனு நினகெ[3] புட்டுவனு
தந்து[3] நீவாஸுதன நமகெ[3]
பொந்தி[3]ஸுவது நிமகெ[3] மத்து
கந்தனாகு[3]வ நிஜவு வசனவு கேளோ நரபதியெ ||12

எந்து - என்று சொல்லி; முனிவர சந்ததிந்தலி - அந்த பிரம்மண்ய தீர்த்தர், மகிழ்ச்சியுடன்; ஒந்து பலவ - ஒரு பழத்தினை; அபிமந்த்ரிஸித்து - மந்திரித்து; முந்தினீதினகெ - இன்னும் சில நாட்களில்; ஒப்ப தனயனு நினகெ புட்டுவனு - ஒரு மகன் உனக்கு பிறப்பான்; நீவு - நீங்கள்; ஆ ஸுதன - அந்த குழந்தையை; நமகெ தந்து பொந்திஸுவது - கொண்டு வந்து எம்மிடம் ஒப்படையுங்கள்; நிமகெ மத்து கந்தனாகுவ - உங்களுக்கு (அதன் பிறகு) இன்னொரு மகனும் பிறப்பான்; நிஜவு வசனவு - இது உண்மையான வாக்காகும்; கேளோ நரபதியே - இதை கேட்பாயாக, மனிதர்களில் சிறந்தவனே.

அந்த தம்பதிகளுக்கு பிரம்மண்ய தீர்த்தர் அருளிய விதத்தினை இங்கு மேலும் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

என்று சொல்லி, பிரம்மண்ய தீர்த்தர், ஒரு பழத்தினை மந்திரித்துக் கொடுத்தார். இன்னும் சில நாட்களில் உனக்கு ஒரு மகன் பிறப்பான். நீங்கள் அந்தக் குழந்தையை கொண்டு வந்து எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். உங்களுக்கு அதன் பிறகு, இன்னொரு மகனும் பிறப்பான். இது உண்மையான வாக்காகும் - என்றார்.

யாத[3]வேஶன ப[4]ஜனெ க[3]ர்ஹனு
ஆத[3] பா[3]லக க[3]ர்ப்ப[4]தி[3]ருவனு
ஆத[3]ரிஸி பரிபாலிஸுவது நம்மதா[3]க[3]மன
வாத[3]னந்தர நின்ன ஸத[3]னதி[3]
ஹாதி[3] நோடு[3]த நால்கு திங்க[3]ளு
ஸாதி[4]ஸுவெவுயெந்து[3] யதிவர நுடி[3]து[3] தா நடெ[3]த[3] ||13

யாதவேஶன - யாதவ ஸ்ரீகிருஷ்ணனை; பஜனெ கர்ஹனு ஆத - பூஜிப்பதற்கு அவன் தகுதியானவனான; பாலக - அந்த குழந்தை; கர்ப்பதிருவனு - உங்கள் கர்ப்பத்தில் வருவான்; ஆதரிஸி பரிபாலிஸுவது - அவனை ஆதரித்து நன்றாக பார்த்துக்கொள்ள வேண்டும்; நம்மதாகமன ஆதனந்தர - (தேச சஞ்சாரம் முடிந்தபின்) யாம் திரும்பி வரும்போது; நின்ன ஸதனதி - உங்கள் வீட்டிற்கு; ஹாதி நோடுத - வருவதற்கான வழியைப் பார்த்தவாறு; நால்கு திங்களு - நான்கு மாதங்களுக்குப் பிறகு; ஸாதிஸுவுவெவு - மறுபடி வருகிறோம்; எந்து - என்று; யதிவர நுடிது - அந்த யதிகளானவர் கூறி; தா நடெத - அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். (திரும்பி வந்து உங்கள் வீட்டில் நான்கு மாதங்கள் இருக்கிறோம்).

அந்த தம்பதிகளுக்கு பிரம்மண்ய தீர்த்தர் அருளிய விதத்தினை இங்கு மேலும் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

யாதவ ஸ்ரீகிருஷ்ணனை பூஜிப்பதற்கு அவன் தகுதியானவனான அந்தக் குழந்தை உங்கள் கர்ப்பத்தில் வருவான். அவனை ஆதரித்து நன்றாக பார்த்துக் கொள்ள வேண்டும். தேச சஞ்சாரம் முடிந்தபின், நாம் திரும்பி வரும்போது உங்கள் வீட்டிற்கு வருவதான வழியைப் பார்த்தவாறு, நான்கு மாதங்களில் வருகிறோம் என்று அந்த யதிகளானவர் கூறி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். (அல்லது திரும்பி வந்து உங்கள் வீட்டில் நான்கு மாதங்கள் இருக்கிறோம் - என்றார்).

போக³லு யதினாத² முந்த³கெ
ஆக³லாதன ஸதியு க³ர்ப்ப⁴வ
ஜாகு³ மாட³தெ³ த⁴ரிஸி மெரெத³ளு ஆயதாம்ப³கெயு
நாக³ரீயர ஸதியரெல்லரு
ஆக³ ஸந்தஸதி³ந்த³ நெரெத³ரு
ப்³யாக³ ராஜன ராணி க³ர்ப்பி⁴ணியாது³தா³ஶ்சர்ய ||14

யதினாத முந்தகெ போகலு - பிரம்மண்ய தீர்த்தர் (இவ்வாறு சொல்லிவிட்டு) அடுத்து தன் சஞ்சாரத்தில் செல்ல; ஆகலாதன ஸதியு - பிறகு அந்த பிராமணனின் மனைவி; கர்ப்பவ ஜாகு மாடதெ தரிஸி - தாமதிக்காமல் (உடனடியாக) கர்ப்பம் தரித்து; ஆயதாம்பகெயு - தாமரைக் கண்ணினைக் கொண்டவள்; மெரெதளு - அங்கு இருந்தாள்;

நாகரீயர ஸதியரெல்லரு - அந்த நகரத்து பெண்கள் அனைவரும்; ஆக ஸந்தஸதிந்த ப்யாக நெரெதரு - அங்கு மிகவும் மகிழ்ச்சியுடன் வேகமாக வந்தனர்; ராஜன ராணி - அந்த தேஷ்முக்கின் மனைவியானவர்; கர்ப்பிணியாதுதாஶ்சர்ய - கர்ப்பிணி ஆனது அவர்கள் அனைவருக்கும் மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் ஆசிர்வாதத்தினால், அந்தப் பெண்மணி கர்ப்பவதி ஆனதை இங்கு சொல்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் இவ்வாறு சொல்லிவிட்டு, அடுத்து தன் சஞ்சாரத்தில் செல்ல, பிறகு அந்த பிராமணனின் மனைவி உடனடியாக கர்ப்பம் தரித்தாள். தாமரைக் கண்ணினைக் கொண்டவள் அவள். அந்த நகரத்துப் பெண்கள் அனைவரும், அங்கு மிகவும் மகிழ்ச்சியுடன் வேகமாக வந்தனர். அந்த கிராம அதிகாரியின் மனைவி, கர்ப்பிணி ஆனதைக் கண்டு அவர்கள் அனைவருக்கும் மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

ஸ்ரீவ்யாஸராயரின் பூர்வாசிரம பெற்றோர்: பல்லண்ண ஸுமதி (ராமாசார்யர்) & ஸீதாபாய் (அக்கம்மா லக்ஷ்மி). தேஷ்முக் & ஜயவதி என்று அறிகிறோம். அத்தகைய கர்ப்பிணியின் லட்சணங்கள், நிலைகள் ஆகியவற்றை 15 முதல் 18 வரையிலான [4] பத்யங்களில் விளக்கப்பட்டுள்ளன.

ஸண்ண நடு தா பெ³ளெயெ த்ரிவளியு
கண்ணுக³ளிகெ³ காணதா³க³லு
நுண்ணனே மொக³வரியெ சூசுகவெரடு³ கப்பாகெ³
திண்ண பச்ச பெ³ளெயெ க³மனவு
ஸண்ணதா³க³லு பி³ளிபு ஒடெ³யே
கண்ணு போர்பி³ன மிஞ்சு பெ³ளெயலு க³ர்ப்ப⁴லாஞ்ச²னவு ||15

ஸண்ண நடு தா பெளெயெ - சிறியதாக இருந்த வயிறு - பெரியதாயிற்று; த்ரிவளியு - வயிற்றில் இருந்த அந்த மூன்று வரிகள்; கண்ணுகளிகெ காணதாகலு - கண்களிலிருந்து மறைந்தது; நுண்ணனெ மொகவரியெ - முகம் ஒளிர்ந்தது ; சூசுகவெரடு கப்பாகெ - முலைகள் இரண்டும் கருப்பாயின; திண்ண பச்ச பெளெயெ - அதிகமாக இருந்த அழகு மேலும் அழகானது; கமனவு ஸண்ணதாகலு - நடை தளர்ந்தது;

பிளிபு ஒடெயே - அவள் அணிந்திருந்த வெள்ளை ஆடையானது; கண்ணு போர்பின மிஞ்சு - கண்ணைப் பறிக்கும் மின்னலைப் போல இருந்தது. கர்ப்பலாஞ்சனவு - கர்ப்பத்தில் இருந்த குழந்தையானது; பெளெயலு - வளர, இதெல்லாம் நடந்தது.

அந்தப் பெண்மணியின் கர்ப்பத்தின்போது, அவளுக்கு ஆன மாற்றங்களைப் பற்றி இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

சிறியதாக இருந்த வயிறு அவளுக்கு பெரியதாயிற்று. வயிற்றில் இருந்த அந்த மூன்று வரிகள், கண்களிலிருந்து மறைந்தது. முகம் ஒளிர்ந்தது. முலைகள் இரண்டும் கருப்பாயின. அதிகமாக இருந்த அழகு மேலும் அழகானது. நடை தளர்ந்தது. அவள் அணிந்திருந்த வெள்ளை ஆடையானது, கண்ணைப் பறிக்கும் மின்னலைப் போல இருந்தது. அவள் கர்ப்பத்தில் இருந்த குழந்தையானது வளர, இதெல்லாம் நடந்தது.

பி³ளிய தாவரெயொளகெ³யிருதிஹ
அலிய ஸமுத³யவேனோ ஆக³ஸ
தொ³ளகெ³ தி³னதி³ன பெ³ளெயோ சந்த்ரன களெயோகனகாத்³ரி
யொளகெ³ ராஜிப அம்பு³த⁴ரதெர
பொளெவ காந்திய சல்வினானன
தொ³ளகெ³ மிருகு³வ கு³ருளுக³ளோ ஸலெனடுவினோள்தானே ||16

பிளிய தாவரெயொளகெ - வெள்ளைத் தாமரையில்; இருதிஹ அலிய ஸமுதயவேனோ - மொய்க்கும் வண்டுகளைப் போல இருக்கிறது; ஆகஸதொளகெ - மேகத்திற்குள்; தினதின பெளெயோ - தினமும் வளர்வதான; சந்த்ரன களெயோ - சந்திரனின் ஒளியோ; கனகாத்ரியொளகெ - தங்கமயமான மலையில்; ராஜிப அம்புதரதெர - மேல் இருக்கும் கரும் மேகக்கூட்டத்தைப் போல; பொளெவ காந்திய - ஒளிர்வதான ஒளியைக் கொண்ட; சல்வினானன தொளகெ - அழகான அவளது முகத்தில் (முகத்தின் மேல்); மிருகுவ குருளுகளோ - சுருள் முடிகள்; ஸலெனடுவினோள்தானெ - நடுவில் வந்து விழுந்தன.

அந்தப் பெண்மணியின் கர்ப்பத்தின்போது, அவளுக்கு ஆன மாற்றங்களைப் பற்றி இங்கு மேலும் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

வெள்ளைத் தாமரையில் மொய்க்கும் வண்டுகளைப் போல; மேகத்திற்குள் தினமும் வளர்வதான சந்திரனின் களைகளைப் போல; தங்கமயமான மலையின் மேல் இருக்கும் கரும் மேகக்கூட்டங்களைப் போல - ஒளிர்வதான ஒளியைக் கொண்ட அழகான அவளது முகத்தில் புரளும் சுருள் முடிகள், நடுவில் வந்து விழுந்தன.

பொளெவ க³ர்ப்ப⁴விதே³னோ குசயுக³
தொளபு சூசுக கப்பினிந்த³லி
பொளெயுதிர்த்த³ளு க³ர்ப்ப⁴தா⁴ரணெ மாடி³ வனஜாக்ஷி
தளிருபோலுவ அடிக³ளிந்த³லி
சலுவகத³ளீ ஊருயுக³தீ³
பளகி பா³கு³த நடெ³யோ லலனெய நடி³கெ³ ஷோபி⁴பது³ ||17

பொளெவ கர்ப்பவிதேனோ - இந்த கர்ப்பம் வளர்ந்து வந்தபோது; குசயுக - அவளது இரு மார்புகளும்; தொளபு - வளர்ந்து ஒளிர்ந்தன; சூசுக கப்பினிந்தலி - முலைக்காம்புகள் கருப்பாகின; வனஜாக்ஷி - தாமரைக் கண்களைக் கொண்ட அந்தப் பெண்; கர்ப்பதாரணெ மாடி - கர்ப்பவதியாக; பொளெயுதிர்த்தளு - ஒளிர்ந்து கொண்டிருந்தாள்; தளிருபோலுவ - ஒரு குழந்தையைப் போல; அடிகளிந்தலி - அடிகளை வைத்து (மெதுவாக); சலுவகதளி ஊருயுகதி - அழகான வாழைத்தண்டினைப் போன்றதான இரு துடைகளைக் கொண்டு; பளகி பாகுத - மெதுவாக குனிந்தவாறு; நடெயோ - நடந்தாள்; லலனெய - அந்தப் பெண்ணின்; அடிகெ ஷோபிபது - நடத்தல் மிகவும் அழகாக இருந்தது.

அந்தப் பெண்மணியின் கர்ப்பத்தின்போது, அவளுக்கு ஆன மாற்றங்களைப் பற்றி இங்கு மேலும் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

இந்த கர்ப்பம் வளர்ந்து வந்தபோது, அவளது இரு மார்புகளும் வளர்ந்து ஒளிர்ந்தன. முலைக்காம்புகள் கருப்பாயின. தாமரைக் கண்களைக் கொண்ட அந்தப் பெண், கர்ப்பவதியாக ஒளிர்ந்து கொண்டிருந்தாள். ஒரு குழந்தையைப் போல அடிகளை மெதுவாக வைத்து, அழகான வாழைத் தண்டினைப் போன்றதான இரு துடைகளைக் கொண்டு, மெதுவாக குனிந்தவாறு நடந்தாள். இவ்வாறாக, அந்தப் பெண்ணின் நடத்தல் மிகவும் அழகாக இருந்தது.

சந்த்³ரமுகி²யள ஜடரவெம்பா³
சந்த்ரகாந்தத³ மணீய மத்⁴யதி³
சந்த்ரனந்த³தி³ ஸகலலோக ஆனந்த³கரவாத³
சந்த்ரபி³ம்ப³வ ஜெயிப ஶிஶு தா
இந்த்ரனந்த³தி³ க³ர்ப்ப⁴திரலு
ஸாந்த்ர தனு ருசியிந்த³லொப்புத மெரெத³ளா ஜனனி ||18

சந்த்ரமுகியள - சந்திரனைப் போன்ற முகத்தைக் கொண்டவளின்; ஜடரவெம்ப - வயிறு என்னும்; சந்த்ரகாந்தத மணிய மத்யதி - சந்த்ரகாந்தத்தைப் போன்றதான மணியான வயிற்றில்; சந்த்ரனந்ததி - வளர்பிறை சந்திரனைப் போல; ஸகலலோக - அனைத்து உலகங்களுக்கும்; ஆனந்தகரவாத - மகிழ்ச்சியைக் கொடுப்பதான; சந்த்ரபிம்பவ ஜெயிப - சந்திரபிம்பனை வெல்வதான; ஶிஶு - குழந்தையானது; இந்த்ரனந்ததி - ஒரு இளவரசனைப் போல; கர்ப்பதிரலு - கர்ப்பத்தில் இருக்க; ஸாந்த்ர தனு - மென்மையான உடம்பினைக் கொண்டவளான; ஜனனி - அந்தத் தாய்; ருசியிந்தலொப்புத - மகிழ்ச்சியுடன்; மெரெதளு - நடமாடினாள்.

அந்தப் பெண்மணியின் கர்ப்பத்தின்போது, அவளுக்கு ஆன மாற்றங்களைப் பற்றி இங்கு மேலும் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

சந்திரனைப் போல முகத்தைக் கொண்டவளின் வயிறு என்னும் சந்திரகாந்தத்தைப் போன்ற மணியான வயிற்றில், வளர்பிறை சந்திரனைப் போல, அனைத்து உலகங்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பதான, சந்திரபிம்பனை வெல்வதான குழந்தையானது, ஒரு இளவரசனைப் போல கர்ப்பத்தில் இருக்க, மென்மையான உடம்பினைக் கொண்டவளான அந்தத் தாய் மகிழ்ச்சியுடன் நடமாடினாள்.

பார்ப்பதற்கு வெண்மையாகவும் குளுமையாகவும் சந்திரனைப் போன்றும், வைடூரியத்தைப் போன்ற ஒளிப்பட்டைகளைக் கொண்டு, கல்லின் நடுவில் அழகாக இருக்கும் இதனை சந்த்ரகாந்தக் கல் (moon stone) என்று அழைக்கின்றனர்.

காஞ்சனாங்கி³ய க³ர்ப்ப⁴தா⁴ரண
லாஞ்ச²னீபரி நோடி³ ந்ருப ரோ

மாஞ்சனாஞ்சித ஹருஷதி³ந்த³லி பூ⁴மி தி³விஜரிகெ³
வாஞ்சிதார்த்த²வனித்து மனத³லி
சஞ்சலில்லதெ³ நாரிமணிகெ³
பஞ்சமாஸகெ குஸும முடி³ஸீ மாட³த ஸீமந்த ||19

காஞ்சனாங்கிய - தங்கத்தைப் போன்ற தேகம் கொண்டவளின்; கர்ப்பதாரண - கர்ப்பத்தின்; லாஞ்சன - அறிகுறிகளை; ஈபரி நோடி - பார்த்து; ந்ருப - அவள் கணவன்; ரோமாஞ்சனாஞ்சித - மெய் சிலிர்த்தான்; ஹருஷதிந்தலி - மிகவும் மகிழ்ச்சியுடன்; பூமி திவிஜரிகெ - பிராமணர்களுக்கு; வாஞ்சிதார்த்தவனித்து - அவர்கள் இஷ்டப்பட்டவற்றை தானம் அளித்து; மனதலி - மனதில்; சஞ்சலில்லதெ - எவ்வித களங்கமும் இன்றி (மனத் தூய்மையுடன்); நாரிமணிகெ - தன் மனைவிக்கு; பஞ்சமாஸகெ - ஐந்து மாதத்தில் (கர்ப்ப காலத்தில்); குஸும முடிஸீ - பூக்களை சூடி; ஸீமந்த - சீமந்தம்; மாட்த - செய்தான்.

அந்தப் பெண்மணியின் கர்ப்பத்தின்போது, கணவனானவன் அவளுக்கு சீமந்தம் செய்ய தீர்மானித்தான் என்கிறார் ஸ்ரீதாஸர்.

தங்கத்தைப் போன்ற தேகத்தைக் கொண்டவளின், கர்ப்பத்தின் அறிகுறிகளை பார்த்து, அவள் கணவன் மெய் சிலிர்த்தான். மிகவும் மகிழ்ச்சியுடன் பிராமணர்களுக்கு அவர்கள் இஷ்டப்பட்டவற்றை தானம் அளித்து, மனதில் எவ்வித களங்கமும் இன்றி, மனத் தூய்மையுடன், தன் மனைவிக்கு, ஐந்து மாதத்தில் பூக்களைச் சூடி சீமந்தம் செய்தான்.

பூமி திவிஜரு என்றால் பிராமணர்கள் என்பதற்கான ஒரு விளக்கமாக ஸ்ரீஜகன்னாத தாஸர் ஹரிகதாம்ருதஸாரத்தில் இவ்வாறு சொல்கிறார். இவ்வாறு அந்தந்த தத்வங்களில் அந்தந்த பகவத் ரூபங்களை சிந்திப்பவர்கள், மனிதர்கள் அல்ல, ஸ்ரீஹரியின் அருளால், அவர்கள் தேவதைகளே ஆவர்.

மனதொ³ளிஹ கோவிந்த³ மாத⁴வ
க⁴னபஸக² த¹த்வத³லி நாரா
யண மஹத்த¹த்வதொ³ளு அவ்யக்ததொ³ளு கே¹ஷவனு |
இனிது¹ ரூப¹வ தே³ஹதொ³ளு சி

ந்த[1]னெயகை[3]வ மஹாத்மரிளெயொளு
மனுஜரல்லவரமரரெ ஸரி ஹரிக்[1]ருபா[1]ப[3]லதி[3] ||
பஞ்சமஹா யக்ஞ ஸந்தி (6-19)

நாரிகா[3]க[3]லு ப[3]யகெ பரிபரி
ஆரு திங்க[3]ளு போகு[3]திரலு
தூ[3]ர தே[3]ஶத[3]லிந்த[3]லாக[3]லெ ப[3]ந்த[3] முனிராய
வாரிஜாக்ஷியு யதிய பாத[3]கெ
ஸாரி நமனவமாடெ[3] கு[3]ருவர
தீ[4]ரதனயன ப்[3]யாக[3] நீ படி[3]யெந்து[3] ஹரஸித[3]னு ||20

நாரிகெ - அந்தப் பெண்மணிக்கு; பரிபரி - பற்பல; பயகெ - விருப்பங்கள்; ஆகலு - வந்து போயின; ஆரு திங்களு போகுதிரலு - அப்படியே ஆறு மாதங்கள் ஆகின; தூர தேஶதலிந்தலெ - தேச சஞ்சாரம் சென்றிருந்த; முனிராய - ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர்; ஆகலே பந்த - அப்போது இவர்களிடம் வந்தார்; வாரிஜாக்ஷியு - தாமரைக் கண்களைக் கொண்ட இந்த பெண்மணி; யதிய பாதகெ - ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் பாதத்தில்; ஸாரி நமனவ மாடெ - விழுந்து வணங்க; குருவர - குருவானவர்; தீர தனயன - ஒரு நல்ல புத்திரனை; ப்யாக - சீக்கிரமாக; நீ படியெந்து - நீ பெறுவாயாக என்று; ஹரஸிதனு - அருளினார் / ஆசிர்வதித்தார்.

ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் ஆசிர்வாதம் கனியும் நேரம் வந்தது என்கிறார் ஸ்ரீகுருஜகன்னாத தாஸர்.

அந்தப் பெண்மணிக்கு பற்பல விருப்பங்கள் வந்து போயின. அப்படியே ஆறு மாதங்கள் ஆயின. தேச சஞ்சாரம் சென்றிருந்த ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர், அப்போது இவர்களிடம் வந்தார். தாமரைக் கண்களைக் கொண்ட இந்த பெண்மணி, ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் பாதங்களில் விழுந்து வணங்க, ஒரு நல்ல புத்திரனை நீ சீக்கிரமாக பெறுவாயாக என்று குருவானவர் அருளினார் / ஆசிர்வதித்தார்.

பா[3]லெப[3]ஸிரொளகி[3]ப்ப ஶிஶு கோ[3]
பாலபத[3]யுக[3] ப[4]க்தனவனிகெ[3]
பாலகாகி[3]ஹ ஹரிய மஜ்ஜனமாடி[3] நித்யத[3]லி
பாலினிந்த[3]லி க[3]ர்ப்ப[4]த[3]லெ தா
பா[3]லகீ[3]பரி ஞானவித்து

பாலிஸீ பி³ரம்மண்ய தீர்த்தரு நிந்தராக³ல்லெ ||21

பாலெபஸிரொளகிப்ப - இந்தப் பெண்ணின் வயிற்றில் இருக்கும்; ஶிஶு - குழந்தையானது; கோபால பதயுக பக்தனு - ஸ்ரீகிருஷ்ணனின் பாதங்களை வணங்குபவனான பக்தன்; அவனிகெ - அவனுக்கு; பாலகாகிஹ ஹரிய - பாலகனாக (காப்பவனாக) இருக்கும் ஹரியின்; மஜ்ஜமாடி - அபிஷேகம் செய்து; நித்யதலி - தினம்தோறும்; பாலினிந்தலி - பாலினால்; கர்ப்பதலெ - கர்ப்பத்திலேயே; தா பாலகீபரி - இவ்வாறாக அந்த வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு; ஞானவித்து - ஞானத்தை அளித்து; பாலிஸி - காத்து; பிரம்மண்ய தீர்த்தரு; நிந்தராகல்லெ - அந்த ஊரிலேயே தங்கியிருந்தார்.

குழந்தை கர்ப்பத்தில் இருந்தபோதே, ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் அவனை எப்படி காத்தார் என்பதை இந்த பத்யத்தில் சொல்கிறார் ஸ்ரீதாஸர்.

இந்தப் பெண்ணின் வயிற்றில் இருக்கும் குழந்தையானது, ஸ்ரீகிருஷ்ணனின் பாதங்களை வணங்குபவனான அவனுக்கு, அனைவருக்கும் காப்பவனாக இருக்கும் ஸ்ரீஹரியின் அபிஷேகம் செய்யப்பட்ட பாலினை தினமும் கொடுத்து, அதன் மூலம் ஞானத்தை அளித்து, காத்தவாறு, ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் அந்த ஊரிலேயே தங்கியிருந்தார்.

ப³ளிக ப³ரலா ப்ரஸவகாலதி³
பொளெவ மிஸுணிய பாத்ரெயொளகே³
தொளபு ஸுந்த³ர பொ³ம்பெ³யந்த³தி³ ஶிஶுவு கண்கொ³ப்பெ
களெக³ளிந்த³லி நப⁴தி³ தி³னதி³ன
பெ³ளெவ சந்த்³ரனோ எனிப பா³லக
பெ³ளகுதோரித³ ஸுதிகாக³ருஹதொ³ளகெ³ தா ஜனிஸி ||22

பளிக - பிறகு; ப்ரஸவகாலதி - பிரசவ காலமானது; பரலா - வர; பொளெவ மிஸுணிய - ஒளிர்வதான தங்கமயமான; பாத்ரெயொளகெ - பாத்திரத்தில் (தட்டில் / தாம்பாளத்தில்); தொளபு - சூரியக் கதிர் போல ஒளிரும்; ஸுந்தர - அழகான; பொம்பெயந்ததி - ஒரு பொம்மையைப் போல; ஶிஶுவு - குழந்தையானது; கண்கொப்பெ - கண்களைப் பறிக்குமாறு; களெகளிந்தலி - அழகான லட்சணங்களுடன்; நபடி தினதின பெளெவெ சந்த்ரனோ - வானத்தில் வரும் வளர்பிறை

சந்திரனோ என்பதைப் போன்றவனான; பாலக - குழந்தை; ஸுதிகாக்ருஹதொளகெ - வீட்டிலேயே ஒரு சிறிய அறையில்; தா ஜனிஸி - பிறந்து; பௌகுதோரித - ஒளியாக தோன்றினான்.

ஸ்ரீவ்யாஸராஜரின் அவதாரம் ஆன சந்தர்ப்பத்தினை இங்கு விளக்குகிறார் ஸ்ரீகுருஜகன்னாத தாஸர்.

பிறகு, பிரசவ காலமானது நெருங்கி வர, ஒளிர்வதான தங்கமயமான ஒரு பாத்திரத்தில் (தட்டில் / தாம்பாளத்தில்) சூரியக் கதிர் போல ஒளிரும் அழகான ஒரு பொம்மையைப் போல, அந்தக் குழந்தையானது கண்களைப் பறிக்குமாறு அழகான லட்சணங்களுடன், வானத்தில் வரும் வளர்பிறை சந்திரனைப் போல, வீட்டிலேயே ஒரு சிறிய அறையில் பிறந்தான்.

அம்பு³ஜாப்தனு தானெயிளதி³
கும்பி⁴ணியலி ப³ந்த³னேனோ
தும்பி³ஸுஸுவ தேஜதி³ந்த³லி பா³ல ஶோபி⁴ஸித³
ஸம்ப்⁴ரமாயிது முனிகெ³ ஹரிப்ரதி
பி³ம்ப³னாகி³ஹ பா³லரூபவ
நம்பக³ த்³வயதி³ந்த³ நோடி³ ஹருஷபுலகாங்க ||23

அம்புஜாப்தனு - சூரியனானவன்; தானெயிளதி - தானே இறங்கி; கும்பிணியலி - இந்த பூமிக்கு; பந்தனேனோ - வந்துவிட்டானோ (என்று எண்ணும்படியாக); தும்பிஸுஸுவ தேஜதிந்தலி - அற்புதமான (நிரம்பி வழியும்) தேஜஸ் கொண்டு; பால - குழந்தை; ஶோபிஸித - ஒளிர்ந்தான்; முனிகெ - ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தருக்கு; ஸம்ப்ரமாயிது - மகிழ்ச்சி உண்டானது; ஹரி ப்ரதிபிம்பனாகிஹ - ஸ்ரீஹரியின் ப்ரதிபிம்பனாக இருக்கும்; பாலரூபவனு - இந்த குழந்தை ரூபத்தினை; அம்பக த்வயதிந்த - தன் இரு கண்களாலும்; நோடி - பார்த்து; ஹருஷபுலகாங்க - மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தார்.

பிறந்த குழந்தையின் சிறப்பு மற்றும் ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் மகிழ்ச்சியை இங்கு சொல்கிறார் ஸ்ரீதாஸர்.

சூரியனானவன் தானே இறங்கி இந்த பூமிக்கு வந்துவிட்டானோ என்று எண்ணும்படியாக, அற்புதமான தேஜஸ் கொண்ட அந்தக் குழந்தை

ஒளிர்ந்தான். ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தருக்கு மகிழ்ச்சி உண்டானது. ஸ்ரீஹரியின் ப்ரதிபிம்பனாக இருக்கும் இந்த குழந்தையின் ரூபத்தினை தன் இரு கண்களாலும் பார்த்து அவர் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தார்.

ஆக³ யதிவர ப³ந்து³ ஶிஶுவின
பே³க³ தா ஸ்வீகரிஸி நடெ³த³னு
ஸாக³ரோத்³ப⁴வ ஸுதெ⁴ய கலஶவ கருட³னொய்த³ந்தெ
ஜாகு³மாட³தெ³ முனிப தானனு
ரா³கதி³ந்த³லி ஶிஶுவினீபரி
தூகி³ லாலிஸி பாலுபெ³ண்ணெய தானெ நீடு³தலி ||24

ஆக யதிவர பந்து - குழந்தை பிறந்ததும் ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் வந்து; ஶிஶுவின தா பேக ஸ்வீகரிஸி - அந்த குழந்தையை தான் வேகமாக எடுத்துக் கொண்டு; நடெதனு - திரும்பி தன் மடத்திற்கு திரும்பினார்; ஸாகரோத்பவ ஸுதெய கலஶவ - பாற்கடலிலிருந்து தோன்றிய அமிர்த கலசத்தினை; கருடனொய்தந்தெ - கருடன் எடுத்துச் சென்றதைப் போல; ஜாகுமாடதெ - தாமதம் செய்யாமல்; முனிப - ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர்; தானு அனுராகதிந்தலி - தான் மிகவும் அன்புடன்; ஶிஶுவினீபரி - குழந்தையை இவ்வாறு (பார்த்துக் கொண்டார்); தூகி லாலிஸி - லாலி பாடி தூங்க வைத்தார்; பாலு பெண்ணெய - பால் வெண்ணெய்களை; தானெ நீடுதலி - தானே கொடுத்து (குழந்தையை வளர்த்தார்).

ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர், குழந்தையான ஸ்ரீவ்யாஸராஜரை வளர்த்த விதத்தின் அழகினை இந்த பத்யத்தில் விளக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

குழந்தை பிறந்ததும் ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் வந்து, அந்த குழந்தையை தான் வேகமாக எடுத்துக்கொண்டு திரும்பி தன் மடத்திற்கு திரும்பினார். பாற்கடலிலிருந்து தோன்றிய அமிர்த கலசத்தினை கருடன் எடுத்துச் சென்றதைப் போல, தாமதம் செய்யாமல் ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் தான் மிகவும் அன்புடன் குழந்தையை இவ்வாறு பார்த்துக் கொண்டார். லாலி பாடி தூங்கச் செய்தார். பால் வெண்ணெய்களை தானே கொடுத்து அக்குழந்தையை வளர்த்தார்.

அமிர்த கலசத்தினை கருடன் எடுத்துச் சென்ற கதையின் சுருக்கம் இதுவே.

வினதா தேவியின் மகன் கருடன். தன் தாயை கத்ருவிடம் தாஸ்யத்தினை விடுவிக்க, அமிர்த கலசத்தினைக் கொண்டு வர புறப்பட்டான். அனைத்து தேவதைகளிடம் சண்டை போட்டும், தன் வலிமையால் அந்த கலசத்தைக் கொண்டு வந்தான். ஆனால் அவர் அதனை குடிக்கவில்லை. அந்த கலசத்தைக் கொண்டு வந்து தர்ப்பைகளின் மேல் வைத்து, நாகங்களை குடிக்கச் சொல்ல, அவையும் குடிப்பதற்கு முன் குளிக்கச் செல்ல, அதற்குள் தேவேந்திரன் வந்து அந்த கலசத்தை எடுத்துச் சென்றுவிட்டார். திரும்பி வந்து பார்த்த நாகங்கள் கலசத்தை காணாமல், தர்ப்பைகளை கடிக்கப் போக, அவற்றின் நாக்குகள் துண்டாகின. அமிர்தத்தை தொட்டதால், தர்ப்பை பவித்ரம் ஆகியது.

இந்து³ தெரத³லி பா³ல களெக³ள
ஹொந்தி³ தி³னதி³ன வ்ருத்³தி⁴யெய்தி³த³
கந்த³ரந்த³தி³ ஹுடக³ளிலல்லவோ மூர்க்க²தனவில்லா
மந்த³மதி தானல்ல பு³த⁴வர
வ்ருந்த³வந்தி³த பாத³பங்கஜ
தி³ந்த³ ஶோபி⁴தனாகி³ மட²த³லி பொந்தி³யிருதிப்ப ||25

இந்து தெரதலி - இப்படியாக படிப்படியாக; பால களெகள ஹொந்தி - குழந்தையானவன், நல்ல களைகளைப் பெற்று; தினதின வ்ருத்தியெய்தித - தினம்தோறும் வளர்ந்து வந்தான்; கந்தரந்ததி - மற்ற குழந்தைகளைப் போல; ஹுடகளிலல்லவோ - அடம் பிடிப்பதில்லை; மூர்க்கதனவில்லா - பிடிவாதம் போன்ற குணங்கள் இல்லை; மந்தமதி தானல்ல - புத்தி குறைவாகவும் இல்லை; புதவர வ்ருந்த - கற்றறிந்தவர்கள் வணங்கி வந்த; பாதபங்கஜதிந்த - பிரம்மண்ய தீர்த்தரின் அரவணைப்பில்; ஶோபிதனாகி - வளர்க்கப்பட்டு; மடதலி பொந்தியிருதிப்ப - அவரது மடத்தில் வளர்ந்து வந்தான்.

ஸ்ரீவ்யாஸராஜர் பாலகனாக மடத்தில் வளர்ந்த விதத்தினை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

இப்படியாக படிப்படியாக அந்தக் குழந்தையானவன், நல்ல களைகளைப் பெற்று, தினம்தோறும் வளர்ந்து வந்தான். மற்ற குழந்தைகளைப் போல அவன் அடம் பிடிப்பதில்லை. பிடிவாதம் போன்ற குணங்கள் இல்லை. புத்தி குறைவாகவும் இல்லை. கற்றறிந்தவர்கள் வணங்கி வந்த ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் அரவணைப்பில் அவன் வளர்க்கப்பட்டு அவரது மடத்தில் வளர்ந்து வந்தான்.

பொளெவ பல்க³ளு பா³யொளொப்பிரெ
தொளபு நகெ³முக² ஸொப³கு³ ஸுஸுவ
ஹொளெவ கங்க³ளு நுணுபுபெணெ முங்கு³ருளு தா ஹொளெயெ
ஸுளீயனாபி⁴யு உத³ரவளித்ரய
எளெய ஶங்கரி தோளு யுக³ளவு
ஜோலித³ம்பே³கா³லு நடி³கெ³ய ஸொக³ஸு ஶோபி⁴பது³ ||26

பொளெவ பல்களு - ஒளிர்வதான பற்கள்; பாயொளொப்பிரெ - வாய்க்குள் இருக்க; தொளபு நகெமுக - ஒளி பொருந்திய புன்னகையின்; ஸொபகு ஸுஸுவ - அழகு அற்புதமாக தெரிகிறது; ஹொளெவ கங்களு - பளபளக்கும் கண்கள்; நுணுபுபெணெ முங்குருளு - பளபளக்கும் சுருள் முடிகள்; தா ஹொளெயெ - தான் ஒளிர; ஸுளீய நாபியு - வட்டமான நாபி; உதரவளித்ரய - வயிற்றில் மூன்று ரேகைகள்; எளெய ஶங்கரி தோளு யுகளவு - சிறிய வன்னி மரத்தைப் போல வலிமையான இரு தோள்கள்; ஜோலிதம்பேகாலு - ஆடும் சின்னஞ்சிறு கால்கள்; நடிகெய ஸொகஸு - அதனை வைத்து நடப்பது; ஶோபிபது - அழகாக இருக்கிறது.

குழந்தை வ்யாஸராஜரின் மகிமைகள் / சிறப்புகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

ஒளிர்வதான பற்கள் அவனின் வாய்க்குள் இருக்க, ஒளி பொருந்திய புன்னகையின் அழகு அற்புதமாக இருந்தது. பளபளக்கும் கண்கள், சுருள் முடிகள் தான் ஒளிர, வட்டமான நாபி, வயிற்றில் மூன்று ரேகைகள், சிறிய வன்னி மரத்தைப் போல வலிமையான இரு தோள்கள், ஆடும் சின்னஞ்சிறு கால்கள், அதனை வைத்து நடப்பது, மிகவும் அழகாக இருக்கிறது.

தூ³ளீஸோகலு ஸுந்த³ராங்க³வு
நீல மேக⁴த³ தெரனெ தோர்ப்பது³
நீளமார்க்க³தி³ நலிது³ நடெ³வனு பீ³ளுதேளுதலி
திளியத³தி ஸந்தோஷ வாரிதி⁴
யொளகெ³ ஸந்தத முனிப முளுகி³த³³
பேளெலெனவஶவல்ல பா³லன லீலெ ஸுக²மாலெ ||27

ஸுந்தராங்கவு - அழகான தேகம்; பீளுதேளுதலி - கீழே விழுந்து எழுந்திருக்க; தூளீஸோகலு - அதில் தூசி படர; நீல மேகத தெரனெ தோர்ப்பது - நீல மேகனைப் போல கருப்பாக இருக்கிறான்; நீளமார்க்கதி - நேராக; நலிது நடெவனு - ஆடியவாறு நடக்கிறான்; திளியததி - இதனை அறிந்து; ஸந்தோஷ வாரிதியொளகெ - மகிழ்ச்சிக் கடலில்; ஸந்தத முனிப முளுகித - ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் எப்போதும் மூழ்கினார்; பாலன லீலெ - அந்தக் குழந்தையின் பால லீலையானது; பேளெலு - சொல்வதற்கு; எனவஶவல்ல - என்னால் முடியவில்லை; ஸுகமாலெ - அது மிகவும் சுகமான அனுபவமே ஆகும்.

குழந்தை வ்யாஸராஜரின் மகிமைகள் / சிறப்புகள் இங்கு மேலும் விளக்கப்பட்டுள்ளன.

அழகான தேகம் கீழே விழுந்து எழுந்திருக்க, அதில் தூசி படரும்போது அவன் நீல மேகனைப் போல கருப்பாக இருக்கிறான். நேராக ஆடியவாறு நடக்கிறான். இதனை அறிந்து ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் மிகுந்த மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார். அந்தக் குழந்தையின் பால லீலையினை விளக்குவதற்கு என்னால் முடியவில்லை, அது மிகவும் சுகமான அனுபவமே ஆகும்.

பா³ல லீலெய நோடி³ ஹிக்³கு³வ
லாலனெய தா மாடி³ பாடு³வ
லோலகுந்தல முக²வ சும்பி³ப கோ³பியந்த³த³³லி
பாலஸாக³ர ஶயன பத³³யுக³³
லோலபா³லக எனகெ³ தொ³³ரெதனு
பேளலேனிஹதெ³ன்ன புண்யத³³ ப²லவே ப²லிஸிஹுதோ³ ||28

பால லீலெய நோடி ஹிக்குவ - இந்தக் குழந்தையின் பால லீலையை பார்த்து மகிழும்; லாலனெய தா மாடி பாடுவ - தான் பாடியவாறு

குழந்தையைக் கொஞ்சி; லோலகுந்தல முகவ - அழகான இளவரசனின் முகத்தை; கோபியந்ததலி - (கிருஷ்ணரை கொஞ்சும்) கோபியர்களைப் போல; சும்பிப - முத்தம் கொடுத்து; பாலஸாகர ಶಯನ பதயுக லோல - ஸ்ரீஹரியின் பாதங்களை வணங்குபவனான; பாலக - இந்த சிறுவன்; எனகெ தொரெதனு - எனக்குக் கிடைத்தது; பேளலேனு - இதில் சொல்வதற்கு என்ன இருக்கிறது?; என்ன புண்யத பலவே - என்னுடைய புண்ணியங்களின் பலன்களே; பலிஸிஹுதோ - பலித்திருக்கிறதோ?.

குழந்தையின் பால லீலைகளைப் பார்த்து குருவான ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் மகிழ்ந்த விதம் இங்கு விளக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழந்தையின் பால லீலையை பார்த்து மகிழ்ந்தவாறு, தான் பாடியவாறு குழந்தையைக் கொஞ்சி, அந்த அழகான இளவரசனின் முகத்தை, கிருஷ்ணரைக் கொஞ்சும் கோபியர்களைப் போல முத்தம் கொடுத்து, ஸ்ரீஹரியின் பாதங்களை வணங்குபவனான இந்த சிறுவன் எனக்குக் கிடைத்தது என்னுடைய புண்ணியங்களின் பலனே. இதில் மேலும் சொல்வதற்கு என்ன இருக்கிறது?.

ஆடு³திஹனெளெ மக்களொட³னெ
மாடு³திஹ தானொம்மெ லீலெய
நோடு³திஹ ஆஷ்சர்யகொளுதலி பா³லராடவனு
கூடெ³ மனிமனி திருகு³திப்பனு
ரூடி³ஜனரனு மோஹகொ³ளிஸுவ
கா³டி³கா¹ரனு கிருஷ்ணதெரத³லி லீலெமாடி³த³னு ||29

ஆடுதிஹனெளெ மக்களொடனெ - சிறிய (தன் வயது) குழந்தைகளுடன் ஆடுகிறான்; மாடுதிஹ தானொம்மெ லீலெய - வெவ்வேறு லீலைகளை செய்து காட்டுகிறான்; பாலராடனு - இத்தகைய குழந்தையின் லீலைகளை; நோடுதிஹ - பார்க்கும் அனைவரையும்; ஆஷ்சர்ய கொளுதலி - மகிழ்விக்கிறான்; கூடெ - இதனுடன்; மனிமனி திருகுதிப்பனு - அனேக வீடுகளுக்கு செல்கிறான் (அங்கு குறும்புகள் செய்கிறான்); ரூடிஜனரனு மோஹகொளிஸுவ - அனைத்து மக்களையும் மயக்குகிறான்; காடிகாரனு - குறும்புக்காரனான; கிருஷ்ணதெரதலி - ஸ்ரீகிருஷ்ணனைப் போல; லீலெமாடிதனு - லீலைகளை செய்கிறான்.

குழந்தையின் பால லீலைகளைப் பார்த்து குருவான ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் மகிழ்ந்த விதம் இங்கு மேலும் விளக்கப்பட்டுள்ளது.

தன் வயதான குழந்தைகளுடன் இவன் விளையாடுகிறான். வெவ்வேறு லீலைகளை செய்து காட்டுகிறான். இத்தகைய குழந்தையின் லீலைகளை பார்க்கும் அனைவரையும் அவன் மகிழ்விக்கிறான். இதனுடன் அனேக வீடுகளுக்குச் சென்று, அங்கும் குறும்புகளை செய்கிறான். அனைத்து மக்களையும் மயக்குகிறான். குறும்புக்காரனான ஸ்ரீகிருஷ்ணனைப் போல லீலைகளை அவன் செய்கிறான்.

பாடு³வம் ஜனரன்னு பரிபரி
நோடு³வம் த²ரத²ரதி³ ஹாஸ்யவ
மாடு³வம் தானர்த்தி²ஸுதலவரொட³னெ இருதிப்ப
க்ரீடி³ஸுதலாபுரத³ பா³லர
கூடி³ ஈ பரி பீ³தி³யொளு தா
மூட³பா³லன தெரதி³ தோரித³ கூ³ட³பா³லகனு ||30

பாடுவம் - (அந்த குழந்தையானது) அவ்வப்போது பாடுகிறது; ஜனரன்னு பரிபரி நோடுவம் - போகும் வரை மக்களை திரும்பித்திரும்பி பார்க்கிறது; தரதரதி ஹாஸ்யவ மாடுவம் - விதம்விதமாக பேசி சிரிக்க வைக்கிறது; தானர்த்திஸுதலெ - அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டவாறு; அவரொடனெ இருதிப்ப - அவர்களுடனே இருக்கிறது; ஆ புரத பாலர கூடி - அந்த இடத்தின் (ஊரின் / கிராமத்தின்) சிறுவர்களுடன் கூடி; க்ரீடிஸுத - விளையாடியவாறு; ஈ பரி பீதியொளு - இவ்வாறாக அந்த தெருவில்; தா - தான்; மூடபாலன தெரதி - ஒரு சாதாரண சிறுவனைப் போல; தோரித - காட்டிக் கொண்டான்; கூடபாலகனு - அந்த மர்மமான சிறுவன் (தெய்வாம்சம் பொருந்திய சிறுவன்).

குழந்தையின் பால லீலைகளைப் பார்த்து குருவான ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் மகிழ்ந்த விதம் இங்கு மேலும் விளக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழந்தையானது அவ்வப்போது பாடுகிறது. செல்லும்போது மக்களை திரும்பித்திரும்ப பார்க்கிறது. விதம்விதமாக பேசி சிரிக்க வைக்கிறது. அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டவாறு

அவர்களுடனே இருக்கிறது. அந்த இடத்தின் சிறுவர்களுடன் கூடி விளையாடியவாறு இவ்வாறாக அந்தத் தெருவில் தான் ஒரு சாதாரண சிறுவனைப் போல தன்னை காட்டிக் கொண்டான். இவன் தெய்வாம்சம் பொருந்திய சிறுவனே ஆவான்.

பிந்தெ நாரத³முனிய வசனவ
சிந்திஸீபரி தன்ன மனத³லி
கந்துஜனகன ஸர்வகாலதி³ நோடி³ நலிதிப்ப
அந்தரங்க³தி³ ஶ்ரிரிய ரமணன
இந்து ப⁴ஜனெயகெ³ய்து³ பா³லக
அந்துதிளிஸதெ³ தானெ ப்ராக்ருதரந்தெ யிருதிப்ப ||31

பிந்தெ - முன்னர் (க்ருத யுகத்தில், தான் பிரகலாதனாக இருந்தபோது); நாரதமுனிய வசனவ - நாரதர் கூறிய உபதேசங்களை; சிந்திஸி - தற்போது சிந்தித்தவாறு; ஈ பரி தன்ன மனதலி - (அந்தக் குழந்தை) இவ்வாறு தன் மனதில் சிந்தித்தான்; கந்துஜனகன - ஸ்ரீஹரியை; ஸர்வகாலதி நோடி நலிதிப்ப - தன் மனதில் பார்த்து நடனமாடிக் கொண்டிருந்தான் (மகிழ்ந்தான்); அந்தரங்கதி - இவ்வாறு தன் மனதில்; ஶ்ரிரிய ரமணன - ஸ்ரீரமணனை; இந்து - இன்று; பஜனெயகெய்து - பஜனை செய்தவாறு; பாலக - ; தானே - தான்; அந்து - இவ்வாறாக; ப்ராக்ருதரந்தெ இருதிப்ப - மற்ற சாதாரண குழந்தைகளைப் போலவே தன்னை காட்டிக் கொண்டான்.

குழந்தையின் பால லீலைகளைப் பார்த்து குருவான ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் மகிழ்ந்த விதம் இங்கு மேலும் விளக்கப்பட்டுள்ளது.

முன்பு க்ருத யுகத்தில் தான் பிரகலாதனாக இருந்தபோது, நாரதர் கூறிய உபதேசங்களை தற்போது சிந்தித்தவாறு அந்தக் குழந்தை இவ்வாறு தன் மனதில் சிந்தித்தான். ஸ்ரீஹரியை எப்போதும் தன் மனதில் பார்த்து நடனமாடிக் கொண்டிருந்தான். இவ்வாறு இருந்து, தானும் மற்ற சாதாரண குழந்தைகளைப் போல தன்னை காட்டிக் கொண்டான்.

போதகா³யிது பஞ்சவத்ஸர
நீதவேஸரி தூ⁴ளியக்ஷர
ப்ரீதியிந்த³லி பரெ³து தோரலு பா³ல தா நுடி³த³³

தாத என்னய மாது கேளெலோ
தா[4]தனாண்ட[3]கெ முக்[2]ய கு[3]ருஜக
ந்னாத[2] விட்டலனு தானெ பூர்ணனு ஸர்வரோத்தமனு ||32

போதகாயிது - அந்த சிறுவனுக்கு ஆயிற்று; பஞ்சவத்ஸர - ஐந்து வயது; நீதவேஸரி - (அக்ஷராப்யாசம் செய்வதற்கு) இதுவே தக்க சமயம் என்று; தூளியக்ஷர ப்ரீதியிந்தலி பரெது - மணலில் ஓம் என்று எழுதி; தோரலு - காட்ட; பால தா நுடித - அந்த சிறுவன் இவ்வாறு கூறினான்; தாத என்னய மாது கேளெலோ - தந்தையே, என் பேச்சினைக் கேளுங்கள்; தாதனாண்டகெ - இந்த பிரம்மாண்டத்திற்கு; முக்ய குருஜகன்னாத விட்டலனு - முக்கியமானவன் குருஜகன்னாத விட்டலனே; தானே பூர்ணனு ஸர்வரோத்தமனு - அவனே பூர்ணன்; ஸர்வோத்தமன் ஆவான்.

சிறுவனுக்கு அக்ஷராப்யாசம் ஆகிறது என்பதை சொல்லி, இந்த மூன்றாம் சந்தியினை முடித்து வைக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

அந்த சிறுவனுக்கு ஐந்து வயது ஆனபோது, இதுவே அக்ஷராப்யாசம் செய்வதற்கு தக்க சமயம் என்று நினைத்து, அவனுக்கு மணலில் ஓம் என்று எழுதிக்காட்ட, அந்த சிறுவனோ, தந்தையே என் பேச்சினைக் கேளுங்கள், இந்த பிரம்மாண்டத்திற்கு முக்கியமானவன் குருஜகன்னாத விட்டலனே. அவனே பூர்ணன். ஸர்வோத்தமன் ஆவான்.

இது ஸ்ரீமத்வரின் மற்றும் ஸ்ரீராயரின் சிறு வயது நிகழ்ச்சிகளைக் குறிப்பது போலவே இருக்கிறது. ஸ்ரீமத்வரின் பால லீலைகள் பலவற்றை கேட்டிருப்போம். இதைப் போல ஸ்ரீராயரின் வாழ்க்கை வரலாற்றிலும் ஒரு சம்பவம் சொல்லப்படுகிறது.

ஸ்ரீதிம்மண்ண பட்டர் ஓம்காரம் எழுதி, இதுவே ஸ்ரீஹரியின் குறியீடு ஆகும் என்றபோது, வெங்கடநாதன் - எப்படி இந்த சிறிய எழுத்தானது எல்லையற்ற பகவந்தனின் மகிமைகளை அடக்கிக் கொண்டுள்ளது என்று கேட்டான். இந்த சிறிய குழந்தையின் அறிவினைக் கண்டு மகிழ்ந்தார் தந்தை. தன் மகனை கட்டிக்கொண்டு மகிழ்ச்சியில் பகவந்தனுக்கு பற்பல நன்றிகளைக் கூறி வணங்கினார்.

***

ஶ்ரீகுரு ஜகன்னாத தாஸரின்
கன்னட ஶ்ரீராகவேந்திர விஜயம்

சந்தி - 4

சந்தி 4ன் விஷய சுருக்கம்

ஶ்ரீவ்யாஸராஜர் பெரியவராகி ஶ்ரீஶ்ரீபாதராஜரிடம் கல்வி கற்றல்; ஶ்ரீபிரம்மண்ய தீர்த்தர் பிருந்தாவனஸ்தர் ஆதல்; ஶ்ரீவ்யாஸராஜர் தம் சிஷ்யர்களுக்கு பாடம் எடுப்பதான ஶ்ரீமதாசார்யரின் தத்வங்கள் என இந்த நான்காம் சந்தியில் 26 பத்யங்கள் இருக்கின்றன.

ராக⁴வேந்தி³ர விஜய பேளுவெ
ராக⁴வேந்தி³ர கருண ப³லத³லி
ராக⁴வேந்திரர ப⁴குதராத³வரித³னு கேளுவுது³ ||

பரமகருணாகரனு லோகக்கெ
சரண ஸேவகராத³ ஜனரிகெ³
ஸுர தருவரத³ந்தெ காமித நிருத கொடு³திப்ப
ஶரணு பொக்கெனோ து³க்க²மயப⁴வ
அரணதா³டிஸு ஶீக்⁴ர நின்னய
சரணயுக³த³லி என்னனிட்டு ஸலஹோ கு³ருவரனே ||1

லோகக்கெ - உலகிற்கு; பரமகருணாகரனு - மிக்க கருணாஸாலியானவன் நீ; சரண ஸேவகராத ஜனரிகெ - உன்னை வணங்கி, சேவை செய்த பக்தர்களுக்கு; ஸுர தருவரதந்தெ - கல்பவ்ருக்ஷத்தைப் போல; காமித நிருத கொடுதிப்ப - விருப்பங்களை தொடர்ந்து நிறைவேற்றுகிறாய்; ஶரணு பொக்கெனோ - உன்னை வணங்குகிறேன்; துக்கமயபவ - இந்த துக்கமயமான சம்சார சாகரத்திலிருந்து; அரணதாடிஸு - சம்சாரத்தை தாண்டச் செய்; ஶீக்ர நின்னய சரணயுகதலி - சீக்கிரமாக உன் சரணங்களில் என்னை வைத்து; ஸலஹோ குருவரனே - காப்பாற்றுவாயாக குருவரனே.

ஶ்ரீவ்யாஸராஜரை / ஶ்ரீராயரை வணங்குவதாக இந்த சந்தியின் முதல் பத்யத்தை துவக்குகிறார் ஶ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

உலகிற்கு பரம கருணாளுவானவன் நீ; உன்னை வணங்கி சேவை செய்யும் பக்தர்களுக்கு கல்பவ்ருக்ஷத்தைப் போல அவர்களின் விருப்பங்களை தொடர்ந்து நிறைவேற்றுகிறாய். உன்னை வணங்குகிறேன். இந்த துக்கமயமான சம்சார சாகரத்திலிருந்து என்னை தாண்டச் செய். சீக்கிரமாக உன் சரணங்களில் என்னை வைத்து என்னை காப்பாற்றுவாயாக குருவரனே.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரத்தின் இந்த வரிகளையே இவர் இங்கு கன்னடத்தில் சொல்லியிருக்கிறார் என்று நினைக்கலாம்.

ஸம்ஸாரேக்ஷய ஸாகரே ப்ரக்ருதிதோsகாதே ஸதா துஸ்தரே
ஸர்வாவத்ய ஜலக்ரஹைரனுபமை: காமாதி பங்காகுலே |
நானாவிப்ரம துப்ரம அமிதபய ஸ்தோமாதி பேனோத்கடே
துக்கோத்க்ருஷ்டவிஷே சமுத்தர குரோ மா மக்னரூபம் ஸதா

இனிது பா³லன வாக்ய லாலிஸி
முனிகுலோத்தமனாத³ யதிவர
மதி மதாம்வரனாத³ பா³லன நோடி³ ஸந்தஸதி³
மனதி³ யோசிஸி ஸப்தவத்ஸர
தனயகா³க³லு முஞ்சி மாடி³ஸி
வினயதி³ந்தா³ஸ்ரமவ கொட்டு வ்யாஸமுனியெந்த³ ||2

இனிது - இவ்வாறான; பாலன வாக்ய லாலிஸி - சிறுவனின் வாக்கியத்தைக் கேட்டு; முனிகுலோத்தமனாத யதிவர - ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர்; மதி மதாம்வரனாத - மிக புத்திசாலியான; பாலன நோடி - அந்த சிறுவனை பார்த்து; ஸந்தஸதி - மகிழ்ச்சியுடன்; மனதி யோசிஸி - மனதில் இவ்வாறு சிந்தித்தார்; ஸப்தவத்ஸர தனயகாகலு - அந்த சிறுவனுக்கு 7 வயது ஆனபோது; முஞ்சி மாடிஸி - உபநயனம் செய்வித்து; வினயதிந்த - பக்தி மரியாதை கௌரவங்களுடன்; ஆஸ்ரமவ கொட்டு - யதி ஆசிரமத்தைக் கொடுத்து; வ்யாஸமுனியெந்த - ஸ்ரீவ்யாஸமுனி என்று பெயர் வைத்தார்.

(முந்தைய சந்தியின் தொடர்ச்சியாக), குருவான ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர், அந்த சிறுவனுக்கு உபநயனம் / யதி ஆசிரமம் கொடுக்கிறார்.

இவ்வாறு கூறிய சிறுவனின் வாக்கியத்தினைக் கேட்டு, யதிவரரான ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர், மிக புத்திசாலியான அந்த சிறுவனைப் பார்த்து, மகிழ்ச்சியுடன் மனதில் இவ்வாறு சிந்தித்தார். அந்த சிறுவனுக்கு 7 வயது ஆனபோது, உபநயனம் செய்வித்து, பக்தி மரியாதை கௌரவர்களுடன், யதி ஆசிரமத்தைக் கொடுத்து, ஸ்ரீவ்யாஸமுனி என்று பெயர் வைத்தார்.

முந்தெ³ தா பி³ரம்மண்ய யதிவர
பொந்தி³ தா ஸ்ரீபாத³ராயர
முந்தெ³ பா³லனு நிம்ம ஸன்னிதி³யல்லிரலெந்த³
மத்⁴வ மதவுத்த⁴ரிஸலோஸுக³
ப³ந்த³ பா³லன தத்வ திளீது³
ச²ந்த³த³லி தா வித்⁴யபேளித³ வேத்³யமதியதிகெ³ ||3

முந்தெ தா பிரம்மண்ய யதிவர - ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரானவர், அடுத்து தான்; ஸ்ரீபாதராயர பொந்தி - ஸ்ரீபாதராயரிடம் வந்து; முந்தெ பாலனு - இனி இந்த சிறுவன்; நிம்ம - உங்களின்; ஸன்னிதியல்லிரலெந்த - சன்னிதியில் (பாடசாலையில் / குருகுலத்தில்) இருக்கட்டும் என்றார்; மத்வ மதவுத்தரிஸலோஸுக - மத்வ மதத்தை காப்பற்றுவதற்காக / பரப்புவதற்காக; பந்த பாலன - வந்த இந்த சிறுவனின்; தத்வ திளிது - மகிமையை அறிந்து; வேத்யமதியதிகெ - வேத்யமதியான ஸ்ரீபாதராயர், யதியான ஸ்ரீவ்யாஸமுனிக்கு அல்லது வேத்யமதியதியான ஸ்ரீவயாஸமுனிக்கு; சந்ததலி - மிகவும் அருமையாக; தா வித்யபேளித - ஸ்ரீபாதராயர் கல்வியை கற்றுக் கொடுக்கத் துவங்கினார்.

ஸ்ரீவ்யாஸராஜருக்கு ஸ்ரீஸ்ரீபாதராஜர் குருவான ஆன விதத்தை இங்கு விளக்குகிறார் ஸ்ரீகுருஜகன்னாத தாஸர்.

ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரானவர், ஸ்ரீபாதராயரிடம் வந்து, இனி இந்த சிறுவன் உங்களின் சன்னிதியில் (பாடசாலையில் / குருகுலத்தில்) இருக்கட்டும் என்றார். மத்வ மதத்தைக் காப்பாற்றுவதற்காக / பரப்புவதற்காக வந்த இந்த சிறுவனின் மகிமையை அறிந்து, வேத்யமதியான ஸ்ரீபாதராயர், யதியான ஸ்ரீவ்யாஸமுனிக்கு (அல்லது வேத்யமதியதியான ஸ்ரீவ்யாஸமுனிக்கு), மிகவும் அருமையாக ஸ்ரீபாதராயர் கல்வியை கற்றுக் கொடுக்கத் துவங்கினார்.

தனது குருவான ஸ்ரீஸ்ரீபாதராஜரின் மேல் சில கிருதிகளை இயற்றியிருக்கிறார் ஸ்ரீவ்யாஸராஜர். அவற்றில் ஒன்று இவ்வாறு இருக்கிறது.

நெனெது பதுகிரோ ஸதத நெனெது பதுகிரோ
கணகுணாம்புதி ஸ்ரீபாதராஜர (பல்லவி)

இதர த்யானவனெல்லவனு அளிது
அதிஸயதி விரக்தி பலிது
மதி விஸேஷரெனிப மத்வமதாம்பு
நிதிகெ பூர்ணசந்த்ரன (சரணம்)

மூலமூவத்தேளு க்³ரந்தத³
ஜால டீகா டிப்பணீஸஹ
பேளி தா ஸ்ரீபாத³ராஜரு த⁴ன்யரெனிஸித³ரு
ஸ்ரீல கு³ருபிரம்மண்ய தீர்த்த²ரு
காலத³லி வைகுண்ட² லோக³வ
ஸீலமனத³லி ஹரிய ஸ்மரிஸுத தாவெ பொந்தி³த³ரு ||4

மூலமூவத்தேளு கிரந்தத ஜால - ஸ்ரீமத்வரின் 37 ஸர்வமூல கிரந்தங்களின் பாடத்தின் அர்த்தத்தை; டீகா டிப்பணிஸஹ - அதன் உரைகளுடன்; பேளி - சொல்லி; ஸ்ரீபாதராஜரு தா - ஸ்ரீபாதராஜரானவர்; தன்யரெனிஸிதரு - தன்யர் ஆனார்; ஸ்ரீல குருபிரம்மண்ய தீர்த்தரு; காலதலி - சிறிது காலத்தில்; ஸீலமனதலி - திருப்தியாக (ஸ்ரீவ்யாஸமுனியைப் பார்த்த); ஹரிய ஸ்மரிஸுத - ஸ்ரீஹரியை நினைத்தவாறு; வைகுண்ட லோகவ தாவெ பொந்திதரு - வைகுண்ட லோகத்திற்கு சென்றார்.

ஸ்ரீஸ்ரீபாதராஜர் ஸ்ரீவ்யாஸராஜருக்கு பாடம் எடுத்த விதம் இந்த பத்யத்தில் விளக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீமத்வரின் 37 ஸர்வமூல கிரந்தங்களின் பாடத்தின் அர்த்தத்தை, அதன் உரைகளுடன் சொல்லி, ஸ்ரீபாதராஜரானவர், தன்யர் ஆனார். சிறிது காலத்தில், ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர் ஆனவர், ஸ்ரீவ்யாஸமுனியைப் பார்த்த மகிழ்ச்சியில், திருப்தியுடன், ஸ்ரீஹரியை நினைத்தவாறு தான் வைகுண்ட லோகத்தை அடைந்தார்.

ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீஸ்ரீபாதராஜர் மேல் இயற்றிய இன்னொரு கிருதி இது.

மஹிமெ ஸாலதெ இஷ்டெ மஹிமெ ஸாலதெ
அதிஸயனன ஒலுமெயிந்த
மஹியொளெம்ம ஸ்ரீபாதராயர...

அந்து³ கு³ரு³ள சந்ததி³ந்த³லி
ப³ந்து³ வ்ருந்தா³வனதி³ பூஜிஸி
ப³ந்த³ பூஸுரதகெ போ⁴ஜன கனக த³க்ஷிணெய
சந்த³தி³ந்த³லியித்து தி³னதி³ன
இந்தி³ரேஶன ப⁴ஜிஸுதலி தா
நந்து³ கு³ரு³ள ப்ரீதிபடி³ஸித³ வ்யாஸமுனிராய ||5

அந்து சந்ததிந்தலி பந்து - அன்று பக்தியுடன் வந்து; குருகள வ்ருந்தாவனதி பூஜிஸி - குருகளின் வ்ருந்தாவனத்தினை பூஜித்து; பந்த பூஸுரதகெ - வந்த பண்டிதர்களுக்கு / ஸத்பிராமணர்களுக்கு; போஜன கனக தக்ஷிணெய - உணவு, தங்கம், தட்சிணை ஆகியவற்றை; சந்ததிந்தலியித்து - மகிழ்ச்சியுடன் அருளி; தினதின - தினம்தோறும்; இந்திரேஶன - ஸ்ரீஹரியை; பஜிஸுதலி - வணங்கியவாறு; நந்து குருகள - அன்று குருகளை; வ்யாஸமுனிராய - ஸ்ரீவ்யாஸமுனிகள். ப்ரீதிபடிஸித - மகிழ்ச்சிப்படுத்தினார்.

ஆசிரம குருவான ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் வ்ருந்தாவனத்தை சிஷ்யரான ஸ்ரீவ்யாஸராஜர் பூஜித்த விதத்தினை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

அன்று பக்தியுடன் வந்து, குருகளின் வ்ருந்தாவனத்தினை பூஜித்து, வந்த பண்டிதர்களுக்கு / ஸத்பிராமணர்களுக்கு உணவு, தங்கம், தட்சிணை ஆகியவற்றை மகிழ்ச்சியுடன் அருளி, தினம்தோறும் ஸ்ரீஹரியை வணங்கியவாறு அன்று குருகளான ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரை ஸ்ரீவ்யாஸமுனிகள் மகிழ்ச்சிப்படுத்தினார்.

ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் ஆராதனை நாள் : வைசாக பகுள ஏகாதசி. அவரைக் குறித்தான பஞ்சரத்ன மாலிகா ஸ்தோத்திரம் - ஸ்ரீவ்யாஸராஜர் இயற்றியது:

கம்ஸத்வம்ஸ பதாம்போஜ ஸம்ஸக்தோ ஹம்ஸபுங்கவ: |
பிரம்மண்ய குருராஜாக்யோ வர்ததாம் மம மானஸே ||1

ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரைப் பற்றிய ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸரின் கிருதி இது.

வ்ருந்தாவன நோடிரோ நீவெல்லா
ஆனந்தவன்னெ பொந்திரோ ||ப

விட்டல ந்ருஹரி பூஜெகெ நேமிஸி
தம்ம பட்ய சிஷ்யரு வ்யாஸதீர்த்தர
அட்டஹாஸதி ஸர்வஜிது ஸம்வத்ஸர கிருஷ்ண ஏகாதஷி வைஷாக
திட்ட குருகோவிந்த விட்டலன த்ருஷ்டிஸி தனு பிட்டு பொரடன ||3

முள்ளபா³கி³ல மட²த³ மத்⁴யதி³
ஒள்ளெமுத்தின சித்ரதா³ஸன
த³ல்லி தா குளதிர்த³ ஶிஷ்யர ததிகெ நித்யத³லி
குல்லமாயிக³ள மதவிசாரவ
ஸுள்ளுமாடி³த³ மத்⁴வ ஶாஸ்த்ரக³
ளெல்ல போ⁴திஸி ஹரியெ ஸர்வோத்தமனு நிஜவெந்த³ ||6

முள்ளபாகில மடத மத்யதி - முளுபாகிலு மடத்தின் நடுவில்; ஒள்ளெமுத்தின சித்ரதாஸனதல்லி - நல்ல முத்தினால் இழைக்கப்பட்ட ஆஸனத்தில்; தா குளதிர்த - (ஸ்ரீஸ்ரீபாதராஜர்) தான் அமர்ந்திருந்தார்; ஶிஷ்யர ததிகெ நித்யதலி - தினமும், சிஷ்யர்களின் குழுவிற்கு; குல்லமாயிகள - குமதங்களின்; மதவிசாரவ - விஷயங்களை; ஸுள்ளுமாடித - முறியடித்த / வென்ற; மத்வ ஶாஸ்த்ரகளெல்ல - மத்வ சாஸ்திரங்களின் தத்வ ரகசியங்கள் அனைத்தையும்; போதிஸி - போதித்து; ஹரியெ ஸர்வோத்தமனு நிஜவெந்த - ஸ்ரீஹரியே ஸர்வோத்தமன், இதுவே நிஜம் என்றார்.

இந்த பத்யத்திலிருந்து சில பத்யங்களில், ஸ்ரீஸ்ரீபாதராஜர் ஸ்ரீவ்யாஸராஜருக்கு எடுத்த பாடத்தின் விவரத்தினை (மத்வ சித்தாந்தத்தின் முத்துக்களை) விளக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

முளுபாகிலு மடத்தின் நடுவில், நல்ல முத்தினால் இழைக்கப்பட்ட ஆஸனத்தில் ஸ்ரீஸ்ரீபாதராஜர் தான் அமர்ந்திருந்தார். தினமும் தன் சிஷ்யர்களின் குழுவிற்கு, குமதங்களின் விஷயங்களை முறியடித்த / வென்ற மத்வ சாஸ்திரங்களின் தத்வ ரகசியங்கள் அனைத்தையும் போதித்து, ஸ்ரீஹரியே ஸர்வோத்தமன் என்னும் நிர்ணயத்தை விளக்கினார்.

ஏகோ நாராயணனெ லயத³ல
நேக ஜீவர தன்ன ஜட²ரதி³
ஏக பா⁴க³த³லிட்டு லகுமிய பு⁴ஜக³ளாந்தரதி³
ஸ்ரீகரனு தா ஸுஅன்ய நாமதி³
ஏகரூபவ பொந்து³கொ³ளிஸுத
ஸ்ரீகராத்மகவடத³ பத்ரதி³ யோக³ நித்³ரியனு ||7

ஏகோ நாராயணனெ - நாராயணன் ஒருவனே; லயதல - லயத்தில்; அனேக ஜீவர தன்ன ஜடரதி - அனைத்து ஜீவர்களையும் தன் வயிற்றில்; ஏக பாகதலிட்டு - ஒரு புறத்தில் வைத்துக்கொண்டு; லகுமிய புஜகளாந்தரதி - லட்சுமிதேவியை தன் தோள்களுக்கு இடையே; ஸ்ரீகரனு - ஸ்ரீஹரியானவன்; தா ஸுஅன்ய நாமதி - தான் ஷுஅன்ய நாமத்தினால்; ஏகரூபவ - ஒரு ரூபத்தினை எடுத்து; பொந்துகொளிஸுத - இருந்தவாறு; ஸ்ரீகராத்மகவடத பத்ரதி - ஸ்ரீலட்சுமிதேவியின் ரூபமான ஆல இலையில்; யோக நித்ரியனு - யோக நித்திரையை; (அடுத்த பத்யத்தில் தொடர்கிறது).

பகவந்தனின் ஸ்ருஷ்டி ப்ரகரணத்தினை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீமன் நாராயணன் ஒருவனே; லயத்தில் அனைத்து ஜீவர்களையும் தன் வயிற்றில் ஒரு புறத்தில் வைத்துக்கொண்டு, லட்சுமிதேவியை தன் தோள்களுக்கு இடையே வைத்துக்கொண்டு, ஸ்ரீஹரி, தான் ஷுஅன்ய நாமத்தினால், ஒரு ரூபத்தினை எடுத்து இருந்தவாறு, ஸ்ரீலட்சுமிதேவியின் ரூபமான ஆல இலையில் யோக நித்திரையை செய்கிறான்.

ஸ்ரீவாதிராஜரின் தத்வஸார (வைகுண்ட வர்ணனெ) - ஸ்ருஷ்டி ஸந்தியில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

ஒப்ப[3] நாராயணனு லயத[3]ல்லிஹனு க[3]ட[3]
அப்[3]ஜஸம்ப[4]வனாக[3] எல்லிஹனோ
அப்[3]ப[3]ரத[3] ருத்[3]ர மத்திர்த[3] தே[3]வர்க[3]ளு
ஒப்[3]ப[3] ரிஷிக[3]ளு எல்லிஹரோ ||1

ஏகோ நாராயண ஆஸீதெ[3]ம்ப[3] ஸ்ருதி
ஸ்ரீகிருஷ்ணனொப்[3]ப[3]னெ ப்ரளயத[3]லி
ஆ காலதி ந பி[3]ரம்மா ந ச ஷங்கர எந்து[3]
முக்[2]யார்த்த[2]வ நிர்ணைஸே ||2

'ஏகோ நாராயண ஆஸீத் ந பிரம்மா ந ச ஷங்கர:', 'வாஸுதேவோ வா இதமக்ர ஆஸீன்ன பிரம்மா ந ச ஷங்கர:' என்னும் ஸ்ருதிகள், நாராயணனைத் தவிர வேறு யாரும் இருந்திருக்கவில்லை என்று சொல்கிறது. மற்ற அனைத்தும் ஸ்வதந்த்ரனான நாராயணனின் அதீனத்தில், நிச்சயிக்கப்பட்ட அவ்யக்தத்தில் இருந்தது என்று அர்த்தம். சர்வசம்ஹாரகனான நாராயணன், மற்ற சர்வ வஸ்துகளின் ம்ருத்யு ஆகிறான். அந்த ம்ருத்யுவினால் விழுங்கப்பட்ட அனைத்தும் அவனின் உதரத்தில் இருந்தன – க்ரியாஷூன்யமாக இருந்தன. 'நைவ கிம் ச நாக்ர ஆஸீத் ம்ருத்யு நைவேதமாவ்ருத மாஸீத்' (பிருஹதாரண்ய) – பிரளய காலத்தில் (அக்ரே – ஸ்ருஷ்டிக்கு முன்னர்) வேறு எதுவும் இருந்திருக்கவில்லை. அனைத்தையும் சம்ஹரித்து விழுங்கிய ம்ருத்யு நாமக ஸ்ரீஹரியினால் அனைத்தும் (நித்ய வஸ்துகள் அனைத்தும்) அம்ருதமாக இருந்தன' என்று வேதமே சொல்கிறது.

மேலதிக விவரங்களுக்கு தத்வஸார (வைகுண்ட வர்ணனெ) புத்தகத்தை பார்க்கலாம்.

மாடு[3]திரலாகாலகம்ப்[4]ரணி
பாடி[3] ஜயஜயவெந்து[3] ஸ்தவனவ
மாடி[3] போ[3]தி[4]ஸி ஸ்ருஷ்டிகாலவு ப்ராப்தவாகி[3]ஹது[3]
நோடி[3] ஜீவர உத[3]ரதி[3]ருவர
மாடி[3] பா[4]க[3]வ மூருமுஷ்டிய
ஒடெ[3]ய தானே ஸ்ருஷ்டிமாடி[3]த[3] ஸ்ருஜ்யஜீவரனு ||8

மாடுதிரலாக ஆ காலக - (ஸ்ரீஹரி தன் யோக நித்திரையை செய்து கொண்டிருந்தபோது); அந்த காலத்தில்; அம்ப்ரணி - ஸ்ரீலட்சுமியானவள்; ஜயஜயவெந்து ஸ்தவனவ மாடி - ஜயஜய என்று ஸ்ரீஹரியை போற்றி; போதிஸி - இவ்வாறாக கூறினாள்; ஸ்ருஷ்டிகாலவு - ஸ்ருஷ்டி காலமானது; ப்ராப்தவாகிஹது நோடி - வந்திருக்கிறது என்பதை பார்த்து; உதரதிருவர ஜீவர - வயிற்றில் இருக்கும் ஜீவர்களை பாகம் ஆக்கி; மூருமுஷ்டிய - மூன்று முஷ்டிகளாக; ஒடெய தானெ - ஸ்ரீஹரி தானே; ஸ்ருஜ்யஜீவரனு - அடுத்த கல்பத்தில் ஸ்ருஷ்டியில் வரவிருக்கும் ஜீவர்களை; ஸ்ருஷ்டி மாடித - படைத்தான்;

பகவந்தனின் ஸ்ருஷ்டி ப்ரகரணத்தினை இங்கு தொடர்கிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீஹரியானவன் இப்படியாக தன் யோக நித்திரையை செய்து கொண்டிருந்தபோது, அந்த சமயத்தில், ஸ்ரீலட்சுமிதேவி, ஜயஜய என்று ஸ்ரீஹரியைப் போற்றி, ஸ்ருஷ்டி காலமானது வந்திருக்கிறது என்று கூறினாள். உடன், ஸ்ரீஹரியானவர், தன் வயிற்றில் இருக்கும் ஜீவர்களை மூன்று முஷ்டிகளாக பாகம் ஆக்கி, அடுத்த கல்பத்தில் ஸ்ருஷ்டியில் வரவிருக்கும் ஜீவர்களை படைத்தான்.

ஸ்ரீவாதிராஜரின் தத்வஸார (வைகுண்ட வர்ணனெ) - ஸ்ருஷ்டி ஸந்தியில் இவ்வாறு உள்ளது.

கர்து ஹயவத³ன பொம்மாண்ட³தொ³ளகெ³ ஸ
ர்வத்ர ஜீவர நிர்மிஸித³னு
முக்தவர்க்க³வ தன்ன மூல ஸ்தா²னதொ³ளிட்டு
விஸ்தரிஸித³ ஸ்ருதி பத²வ ||10

பிரம்மாண்டத்தை; அதற்குள் 14 உலகங்களை; பிறகு அதற்குள் ஜீவர்களை படைத்தான் என்று ஸ்ரீவாதிராஜர் கூறுகிறார்.

ஆதி³ நாராயணனெ மூலனு
வேத³க³ம்யானந்த நாமக
ஆத³னாதனு அம்ஶிரூபனு விஶ்வதோமுக²னு
பாத³ஹஸ்தாத³்யவயங்க³ளு

வேத³ராஶிகெ³ நிலுகலாரவு
வேத³மானியு லகுமி திளியளு திளிவ ஸர்வக்³ஞ ||9

ஆதி நாராயணனெ மூலனு - ஶ்ரீமன் நாராயணனே ஆதி, அவனே மூலன்; வேதகம்ய - வேதங்களால் போற்றப்படுபவன்; அனந்த நாமக ஆதனாதனு - அவன் அனந்த பெயர்களை கொண்டவனாக இருக்கிறான்; அம்ஶிரூபனு - அனைவரிலும் அம்சமாக இருக்கிறான்; விஶ்வதோமுகனு - அனைத்து இடங்களிலும் வ்யாப்தனாக இருக்கிறான்; பாதஹஸ்தாதி அவயவங்களு - அவனுடைய கை, கால் ஆகிய உறுப்புகள்; வேதராஶிகெ நிலுகலாரவு - வேதத்தினால் போற்றப்பட முடியாதவை; வேதமானியு லகுமி திளியளு - லட்சுமிதேவியாலேயே அவற்றை முழுமையாக அறியப்படமுடியாது; ஸர்வக்ஞ திளிவ - ஸர்வக்ஞனான ஶ்ரீஹரி மட்டுமே அனைத்தையும் அறிந்தவன்.

ஶ்ரீஹரியின் நற்குணங்கள் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

ஶ்ரீமன் நாராயணனே ஆதி. அவனே மூலன். வேதங்களால் போற்றப்படுபவன். அவன் அனந்த பெயர்களை கொண்டவனாக இருக்கிறான். அனைவரிலும் அம்சமாக இருக்கிறான். அனைத்து இடங்களிலும் வ்யாப்தனாக இருக்கிறான். அவனுடைய கை, கால் ஆகிய உறுப்புகள், வேதத்தினால் முழுமையாக போற்றப்பட முடியாதவை. ஶ்ரீலட்சுமிதேவியாலேயே அவற்றை முழுமையாக அறியப்பட முடியாது. ஸர்வக்ஞனான ஶ்ரீஹரி மட்டுமே அனைத்தையும் அறிந்தவன்.

இதனை ஶ்ரீஜகன்னாததாஸர், ஹரிகதாம்ருதஸாரத்தில் பல இடங்களில் விளக்கியுள்ளார்.

மூல நாராயணனு மாயா
லோலனந்தா வதார நாமக
வ்யாலரூப ஜயாரமணனாவேஷ னெனிஸுவனு |
லீலெகை³வானந்த சேதன
ஜாலதொ³ஞ ப்ரத்⁴யும்ன பி³ரம்மா
ண்டா³லயத³ ஒளஹொராகு³ நெலெஸிஹ ஷாந்தி அனிருத்³த⁴ ||1

ப³கெ³ப³கெ³ய நூத¹னவ கா¹ணுத¹
மிகெ³ ஹருஷதி³ம் பொ¹க³ளி ஹிக்கு³வ
த்ரிகு³ணமானி மஹாலகுமி ஸந்தெயிஸலனுதி³னவு ||2

விஶ்வதோமுக² சக்ஷு கர்ணனு
விஶ்வதோத³ர நாபி⁴ குக்ஷனு
விஶ்வதோகடி ஊரு ஜானூ ஜங்க⁴யுக³ கு³ல்ம
விஶ்வதோமய பாத³வாரிஜ
விஶ்வதாங்கு³லி ராஜி நக²க³ளு
விஶ்வகாயனு விஶ்வதொ³ளகி³ஹ விஶ்வ விஶ்வேஶ ||10

சக்ஷு - கண்; கர்ணனு - காது; உதர - வயிறு; நாபி - நாபி; குக்ஷனு - வயிறு; கடி - இடுப்பு; ஊரு - துடை; ஜானு - முழங்கால்; ஜங்க யுக - அதற்கு கீழ் உள்ள பகுதி; குல்ம - ஜனன உறுப்புகள்; பாதவாரிஜ - தாமரை போன்ற கால்கள்; அங்குலி - விரல்கள்; ராஜி நகளு - ஒளிரும் நகங்கள்; காயனு - தேகம்; விஶ்வதொளகிஹ விஶ்வ விஶ்வேஶ - அனைத்து இடங்களிலும் இருப்பவனான விஶ்வேஶன்.

ஸ்ரீஹரியின் நற்குணங்கள் இங்கு மேலும் விளக்கப்பட்டுள்ளன.

விஶ்வதோ என்று சொல்வதற்கு மூன்று விதமாக அர்த்தங்களை புரிந்து கொள்ளலாம். 1. உலகம் முழுக்க வ்யாப்தனாக உள்ள; 2. எண்ணிக்கையற்ற; 3. உலகமே அவனாக உள்ள. இவ்வாறு: கண், காது, வயிறு, நாபி, வயிறு, இடுப்பு, துடை, முழங்கால், அதற்கு கீழ் உள்ள பகுதி, ஜனன உறுப்புகள், தாமரை போன்ற கால்கள், விரல்கள், ஒளிரும் நகங்கள், தேகம் என கொண்டு, அனைத்து இடங்களிலும் இருப்பவனான விஶ்வேஶனாக இருக்கிறான் ஸ்ரீஹரி.

இதையே புருஷ ஸூக்தம் - சஹஸ்ர சீர்ஷா புருஷ: சஹஸ்ராக்ஷ: சஹஸ்ரபாத் - என்கிறது.

அபத³பாணியு ஜவனபிடி³வனு
உபித ஶ்ருதி கண்கேளி நோட்³யனு
அபரமஹிமன ஶிரியு அரியளு ஸுர பாடே³னு
ஜபிஸி காணுவெனெந்து³ லகுமியு
அபரிமித தா ரூபத⁴ரிஸி

தபிஸி கு³ணக³ள ராஶியொளு தானொந்து³ திளிலில்ல ||11

ஜவனபிடிவனு - யமனையே பிடிப்பவன்; அபதபாணியு உபித ஸ்ருதி - மெய் முழுக்க ஸ்ருதிமயமாகவே இருக்கிறான்; கண்கேளி நோட்யனு - கண்ணால் கேட்கவும் பார்க்கவும் செய்கிறான்; அபரமஹிம - இத்தகைய அபார மகிமனை; ஶிரியு அரியளு ஸுர்ர பாடேனு - ஸ்ரீதேவியே முழுவதுமாக அறியமாட்டாள், நரர்களின் பாடு என்ன?; ஜபிஸி காணுவெனெந்து லகுமியு - இவனை ஜபம் மூலமாக தான் அறிவேன் என்று லட்சுமிதேவி; அபரிமித தா ரூபதரிஸி - பல்வேறு ரூபங்களை தான் தரித்து; தபிஸி - தவம் செய்து; குணகள ராஶியொளு - அவனில் இருப்பதான குணங்களின் குழுக்களில்; தானொந்து திளிலில்ல - ஒன்றும்கூட அவள் அறியவில்லை.

ஸ்ரீஹரியின் குணங்களை ஸ்ரீலட்சுமியும்கூட முழுமையாக அறியமாட்டாள் என்று இந்த பத்யத்தில் சொல்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஸ்ரீஹரியானவன், யமனையே பிடிப்பவன், மெய் முழுக்க ஸ்ருதிமயமாகவே இருக்கிறான். கண்களால் கேட்கவும் பார்க்கவும் செய்கிறான். இத்தகைய அபார மகிமனை ஸ்ரீதேவியே முழுவதுமாக அறியமாட்டாள். இப்படியிருக்கையில், நரர்களின் பாடு என்ன?. இவனை ஜபம் மூலமாக தான் அறிவேன் என்று லட்சுமிதேவி, பல்வேறு ரூபங்களை தான் தரித்து, தவம் செய்து, அவனில் இருப்பதான குணங்களின் குழுக்களில் ஒன்றும்கூட அவள் அறியவில்லை.

ஜவனபிடிவனு என்பதை நாம் - ம்ருத்யுர்ம்ருத்யு என்றும் சொல்லலாம். உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோ முகம். ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம் ம்ருத்யுர்ம்ருத்யும் நமாம்யஹம்.

இந்த பத்யத்தின் கருத்தினை ஸ்ரீஜகன்னாததாஸர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

* பகெபகெய நூதனவ காணுத
மிகெ ஹருஷதிம் பொகளி ஹிக்குவ

த்ரிகுணமானி மஹாலகுமி சந்தெய்சலு அனுதினவு ||2

* தே³வதே³வகி இப்பளெந்த³ரி
தா³ விரிஞ்சன ஜனனி ஈதன
ஆவகாலத³ அரியளந்த³வ நரர பாடே³னு ||25

அந்து³போகி³ஹ லகுமி ரூபக³
ளிந்தி³கு³ ப³ரலில்ல காரண
சந்த³தி³ந்த³லி வேத³பேள்வத³னந்த மஹிமெந்து³
ஒந்தெ³ரூபதி³ ஹலவு ரூபவு
ஒந்தெ³ கு³ணதொ³ளனந்த கு³ணக³ளு
எந்தி³கா³த³ரு பொந்தி³யிப்பவனந்த காலத³லி ||12

அந்துபோகிஹ - அன்று தியானம் செய்வதற்காக புறப்பட்ட; லகுமி ரூபகளிந்திகு பரலில்ல - லட்சுமிதேவியின் ரூபங்கள், இன்றைக்கும் திரும்பி வரவில்லை; காரண - அதற்கு என்ன காரணம் என்றால்; சந்ததிந்தலி - மகிழ்ச்சியுடன்; அனந்த மஹிமெந்து - அனந்த மஹிமன் என்று; வேதபேள்வது - வேதங்கள் சொல்கின்றன; ஒந்தெரூபதி ஹலவு ரூபவு - ஒரே ரூபத்தில் பல ரூபங்கள்; ஒந்தெ கொணதொளனந்த குணகளு - ஒரே குணத்தில் பற்பல குணங்கள்; அனந்த காலதலி - அனந்த காலங்களிலும்; எந்திகாதரு பொந்தியிப்ப - அவன் அனைத்து காலங்களிலும் நிலைத்திருக்கிறான்.

ஸ்ரீஹரியின் நற்குணங்களின் சிறப்புகள் மேலும் தொடர்கின்றன.

இப்படியாக தியானம் செய்வதற்காக புறப்பட்ட ஸ்ரீலட்சுமிதேவியின் ரூபங்கள், இன்றும் திரும்ப வரவில்லை. அதற்கு என்ன காரணம் என்றால், ஸ்ரீஹரியானவன், அனந்த மகிமன் என்று வேதங்கள் மகிழ்ச்சியுடன் சொல்கின்றன. ஒரே ரூபத்தில் பல ரூபங்கள், ஒரே குணத்தில் பற்பல குணங்கள். அவன் அனைத்து காலங்களிலும் நிலைத்திருக்கிறான்.

இதையே ஸ்ரீஜகன்னாததாஸர், தனது 'பலவிது பாளுதுதக்கெ' என்னும் பாடலில் இவ்வாறு கூறுகிறார்.

ஒந்து ரூபதொள் அனந்த ரூபவு பொந்திப்பவு குணகண ஸஹித

ஹிந்தெ முந்தெ எந்தெந்திகு கோவிந்தகெ ஸரிமிகெ யில்லெந்தெம்புதெ (பலவிது பாள்துதக்கெ)

இதையே ஸ்ரீபுரந்தரதாஸர், தமது ஒரு கிருதியில் இவ்வாறு பாடியுள்ளார்.

அல்லி நோடலு ராம இல்லி நோடலு ராம (பல்லவி)
அவனிகெ இவ ராம இவனிகெ அவ ராம
அவனியோள் ஈபரி ரூபவுண்டெ
லவமாத்ரதி அசுர துருளரெல்லரு
அவரவர் ஹொடெதாடி ஹதராகி போதரு ||2

பூர்ணவெனிபவு கு³ணக³³ணங்க³ளு
பூர்ணவெனிபவு அவயவங்க³ளு
பூர்ணவெனிபவு ரூபகர்மக³³ளாவ காலத³லி
பூர்ண நகு³முக² கண்ட² ஹ்ருத³யனு
பூர்ணஜானு ஸுகக்ஷ குக்ஷனு
பூர்ணகடி தடி நாபி⁴ ஊரு ஜானு ஜங்கெ⁴க³ளு ||13

பூர்ணவெனிபவு - பூர்ணம் எனப்படுகின்றன; குணகணங்களு - பல நற்குணங்கள்; அவயவங்களு - உறுப்புகள்; ரூபகர்மகளு - ரூப கர்மங்கள்; ஆவ காலதலி - அனைத்து காலங்களிலும்; பூர்ண நகுமுக - புன்னகையுடன் கூடிய முகம் பூரணம் எனப்படுகின்றன; கண்ட ஹ்ருதயனு - கழுத்து, இதயம்; பூர்ணஜானு - தொடை; ஸுகக்ஷ குக் ஷனு - வயிறு; கடி - இடுப்பு; தடி நாபி - ஆழமான நாபி; ஊரு - தொடை; ஜானு ஜங்கெகளு - முழங்கால், அதற்குக் கீழான பகுதிகள் அனைத்து பூர்ணமானவை.

ஸ்ரீஹரியின் நற்குணங்களின் சிறப்புகள் மேலும் தொடர்கின்றன.

பூர்ணம் - என்றால் முழுமையாக அல்லது infinite எனலாம். அவனது நற்குணங்கள், உறுப்புகள், ரூப கர்மங்கள், புன்னகையுடன் கூடிய முகம், கழுத்து, தொடை, வயிறு, இடுப்பு, ஆழமான நாபி, முழங்கால், அதற்குக் கீழான பகுதிகள் என அனைத்துமே பூர்ணமானவை.

இதையே விளக்குவதான உபநிஷத் மந்த்ரம்:
பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்சதெ |

பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவ அவஸிஷ்யதே ||

பூர்ணகு[3]ல்ப ஸுபாத[3] பது[3]மவு
பூர்ணவாத[3]ங்கு[3]லிய ஸங்க[4]வு
பூர்ண நக[2] த்[4]வஜ வஜ்ர சக்ர ஸுஷங்க[2] ரேகே[2]க[3]ளு
பூர்ணவாது[3]து[3] அம்ஶி ரூபவு
பூர்ணவாது[3]து[3] அம்ஶ ரூபவு
பூர்ணவாகி[3]ஹவெல்ல ஜீவர பி[3]ம்ப[3]ரூபக[3]ளு ||14

குல்ப - ஜனன உறுப்புகள்; ஸுபாதபதுமவு - தாமரை போன்ற பாதங்கள்; அங்குலிய ஸங்கவு - விரல்கள் சேரும் இடங்கள்; நக - நகங்கள்; த்வஜ வஜ்ர சக்ர ஸுஷங்க ரேகேகளு - சங்கு, சக்ர, த்வஜ போன்ற ரேகைகள்; அம்ஶி ரூபவு - அம்ச ரூபங்களும் பூர்ணமானவை; அம்ஶ ரூபவு - அம்சமாக இருப்பதும் பூர்ணமே; ஜீவர பிம்பரூபகளு - ஜீவர்களில் இருக்கும் பிம்பரூபங்கள் பூர்ணமானவையே.

ஸ்ரீஹரியின் நற்குணங்களின் சிறப்புகள் மேலும் தொடர்கின்றன.

ஸ்ரீஹரியின் ஜனன உறுப்புகள், தாமரை போன்ற பாதங்கள், விரல்கள் சேரும் இடங்கள், நகங்கள், சங்கு, சக்ர, த்வஜ போன்ற ரேகைகள் என அனைத்தும் புர்ணமானவை. அவனது அம்ச ரூபங்கள், ஜீவர்களில் இருக்கும் பிம்பரூபங்கள் இவையும் பூர்ணமானவையே.

ஹரிகதாம்ருதஸாரத்தில் இதை விளக்கும் பற்பல உதாரண பத்யங்கள் உள்ளன. ஒன்றை மட்டும் இங்கே பார்ப்போம்.

ஜாக[3]ர ஸ்வப்னங்களொளு வர
போ[4]கி[3]ஷயன ப[3]ஹுப்ரகார வி
பா[4]க[3]கை[3]ஸி நிரம்ஷஜீவர சிச்சரீரவனு |
போ[4]க[3]வித்து ஸுஷுப்தி கா[1]லதி[3]
ஸாக[3]ரவ நதி[3]கூ[1]டுவந்தெ[1] வி
யோக[3] ரஹிதனு அம்ஷக[3]ளனேகத்ர வைதிஸுவ ||
(வ்யாப்தி ஸந்தி - 8)

புருஷ ஸ்த்ரீயளுயெம்ப[3] பே[4]த[3]தி[3]
எரடு[3] ரூபக[3]ளுண்டு ஈதகெ[3]
புருஷ நாமக நந்த[3]மய ப[3]லபா[4]க[3] தானெனிப

கரெஸுவெனு விக்ஞானமய தா
நரஸியெனிஸுத வாமபா[4]க[3]தி[3]
இருவ காரண ஸ்வரமணனு தானாகி[3]யிருதிப்ப ||15

புருஷ ஸ்த்ரீயளுயெம்ப பேததி - புருஷ, ஸ்த்ரி என்னும் இரு பேதங்களில்; எரடு ரூபகளண்டு - இரு ரூபங்கள் உண்டு; ஈதகெ - இவனுக்கு; புருஷ நாமக நந்தமய பலபாக தானெனிப - வலது பக்கத்தில் புருஷ நாமகனாக ஆனந்தமயனாக இருக்கிறான்; அரஸியெனிஸுத - அரசி என்றவாறு; வாமபாகதி - அவனது இடது பக்கத்தில்; தா விக்ஞானமய கரெஸுவனு - தன்னை விக்ஞானமயன் என்று அழைத்துக் கொள்கிறான்; இருவ காரண - இருப்பதால்; ஸ்வரமணனு தானாகியிருப்ப - ஸ்வரமணனாக தானே இருக்கிறான்;

புருஷ, ஸ்த்ரி ரூபத்தில் ஸ்ரீஹரி எப்படி இருக்கிறான் என்பதை மிகவும் அழகாக இங்கு சொல்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

புருஷ, ஸ்த்ரி என்னும் இரு பேதங்களில் இரு ரூபங்கள் உண்டு. இவன் வலது பக்கத்தில் புருஷ நாமகனாக ஆனந்தமயமாக இருக்கிறான். அரசி என்றவாறு, இடது பக்கத்தில் இருந்து கொண்டு, தன்னை விக்ஞானமயன் என்று அழைத்துக் கொள்கிறான். இவன் ஸ்வரமணனாக இருக்கிறான்.

ஆனந்தமய, விக்ஞானமய ரூபங்களைப் பற்றி ஹரிகதாம்ருதஸாரம் இவ்வாறு சொல்கிறது.

ஐது[3]ஸாவிரனூர இப்ப
த்தைது[3] நாராயணன ரூபவ
தா த[4]ரிசிகொண்ட[3]னுதி[3]னதி[3] ஆனந்த[3]மயனெனிப |
(5125 ரூபங்கள் ஆனந்தமய)

ரூபதி[3]ம் விக்ஞானமய னெ
ம்பீ[3]பெ[1]ஸரினிம் வாஸுதே[3]வனு
வ்யாபிஸிஹ மஹதா[3]தி[3] த[1]த்வதி தத்ப[1]தி[1]க[3]ளொளகெ[3] |
(4384 ரூபங்கள் விக்ஞானமய)

வாரிவாச்யனு வாரியொளகி[3]
த்தா[3]ரு ரஸவெந்தெ[3]னிஸி மூவ

த்தாருஸாவிர ஸ்த்ரீ புருஷநாடி³யொளு தத்³ரூப
இந்த தேகத்தில் வலது பக்கத்தில் 36,000 நாடிகளும், இடது பக்கத்தில் 36,000 நாடிகளும் உள்ளன. இடது பக்க நாடிகளுக்கு ஸ்த்ரி நாடிகள் என்றும், வலது பக்கத்து நாடிகளுக்கு புருஷ நாடிகள் என்றும் பெயர்.

நார அயணனு புருஷரூபதி³
நார அயணியு ஸ்த்ரீய ரூபதி³
பே³ரெயல்லவு தானெ ஈ வித³ எரடு³ ரூபத³லி
தோருதிப்பனு ஸ்த்ரீய ரூபவெ
சாருதர ஸிரி வத்ஸ நாமதி³
ஸேரியிப்பெள புருஷரூபதி³ வக்ஷோ மந்தி³ரதி³ ||16

நார அயணனு புருஷரூபதி - நாராயணன் புருஷ ரூபத்தினாலும்; நார அயணியு ஸ்த்ரீய ரூபதி - நாராயணி என்று ஸ்த்ரீ ரூபத்திலும்; பேரெயல்லவு தானெ - இந்த இரண்டும் வெவ்வேறு அல்ல; தானெ ஈ வித எரடு ரூபதலி - தானே இவ்விதமாக இரு ரூபங்களில்; தோருதிப்பனு - காட்டிக் கொள்கிறான்; ஸ்த்ரீய ரூபவெ - அந்த ஸ்த்ரீ ரூபமே; சாருதர ஸிரி வத்ஸ நாமதி - அழகான, ஸ்ரீவத்ஸ என்னும் பெயரில்; ஸேரியிப்பெள புருஷரூபதி - புருஷ ரூபத்தில் சேர்ந்திருக்கிறாள்; வக்ஷோ மந்திரதி - ஸ்ரீஹரியின் வக்ஷஸ்தளத்தில் சேர்ந்திருக்கிறாள்.

புருஷ, ஸ்த்ரீ ரூபங்களின் சிறப்புகள் இந்த பத்யத்திலும் தொடர்கின்றன.

நாராயணன் புருஷ ரூபத்தினாலும், நாராயணி என்று ஸ்த்ரீ ரூபத்திலும் தானே இருக்கிறான். இந்த இரண்டும் வெவ்வேறு அல்ல, தானே இவ்விதமாக இரு ரூபங்களில் தன்னை காட்டிக் கொள்கிறான். அந்த ஸ்த்ரீ ரூபமே அழகான ஸ்ரீவத்ஸ என்னும் பெயரில் புருஷ ரூபத்தில் சேர்ந்திருக்கிறாள். ஸ்ரீஹரியின் வக்ஷ ஸ்தளத்தில் சேர்ந்திருக்கிறாள்.

லகுமிதே³விகெ³ பி³ம்ப³வெனிபுது³
ஸகல ஸ்த்ரீயர க³ணத³லிப்புது³
வ்யகுதவாகி³து³ தா³தி³³காலதி³ முகுதி ஸேரித³ரு
விகலவாக³து³ யெந்தி³கா³த³ரு

நிகி²ளஜக³த³லி வ்யாபிஸிப்புது³
லகுமிரமணிய லக்ஷ்யவில்லதெ³ ஸ்ருஜிப தானொல்ல ||17

வ்யகுதவாகி - இந்த விஷயம் தெரிந்தே; ஆதிகாலதி - அனைத்து காலங்களிலும்; மக்கள்; முகுதி ஸேரிதரு - முக்தியை சென்று அடைந்தனர்; விகலவாகது எந்திகாதரு - இந்த விஷயம் என்றைக்கும் நிற்காது (தடைபடாது); நிகிள ஜகதலி வ்யாபிஸிப்புது - அனைத்து உலகங்களிலும் நிறைந்திருக்கிறது; லகுமிரமணிய - ஸ்ரீலட்சுமிதேவியின்; லக்ஷ்யவில்லதெ - அருள் / வேண்டுகோள் / சிபாரிசு இல்லாமல்; ஸ்ருஜிப - ஸ்ரீஹரியானவர்; தானொல்ல - தான் அருள்வதில்லை.

ஸ்ரீலட்சுமியின் சிறப்புகள் இங்கு வர்ணிக்கப்பட்டுள்ளது.

இந்த விஷயத்தை அறிந்தே, அனைத்து காலங்களிலும் முக்தியை சென்று அடைந்தனர். இந்த விஷயம் என்றைக்கும் நிற்காது (தடைபடாது). அனைத்து உலகங்களிலும் இது நிறைந்திருக்கிறது. ஸ்ரீலட்சுமிதேவியின் அருள் / வேண்டுகோள் / சிபாரிசு இல்லாமல், ஸ்ரீஹரியானவர் தான் அருள்வதில்லை.

புருஷ ஜீவர ஹ்ருதயத³லி தா
புருஷ ரூபதி³ பி³ம்ப³வெனிஸுவ
இருவ ஸர்வத³ ப்ரளயத³லி ஸஹ பி³ட³னு த்ரிவித⁴ரனு
கரெஸுதிப்பனு ஜீவ நாமதி³
பெரெது கர்மவமாடி³ மாடி³ஸி
நிருதஜீவர கர்மராஶிகெ³ கு³ரிய மாடு³வனு ||18

புருஷ ஜீவர ஹ்ருதயதலி - புருஷ ஜீவர்களின் இதய கமலத்தில்; தா - ஸ்ரீஹரியானவர்; புருஷ ரூபதி - புருஷ ரூபத்தில்; பிம்பவெனிஸுவ - பிம்பமூர்த்தி எனப்படுகிறான்; இருவ ஸர்வத - எப்போதுமே இவ்வாறு இருக்கிறான்; த்ரிவிதரனு - ஸாத்விக, ராஜஸ, தாமஸர்களை; ப்ரளயதலி ஸஹ பிடனு - பிரளய காலத்தில் கூட அவன் விடுவதில்லை; ஜீவ நாமதி - தன்னை ஜீவ என்று; கரெஸுதிப்பனு - அழைத்துக் கொண்டு; பெரெது - தொடர்ந்து / எப்போதும்; கர்மவமாடி மாடிஸி - அவர்கள் மூலமாக கர்மங்களை செய்து, செய்வித்து;

நிருதஜீவர - அந்தந்த ஜீவர்களின்; கர்மராஶிகெ - கர்ம ராசிகளுக்கு ஏற்ப; குரிய மாடுவனு - ஒரு தக்க பலன்களைக் கொடுக்கிறான்.

அனைவருக்கும் ஸ்ரீஹரி அருளும் விதத்தினை இங்கு மிக அழகாக சொல்கிறார் ஸ்ரீகுருஜகன்னாத தாஸர்.

புருஷ ஜீவர்களின் இதய கமலத்தில் ஸ்ரீஹரியானவர், புருஷ ரூபத்தில் பிம்பமூர்த்தி எனப்படுகிறான். அவன் எப்போதுமே இவ்வாறு இருக்கிறான். ஸாத்விக, ராஜஸ, தாமஸர்களை பிரளய காலத்தில் கூட அவன் விடுவதில்லை. தன்னை ஜீவ என்று அழைத்துக் கொண்டு, எப்போதும் அந்தந்த ஜீவர்களின் கர்ம ராசிகளுக்கு ஏற்ப, தக்க பலன்களைக் கொடுக்கிறான்.

இதையே ஸ்ரீஜகன்னாததாஸர், ஹரிகதாம்ருதஸாரத்தில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

மனதொ[3]ளகெ[3] தானித்து[3] மனவெ
ந்தெ[3]னிஸிகொம்ப[3]னு மனத[3] வ்ருத்திக[3]
ளனுஸரிஸி போ[4]க[3]க[3]ளனீவனு த்ரிவித[4] சேத[1]னக்கெ |

மூல நாராயணனு தா ப[3]லு
லீலெமாடு[3]வ நெவதி[3] தானெ வி
ஶால கு[3]ணக[3]ண ஸாம்ஶ ஞானானந்த[3] ஶுபகாய
பா[3]லரூபவ த[4]ரிஸி வடதெ[3]லெ
ஆலயதி[3] ஶிர் பூ[4]மி து[3]ர்கே[3]ர
லோலனாதா[3] பது[4]மனாப[4]னெ வ்யகுத தானாத[3] ||19

மூல நாராயணனு தா - ஸ்ரீஹரியானவன்; பலு லீலெமாடுவ நெவதி - தன் லீலைகளை செய்வதில் ஒரு பகுதியாக; தானெ விஶால குணகண ஸாம்ஶ ஞானானந்த ஶுபகாய - தானே விசாலமான, குணங்களைக் கொண்ட, தன் அம்சத்துடனான, ஞானானந்த மயமான, நல்ல சுபகரமான தேகத்தைக் கொண்ட; பாலரூபவ தரிஸி - ஒரு குழந்தை ரூபத்தை தரித்து; வடதெலெ ஆலயதி - வடபத்ர (ஆல) இலையில்; ஶிர் பூமி துர்கேர - ஸ்ரீ பூ துர்கா அவர்களுடன்; லோலனாதா - அவர்களின் தலைவனான; பதுமனாபனெ - பத்பனாப என்னும் ரூபத்தில்; வ்யகுத தானாதா - தான் வெளிப்பட்டான்.

ஸ்ரீஹரியின் பத்மனாப ரூபம் வெளிப்பட்ட விதத்தினை இங்கு சொல்கிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீஹரியானவன், தன் லீலைகளை செய்வதில் ஒரு பகுதியாக தானே விசாலமான, குணங்களைக் கொண்ட, தன் அம்சத்துடனான, ஞானானந்த மயமான, நல்ல சுபகரமான தேகத்தைக் கொண்ட ஒரு குழந்தை ரூபத்தை தரித்து, ஆல இலையில் ஸ்ரீபூ துர்கா அவர்களுடன், அவர்களின் தலைவனான பத்பனாப என்னும் ரூபத்தில் தான் வெளிப்பட்டான்.

இந்த லீலையை ஸ்ரீவாதிராஜர் தனது வைகுண்ட வர்ணனை - ஸ்ருஷ்டி ஸந்தியில் இவ்வாறும்:

பிரளயகாலதி[3] எல்ல ஜக[3]வ லயவ மாடி[3]
லலனெ லக்ஷ்மியொட[3]னெ வடத[3]
எலெயல்லி மலகி[3] ஸுக[2]த[3]லிப்பனெந்தெந்து[3]
அளிவில்ல ப்ரக்ருதி புருஷரிகெ[3] ||1

மற்றும் ஸ்ரீஜகன்னாத தாஸர், ஹரிகதாம்ருதஸாரத்தில் இவ்வாறும் கூறியுள்ளனர்.

ஸ்வர்ணவர்ண ஸ்வதந்த்ர ஸர்வக[3]
கர்ணஹீன ஸுஷய்ய ஷாஷ்வத
வர்ண சதுராஸ்ரம விவர்ஜித சாருதர ஸ்வரத |
அர்ணஸம்ப்ரதிபாத்[3]ய வாயு ஸு
பர்ண வரவஹனப்ரதிம வட
பர்ணஷயனாஸ் சர்ய த[1]ம ஸச்சரித கு[3]ணப[4]ரித ||4

நானாவித[4]த[3]வதாரக[3]ளிகெ[3] நி
தா[3]ன பீ[3]ஜவு யெனிஸுதிப்புது[3]
மீன கூர்ம வராஹ மொத[3]லு ஸ்வாம்ஶகளெரூப
தானெ ஸகலகெ மூல காரண
தானெ தன்னய ரூப ஸமுத[3]ய
தானெ தன்னலியிடு[3]வ ப்ரளயத[3]னேக எனிஸுவனு ||20

நானாவிதத - பற்பல விதங்களான; அவதாரகளிகெ - அவதாரங்களுக்கு; நிதான பீஜவு - (நாராயண ரூபமே) மூல

விதையாகும்; மீன கூர்ம வராஹ மொதலு - மீன கூர்ம வராகன் ஆகிய ரூபங்கள்; ஸ்வாம்ஶ களெரூப - முழுமையான அம்சங்களைக் கொண்ட ரூபங்களாகும்; தானெ ஸகலகெ மூல காரண - ஸ்ரீஹரியே அனைத்திற்கும் மூல காரணன் ஆகிறான்; தானெ தன்னய ரூப ஸமுதய - அவனே அவனது அவதாரங்களாகவும் இருக்கிறான் (அவற்றில் பேதங்கள் இல்லை); தானெ தன்னலியிடுவ ப்ரளயத அனேக - இத்தகைய பிரளய காலங்களில், தானே, தன்னுடைய அனேக ரூபங்களை, தனக்குள் வைக்கிறான்; எனிஸுவனு - எனப்படுகிறான்.

ஸ்ரீஹரியின் ரூபங்களின் சிறப்புகளை இங்கு விவரிக்கிறார் ஸ்ரீதாஸர்.

பற்பல விதங்களான அவதாரங்களுக்கு நாராயண ரூபமே மூல விதையாகும். மீன கூர்ம வராகன் ஆகிய ரூபங்கள் முழுமையான அம்சங்களைக் கொண்ட ரூபங்கள் ஆகும். ஸ்ரீஹரியே அனைத்திற்கும் மூல காரணன் ஆகிறான். அவனே அவனது அவதாரங்களாக இருக்கிறான் (அவற்றில் பேதங்கள் இல்லை). இத்தகைய பிரளய காலங்களில் தானே தன்னுடைய அனேக ரூபங்களை தனக்குள் வைக்கிறான்.

ராம ரூப அனந்தயிப்பது[3]
வாமனாதி[3]யனந்த க்ருஷ்ணரு
ஸீமவில்லதெ[3] ரூபஸந்ததி பே[3]ரெ தோருவுது[3]
ஹேம நிர்மித மூர்த்திகொ[3]ப்புவ
சாமிகரமய சாருபூ[4]ஷண
ஸ்தோம நோடு[3]வ ஜனர ஸங்க[4]கெ பே[3]ரெ தோர்பந்தெ ||21

ராம ரூப அனந்தயிப்பது - ராம ரூபங்கள் அனந்தமாக இருக்கின்றன (சீதாராமன், கோசலராமன்); வாமனாதி - வாமனனில் துவங்கி; அனந்த க்ருஷ்ணரு - அனந்த கிருஷ்ண ரூபங்களும் இருக்கின்றன (வாஸிஷ்ட கிருஷ்ண, யாதவ கிருஷ்ண); ஸீமவில்லதெ - எவ்வித எல்லைகளும் இல்லாமல்; ரூப ஸந்ததி பேரெ தோருவுது - இந்த ரூபங்களின் வரிசை, வெவ்வேறாக தெரிகின்றன; ஹேம நிர்மித மூர்த்திகொப்புவ - தங்கத்தாலேயே செய்ததைப் போன்ற ரூபங்களைப் போல இவை இருக்கின்றன; சாமிகரமய - தங்கமயமாகவே இருக்கின்றன; சாருபூஷண - அழகான உருவம்; ஸ்தோம நோடுவ - (இத்தகைய)

எண்ணிக்கையை பார்க்கும்; ஜனர ஸங்ககெ - மக்களுக்கு; பேரெ தோர்பந்தெ - வெவ்வேறாக காட்டிக் கொள்கிறான்.

ஸ்ரீஹரியின் ரூபங்களின் சிறப்புகளை இங்கு மேலும் விவரிக்கிறார் ஸ்ரீதாஸர்.

சீதாராமன், கோசலராமன் என்று ராம ரூபங்கள் அனந்தமாக இருக்கின்றன. வாமனனில் துவங்கி, அனந்த கிருஷ்ண ரூபங்களும் (வாஸிஷ்ட கிருஷ்ண, யாதவ கிருஷ்ண) இருக்கின்றன. எவ்வித எல்லைகளும் இல்லாமல், இந்த ரூபங்களின் வரிசை வெவ்வேறாக தெரிகின்றன. தங்கத்தாலேயே செய்ததைப் போன்ற ரூபங்களைப் போல இவை இருக்கின்றன. தங்கமயமாக இருக்கின்றன. அழகான உருவம் கொண்டவனாக இருக்கிறான். இத்தகைய எண்ணிக்கையை பார்க்கும் மக்களுக்கு அவன் தன்னை வெவ்வேறாக காட்டிக் கொள்கிறான்.

ಅಂಙಿಯಲಿ ಸಂಸ್ಲೇಙ ಐಕ್ಯವು
ಅಂಙ ಸಮುಹವು ಎಯ್ದುತೋರ್ಪುದು[3]
ಸಂಙಯೇನಿತರಲ್ಲಿ ತೆನೆಯೊಳು ಕಾಳ್ಕ[3]**ಳಿತ್ತ**[3]**ನ್ತೆ**
ಪ್ರಂಙರಾಕ[3]**ತೆ**[3] **ಸೌಮತಕ**[3]**ಳನು ಪ್ರ**
ಸಂಙಮಾಳ್ಪ ಸೌಙಾಸ್ತ್ರತ[3]**ಲಿ ನಿ**
ಸ್ಸಂಙಯಾತ್ಮಕರಾಕಿ[3] **ಮನತ್**[3]**ರುಡ**[4] **ಮಾಡಿ**[3] **ನೋಡು**[3]**ವುದು**[3] **||22**

ಅಂಙಿಯಲಿ ಸಂಸ್ಲೇಙ ಐಕ್ಯವು - ಅಂಸಿಯಿಲ್, ಸಂಸ್ಲೇಙ ಐಕ್ಯವು - ಐಕ್ಯಮಾಕ ಸೇರ್ನ್ತೆ ಇರುಕ್ಕಿನ್ರದು; ಸಂಙಯೇನಿತರಲ್ಲಿ - ಇತಿಲ್ ಸನ್ದೇಕಂ ಎನ್ನ ಇರುಕ್ಕಿರದು?; ತೆನೆಯೊಳು - ಸೋಳತ್ತಿರ್ಕುಳ್; ಕಾಳ್ಕಳಿನ್ದನ್ತೆ - ಅದರ್ಕಾನ ವಿದೆಯುಂ ಇರುಪ್ಪದೈಪ್ ಪೋಲ; ಅಂಙ ಸಮುಹವು - ಅಂಙ ರೂಪಙ್ಕಳಾನವೈ; ಎಯ್ದುತೋರ್ಪುದು - ಸೇರ್ನ್ತೆ ಇರುಕ್ಕಿನ್ರನ; ಪ್ರಂಙರಾಕತೆ - ಮನ ಮಯಕ್ಕಂ ಕೊಳ್ಳಾಮಲ್ (ತವರಾಕ ನಿನೈಕ್ಕಾಮಲ್); ಸೌಮತಕಳನು - ನಲ್ ಮತಙ್ಕಳೈ; ಪ್ರಸಂಙ ಮಾಳ್ಪ - ಪುಕೞ್ವತಾನ; ಸೌಙಾಸ್ತ್ರತಲಿ - ಸಾಸ್ತಿರ ಕಿರನ್ತಙ್ಕಳಿಲ್ / ತತ್ವ ಕಿರನ್ತಙ್ಕಳಿಲ್; ನಿಸ್ಸಂಙಯಾತ್ಮಕರಾಕಿ - ತೆಳಿವಾನ ಮನತುಡನ್ (ಸನ್ದೇಕಂ ಅಱ್ರವಾಱು); ಮನತ್ರುಡ ಮಾಡಿ - ತಿಡಮಾನ ಮನತುಡನ್; ನೋಡುವುದು - ಪಾರ್ಕ್ಕ ವೇಣ್ಡುಂ.

ஸ்ரீஹரியின் ரூப விசேஷங்களை நாம் எவ்வாறு பார்க்க வேண்டும் என்று இங்கு விளக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

அம்ஸியில் ஐக்யமாக சேர்ந்தே இருக்கிறான். இதில் சந்தேகம் என்ன இருக்கிறது?. சோளத்திற்குள் அதற்கான விதையும் இருப்பதைப் போல, அம்ஸ ரூபங்கள், சேர்ந்தே இருக்கின்றன. இதில் எதையும் தவறாக நினைக்காமல், நல் மதங்களை புகழ்வதான, சாஸ்திர கிரந்தங்களில் / தத்வ கிரந்தங்களில் தெளிவான மனதுடன் (எவ்வித சந்தேகமும் இன்றி), திடமான மனதுடன் பார்க்க வேண்டும்.

பி³ம்ப³ஹரி ப்ரதிபி³ம்ப³ ஜீவரு
பி³ம்ப³னே தா மூல காரண
இம்பு³யெனிப ஸ்வரூப தே³ஹோபாதி³யெனிஸுவது³
எம்ப³ வாக்யத³ பா⁴வ திளியதெ³
ஷும்ப⁴ராத³ரு த்³விஜரு கெலவரு
கு³ம்ப⁴வாகி³த³ர்த்த²யிருவது³ பரமகோ³பிதவு ||23

பிம்பஹரி - ஸ்ரீஹரியே பிம்பன்; ப்ரதிபிம்ப ஜீவரு - ஜீவர்கள் பிரதிபிம்பர்கள்; பிம்பனே தா மூல காரண - பிம்பனே அனைத்திற்கும் மூல காரணன் (செய்து, செய்விக்கிறான்); இம்புயெனிப ஸ்வரூப - (அவன்) நிலைத்திருப்பதான ஸ்வரூப தேகம்; உபாதியெனிஸுவது - கண்ணாடி எனப்படுகிறது; எம்ப வாக்யத பாவ திளியதெ - என்னும் வாக்கியத்தின் சரியான அர்த்தத்தை புரிந்து கொள்ளாமல்; த்விஜரு கெலரு - சில அறிஞர்கள்; ஷும்பராதரு - இதனை மறுக்கிறார்கள்; இதரர்த்த - இந்த வாக்கியத்தின் (தத்வத்தின்) அர்த்தமானது; கும்பவாகி - மிகவும் ஆழமாகவும்; பரமகோபிதவு - மிகவும் ரகசியமாகவும்; இருவுது - இருக்கிறது.

பிம்ப பிரதிபிம்ப தத்வத்தை நாம் எவ்வாறு புரிந்து கொள்ளவேண்டும் என்பதை இங்கு சொல்கிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீஹரியே பிம்பன், ஜீவர்கள் பிரதிபிம்பர்கள். பிம்பனே அனைத்திற்கும் மூல காரணன் (செய்து செய்விக்கிறான்). அவன் நிலைத்திருப்பதான ஸ்வரூப தேகம், கண்ணாடி எனப்படுகிறது. இதனை சரியாக புரிந்து கொள்ளாமல், சில அறிஞர்கள் இதனை

மறுக்கிறார்கள். இந்த தத்வத்தின் அர்த்தமானது, மிகவும் ஆழமாகவும், மிகவும் ரகசியமாகவும் இருக்கிறது.

இதையே ஸ்ரீஜகன்னாததாஸர், ஹரிகதாம்ருதஸாரத்தில் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

நலினமித்ரகெ³ இந்த்³ரத⁴னு ப்ரதி
ப²லிஸுவந்தெ ஜக³த்ரயவு க
ங்கொ³ளிபுத³னு பாதி⁴யலி ப்ரதிபி³ம்பா³ஹ்வயதி³ ஹரிகெ³ ।

ஸத்யவாகி³ஹ ஆத்ம ரூபவெ
நித்யவாத³ உபாதி³யெனிபுது³
வ்யத்யவுயேனில்ல நோட³லு கொ³த்து திளியதெ³லெ
வ்யத்யயார்த்த²வ மாடி³ கெடி³ஸதெ³
ஸத்யவாது³து³ திளியாலா ஹரி
ப்⁴ருத்யராக்⁴ரணியாகி³ பரஸுக²வெய்தி³ மோதி³பனு ||24

ஸத்யவாகிஹ ஆத்ம ரூபவெ - ஸத்யமான ஆத்மனே; நித்யவாத உபாதி எனிபுது - நித்யமான உபாதி எனப்படுகிறது; வ்யத்யவுயேனில்ல நோடலு - இது எதிர்மறையாக பார்க்க / புரிந்து கொள்ளக்கூடாது; கொத்து திளியதெலெ - இதை சரியாக புரிந்து கொள்ளாமல்; வ்யர்யயார்த்தவ மாடி கெடிஸதெ - தவறான அர்த்தத்தை சொல்லி தத்வத்தை கெடுக்காமல்; ஸத்யவாதுது திளியாலா - உண்மையை (யதார்த்த ஞானத்தை) பெற்று; ஹரி ப்ருத்யராக்ரணியாகி - ஹரியின் சேவகர்களில் முதன்மையானவன் (சிறந்தவன்) ஆகி; பரஸுகவெய்தி போதிபனு - முக்தியை அடைந்து மகிழ்கிறான். (நாமும் அவ்வாறு செய்ய வேண்டும்).

பிம்ப பிரதிபிம்ப தத்வத்தை நாம் எவ்வாறு புரிந்து கொள்ளவேண்டும் என்பதை இங்கு மேலும் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

ஸத்யமான ஆத்மனே, நித்யமான உபாதி எனப்படுகிறது. இதனை எதிர்மறையாக பார்க்க / புரிந்து கொள்ளக்கூடாது. இதனை தவறான அர்த்தத்தை சொல்லி தத்வத்தை கெடுக்காமல், உண்மையான யதார்த்த ஞானத்தைப் பெற்று, ஹரியின் சேவர்களில்

முதன்மையானவன் ஆகி, முக்தியை அடைந்து மகிழ்கிறான். (நாமும் அவ்வாறே செய்ய வேண்டும்).

இதையே ஸ்ரீஜகன்னாததாஸர், ஹரிகதாம்ருதஸாரத்தில் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

மனவசனகதிதூ[3]ர நெனெவர
நனுஸரிஸி தி[1]ருகு[3]வனு ஜான்ஹவி
ஜனக[1] ஜனரொளகி[3]த்து[3] ஜனிஸுவ ஜக[3]து[3]த[3]ர தா[1]னு |

இதன் பொருள் என்னவெனில்: பரமாத்மன், பிம்பரூபியான காரணத்தால், உபாதியான ஜீவனின் ஸ்வரூபத்தை விடாமல் எப்போதும் அவனுடனேயே இருக்கிறார். இதனால், பிரதிபிம்பனான ஜீவன், நித்யன் ஆனான். அப்படியில்லையெனில், பிம்பனின் சன்னிதானம் இல்லையெனில், பிரதிபிம்பனுக்கு அநித்யத்வம் வருகிறது.

அந்தராத்மனு ஸகலஜீவர
அந்தரங்க[3] ஸ்வரூப தே[3]ஹதி[3]
நிந்து தா ஸர்வாங்க[3] வ்யாபகனாகி[3]யிருதிப்ப
ஸந்தததி[3] தா அனந்தரூபன
அனந்த ஜீவஸ்வரூப ப[3]ஹிரதி[3]
நிந்து ஸத்விக்ஞான ரூபதி[3] ஆத்மயெனிஸிப்ப ||25

அந்தராத்மனு - நமக்குள் இருப்பவனான ஸ்ரீஹரி; ஸகலஜீவர அந்தரங்க ஸ்வரூப தேஹதி - ஜீவர்களின் ஸ்வரூப தேகத்தில்; நிந்து தா - தான் நின்றவாறு; ஸர்வாங்க வ்யாபகனாகியிருதிப்ப - அனைத்து அங்கங்களையும் செயல்படுத்துபவனாக இருக்கிறான்; ஸந்தததி தா அனந்தரூபன - எப்போதும் தான் அனந்தரூபனாகவே இருக்கிறான்; அனந்த ஜீவஸ்வரூப - அந்த அனந்தமான ஜீவஸ்வரூபத்தின்; பஹிரதி நிந்து - அருகிலேயே நின்று; ஸத்விக்ஞான ரூபதி - விக்ஞானமய என்னும் ரூபத்தில்; ஆத்மயெனிஸிப்ப - தன்னை ஆத்மா என்று அழைத்துக் கொள்கிறான்.

ஸ்ரீஹரியின் ஆனந்தமய, விக்ஞானமய ரூபத்தினை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

நமக்குள் இருப்பவனான ஸ்ரீஹரி, ஜீவர்களின் ஸ்வரூப தேகத்தில் தான் நின்றவாறு, அனைத்து அங்கங்களையும் செயல்படுத்துபவனாக இருக்கிறான். எப்போதும் தான் அனந்தரூபனாகவே இருக்கிறான். அந்த அனந்தமயமான ஜீவஸ்வரூபத்தின் அருகிலேயே நின்று, விக்ஞானமய என்னும் ரூபத்தில் தன்னை ஆத்மா என்று அழைத்துக் கொள்கிறான்.

ஈதனந்தானந்த ரூபதி[3]
ப்ரீதிபூர்வக தா[3]ஸஜனரிகெ[3]
நீதப[2]லக[3]ள ஸர்வவ்யாபக தானெ கொடு[3]திஹனு
ஜாத ஸூர்யானந்தனிப[4] நிஜ
ஜ்யோதிமய ஸத்தேஜோ மூருதி
தா[3]த கு[3]ருஜக[3]ன்னாத[2] விட்டலனு தானெ பரிபூர்ண ||26

ஈத - ஸ்ரீஹரியானவர்; அனந்தானந்த ரூபதி - அனந்தமான ரூபங்களால்; தாஸஜனரிகெ - தன்னுடைய தாஸ ஜனர்களுக்கு; ப்ரீதிபூர்வக - அன்புடன்; நீதபலகள - தக்க பலன்களை; ஸர்வவ்யாபக - அனைத்தையும் நடத்துபவன்; தானெ கொடுதிஹனு - தானே கொடுக்கிறான்; ஜாத ஸூர்யானந்தனிப - அனந்தமான உதயசூரியனைப் போன்றவனான; நிஜ ஜ்யோதிமய - உண்மையான ஜ்யோதிர்மய; ஸத்தேஜோ மூருதி - தேஜோமய மூருதியான; தாத குருஜகன்னாத விட்டலனு - தந்தையான குருஜகன்னாத விட்டலன்; தானெ பரிபூர்ண - அவன் மட்டுமே பரிபூர்ணன் ஆகிறான்.

ஸ்ரீஹரியின் மகிமைகளை மேலும் விளக்கியவாறு இந்த சந்தியை முடிக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஸ்ரீஹரியானவர், தன்னுடைய அனந்தமான ரூபங்களால், தன்னுடைய தாஸ ஜனர்களுக்கு அன்புடன் தக்க பலன்களைக் கொடுத்து, அனைத்தையும் நடத்துகிறான். அனந்தமான உதயசூரியனைப் போன்றவனான, உண்மையான ஜ்யோதிர்மய, தேஜோமய மூருதியான, தந்தையான குருஜகன்னாத விட்டலன், அவன் மட்டுமே பரிபூர்ணன் ஆகிறான்.

ஸ்ரீவ்யாஸராஜர் ஸ்ரீஸ்ரீபாதராஜரிடம் சாஸ்திரங்களை கற்றது; தான் தன் சிஷ்யர்களுக்கு பாடம் எடுத்தது; மற்றும் அவர் என்ன எடுத்தார்

அதாவது ஶ்ரீஹரி ஸர்வோத்தமத்வத்தை எப்படி விளக்கினார் என்னும் விஷயத்தின் சாரத்தினை இந்த 4ம் சந்தியில் பார்த்தோம்.

****

ஶ்ரீகுரு ஜகன்னாத தாஸரின்
கன்னட ஶ்ரீராகவேந்திர விஜயம்

சந்தி - 5

சந்தி 5ன் விஷய சுருக்கம்

ஶ்ரீவ்யாஸராயரின் மகிமைகள் இந்த சந்தியிலும் தொடர்ந்து விளக்கப்பட்டுள்ளன. அவர் வ்யாஸத்ரய கிரந்தங்களை இயற்றுதல், அவற்றின் சிறப்புகள், பத ஸுளாதிகளை இயற்றுதல், அவருக்கு ஶ்ரீகிருஷ்ணனே வந்து அங்கிதம் அளித்தல்; கனகதாஸரின் அறிமுகம்; ஶ்ரீவ்யாஸராயரின் உபதேசம்; கோணவின் செயல்கள்; திருப்பதியில் 12 ஆண்டுகள் பூஜை; கிருஷ்ணதேவராயரின் சபையை அலங்கரித்தல்; யந்த்ரோத்தாரக ஹனுமந்தனை நிறுவுதல் ஆகியவற்றை இங்கு பார்க்கலாம்.

ராக⁴வேந்தி³ரர விஜய பேளுவெ
ராக⁴வேந்தி³ரர கருண ப³லத³லி
ராக⁴வேந்திரர ப⁴குதராத³வரித³னு கேளுவுது³ ||

பே³த⁴ பஞ்சக தாரதம்யவ
நாதி³காலதி³ ஸித்³த⁴வென்னுவ
மோத³ தீர்த்த²ர ஶாஸ்த்ர மர்மவபேள்த³ பு³த⁴ஜனகெ
பே³த⁴ ஜீவனியெம்ப க்³ரந்த²வ
ஸாத³ரதி³ தா ரசிஸி லோகதி³
வாத³த³லி ப்ரதிவாதி³ ஸங்க⁴வ ஜெயிஸி ராஜிஸித³ ||1

பஞ்சக பேத - பஞ்சபேத; தாரதம்யவ - தாரதம்ய என்னும் தத்வங்கள்; அனாதிகாலதி ஸித்த - அனாதி காலத்திலிருந்து இருக்கின்றன; என்னுவ - என்று; மோத தீர்த்தர - ஶ்ரீமதானந்த தீர்த்தரின்; ஶாஸ்த்ர மர்மவ - சாஸ்திர ரகசியத்தை; பேள்த - நிர்ணயம் செய்த; புதஜனகெ - அறிஞர் மக்களுக்கு; பேதஜீவனியெம்ப - பேதோஜ்ஜீவன என்னும்;

க்ரந்தவ ஸாதரதி தா ரசிஸி - கிரந்தத்தினை பக்தி மரியாதையுடன் தான் இயற்றி; லோகதி - உலகில்; வாததலி - வாதத்தில்; ப்ரதிவாதி ஸங்கவ - ப்ரதிவாதிகளை; ஜெயிஸி ராஜிஸித - வென்று, திகழ்ந்தார்.

ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமையை சொல்வதுடன் இந்த சந்தியை துவக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

பஞ்சபேத, தாரதம்ய என்னும் தத்வங்கள் அனாதி காலத்திலிருந்து இருக்கின்றன என்று, ஸ்ரீமதானந்த தீர்த்தரின் சாஸ்திர ரகசியத்தை நிர்ணயம் செய்த அறிஞர் மக்களுக்கு, பேதோஜ்ஜீவன என்னும் கிரந்தத்தினை, பக்தி மரியாதைகளுடன் தான் இயற்றி உலகில் வாதத்தில் பிரதிவாதிகளை வென்று திகழ்ந்தார்.

* ஸ்ரீவ்யாஸராஜ அஷ்டோத்தர ஷத நாமாவளியில்: 80ம் பெயர் : ஓம் பேதோஜ்ஜீவனாக்ய ஸ்வதந்த்ர க்ரந்த கர்த்ரே நம:

* ஸ்ரீவ்யாஸராஜர் இயற்றிய மத்வ ப்ரமேய ஸ்லோகம் இவ்வாறு:
ஸ்ரீமன் மத்வ மதே ஹரி: பரதர: ஸத்யம் ஜகத் தத்வதோ
பேதோ: ஜீவகணா: ஹரே: அனுசரா: நீசோச்ச பாவம் கத:
முக்திர்னைஜ ஸுகானுபூதிரமலா பக்திஸ்ச தத்ஸாதனம்
ஹ்யக்ஷாதி த்ரிதயம் ப்ரமாணமகிலம் நாயைக வேத்யோ ஹரி:

தர்க்க தாண்ட³வ ரசனெமாடி³ வி
தர்க்கவாதி³ய முரிது³ பரக³தி³
கர்கஶாகி³ஹ ந்யாயவெனிபாம்ருதவ நிர்மிஸித³
ஶர்க்கராக்ஷகெ க³ஹன சந்த்ரிகெ³
யர்க்கனந்த³தி³ திமிரஹர தே³
வர்க்கரல்லதெ³ க்ருதிகெ³ யோக³யரு நரரு ஆகு³வரெ ||2

தர்க தாண்டவ ரசனெமாடி - தர்க்க தாண்டவ என்னும் கிரந்தத்தினை இயற்றி; விதர்க்கவாதிய - குதர்க்கமாக வாதாடுபவர்களை; முரிது - வென்று; பரகதி - முக்திக்கு உதவுவதான; கர்கஶாகிஹ ந்யாயவெனிபாம்ருதவ - மிகவும் வலிமையான வாதங்களால் ஆன, ந்யாயாம்ருதத்தினை; நிர்மிஸித - இயற்றினார்; ஶர்க்கராக்ஷகெ கஹன - இது மிகவும் சூக்ஷ்ம த்ருஷ்டி உள்ளவர்களுக்கே (தேவதைகளுக்கு) மிகவும் கடினமானதாகும்; சந்திரிகா என்னும்

கிரந்தத்தினை; அர்க்கனந்ததி திமிரஹர - சூரியனைப் போல இருட்டினை விலக்குவதான (இந்த கிரந்தமானது); சந்த்ரிகெ - தேவர்க்கரல்லதெ - தேவர்களுக்கே உரித்தானது தவிர; நரரு - சாதாரண மக்கள்; யோக்யரு ஆகுவரெ - இதற்கு தகுதியானவர்கள் ஆவார்களா? (படித்தால் அவர்களுக்கு புரியுமா?);

வ்யாஸத்ரய கிரந்தங்களான தர்க்க தாண்டவ, நியாயாம்ருத, தாத்பர்ய சந்திரிகா ஆகியவற்றை இயற்றிய விதத்தினை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

தர்க்க தாண்டவ என்னும் கிரந்தத்தினை இயற்றி, குதர்க்கமாக வாதாடுபவர்களை வென்று, முக்திக்கு உதவுவதான, மிகவும் வலிமையான வாதங்களால் ஆன, ந்யாயாம்ருதத்தினை இயற்றினார். இது மிகவும் சூக்ஷ்ம த்ருஷ்டி உள்ளவர்களுக்கே (தேவதைகளுக்கு) மிகவும் கடினமானதாகும். சந்த்ரிகா என்னும் கிரந்தத்தினை, சூரியனைப் போல இருட்டினை விலக்குவதான இந்த கிரந்தத்தமானது, தேவர்களுக்கு மட்டுமே உரித்தானது ஆகும். இது சாதாரண மக்கள் இதற்கு தகுதியானவர்கள் ஆவார்களா? (படித்தால் அவர்களுக்கு புரியுமா?).

இதையே ஸ்ரீவ்யாஸராயர சரணகமல ஸுளாதியில், ஸ்ரீபுரந்தரதாஸர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

ந்யாயாம்ருத தர்க்க தாண்டவ சந்த்ரிகெ
ந்யாய க்ரந்தவ ரசிஸி தன்ன பக்தரிகித்து
மாயாவதி மொதலாகி இப்பத்தொந்து குபாஷ்யர
பாய முச்சிஸிதெ மத்வராய கருணதிந்த
ஸ்ரீயரஸ புரந்தரவிட்டலன தாஸரொளு
நாயகனெந்தெனிஸிதெ குருவ்யாஸ முனிராய

த³ஶமதீ க்ருத ஶாஸ்த்ர பா⁴வவ
விஶத³ மாடு³வ டிப்பணீக³ள
மஸெத³ அஸிதெரமாடி³ பரமத நாஶகெ³ய்யுதலி
அஸம மஹிமெயு தோரி தா ஈ
வஸுதி⁴ மண்ட³ல மத்⁴ய பூர்ணிம
ஶஶிய தெரத³லி பூர்ணகளெயுதனாகி³ ஶோபி⁴ஸித³ ||3

தஶம்தி க்ருத ஶாஸ்த்ர பாவவ - ஸ்ரீமதாசார்யர் இயற்றிய சாஸ்திரங்களின் ரகசியங்களை; விஶத மாடுவ - புரிய வைக்கும்; டிப்பணிகள - டிப்பணிகளை; அஸிதெரமாடி - கத்தியாக (வாள்) ஆக்கி; மஸெத - எறிந்தார்; பரமத நாஶகெய்யுதலி - பரமதங்களை வெல்வதில்; அஸம மஹிமெயு தோரி - அபாரமான திறமை / ஆளுமையை காட்டி; தா ஈ வஸுதி - ஸ்ரீவ்யாஸதீர்த்தர், இந்த உலகில்; மண்டல மத்ய பூர்ணிம ஶஶிய தெரதலி - பௌர்ணமி நிலாவைப் போல; பூர்ணகளெயுதனாகி - பூரண களைகளுடன்; ஶோபிஸித - ஒளிர்ந்தார் / திகழ்ந்தார்.

ஸ்ரீவ்யாஸராயரின் ஆளுமையை அவர் சிறப்பினை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீமதாசார்யர் இயற்றிய சாஸ்திரங்களின் ரகசியங்களை புரிய வைக்கும் டிப்பணிகளை கத்தியாக ஆக்கி எறிந்தார். பரமதங்களை வெல்வதில் அபாரமான திறமை / ஆளுமைகளை காட்டி ஸ்ரீவ்யாஸதீர்த்தர் இந்த உலகில் பௌர்ணமி நிலவைப் போல, பூரண களைகளுடன் ஒளிர்ந்தார் / திகழ்ந்தார்.

ஸ்ரீவாதிராஜர் தனது பஜிஸிரோ பந்து முனிராயன என்னும் கீர்த்தனையில் ஸ்ரீவ்யாஸராஜரின் ஆளுமையை இவ்வாறு புகழ்ந்திருக்கிறார்.

மத்வ முனிய மதவெம்ப துரகவனு
ஹொத்தி துர்வாதிகளெம்ப ந்ருபர கெலிதன
ஸத்தர்மவ ப^{3}லித^{3}ன ஸச்சாஸ்த்ரவ திளிதன

தந்த்ரஸாரதி3 பேள்த3 ஸுமஹா
மந்த்ர ஸங்க^{4}வ ஶிஷ்ய ஜனகே
மந்த்ரமர்மவ திளிஸி ஸித்^{3}தி^{4}யமாடி^{3} தோரிஸுத^{3}
அந்தவில்லத^{3} விஶ்வகோஶத^{3}
தந்த்ரமாடு^{3}வ ஸர்வலோக ஸ்வ
தந்த்ர ஸ்ரீஹரிபாத^{3} பங்கஜ ப^{4}ஜனெ பரனாத^{3} ||4

தந்த்ரஸாரதி பேள்த - தந்த்ரஸார என்னும் ஸர்வ மூல கிரந்தத்தில் கூறியுள்ள: ஸுமஹா மந்த்ர ஸங்கவ - அஷ்ட மஹா மந்திரங்களை;

ஶிஷ்ய ஜனகே - தன் சிஷ்யர்களுக்கு; மந்த்ரமர்மவ திளிஸி - அந்த மந்திரங்களின் ரகசியங்களை கூறி; ஸித்தியமாடி தோரிஸுத - அதனை நிரூபணம் செய்து காட்டினார்; அந்தவில்லத - எல்லை / முடிவே இல்லாத; விஶ்வகோஶத - உலகின் (பிரம்மாண்டத்தின்); தந்த்ரமாடுவ - செயல்களை செய்பவரான (அஷ்ட கர்த்ருத்வ / நியமனம் செய்பவரான) ; ஸர்வலோக ஸ்வதந்த்ர - அனைத்து உலகங்களிலும் ஒரேயொரு ஸ்வதந்த்ரனான; ஸ்ரீஹரிபாத பங்கஜ - ஸ்ரீஹரி பாதங்களை; பஜனெ பரனாத - பூஜிப்பதில் நிலைத்தார்.

அஷ்ட மஹா மந்திரங்களை ஸ்ரீவ்யாஸராஜர் தன் சிஷ்யர்களுக்கு பாடம் எடுத்த விதத்தினை இவ்வாறு விளக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

தந்த்ரஸார என்னும் ஸர்வ மூல கிரந்தத்தில் கூறியுள்ள அஷ்ட மஹா மந்திரங்களை தன் சிஷ்யர்களுக்கு அந்த மந்திரங்களின் ரகசியங்களைக் கூறி, அதனை நிரூபணம் செய்து காட்டினார். எல்லையற்ற உலகின் (பிரம்மாண்டத்தின்) செயல்களை செய்பவரான (அஷ்ட கர்த்ருத்வ / நியமனம் செய்பவரான), அனைத்து உலகங்களிலும் ஒரேயொரு ஸ்வதந்த்ரனான, ஸ்ரீஹரியின் பாதங்களை பூஜிப்பதில் நிலைத்தார்.

ஸ்ரீபிரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸர் தனது பாலிஸோ யதிராஜ பாலிஸோ என்னும் கிருதியில் இதையே இவ்வாறு பாடியுள்ளார்.

ப்ரணவ மந்த்ரதி ஸ்ரீரமண | எண்டு
வர்ண மந்த்ரதி ஸ்ரீரமண | விஷ்ணு
ஷட்வர்ணதல்லி ஸத்யாரமண | ஹாகு
வர்ண ஸர்வதி ரமாரமண | அஹ
த்வனி வர்ண ப்ரதிபாத்ய ஸத்தாதி தா^{3}த
அனுத்தம ஹரி ரூப குண க்ரியா ஹாடிதி ||

பத^{3}ஸுளாதி^{3}க^{3}ளிந்த^{3} ஹரிகு^{3}ண
முத^{3}தி^{3} பேளுத முத்^{3}ரிகில்லதெ^{3}
ஹ்ருதயத^{3}லி தா சிந்தெகெ^{3}ய்தி^{3}ரலாக^{3} முனிராயா
ஒத^{3}கி^{3} பேளித^{3} க்ருஷ்ண ஸ்வப்னதி^{3}
ப^{3}த^{3}லுயாவது^{3} நினகெ^{3}யில்லவோ

யது³வர ஸ்ரீகிருஷ்ண நாமவெ நினகெ³ முத்³ரிகெயோ ||5

பதஸுளாதிகளிந்த - பத, பத்ய, ஸுளாதிகளால்; ஹரிகுண – ஸ்ரீஹரி யின் குணங்களை; முததி பேளுத - அற்புதமாக விளக்கியவாறு; முத்ரிகில்லதெ - அங்கித முத்ரிகை இல்லாமல்; ஹ்ருதயதலி - தன் இதயத்தில்; முனிராயா - ஸ்ரீவ்யாஸதீர்த்தர்; தா சிந்தெகெய்திரலாக - தான் சிந்தித்திருந்தபோது; க்ருஷ்ண - ஸ்ரீகிருஷ்ணன்; ஸ்வப்னதி ஒதகி பேளித - கனவில் வந்து இவ்வாறு கூறினான்; பதலுயாவது - உனக்கு நிகர்; நினகெயில்லவோ - வேறு யாரும் இல்லை; யதுவர ஸ்ரீகிருஷ்ண நாமவெ - யதுவரனான ஸ்ரீகிருஷ்ணனின் பெயரே; நினகெ முத்ரிகெயோ - உனக்கு அங்கித முத்ரையாகும்.

ஸ்ரீவ்யாஸராஜருக்கு அங்கிதம் கிடைத்த விதத்தினை இங்கு விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

பத, பத்ய, ஸுளாதிகளால் ஸ்ரீஹரியின் குணங்களை அற்புதமாக விளக்கியவாறு, அங்கித முத்ரிகை இல்லாமல் தன் இதயத்தில் ஸ்ரீவ்யாஸதீர்த்தர் தான் சிந்தித்திருந்தபோது, ஸ்ரீகிருஷ்ணன் அவரது கனவில் வந்து இவ்வாறு கூறினான். உனக்கு நிகர் வேறு யாரும் இல்லை. யதுவரனான ஸ்ரீகிருஷ்ணனின் பெயரே உனக்கு அங்கித முத்ரையாகும்.

ஸ்ரீவ்யாஸராஜரைக் கொண்டாடுவதான ஒரு பாடலில் ஸ்ரீகுரு கோவிந்த விட்டல தாஸர் இவ்வாறு பாடியுள்ளார்.

வ்யாஸராயர சரணவனெ ஸேவிஸி ||ப

ஆஸு கவிதெய ரசிஸி ப்ராக்ருத ஸுபாஷெயலி
கேசவன குணதியலி லேஸாகி ஈஸுதலி
தாஸரொடனாடுதலி மீஸலாகிரிஸி தானு
கேசவன குண பொகளித

ஒந்து³ தி³னத³லி விப்ரனோர்வனு
ப³ந்து³ வ்யாஸர பாத³கமலகெ
வந்தி³ஸி கைமுகி³து³ பே³டி³த³³ எனகெ³ உபதே³ஶ
இந்து³ மாடி³ரி எனகெ³ பரக³தி
பொந்தோ³ மார்க³³க³வ தோரி ஸலஹிரி

மந்தமதி நானய்ய கு³ருவர கருணாஸாக³ரனெ ||6

ஒந்து தினதலி - ஒரு நாள்; விப்ரனோர்வனு - கற்றறிந்தவர் ஒருவர்; பந்து - வந்து; வ்யாஸர பாதமகலகெ - ஸ்ரீவ்யாஸதீர்த்தரின் பாதங்களில்; வந்திஸி - வணங்கி; கைமுகிது பேடித - கைகுவித்து வணங்கினான். எனகெ இந்து உபதேஶ மாடிரி - எனக்கு இன்று உபதேசம் செய்யுங்கள்; எனகெ பரகதி பொந்தோ மார்க்கவ - முக்திக்கு செல்வதான வழியை; தோரி ஸலஹிரி - காட்டி உதவுங்கள்; மந்தமதி நானய்யா - நான் எதுவும் அறியாதவன்; குருவர - குருவரரே; கருணாஸாகரனே - கருணைக்கடலே.

ஸ்ரீகனகதாஸரின் அறிமுகத்தினை, அவர் ஸ்ரீவ்யாஸராஜரிடம் வந்து சேர்ந்ததைப் பற்றி இங்கு சொல்கிறார் ஸ்ரீதாஸர்.

ஒரு நாள் கற்றறிந்தவர் ஒருவர் வந்து ஸ்ரீவ்யாஸதீர்த்தரின் பாதங்களில் வணங்கி கைகுவித்து நின்றான். எனக்கு இன்று உபதேசம் செய்யுங்கள்; முக்திக்கு செல்வதான வழியை காட்டி உதவுங்கள். நான் எதுவும் அறியாதவன்; ஹே குருவரரே, கருணைக்கடலே.

க்ஷோணிதளதலி தன்ன மஹிமெய
காணகொ³ளிஸுவெந்து³ சாரகெ³
கோணனெம்பு³வ நாமமந்த்ரவ பேளி களுஹித³னு
மாணத³லெ தா நித்ய ஜலத⁴ர
கோண கோணவுயெந்து³ ஜபிஸித³
வாணி ஸித்தி³யயெய்து³ காலன கோண கங்கொ³ளிஸெ ||7

க்ஷோணிதளதலி - இந்த பூமியில்; தன்ன மஹிமெய - இவனின் மகிமையை; காணகொளிஸுவெந்து - தெரிய வைக்க வேண்டும் என்று; சாரஜெ - அந்த மனிதனுக்கு; கோணனெம்புவ - கோண என்னும்; நாம மந்த்ரவ - நாம மந்திரத்தினை; பேளி களுஹிதனு - சொல்லி அனுப்பினான்; மாணதலெ - தாமதம் செய்யாமல் (உடனடியாக); தா - அந்த மனிதன்; நித்ய ஜலதர - எப்போதும் அனைத்து இடங்களிலும் நின்று; கோண கோணவுயெந்து ஜபிஸித - கோண கோண என்று ஜபம் செய்தான்; வாணி ஸித்தியயெய்து - அவனது ஜபம் ஸித்தி அடைந்து; காலன கோண கங்கொளிஸெ - எமனின் கோண அங்கு தரிசனம் அளித்தது.

குருவானவர், கனகனுக்கு கோண மந்திர உபதேசம் செய்ததை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர். அவருக்கு அங்கிதம் ஏற்கனவே (தானாக வைத்துக்கொண்ட) கிடைத்திருந்தது. தற்போது மந்திர உபதேசம் மட்டும் ஆகிறது.

இந்த பூமியில் இவனது மகிமையை தெரிய வைக்க வேண்டும் என்று, அந்த மனிதனுக்கு கோண என்னும் நாம மந்திரத்தினை உபதேசம் செய்தார். தாமதம் செய்யாமல் (உடனடியாக) அந்த மனிதன், எப்போதும் அனைத்து இடங்களிலும் நின்று, கோண கோண என்று ஜபம் செய்தான். அவனது ஜபம் ஸித்தி அடைந்து, எமனின் கோண அங்கு வந்து தரிசனம் அளித்தது.

ஸ்ரீகனகதாஸர் குருவான ஸ்ரீவ்யாஸராஜரைக் குறித்து பாடிய பாடல் ஒன்று இவ்வாறு:

கூஸின கண்டீரா ஸுப்ரஹ்லாதன கண்டீரா ||ப

ப்ரஸித்த வ்யாஸராயரெம்போ கூஸு
ப்ரவீண வித்யெயொள் எனிஸித கூஸு
ப்ரஹ்லாதனெம்புவ ஆஹ்லாத கூஸு
ப்ரஸன்ன காகிநெலெ ஆதி கேஷவன கூஸு

கெத்தகெத்தலு மொத்தவோ ப³ல
வத்த ரஞ்ஜனராஜியோ நக³
குத்துமோத்தம நீலபர்வதவேனோ பேள்வர்க்கெ³
சித்ததோசத³ தெரதி³ காலன
மத்தவாகி³ஹ கோண ஜீக்⁴ரதி³
அத்தலிந்த³லி பந்து³ தூ³தன முந்தெ³ கண்கெ³ஸெயெ ||8

கெத்தகெத்தலு மொத்தவோ - கும்மிருட்டு மொத்தமாக வந்து விட்டதோ?; பலவத்த ரஞ்சன ராஜியோ - அடர் மை வந்துவிட்டதோ?; நக குத்துமோத்தம - மலைகளில் உத்தமமான; நீலபர்வதவேனோ - நீல பர்வதத்தைப் போல கருமையாக இருக்கிறது; பேள்வர்க்கெ சித்ததோசத தெரதி - இப்படியாக கேள்வி கேட்டால், பதில் சொல்ல முடியாததாக; காலன மத்தவாகிஹ - காலனின் வாகனமாக இருப்பதான; கோண - எருமை; ஜீக்ரதி அத்தலிந்தலி பந்து - விரைவாக

அவன் இருந்த இடத்திற்கு வந்து; தூதன முந்தெ கண்கெஸெயெ - தூதன் முன் வந்து நின்றது (கண்ணிற்கு தென்பட்டது).

ஸ்ரீகனகதாஸரின் ஜப பலத்தினால் வந்த பலன் என்ன என்பதை இங்கு சொல்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

கும்மிருட்டு மொத்தமாக வந்துவிட்டதோ?. அடர் மை வந்து விட்டதோ?. மலைகளில் உத்தமமான, நீல பர்வதத்தைப் போல கருமையாக இருக்கிறதே? என்று கேள்வி கேட்டால், பதில் சொல்ல முடியாததாக, காலனின் வாகனமாக இருப்பதான எருமை, விரைவாக அந்த இடத்திற்கு வந்து, தூதன் முன் நின்றது.

த³ண்ட³த⁴ரனா கோண கண்ணிலி
கண்டு³ பார்வனு மனதி³ பீ⁴தி³ய
கொ³ண்டு³ க³ட³க³ட³ நடு³கு³தீ பரிஸ்ரமவனெ யெய்தி³த³³னு
சண்ட³கோபவ தாளி மஹிஷவு
புண்ட³ என்னனு கரெத³ காரண
க²ண்டி³தீக³லெ பேளோ நினமனோப³யகெ பூர்த்திஸுவெ ||9

தண்டதரனா கோண - யமனின் அந்த கோணத்தை; கண்ணிலி கண்டு பார்வனு - அந்த மனிதன்; மனதி பீதிய கொண்டு - மனதில் பயம் கொண்டு; கடகட நடுகுதி - கடகடவென்று நடுங்கியவாறு; பரிஸ்ரம வனெ யெய்திதனு - மிகவும் துன்பம் கொண்டான்; சண்டகோபவ தாளி - பயங்கரமாக கோபம் கொண்டு; மஹிஷவு - அந்த எருமையானது; புண்ட என்னனு - பயங்கரமான என்னை; கரெத காரண - அழைத்ததன் காரணம்; கண்டிதீகலெ பேளோ - கண்டிப்பாக (உடனடியாக) இப்போதே சொல்வாயாக; நினமனோபயகெ பூர்த்திஸுவெ - உன் விருப்பங்கள் அனைத்தையும் நான் நிறைவேற்றுவேன்.

கோணனின் தரிசனம் ஆகும் விதத்தினை இங்கு சொல்லியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

யமனின் அந்த கோணத்தைக் கண்டு அந்த மனிதன் மனதில் பயம் கொண்டு, கடகடவென்று நடுங்கியவாறு மிகவும் துன்பம் கொண்டான். பயங்கரமாக கோபம் கொண்ட அந்த எருமையானது, பயங்கரமான என்னை அழைத்ததன் காரணம் என்ன என்று உடனடியாக

சொல்வாயாக. உன் விருப்பங்கள் அனைத்தையும் நான் நிறைவேற்றுவேன் என்றது.

த்³விஜலுலாயத³ வசனலாலிஸி
த்யஜிஸி தபவனு த்வரதி³ ப³ந்து³
நிஜகு³ரூத்தமராத³ வ்யாஸர நமிஸி தா நுடி³த³
த்³விஜனெ பேளெலோ மஹிஷபதிகெ³
த்³விஜவரூட³ன பாத³பங்கஜ
ப⁴ஜனெ க³னுகூலவாத³ கார்யவமாடு³ நீயெந்து³ ||10

த்விஜ - அந்த மனிதன்; லுலாயத - அந்த எருமையின்; வசனலாலிஸி - வசனத்தைக் கேட்டு; தபவனு த்யஜிஸி - தவத்தினை விட்டு; த்வரதி பந்து - உடனடியாக வந்து; நிஜகுரூத்தமராத வ்யாஸர - நிஜ குருவரரான ஸ்ரீவ்யாஸ தீர்த்தரை வணங்கி; தா நுடித - தான் இவ்வாறு கூறினான்; த்விஜனெ பேளெலோ மஹிஷபதிகெ - (அப்போது ஸ்ரீவ்யாஸதீர்த்தர் கூறியது) - ஹே மனிதனே, அந்த யம வாகனத்திடம் இவ்வாறு கூறுவாயாக; த்விஜவரூடன பாதபங்கஜ பஜனெகெ - ஸ்ரீஹரியின் பஜனைக்கு; அனுகூலவாத கார்யவமாடு - அனுகூலமான செயல்களை செய்வாயாக; நீயெந்து - நீ (என்று கூறுவாயாக).

அந்த கோண என்ன செய்ய வேண்டும் என்பதை ஸ்ரீவ்யாஸராஜர் இவ்வாறு கூறுகிறார்.

அந்த மனிதன், அந்த எருமையின் வசனத்தைக் கேட்டு, தன் தவத்தினை விட்டு, உடனடியாக வந்து நிஜ குருவரரான ஸ்ரீவ்யாஸ தீர்த்தரை வணங்கி இவ்வாறு கூறினான். அதனை ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் - ஹே மனிதனே, அந்த யம வாகனத்திடம் இவ்வாறு கூறுவாயாக. ஸ்ரீஹரியின் பஜனைக்கு அனுகூலமான செயல்களை நீ செய்வாயாக என்றார்.

கெரெய ஒளகி³ஹுதொ³ந்து³ உருஶிலெ
நரரிக³ஸத³³ஹுளவெனிஸுதிர்புது³
கரெது³ கோணகெ பேளி ஶிலெயனு தெகி³ஸு த்வரதி³ந்த³
கு³ருக³ளாடி³த³ வசன ஶிரத³³லி
த⁴ரிஸி த்³விஜதா ப³ந்து³ கோணகெ
அரிகெமாடி³த³ கு³ருகளோக்திய நீனெமாடெ³ந்தா³ ||11

கெரெய ஒளகிஹ - அந்த ஏரியில் இருந்த; ஒந்து உருஶிலெ - ஒரு மிகப்பெரிய பாறை; நரரிகஸதஹளவு - மக்களுக்கு தொந்தரவாக; எனிஸுதிர்புது - இருந்தது; கோணகெ கரெது பேளி - அந்த எருமையை அழைத்து இவ்வாறு சொல்வாயாக; ஶிலெயனு தெகிஸு - அந்த பாறையை எடுப்பாயாக; த்வரதிந்த - உடனடியாக ; குருகளாடித வசன - குருகள் கூறிய வாக்கினை; ஶிரதலி தரிஸி - தலையில் ஏந்தி; த்விஜதா பந்து - அந்த மனிதன்; கோணகெ - அந்த எருமைக்கு; அரிகெமாடித - ஆணையிட்டான்; குருளளோக்திய - குருகள் கூறியதை; நீனெமாடெந்தா - நீ உடனடியாக செய்வாயாக என்றான்.

குருகளின் ஆணைப்படி, கனகர் அந்த கோணனுக்கு இட்ட கட்டளை என்ன என்பதை இந்த பத்யத்தில் விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

அந்த ஏரியில் இருந்த ஒரு மிகப்பெரிய பாறை மக்களுக்கு தொந்தரவாக இருந்தது. அந்த எருமையை அழைத்து இவ்வாறு சொல்வாயாக. அந்தப் பாறையை எடுப்பாயாக. குருகள் கூறிய வாக்கினை தன் தலையில் ஏந்தி, அந்த மனிதன், அந்த எருமைக்கு இவ்வாறு ஆணையிட்டான். குருகள் கூறியதை நீ உடனடியாக செய்வாயாக என்றான்.

பேளிதா³ த்³விஜவரன வசனவ
கேளிதா³க்ஷண ஶிலெய தானு
ஸீளிபி³ஸுடிது ஸுலப⁴தி³ந்த³லி ஏனு அச்சரவோ
கேளு த்³விஜவர மத்தெ கார்யவ
பேளு மாடு³வெ நீனெ கரெயலு
வ்யாள்யதலி நா ப³ந்து³ மாடு³வெனெந்து³ தா நுடி³து³ ||12

பேளிதாத்விஜவரன வசனவ - அந்த மனிதனின் பேச்சினை; கேளிதாக்ஷண - கேட்ட உடனேயே; ஶிலெய தானு - அந்த எருமையானது, அந்த பாறையை; ஸுலபதிந்தலி - மிகவும் சுலபமாக; ஸீளிபிஸுடிது - தூக்கி எறிந்தது; ஏனு அச்சரவோ கேளு - இதில் என்ன வியப்பு இருக்கிறது?; த்விஜவர கேளு - ஹே பிராமணனே, கேள்; மத்தெ கார்யவ பேளு - வேறு ஏதாவது வேலை இருந்தால் சொல்; மாடுவெ - நான் அதனை செய்வேன்; நீனெ கரெயலு - நீ அழைத்தால்; வ்யாள்யதலி - அதே வேளையில் (உடனடியாக); நா பந்து - நான் வந்து; மாடுவெனெந்து - அதனை செய்கிறேன் என்று; தா நுடிது - அந்த எருமை கூறியது.

கனகரின் கட்டளைப்படி, அந்த கோண என்ன செய்தது என்பதை இந்த பத்யத்திலிருந்து அறிகிறோம்.

அந்த மனிதனின் பேச்சினைக் கேட்ட உடனேயே, அந்த எருமையானது மிகவும் சுலபமாக அந்தப் பாறையை தூக்கி எறிந்தது. ஹே பிராமணனே கேள். வேறு ஏதாவது வேலை இருந்தால் சொல். நான் அதனை செய்வேன். நீ அழைத்தால் அதே வேளையில் நான் வந்து அதனை செய்கிறேன் என்று அந்த கோண கூறியது.

நடி³யலா யமராய கோணவு
ப³ட³வ த்³விஜனிகெ³ முனியு ஒலிது³
மட³தி³ மக்களு வ்ருத்தி க்ஷேத்ரவு கனக மனித⁴னவு
த்³ருட⁴ ஸுப⁴குதி ஞானவித்து
பொட³விதளத³லி பொரெது³ ஹரிபத³
ஜட³ஜயுக³த³லி மனவனித்து க³தியபாலிஸிதா³ ||13

நடியலா யமராய கோணவு - இவ்வாறு சொல்லிவிட்டு, எருமை சென்றபின்; படவ த்விஜனிகெ - அந்த மனிதனுக்கு; முனியு ஒலிது - ஸ்ரீவ்யாஸதீர்த்தரானவர்; மடதி - மனைவி; மக்களு - மக்கள்; வ்ருத்தி க்ஷேத்ரவு - வேலை செய்ய ஒரு இடம்; கனக - தங்கம்; மனிதனவு - வீடு/செல்வம்; த்ருட ஸுபகுதி ஞானவித்து - திடமான பக்தி, ஞானம் ஆகியவற்றைக் கொடுத்து; பொடவிதளதலி - இந்த பூமியில் கொடுத்து; ஹரிபத ஜடஜயுகதலி - முக்திக்கான பாதையில்; மனவனித்து - மனதினை இருக்குமாறு; கதிய பாலிஸிதா - அருள் செய்தார்.

ஸ்ரீகனகதாஸருக்கு ஸ்ரீவ்யாஸராஜர் அருளிய விதத்தினை இங்கு மிகவும் அழகாக விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

இவ்வாறு சொல்லிவிட்டு அந்த கோண சென்றபின், அந்த மனிதனுக்கு ஸ்ரீவ்யாஸ தீர்த்தரானவர், மனைவி, மக்கள், வேலை செய்ய ஒரு இடம், தங்கம், வீடு/செல்வம், திடமான பக்தி ஞானம் ஆகியவற்றை, இந்த பூமியில் கொடுத்து, முக்திக்கான பாதையில் மனதினை இருக்குமாறு அருள் செய்தார்.

ஏனு மஹிமெயோ வ்யாஸராயர
ஏனு புண்யத³ ப்ரப⁴வோ லோகதி³

ஏனு பூஜ்யனோ ஆவதே³வ ஸ்வபா⁴வ ஸம்ப⁴வனோ
ஏனு பூர்வத³ தபத³ ப²லவோ
ஏனு ஹரிபத³ பூஜ ப²லவோ
ஏனு தெ³ய்வவோ இவர கருணதி³ ஜக³கெ அகி²ளார்த்த² ||14

ஏனு மஹிமெயோ வ்யாஸராயர - ஸ்ரீவ்யாஸராயரின் மகிமை எவ்வளவு அற்புதம்?; ஏனு புண்யத ப்ரபவோ லோகதி - என்ன புண்யத்தின் பலனோ இந்த உலகில்?; ஏனு பூஜ்யனோ - எவ்வளவு வணங்கத்தக்கவன்; ஆவதேவ ஸ்வபாவ ஸம்பவனோ - எந்த தேவதையின் ஸ்வபாவத்தைக் கொண்டிருக்கிறாரோ?; ஏனு பூர்வத தபத பலவோ - எந்த முற்பிறவியில் செய்த தவத்தின் பலனோ?; ஏனு ஹரிபத பூஜ பலவோ? - ஸ்ரீஹரியின் பூஜைக்கான பலனோ?; ஏனு தெய்வவோ - எந்த தெய்வமோ இவர்?; இவர கருணதி ஜககெ அகிளார்த்த - இவருடைய கருணையால் உலகிற்கு அனைத்து இஷ்டார்த்தங்களும் நிறைவேறுகின்றன.

குரு ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமைகளை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீவ்யாஸராயரின் மகிமை எவ்வளவு அற்புதம்? என்ன புண்யத்தின் பலனோ இந்த உலகில்?. எவ்வளவு வணங்கத்தக்கவரோ? எந்த தேவதையின் ஸ்வபாவத்தைக் கொண்டிருக்கிறாரோ?. எந்த முற்பிறவியில் செய்த தவத்தின் பலனோ?. ஸ்ரீஹரியின் பூஜைக்கான பலனோ? எந்த தெய்வமோ இவர்? இவருடைய கருணையால் உலகிற்கு அனைத்து இஷ்டார்த்தங்களும் நிறைவேறுகின்றன.

குரு ஸ்ரீவ்யாஸராயரின் மகிமைகளைப் பற்றி பல ஹரிதாஸர்கள் பாடியிருக்கின்றனர். ஸ்ரீகனகதாஸர் இன்னொரு பத்யத்தில் இவ்வாறு பாடியிருக்கிறார்.

வ்யாஸராய மத்குரு வ்யாஸராய

காஷாயாம்பர தரிஸி நிஷிதின
வாஸுதேவன நாம உஸுருவ
தாஸவர்க போஷிஸி பொரெயுத
ஸ்ரீகிருஷ்ணனன்னு உபாஸனெ கெய்யுவ

ஆடிதுதனு மாடி தோருத

நாடாடிகளொடனெ வாதமாடுத
பாடதாதி கேஷ ஈ நாடிகெ
ஒடெயனெந்து கடனெ ஸாருவ (வ்யாஸராய)

இந்த்³ரதா நைஶ்வர்யதி³ந்த³³லி
சந்த்³ர தா களெபூர்த்தியிந்த³³ தி³
நேந்த்³ர தா நிர்தோ³ஷதனத³³லி மெரெவ நீ தெரதி³
மந்த்³ரகி³ரித⁴ர ஹரியகருணவு
ஸாந்த்³ரவாது³த³³ரிந்த³³ தானெ ய
தீந்த்³ர மஹிமெய கா³த⁴வாகி³ஹுதெ³ந்து³ ஜனஹொக³ளெ ||15

இந்த்ரதா நைஶ்வர்யதிந்தலி - செல்வத்தில் இந்திரனைப் போல; சந்த்ர தா களெபூர்த்தியிந்த - களைகளைக் கொண்டிருப்பதில் சந்திரனைப் போல; தினேந்திர தா நிர்தோஷதனதலி - தோஷம் அற்றவராக இருப்பதில், தினேந்திர - சூரியனைப் போல; மெரெவ நீ தெரதி - நீ திகழ்கிறாய்; மந்த்ரகிரிதர - மந்தர மலையை தூக்கிய; ஹரியகருணவு - ஸ்ரீகிருஷ்ணனின் ஸ்ரீஹரியின் கருணை; ஸாந்த்ரவாதுதரிந்த தானெ - அபாரமாக கிடைத்ததால் தான்; யதீந்த்ர மஹிமெய - யதிவரேண்யரின் மகிமையானது; அகாதவாகிஹுதெந்து - அற்புதமாக (ஏராளமாக) இருக்கிறது என்று; ஜனஹொகளெ - மக்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமைகள் மேலும் தொடர்கின்றன.

செல்வத்தில் இந்திரனைப் போல, களைகளைக் கொண்டிருப்பதில் சந்திரனைப் போல; தோஷம் அற்றவராக இருப்பதில் சூரியனைப் போல; நீ திகழ்கிறாய். மந்தர மலையை தூக்கிய ஸ்ரீகிருஷ்ணனின் ஸ்ரீஹரியின் கருணை அபாரமாக கிடைத்ததால்தான், யதி வரேண்யரின் மகிமையானது, அற்புதமாக (ஏராளமாக) இருக்கிறது என்று மக்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

இதையே ஸ்ரீவித்யா ப்ரஸன்ன தீர்த்தர் தனது ஒரு கிருதியில் இவ்வாறு பாடியுள்ளார்.

ஜயஜய வைஷ்ணவ பயோநிதி சந்த்ரகெ
ஜயஜய வ்யாஸ யதீந்த்ரரிகெ ||ப

நாகு ஷாஸ்த்ரகள பாரங்கதரிகெ
காகு மதகளனு துளிதவகெ |
ஆ கமலாபதி பகுத வரேண்யகெ
ஸ்ரீகர சந்த்ரிகாசார்யரிகெ ||[1]

வ்யாஸஸாக³ரவெம்ப³ விமல ஜ
லாஶயவ தாமாடி³ தி³னதி³ன
கீஶ நாத²ன ஸேவெமாடு³த தே³ஶத³லி மெரெவா
ஶேஷகி³ரியனு ஸார்து³ வெங்கட
ஈஶ மூர்த்திய பூஜி ஸந்தத
ஆஶெயில்லதெ³ கெ³ய்து³ த்³வாத³ஶ வருஷ பி³ட³த³ந்தெ ||16

வ்யாஸஸாகரவெம்ப - வ்யாஸ ஸமுத்ர என்னும்; விமல - அழகான (பெரிய); ஜலாஶயவ - மிகப்பெரிய ஏரியை; தாமாடி - தான் செய்து; தினதினகெ - தினம்தோறும்; ஈஶ நாதன - ஸ்ரீஹரியை; ஸேவெமாடுத - சேவை / பூஜை செய்தவாறு; தேஶதலி மெரெவா - நாட்டில் சஞ்சாரம் செய்து வந்தார்; ஶேஷகிரியனு ஸார்து - திருப்பதியை அடைந்து; வெங்கட ஈஶ மூர்த்திய - வெங்கட ரமண மூர்த்தியை; பூஜி - பூஜை செய்து; ஸந்தத ஆஶெயில்லதெ - எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் (சேவா ரூபத்திலேயே); த்வாதஶ வருஷ பிடதந்தெ - 12 ஆண்டுகள் தொடர்ந்து இடைவிடாமல்; கெய்து - பூஜை செய்தார்.

ஸ்ரீவ்யாஸராஜர், திருப்பதியில் ஸ்ரீனிவாஸனின் பூஜை செய்த விதத்தினை இங்கு அற்புதமாக விளக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

வ்யாஸ ஸமுத்ர என்னும் அழகான (பெரிய) ஏரியை, தான் செய்து, தினம்தோறும் ஸ்ரீஹரியை சேவை / பூஜை செய்தவாறு, நாட்டில் சஞ்சாரம் செய்து வந்தார். திருப்பதியை அடைந்து வெங்கட ரமண மூர்த்தியை பூஜை செய்து, எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் (சேவா ரூபத்திலேயே) 12 ஆண்டுகள் தொடர்ந்து இடைவிடாமல் பூஜை செய்தார்.

இதையே ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் இவ்வாறு பாடியுள்ளார்.
வ்யாஸராயர சரணவனே ஸேவிஸி

ஸேஷனாவேஷ ஸ்ரீ வ்யாஸராஜரு தாவு
ஸேஷ பர்வத வாஸ வெங்கடேஷன த்வா
தஷாப்தியொளொஸெது பலு நேமதிம்
பரிபரிய பூஜெயனெ கையுத்தலி ||
ஸ்ரீஷன ஸுபூஜா விதானவனெ கெயிஸுத்த
தோஷதூரன ஸேவெ மீஸலவளியத மனதி
ஒஸெது தாவு கெயுத்த பாலிஸுவ
ஸத்கீர்த்தியுதராகி மெரெயுதிஹர ||7

இளிது[3] கி[3]ரியனு த[4]ரணிதளத[3]லி
மலவு மூத்ரவுமாடி[3] மத்து
ஜலதி[3] ஸ்னானவகெ[3]ய்து[3] பாட[2]வ பேளி ஹரிபூஜா
இளெய ஸுரவரஸங்க[4] மத்[4]யதி[3]
பௌகு[3]திப்பனு வ்யாஸமுனியு
களெக[3]ளிந்த[3]லி பூர்ணசந்த்ர நப[4]தி[3] தோர்ப்பந்தெ ||17

இளிது கிரியனு - 12 ஆண்டுகள் பூஜைக்குப் பிறகு; தரணிதளதலி - இந்த பூமியில் (வேறு பகுதியில்); மலவு மூத்ரவுமாடி - காலையில், காலைக் கடன்களை முடித்துவிட்டு; மத்து - பிறகு; ஜலதி ஸ்னானவகெய்து - ஸ்னானம் செய்து; பாடவ பேளி - சிஷ்யர்களுக்கு பாடம் சொல்லி; ஹரிபூஜா - ஸ்ரீஹரி பூஜையை செய்து; இளெய ஸுரவரஸங்க மத்யதி - தன் சிஷ்யர்களான பல யதிகளின் நடுவில்; பௌகுதிப்பனு - ஒளிர்ந்தார்; வ்யாஸமுனியு - ஸ்ரீவ்யாஸராயர்; நபதி பூர்ணசந்த்ர - வானத்தில் பூர்ணசந்திரனானவன்; களெகளிந்தலி - தன் பூரண களைகளால்; தோர்ப்பந்தெ - ஒளிர்வதைப் போல. (ஒளிர்ந்து வந்தார்).

ஸ்ரீவ்யாஸராஜர் தன் சிஷ்யர்களுக்கு பாடம் எடுத்த விதத்தினைப் பற்றி இங்கு விளக்கியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

12 ஆண்டுகள் திருப்பதியில் பூஜைக்குப் பிறகு, இந்த பூமியில் (வேறு பகுதியில்) காலையில் ஸ்னானாதிகளை செய்து, சிஷ்யர்களுக்கு பாடம் சொல்லி, ஸ்ரீஹரி பூஜையை செய்து, தன் சிஷ்யர்களான பல யதிகளின் நடுவில் ஒளிர்ந்தார். ஸ்ரீவ்யாஸராஜர் வானத்தில் பூர்ணசந்திரனானவன், தன் பூரண களைகளால் ஒளிர்வதைப் போல ஒளிர்ந்தார்.

திருபதீஶன கருண படதீ
த⁴ரெயமண்ட³ல ஸுத்துதாக³லெ
து⁴ரதி³ மெரெவா கிருஷ்ணராயன ஸலஹி முத³வித்த
த⁴ரெகெ³ த³க்ஷிணகாஶியெனிஸுவ
பரமபாவன பம்ப க்ஷேத்ரகெ
ஸுரவரேஶன தி³க்விபா⁴க³த³லிருவ கி³ரிதடதி³ ||18

திருபதீஶன கருண படதி - திருப்பதி வெங்கடரமணனின் கருணையைப் பெற்று; ஈ தரெய மண்டல ஸுத்துதாகலெ - இந்த பூமியில் சஞ்சாரம் செய்து வரும்போது; துரதி மெரெவ - வெற்றி வாகையுடன் இருக்கும்; கிருஷ்ணராயன - கிருஷ்ணராயனிடம்; ஸலஹி முதவித்த - சென்று, அவருக்கு மகிழ்ச்சியை அளித்தார்; தரெகெ தக்ஷிண காஶியெனிஸுவ - பூமியில் தக்ஷிண காசி எனப்படும்; பரமபாவன பம்ப க்ஷேத்ரகெ - மிகவும் பவித்ரமான பம்பா (ஹம்பி) என்னும் க்ஷேத்திரத்திற்கு; ஸுரவரேஶன - அந்த மகா ராஜாவின்; திக்விபாகதலிருவ - அரசாட்சியில் இருக்கும்; கிரிதடதி - மலைப்பகுதிக்கு; (வந்தார்).

ஸ்ரீவ்யாஸராஜர் ஹம்பிக்கு ஸ்ரீகிருஷ்ணதேவராயரின் சபைக்கு வந்த விதத்தினை இங்கு சொல்லியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

திருப்பதி வெங்கடரமணனின் கருணையைப் பெற்று, இந்த பூமியில் சஞ்சாரம் செய்து வரும்போது வெற்றி வாகையுடன் இருக்கும் கிருஷ்ணராயனிடம் சென்று அவருக்கு மகிழ்ச்சியை அளித்தார். பூமியில் தக்ஷிண காசி எனப்படும் மிகவும் பவித்ரமான ஹம்பி என்னும் க்ஷேத்திரத்திற்கு, அந்த மகாராஜாவின் அரசாட்சியில் இருக்கும் மலைப்பகுதிக்கு வந்தார்.

இதை, ஸ்ரீவித்யா ப்ரஸன்ன தீர்த்தர், தனது ஒரு தேவர நாமாவில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

அவனியொளவதரிஸித வ்யாஸராய
பூஸுர ஜனவர்ய ||ப

கஜகஹ வரதேஷத நரபதிகளிகெ
நிஜ வர கருணதலி

விஜயாப்யுதயகளனு ஸதத பொந்திஸுத
ரஜத கனக நவமணி கணயுத வா
ரிஜவனு போலுவ ஸிம்ஹாஸனதலி
பிஜயவ கெய்யுத ஸுஜன ஸமூஹகெ
நிஜபதயுகளாம்புஜ ஸேவெ நீடலு ||

மெரெவ சக்ரஸுதீர்த்த[2] தீரதி[3]
இருவ ரகு[4]குல ராமதே[3]வனு
பரமஸுந்தர ஸூர்யமண்ட[3]லவர்த்தி யெனிஸிப்ப
தருண நாராயணன மூருதி
கி[3]ரியொளிப்பனு ரங்க[3] நாத[2]னு
வரஹதே[3]வனு பூர்வபா[4]க[3]தி[3]யிருவனா ஸ்த[2]ளதி[3] ||19

மெரெவ சக்ரஸுதீர்த்த தீரதி - அங்கிருந்த சக்ர தீர்த்தத்தின் கரையில்; இருவ - இருக்கும்; ரகுகுல ராமதேவனு - ரகுகுல ஸ்ரீராமசந்திரன்; பரமஸுந்தர - மிகவும் அழகானவன்; ஸூர்யமண்டலவர்த்தி யெனிஸிப்ப - சூர்ய மண்டலத்தில் இருக்கும் சூரிய நாராயணன் எனப்படுகிறான்; தருண நாராயணன மூருதி - அந்த ஸ்ரீராமன், மிகவும் அழகான நாராயணனின் மூர்த்தி ஆவான்; ரங்க நாதனு - ஸ்ரீரங்க நாதன்; கிரியொளிப்பனு - அந்த மலையில் இருக்கிறான்; பூர்வபாகதி - அதற்கு முன்பாக; வரஹதேவனு - ஸ்ரீவராக தேவர்; இருவனா ஸ்தளதி - அங்கு இருக்கிறார்.

ஹம்பியில் இருக்கும் பகவத் ரூபங்களை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

அங்கிருந்த சக்ர தீர்த்தத்தின் கரையில் இருக்கும் ரகுகுல ஸ்ரீராம சந்திரன் மிகவும் அழகானவன். சூரிய மண்டலத்தில் இருக்கும் சூரிய நாராயணன் எனப்படுகிறான். அந்த ஸ்ரீராமன், மிகவும் அழகான நாராயணனின் மூர்த்தி ஆவான். ஸ்ரீரங்க நாதன் அந்த மலையில் இருக்கிறான். அதற்கு முன்பாக ஸ்ரீவராக தேவர் அங்கு இருக்கிறார்.

ஹரியுயில்லத[3] ஸ்த[2]ளத[3]லிருதிஹ
ஹரியு பூஜெகெ[3] அர்ஹனல்லவோ
ஹரிய ஸ்தா[2]பனெ முக[2]யமாள்பது[3] யெனுத யதினாத[2]
கி[3]ரிய மத[4]யதி[3] மருத ரூபவ

நிரிஸி பூஜெயமாடி³ பரிபரி
ஸுரஸ பக்வ ஸுப⁴க்ஷ்ய போ⁴ஜன கனக த³க்ஷிணவா ||20

ஹரியுயில்லத - ஸ்ரீமுக்யபிராணர் இல்லாத; ஸ்தளதலிருதிஹ - இடத்தில் இருப்பவரான; ஹரியு - ஸ்ரீஹரி; பூஜெகெ அர்ஹனல்லவோ - பூஜைக்கு தகுதியானவர் அல்ல; ஹரிய ஸ்தாபனெ - ஆகவே, ஸ்ரீஹரியின் ஸ்தாபனையானது; முக்யமாள்பது எனுத - முக்கியமாக செய்ய வேண்டியது என்றவாறு; யதினாத - ஸ்ரீவ்யாஸதீர்த்தர்; கிரிய மத்யதி - அந்த மலையின் நடுவில்; மருத ரூபவ நிரிஸி - வாயுதேவரின் ரூபத்தை நிறுவி; பூஜெயமாடி - பூஜை செய்து; பரிபரி - பலவிதமாக; ஸுரஸ பக்வ ஸுபக்ஷ்ய - சுவையான பக்ஷ்ய, போஜ்ய; போஜன கனக தக்ஷிணவா - உணவு, தங்கம், தக்ஷிணை ஆகியவற்றை;

யந்த்ரோத்தாரக ஹனுமத் பிரதிஷ்டை இங்கு விளக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீமுக்யபிராணர் இல்லாத இடத்தில் இருப்பவரான ஸ்ரீஹரி, பூஜைக்கு தகுதியானவர் அல்ல. ஆகவே, ஸ்ரீஹரியின் ஸ்தாபனையானது முக்கியமாக செய்ய வேண்டியது என்றவாறு ஸ்ரீவ்யாஸதீர்த்தர் அந்த மலையின் நடுவில் வாயுதேவரின் ரூபத்தை நிறுவி, பூஜை செய்து, பலவிதமாக சுவையான பக்ஷ்ய, போஜ்ய, உணவு தங்கக் தக்ஷிணை ஆகியவற்றை. (அடுத்த பத்யத்தில் தொடர்கிறது).

த⁴ரணிஸுரகணகித்து கு³ருவர
ஸ்மரணெமாடு³த நித்³ரெமாட³லு
ப³ருத மருதி³ன நோடெ³ கபிவரமூர்த்தி காணதெ³லெ
ப⁴ரதி³ அச்சரிகொ³ண்டு³ ஸம்யமி
வரனு மனத³லி யோசிஸுபரி
மரளி ப்ராணன ஸ்தா²பிஸுதெர மந்த்ர ப³ந்தி⁴ஸித³ ||21

தரணிஸுரகணகித்து - அந்த முக்யபிராணருக்கு (அவற்றை) அளித்து; குருவர - ஸ்ரீவ்யாஸ தீர்த்தர்; ஸ்மரணெ மாடுத - அவரையே நினைத்தவாறு; நித்ரெமாடலு - தூங்கச் செல்ல; பருத மருதின நோடெ - திரும்பி அடுத்த நாள் வந்து பார்க்க; கபிவரமூர்த்தி காணதெலெ - அங்கு நிறுவியிருந்த முக்யபிராணர் காணவில்லை; பரதி அச்சரிகொண்டு - மறுபடி வியப்படைந்து; ஸம்யமி வரனு - யதிகளில் சிறந்தவரான

ஸ்ரீவ்யாஸ தீர்த்தர்; மனதலி ஈபரி யோசிஸி - மனதில் இவ்வாறு சிந்தித்து; மரளி - மறுபடி; ப்ராணன ஸ்தாபிஸி - முக்ய பிராணரை ஸ்தாபனை செய்து; மந்த்ர பந்திஸித - மந்திரத்தால் அவரை கட்டினார்.

யந்த்ரோத்தாரக ஹனுமத் பிரதிஷ்டை இங்கு மேலும் விளக்கப்பட்டுள்ளது.

அந்த முக்யபிராணருக்கு அவற்றை அளித்து, ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் அவரையே நினைத்தவாறு தூங்கச் செல்ல, திரும்பி அடுத்த நாள் வந்து பார்க்க, அங்கு நிறுவியிருந்த முக்யபிராணரை காணவில்லை. மறுபடி வியப்படைந்து யதிகளில் சிறந்தவரான ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் மனதில் இவ்வாறு சிந்தித்து, மறுபடி முக்யபிராணரை ஸ்தாபனை செய்து, மந்திரத்தால் அவரை கட்டினார்.

இதையே, ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் தனது இந்த கிருதியில் மிகவும் அழகாக பாடியுள்ளார்.
வ்யாஸராய நின்ன அனுதின
ஸ்மரிப ஜனகெ தோ[1]ஷதிந்தலீவெ ஸாதனா

ஆருகோணகள மேலாகார்வொலயதி தீர வானரரா நோடம்மய்யா |
மூருகோடி ஜபத ஆரதி ஸ மீர நிந்திஹ நோடம்மய்ய |
தீர நிலிஸித ஆதாரபக்தி யந்த்ரோத் தாரர நீ நோடம்மய்யா ||

கோணஷட்கித[3] மத்[4]யமுக்[2]ய
ப்ராணதே[3]வன நிலிஸி வலயதி[3]
மானத[3]லெ கபிகடகப[3]ந்தி[4]ஸி பீ[3]ஜவரணக[3]ள
ஜாணதனத[3]லி பரெது[3] த்ரிஜக[3]
த்ராணனல்லே நிலிஸி பூஜிஸி
க்ஷோணிதளத[3]லி கரெத[3] யந்த்ரோத்தார நாமத[3]லி ||22

கோணஷட்கித - அறு கோணங்கள் கொண்ட யந்த்ரம்; மத்ய - அதன் நடுவில்; முக்யப்ராணதேவன - முக்யபிராண தேவனை; நிலிஸி - நிறுவி; வலயதி - அதனை சுற்றிலும்; மானதலெ - ஒரு அளவில் (சரியான இடைவெளியில்); கபிகடக பந்திஸி - கபிகளின் குழுவினை நிறுவி (கட்டிப்போட்டு); ஜாணதனதலி - மிகவும் அற்புதமாக (புத்திசாலித்தனமாக); பீனவரணகள பரெது - பீஜ மந்திரங்களை எழுதி;

த்ரிஜக த்ராணனு - மூன்று உலகங்களையும் காப்பவரை; அல்லே நிலிஸி பூஜிஸி - அங்கேயே நிறுவி பூஜித்து; க்ஷோணிதளதலி - பூமண்டலத்தில்; யந்த்ரோத்தார நாமதலி - யந்த்ரோத்தாரக என்னும் பெயரில்; கரெத - அழைத்தார்.

யந்த்ரோத்தாரக ஹனுமத் பிரதிஷ்டை இங்கு தொடர்ந்து விளக்கப்பட்டுள்ளது.

அறு கோணங்கள் கொண்ட யந்திரம், அதன் நடுவில் முக்யபிராண தேவனை நிறுவி, அதனை சுற்றிலும், ஒரு அளவில் (சரியான இடைவெளியில்) கபிகளின் குழுவினை நிறுவி (கட்டிப்போட்டு) மிகவும் அற்புதமாக பீஜ மந்திரங்களை எழுதி, மூன்று உலகங்களையும் காப்பவரை, அங்கேயே நிறுவி பூஜித்து, பூமண்டலத்தில் யந்த்ரோத்தாரக என்னும் பெயரில் அழைத்தார்.

இதையே, ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸர், தனது இந்த கிருதியில் அழகாக பாடியுள்ளார்.
பாலிஸோ யதிராஜ பாலிஸோ

த்வாஸப்ததி ஸஹஸ்ர நாடி
தத்ரஸ்த ரூப ஸமீர அவன
விம்ஸதி மேலேளு நூரு ப்ரதிம
நீ ஸ்தாபிஸிதியோ ஹே தீர அஹ
ஈ ஸமஸ்த ஹனுமரூப ஒந்தொந்தரொள்
ஸத ரூப ஸ்மரணீய ஸ்ரீஷ ஸாஸிர நாம

தி³னதி³³ சக்ரஸுதீர்த்த² ஸ்னானவ
இனன உத³³யதி³³ மாடி³³ ஆன்ஹிக
மனதி³³ பி³³ம்ப³³ன பூஜெகோ³³ஸுக³³ பிரிய கு³³ண்டே³³ரி
ப்ரணவ பூர்வக ஆஸனோபரி
மனஸு பூர்வக குளிது ஹரிபத³³
வனஜ ப⁴⁴ஜிஸுத தி³³னதி³³ ஸாத⁴⁴ன க⁴⁴னவு மாடி³³த³³னு ||23

தினதி - தினம்தோறும்; சக்ரஸுதீர்த்த ஸ்னானவ - சக்ரதீர்த்தத்தில் ஸ்னானத்தை; இனன உதயதி - சூரியோதயத்தில்; ஆன்ஹிக மாடி - ஸ்னானம் மற்றும் ஆன்ஹிகங்களை செய்து; மனதி பிம்பன

பூஜெகோஸுக - மனதில் பிம்பனை பூஜிப்பதற்காக; ப்ரிய குண்டேரி - தனக்கு மிகவும் பிடித்தமான அந்த குன்றில் ஏறி; ப்ரணவ பூர்வக - பிரணவ மந்திரத்தை ஜெபித்து; ஆஸனோபரி மனஸு பூர்வக குளிது - ஒரு ஆசனத்தில் ஒரு மனதுடன் அமர்ந்து; ஹரிபத வனஜ - ஸ்ரீஹரியின் பாத தாமரைகளை; பஜிஸுத - வணங்கியவாறு; தினதி - தினம்தோறும்; ஸாதன கனவு மாடிதனு - அபாரமான ஸாதனைகளை செய்தார்.

அந்த இடத்தில் ஸ்ரீவ்யாஸராஜர் செய்த ஜப தபங்களைப் பற்றி இங்கு விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

தினம்தோறும் சக்ர தீர்த்தத்தில் ஸ்னானம் செய்து, சூரியோதயத்தில் ஆன்ஹிகங்களை செய்து முடித்து, மனதில் பிம்பனை பூஜிப்பதற்காக, தனக்கு மிகவும் பிடித்தமான அந்த குன்றில் ஏறி, பிரணவ மந்திரத்தை ஜெபித்து, ஒரு ஆசனத்தில் ஒரு மனதுடன் அமர்ந்து, ஸ்ரீஹரியின் பாத தாமரைகளை வணங்கியவாறு, தினம்தோறும் அபாரமான ஸாதனைகளை செய்தார்.

இதையே, ஸ்ரீவ்யாஸராயர சரண கமல ஸுளாதியில் ஸ்ரீபுரந்தரதாஸர் இவ்வாறு கூறியுள்ளார் என்பதை பார்க்கிறோம்.

மானஸ பூஜெயன்னு நீ மாடெ
தானவாந்தக ரங்கனு மெச்சி
தானெ பந்த கோபால கிருஷ்ண
ஞானிகளரஸனெ குரு வ்யாஸராய
ஏனெம்பெனு நின்ன மஹிமெயனு
ஸ்ரீனிவாஸ புரந்தரவிட்டலன
கானவ மாடுத ஆடுத பாடுத ஏனெம்பெ
நிம்ம மஹிமெயனாவ பல்லனு

ஈ தெரதி³ ஶிரி வ்யாஸமுனியு
வாததே³வன ப⁴ஜிஸுதிரலா
பூ⁴தகாலத³லிந்த³ சக்ர ஸுதீர்த்த²தொ³ளகி³ப்ப
நீதஸிரிகு³ரு மத்⁴வராயன
ஈத மேலகெ தந்து³ பூஜிஸி
தா³த கு³ரு ஜக³ன்னாத² விட்டலன ப்ரீதிகொ³ளகா³த³ ||24

ಈ தெரதி - இப்படியாக; ಶ್ರೀ வ்யாஸமுனியு - ஸ்ரீவ்யாஸதீர்த்தர்; வாததேவன - ஸ்ரீமுக்யபிராணரை; பஜிஸுதிரலு - வணங்கி வர; பூத காலதலிந்த - முன்னொரு காலத்திலிருந்து; ஆ சக்ர ஸுதீர்த்ததொளகிப்ப - அந்த சக்ர தீர்த்தத்தில் இருந்த; நீதஸிரிகுரு மத்வராயன - நம் நித்ய குருவான ஸ்ரீமத்வராயனை; ಈತ - ஸ்ரீவ்யாஸதீர்த்தர்; மேலகெ தந்து - மேல் எடுத்து வைத்து; பூஜிஸி - பூஜித்து (இதனால்); தாத குரு ஜகன்னாத விட்டலன - தந்தையான குரு ஜகன்னாத விட்டலனின்; ப்ரீதிகொளகாத - அன்பிற்கு பாத்திரம் ஆனார்.

சக்ர தீர்த்தத்தில் ஸ்ரீவ்யாஸதீர்த்தர் பூஜை செய்த விதத்தினை சொல்லி இந்த சந்தியை முடிக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

இப்படியாக ஸ்ரீவ்யாஸதீர்த்தர் ஸ்ரீமுக்யபிராணரை வணங்கி வர, முன்னொரு காலத்திலிருந்து அந்த சக்ர தீர்த்தத்தில் இருந்த நம் நித்ய குருவான ஸ்ரீமத்வ ராயனை, இவர் மேல் எடுத்து வைத்து பூஜித்து, இதனால், தந்தையான குரு ஜகன்னாத விட்டலனின் அன்பிற்கு பாத்திரம் ஆனார்.

இப்படியாக கன்னட ஸ்ரீராகவேந்திர விஜயத்தின் ஐந்தாம் சந்தியின் விஷயம் முடிந்தது. ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமைகள் மேலும் ஆறாம் ஸந்தியிலும் தொடர்கிறது.

****

ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸரின்
கன்னட ஸ்ரீராகவேந்திர விஜயம்

சந்தி - 6

சந்தி 6ன் விஷய சுருக்கம்

ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமைகள் மேலும் இந்த சந்தியில் தொடர்கின்றன. துவக்கத்தில் ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீபுரந்தரதாஸர், ஸ்ரீகனகதாஸர் ஆகியோர் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவத்தை விளக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ராக⁴வேந்தி³ரர விஜய பேளுவெ
ராக⁴வேந்தி³ரர கருண ப³லத³லி
ராக⁴வேந்திரர ப⁴குதராத³வரித³னு கேளுவுது³ ||

நதிப ஜனததிக³மர பாத³ப
நுதிப ஜனஸுரதே⁴னு காமித
ஸதத நீடு³த த⁴ரணிஸுரவர நிகரபரிபால
ப்ரதியுகாணெனோ வ்ரதிக³ளரஸனெ
நதிபெ தவபத³ கமலயுக்³மகெ
துதிபெ என்னனு பொரெயோ கு³ருவர பதிதபாவனனெ ||1

நதிப ஜனததிகெ - வணங்கும் பக்தர்களுக்கு; அமர பாதப - வரங்களை தரக்கூடிய பாதங்களைக் கொண்டவர்; நுதிப ஜன - துதிக்கும் பக்தர்களின்; ஸுரதேனு - காமதேனு; காமித ஸதத நீடுத - வேண்டிய விருப்பங்களை எப்போதும் நீடியவாறு; தரணிஸுரவர - முனிவர்களில் சிறந்தவர்; நிகரபரிபால - பக்தர்களை காப்பவர்; வ்ரதிகளரஸனெ - முனிவர்களில் சிறந்தவனே; ப்ரதியுகாணெனோ - உனக்கு சரிசமம் என்று யாரையும் காணேனோ; நதிபெ தவபத கமலயுக்மகெ - உன் சிறந்த பாதங்களை நான் வணங்குகிறேன்; துதிபெ - உன்னை துதிக்கிறேன்; என்னனு பொரெயோ - என்னை காப்பாற்றுவாயாக; குருவர பதிதபாவனனெ - குருவரனே, பக்தர்களை காப்பவனே.

ஸ்ரீவ்யாஸராஜரை / ஸ்ரீராயரை குறிக்கும்படியான, பிரார்த்தனை வடிவமான பத்யமாக இது இருக்கிறது. இப்படியாக இந்த 6ம் ஸந்தியினை துவக்குகிறார் ஸ்ரீகுருஜகன்னாத தாஸர்.

தன்னை வணங்கும் பக்தர்களுக்கு வரங்களை தரக்கூடிய பாதங்களைக் கொண்டவர். துதிக்கும் பக்தர்களின் காமதேனு இவர். வேண்டிய விருப்பங்களை எப்போதும் அருளியவாறு இருக்கிறார். முனிவர்களில் சிறந்தவர். பக்தர்களை காப்பவர். முனிவர்களில் சிறந்தவனே, உனக்கு சரிசமம் என்று யாரையும் காணேன். உன் சிறந்த பாதங்களை நான் வணங்குகிறேன். உன்னை துதிக்கிறேன். என்னை காப்பாற்றுவாயாக. குருவரனே, பக்தர்களை காப்பவனே.

ஸ்ரீவ்யாஸராயர சரண கமல ஸுளாதியில் ஸ்ரீபுரந்தரதாஸர் தன் குருவை இவ்வாறாக போற்றிப் பாடியிருக்கிறார்.

வ்யாஸராயர சரண கமல தருஷனவென
கேஸு ஜன்மத ஸுக்ருத பவதி தொரகிதோ, என்ன
ஸாஸிர குலகோடி பாவனவாயிது
ஸ்ரீஷன பஜிஸுவதகதிகாரி நானாதெ
தோஷ ரஹிதனாத புரந்தரவிட்டலன
தாஸர கருணவு என்ன மேலெ இரலாகி ||

ஆவ பம்பா க்ஷேத்ரத³லி ஹரி
ஸேவகாக்³ரணி வ்யாஸமுனியு
காமனய்யன ஸதத ப⁴ஜிஸுத வாஸமாடி³ரலு
தே³வவர்யரெ ஒந்து³ ரூபதி³
தாவெ பூ⁴தளத³லி ஜனிஸுத
கோவிதா³க்³ரேஸரரு யெனிஸி மெரெத³ரா ஸ்த²ளதி³ ||2

ஆவ பம்பா க்ஷேத்ரதலி - அந்த ஹம்பி க்ஷேத்திரத்தில்; ஹரி ஸேவகாக்ரணி - ஹரியை வணங்குபவர்களில் சிறந்தவரான / முதல்வரான; வ்யாஸமுனியு - ஸ்ரீவ்யாஸதீர்த்தர்; காமனய்யன - ஸ்ரீஹரியை; ஸதத பஜிஸுத - எப்போதும் வணங்கியவாறு; வாஸமாடிரலு - (ஹம்பியில்) வசித்திருக்க; தேவவர்யரே - தேவதையே; ஒந்து ரூபதி - ஒரு ரூபத்தில்; தாவெ பூதளதலி - தாமே பூமியில்; ஜனிஸுத - பிறந்து; கோவிதாக்ரேஸரு - மிகச் சிறந்த பக்தர் / அறிஞர்; எனிஸி - எனப்பட்டு; மெரெதரா ஸ்தளதி - அந்த இடத்தில் திகழ்ந்தார்.

சென்ற சந்தியின் தொடர்ச்சியாக, ஸ்ரீவ்யாஸராஜர், ஹம்பி க்ஷேத்திரத்தில் இருந்த விதத்தினை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

அந்த ஹம்பி க்ஷேத்திரத்தில், ஹரியை வணங்குபவர்களில் சிறந்தவரான / முதல்வரான ஸ்ரீவ்யாஸதீர்த்தர், ஸ்ரீஹரியை எப்போதும் வணங்கியவாறு ஹம்பியில் வசித்திருக்க, தேவதையே ஒரு ரூபத்தில் தாமே பூமியில் பிறந்து, மிகச்சிறந்த பக்தர் / அறிஞர் எனப்பட்டு அந்த இடத்தில் திகழ்ந்தார்.

இதையே ஶ்ரீகுரு புரந்தரதாஸர், தனது ஒரு கிருதியில் இவ்வாறு பாடியிருக்கிறார்.
வாஸுதேவன சரண வனஜ வந்திபனெ ஸன்
யாஸ ரத்னாகரனெ வ்யாஸ முனிராய ||ப

ஹரியில்லத க்ஷேத்ரவரியத மஹா மஹிம
ஹரி கிருஷ்ண சரண ஸரஸீருஹ ப்ருங்க
குரு புரந்தரவிட்டலனெ பரதெய்வ வெந்
தருஹி ஸுஜனர பொரெவ வ்யாஸ முனிராய ||[3]

நாரத[3]ரெ தா ஶ்ரீபுரந்த[3]ர
ஸூரி தனயனெ கனக தா ஜம்
பா[4]ரியே வைகுண்ட[2] தா[3]ஸரு வ்யாஸ ப்ரஹ்லாத[3]
ஈரு எரடு ஜனரு ஸர்வத[3]
மாரனய்யன ப்ரேமபாத்ரரு
ஸேரியிருவதரிந்தெ[3] பம்பா நாககின்னதி[4]க ||3

நாரதரெ தா - நாரதரே; ஶ்ரீபுரந்தர - ஶ்ரீபுரந்தரதாஸராக வந்தார்; ஸூரி தனயனே கனக - சூரியனின் மகனான யமதேவனே கனகதாஸர்; ஜம்பாரியே வைகுண்ட தாஸரு - ஜம்ப என்னும் அசுரனைக் கொன்ற இந்திரனே ஜம்பாரி; அவரே வைகுண்டதாஸர்; வ்யாஸ ப்ரஹ்லாத - ஶ்ரீவ்யாஸ தீர்த்தரே பிரகலாதர்; ஈரு எரடு ஜனரு - இந்த நால்வரும்; ஸர்வத - எப்போதும்; மாரனய்யன ப்ரேமபாத்ரரு - ஶ்ரீஹரிக்கு பிடித்த மானவர்கள் / ப்ரியமானவர்கள்; ஸேரியிருவதரிந்தெ - இவர்கள் அனைவரும் அங்கு சேர்ந்திருப்பதாலேயே; பம்பா - ஹம்பி க்ஷேத்திரமானது; நாககின்னதிக - ஸ்வர்க்க லோகத்தை விட அதிகமான பவித்ரமாக இருந்தது.

ஶ்ரீவ்யாஸராஜர் மற்றும் ஹரிதாஸர்கள் உடனான ஹம்பி க்ஷேத்திரம் எப்படி இருந்தது என்பதை இங்கு மிகவும் அற்புதமாக விளக்குகிறார் ஶ்ரீதாஸர்.

நாரதரே ஶ்ரீபுரந்தரதாஸராக வந்தார். சூரியனின் மகனான யமதேவனே கனகதாஸர். ஜம்ப என்னும் அசுரனைக் கொன்ற இந்திரனே ஜம்பாரி - அவரே வைகுண்ட தாஸர். ஶ்ரீவ்யாஸ தீர்த்தரே பிரகலாதர். இந்த நால்வரும் எப்போதும் ஶ்ரீஹரிக்கு பிடித்தமானவர்கள் / ப்ரியமான

வர்கள். இவர்கள் அனைவரும் அங்கு சேர்ந்திருப்பதாலேயே, ஹம்பி க்ஷேத்திரமானது ஸ்வர்க்க லோகத்தை விட அதிகமான பவித்ரமாக இருந்தது.

ஹரிதாஸ கூடத்தை ஸ்ரீவ்யாஸராஜர் அருளிய விதத்தை ஸ்ரீகுரு கோவிந்த விட்டல தாஸர் இந்த கிருதியில் இவ்வாறு பாடியுள்ளார்.

வ்யாஸராயர சரணவனெ ஸேவிஸி ||ப

தாஸ பந்தவ ஸாரி நிஜ தாஸனெனெ ஸ்ரீனி
வாஸனிகெ புரந்தர விட்டல தாஸனெந்து
தாஸ பீடதி நிலிஸி தாஸ கூடவ ரசிஸி
ஸத்பந்தவனெ ஸாரித ||

வ்யாஸராயர மட[2]தி[3] மத்[4]யதி[3]
வாஸமாட[3]லு ஸகல த்[4]விஜரு
தா[3]ஸராகி[3]ஹ ஸர்வரிந்த[3]லி ஸபெ[4]யு ஷோபிஸிது[1]
வாஸவன ஷுப[4]ஸபெயோ மேண கம
லாஸனன ஸிரி வைஜயந்தியோ
பா[4]ஷிஸுவரிகெ[3] தோரத[3]ந்த[3]தி[3] ஸபெ[4]யு தானொப்பெ ||4

வ்யாஸராயர - ஸ்ரீவ்யாஸ தீர்த்தரு; மடதி மத்யதி வாஸமாடலு - அரங்கில் நடுவில் அமர்ந்திருக்க; ஸகல த்விஜரு - அனைத்து பண்டிதர்களும் / அறிஞர்களும்; தாஸராகிஹ - அவரின் தாஸர்களாக இருக்க; ஸர்வரிந்தலி - இந்த அனைவராலும்; ஸபெயு ஷோபிஸிது - அந்த சபை ஒளிர்ந்தது; வாஸவன ஷுபஸபெயோ - இந்திரனின் சபையோ; மேண் - அதற்கும் மேலான; கமலாஸனன - பிரம்மதேவரின்; ஸிரி வைஜயந்தியோ - பிரம்ம ஸபையோ என; பாஷிஸுவரிகெ - அங்கிருந்த அறிஞர்களுக்கு; தோரதந்ததி - தெரியாதவாறு; ஸபெயு தானொப்பெ - அந்த சபை இருந்தது.

ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் அமர்ந்திருக்கும் சபை எப்படி இருந்தது என்பதை இங்கு சொல்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஸ்ரீவ்யாஸ தீர்த்தர், அரங்கில் நடுவில் அமர்ந்திருக்க, அனைத்து பண்டிதர்களும் / அறிஞர்களும் அவரின் தாஸர்களாக இருக்க, இந்த அனைவராலும் அந்த சபை ஒளிர்ந்தது. இந்திரனின் சபையோ

அதற்கும் மேலான பிரம்மதேவரின் பிரம்ம ஸபையோ என அங்கிருந்த அறிஞர்களுக்கு தெரியாதவாறு அந்த சபை இருந்தது.

பம்ப க்ஷேத்ரவு தா³ஸவர்யர
கு³ம்பினிந்த³ ஸமேதவாகி³
ஶங்கலாபுரத³ந்தெ தோர்ப்பது³ ஸுஜனமண்ட³லகெ
தம்பு துங்கா³ நதி³யவன தா
ஸொம்பினிந்த³லி ஸர்வஜனமன
கிம்புகா³ணிஸி ஸர்வஸம்பத³தி³ந்த³ ஶோபி⁴பது³ ||5

பம்ப க்ஷேத்ரவு - ஹம்பி க்ஷேத்திரமானது; தாஸவர்யர - ஶ்ரீவ்யாஸ தீர்த்தரின்; கும்பினிந்த - இந்த குழுவினால்; ஸமேதவாகி - சேர்ந்து; ஸுஜனமண்டலகெ - சஜ்ஜனர்களுக்கு; ஶம்பலாபுரதந்தெ - ஸ்வர்க்க லோகத்தைப் போல ; தோர்ப்பது - தெரிந்தது; தம்பு துங்கா நதியவன - குளிர்ந்த துங்கா நதியானது, இவர்களின்; தாஸொம்பினிந்தலி - இத்தகைய தாஸ கூடத்தினரால்; ஸர்வஜனமன - அனைத்து மக்களின் மனங்களில்; இம்புகாணிஸி - மகிழ்ச்சியைக் கொடுத்து; ஸர்வஸம்பததிந்த ஶோபிபது - அனைத்து நலன்களையும் கொடுத்து அருளியது.

ஹம்பி க்ஷேத்திர மகிமையை இந்த பத்யத்தில் சொல்கிறார் ஶ்ரீதாஸர்.

ஹம்பி க்ஷேத்திரமானது, ஶ்ரீவ்யாஸ தீர்த்தரின் இந்த குழுவினால் சேர்ந்து சஜ்ஜனர்களுக்கு ஸ்வர்க்க லோகத்தைப் போல தெரிந்தது. குளிர்ந்த துங்கா நதியானது இவர்களின் இத்தகைய தாஸ கூடத்தினரால், அனைத்து மக்களின் மனங்களில் மகிழ்ச்சியைக் கொடுத்து, அனைத்து நலன்களையும் கொடுத்து அருளியது.

'வ்யாஸராயர ஸ்மரிஸிரோ' என்னும் கிருதியில் ஶ்ரீவிஜயதாஸர், ஹம்பியில் ஶ்ரீவ்யாஸதீர்த்தர் செய்த அற்புதங்களை விளக்கியுள்ளார்.

ராய கத்துகனேரி அவனிகெ பந்த மஹா
குஹயோகவ நூகி ராஜ்யதொளகெயித்து
மாயிகள மர்திஸி முத்திந்த ஸுவர்ண
சாயதந்தெ காந்திலி ||

அடுத்த சில பத்யங்களில் ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீபுரந்தரதாஸர் மற்றும் ஸ்ரீகனகதாஸர் ஆகியோர் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவத்தை அழகாக விளக்கியுள்ளார் ஸ்ரீகுருஜகன்னாத தாஸர். அந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீவாதிராஜரும் அங்கு இருந்தார் என்று அறிகிறோம். ஆனால், அவரை ஸ்ரீதாஸர் இந்த பத்யங்களில் குறிப்பிடவில்லை.

ஒந்து³ தி³னத³லி வ்யாஸமுனியு பு
ரந்த³ரார்யரு ஒந்து³கூ³டி³
ப³ந்து³ஸேர்த்த³ரு ஸுக²வனுணலு விஜயவிட்டலன்ன
மந்தி³ரகெ ப³லஸாரெயிருதிஹ
தொ³ந்து³ ஸுந்த³ரபுலினமத்⁴யதி³
அந்து³ ஹரியபரோக்ஷவாரிதி⁴யொளகெ³ முளுகி³த³ரு ||6

ஒந்து தினதலி - அன்று ஒரு நாள்; வ்யாஸமுனியு - வ்யாஸமுனிவர் ஆனவர்; புரந்தரரார்யரு - புரந்தரதாசருடன்; ஒந்துகூடி - சேர்ந்து; ஸுகவனுணலு - அன்புடன் / மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு (பகவத் விஷயங்களை பரிமாறிக் கொள்வதற்கு); விஜயவிட்டலன்ன மந்திரகெ - விஜயவிட்டலனின் ஆலயத்திற்கு; பந்துஸேர்த்தரு - வந்து சேர்ந்தனர்; பலஸாரெஇருதிஹதொந்து - அதற்கு அருகில் இருப்பதான ஒரு; ஸுந்தர புலினமத்யதி - ஒரு மணற்பாங்கான இடத்திற்கு; அந்து - அன்று; ஹரியபரோக்ஷவாரிதியொளகெ - ஸ்ரீஹரியின் அபரோக்ஷ மகிமைக்கடலில்; முளுகிதரு - மூழ்கியிருந்தனர்.

ஸ்ரீவ்யாஸராஜர் மற்றும் ஸ்ரீபுரந்தரதாஸர் இருவரும் சேர்ந்து பகவத் ஸ்மரணை செய்யும் அழகினை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

அன்று ஒரு நாள், ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீபுரந்தரதாஸருடன் சேர்ந்து அன்புடன் / மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு (பகவத் விஷயங்களை பரிமாறிக் கொள்வதற்கு), விஜயவிட்டலனின் ஆலயத்திற்கு வந்து சேர்ந்தனர். அதற்கு அருகில் இருப்பதான ஒரு மணற்பாங்கான இடத்திற்கு வந்து அன்று ஸ்ரீஹரியின் அபரோக்ஷ மகிமைக்கடலில் மூழ்கியிருந்தனர்.

பந்த³னல்லிகெ³ குருப³னொப்³ப³னு
தந்த³ குரிக³ள பி³ட்டு தூ³ரதி³

நிந்து³ நோடி³த³³ இவர சரியவ கனகனில்லத³லெ
மந்த³³ஹாஸவு கெலவுகாலதி³³
மந்த³³ராகோ³³ரு கெலவுகாலதி³³
பொந்தி³³யிப்பரு அப்பிகொண்டு³³ முத³³தி³³ ரோதி³³பரோ ||7

குருபனொப்பனு - அப்போது அங்கு ஒரு இடையன்; பந்தனல்லிகெ - அங்கு வந்தான்; தந்த குரிகள பிட்டு தூரதி - தான் கொண்டு வந்திருந்த ஆடுகளை தூரத்தில் மேய்க்க விட்டு; இவர சரியவ - இவர்களின் செயல்களை; நிந்து நோடித - நின்று பார்த்துக் கொண்டிருந்தான்; கனகனில்லதலெ - அப்போது அங்கு கனகதாஸர் இருந்திருக்கவில்லை; மந்தஹாஸவு கெலவுகாலதி - சில சமயம் சிரித்தனர்; மந்தராகோரு கெலவுகாலதி - சில சமயம் மந்தமாக (சோகமாக) இருந்தனர்; அப்பிகொண்டு - கட்டிக்கொண்டு; முததி ரோதிபரோ - சிரித்தவாறும், அழுதவாறும்; பொந்தியிப்பரு - அங்கேயே இருந்தனர்.

அந்த சம்பவத்தில் தொடர்ந்து என்ன நடக்கிறது என்பதை இங்கு சொல்லியிருக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

அப்போது அங்கு ஒரு இடையன் அங்கு வந்தான். தான் கொண்டு வந்திருந்த ஆடுகளை தூரத்தில் மேய்க்க விட்டு இவர்களின் செயல்களை நின்று பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அங்கு கனகதாஸர் இருந்திருக்கவில்லை. அவர்கள் சில சமயம் சிரித்தனர். சில சமயம் மந்தமாக (சோகமாக) இருந்தனர். கட்டிக்கொண்டு சிரித்தவாறும், அழுதவாறு, அங்கேயே இருந்தனர்.

பி³த்³து³ புலினதி³ பொரளி ஹொராளோரு
எத்³து³ குணிகுணீதா³டி³ சீரோரு
முத்³து³ கிருஷ்ணன தோரிதோருத தாவு பாடு³வரோ
ஸித்³த⁴ ஸாத⁴ன கனக ஸமயகெ
இத்³த⁴ரில்லி லாப⁴வாகோ³து³
இத்³த⁴ ஸ்தா²னகெ போகி³ ஆதன கரெவோராரில்ல ||8

புலினதி பித்து - அந்த மணலில் விழுந்து; பொரளி ஹொராளோரு - உருண்டு புரள்கின்றனர்; எத்து குணிகுணீதாடி சீரோரு - எழுந்து ஆடியவாறு கத்துவார்கள்; முத்து கிருஷ்ணன தோரிதோருத -

ஸ்ரீகிருஷ்ணனை குறிப்பதான; தாவு பாடுவரோ - பாடல்களை அவர்கள் பாடுவார்கள்; ஸித்த ஸாதன - ஆத்யாத்மிக ஸாதனைகளை செய்தவரான; கனக ஸமயகெ இத்தரில்லி - கனகதாஸர் இந்த சமயத்தில் இங்கு இருந்தால்; லாபவாகோது - நன்றாக இருக்கும்; இத்த ஸ்தானகெ போகி - அவர் இருந்த இடத்திற்கு சென்று; ஆதன கரெவோராரில்ல - அவரை இங்கு அழைத்து வருபவர்கள் யாரும் இல்லை.

அந்த சம்பவத்தில் தொடர்ந்து என்ன நடக்கிறது என்பதை இங்கு சொல்லியிருக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

அந்த மணலில் விழுந்து உருண்டு புரள்கின்றனர். எழுந்து ஆடியவாறு கத்துவார்கள். ஸ்ரீகிருஷ்ணனை குறிப்பதான பாடல்களை அவர்கள் பாடுவார்கள். ஆத்யாத்மிக ஸாதனைகளை செய்தவரான கனகதாஸர் இந்த சமயத்தில் இங்கு இருந்தால் நன்றாக இருக்கும். ஆனால், அவர் இருந்த இடத்திற்கு சென்று அவரை இங்கு அழைத்து வருபவர்கள் யாரும் இல்லை என்கின்றனர்.

ஸுத்³தி³ கேளுத நிந்த குருப³னு
எத்³து³ கனகன கரெது³ தோருவெ
இத்³த³³ ஸ்த²ளவனு பேளிரெந்தா முனிகெ³ பெ³ஸகொ³ண்டா³
எத்³து³ நடெ³தா³ நதிய தீரத³³
லித்³த³³ கனகன பே³க³³ கரது³
தந்து³ தோருத வ்யாஸமுனிகெ³ பி³த்³து³ பே³டி³த³³னு ||9

ஸுத்தி கேளுத - இத்தகைய அவர்களின் பேச்சினைக் கேட்ட; நிந்த குருபனு - அங்கிருந்த இடையன்; எத்து - எழுந்து வந்து; கனகன கரெது தோருவெ - கனகதாஸரை அழைத்து வருவேன்; இத்த ஸ்தளவனு பேளிரெந்தா - அவர் இருக்கும் இடத்தை சொல்லுங்கள் என்றான்; முனிகெ பெஸகொண்டா - முனிவரிடம் இவ்வாறு கேட்டுக் கொண்டான்; எத்து நடெதா - அவர்கள் கூறிய இடத்திற்கு செல்வதற்கு எழுந்து சென்றான்; நதிய தீரதலித்த கனகன - நதியின் அந்தக் கரையில் இருந்த கனகதாஸரை; தந்து தோருத - அழைத்துக் கொண்டு வந்து; வ்யாஸமுனிகெ பித்து பேடிதனு - ஸ்ரீவ்யாஸதீர்த்தரிடம் விழுந்து வணங்கினான்.

கனகதாஸரையும் அழைத்து வாருங்கள் என்று அந்த இடையனிடம் இவர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய அவர்களின் பேச்சினைக் கேட்ட அங்கிருந்த இடையன், எழுந்து வந்து, நான் கனகதாஸரை அழைத்து வருவேன், அவர் இருக்கும் இடத்தை சொல்லுங்கள் - என்றான். அவர்கள் கூறிய இடத்திற்கு செல்வதற்கு எழுந்து சென்றான். நதியின் அந்தக் கரையில் இருந்த கனகதாஸரை அழைத்துக் கொண்டு வந்து, ஸ்ரீவ்யாஸதீர்த்தரிடம் விழுந்து வணங்கினான்.

தா³ரி மத்⁴யதி³³ தனகெ³ கனகனு
தோரி பேளித³ தெரதி³ குருப³னு
ஸாரெக³ரெது³ பே³டி³கொண்ட³னு லாப⁴ கொடிரெந்து³
தீ⁴ரமுனிவர தா³ஸவரரெ வி
சாரமாடி³ரி ஏனு நீட³லி
தோரவல்லது³ பரிய நீவே பேளிரெமகெ³ந்த³ ||10

தாரி மத்யதி - வரும் வழியில்; கனகனு தனகெ தோரி பேளித தெரதி - கனகதாஸர் தனக்கு கூறியதைப் போல; குருபனு - அந்த இடையன்; ஸாரெகரெது பேடிகொண்டனு - இவர்களை கைகுவித்து வேண்டிக் கொண்டான்; லாப கொடிரெந்து - எனக்கு வரம் கொடுங்கள் என்றான்; தீர முனிவர - சிறந்த முனிவரான ஸ்ரீவ்யாஸதீர்த்தர்; தாஸவரரே - மற்றும் புரந்தரதாஸரும் சிந்தித்து; ஏனு நீடலி தோரவல்லது - என்ன கொடுப்பது என்று தெரியவில்லை; பரிய நீவெ பேளிரெமகெந்த - ஆகவே அதனை நீங்களே கேளுங்கள் என்றார்.

கனகரும் வந்து இவர்களுடன் சேர்ந்து கொள்கிறார் என்பதை இங்கு பார்க்கிறோம்.

வரும் வழியில் ஸ்ரீகனகதாஸர் தனக்கு கூறியதைப் போல, அந்த இடையன் இவர்களை கைகுவித்து வேண்டிக் கொண்டான். எனக்கு வரம் கொடுங்கள் என்றான். சிறந்த முனிவரான ஸ்ரீவ்யாஸதீர்த்தர் மற்றும் புரந்தரதாஸரும் சிந்தித்து, என்ன வரம் கொடுப்பது என்று தெரியவில்லை. ஆகவே அதனை நீங்களே கேளுங்கள் - என்றார்.

கனக பேளித[3] கொட்ட வசனவு
மனதி[3] யோசிஸி கொடுவத[3]வகெ[3]
அனுஜனாதனு நிமகெ[3] திளிவது[3] சிந்தெயாகத[3]கெ
எனலு முனிவர மனதி[3] திளிது[3]
ஜனிதவாதா[3]னந்த[3] லாப[4]வ
மனஸுபூர்வகயித்து கருணவ மாடி[3] தாபொரெத[3] ||11

கனக பேளித - கனகதாஸர் இவ்வாறு கூறினார்; மனதி யோசிஸி - நீங்கள் மனதில் சிந்தித்து; கொட்ட வசனவு - நீங்கள் முன்பே கொடுத்த வாக்கினை; கொடுவதவகெ - அவனுக்கு கொடுப்பதற்கு; சிந்தெயாகதகெ - அதில் கவலைப்பட (சிந்திக்க) என்ன இருக்கிறது?; அனுஜனாதனு நிமகெ திளிவது - அவன் உங்களுக்கு தம்பியே ஆகிறான் ஸ்வாமி! (பிரகலாதன், ஸஹ்லாதன்); எனலு - என்று கூற; முனிவர மனதி திளிது - முனிவர் உண்மையான விஷயத்தை தன் மனதில் அறிந்தவாறு; ஜனிதவாதனந்த லாபவ - தனக்கு வந்த மகிழ்ச்சியின் பாகத்தை; மனஸுபூர்வகயித்து - மனப்பூர்வகமாக அவருக்குக் கொடுத்து; கருணவ மாடி தாபொரெத - கருணை காட்டி, அருளினார்.

அந்த இடையனுக்கு ஸ்ரீவ்யாஸதீர்த்தர் கொடுத்த வரம் என்ன என்பதை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

அப்போது ஸ்ரீகனகதாஸர் இவ்வாறு கூறினார். நீங்கள் இவனுக்கு முன்பே கொடுத்த வாக்கினை, இப்போது கொடுப்பதற்கு ஏன் சிந்திக்க வேண்டும்?. அவன் உங்களுக்கு தம்பியே ஆகிறான் ஸ்வாமி, என்று கூற, முனிவர் உண்மையான விஷயத்தை தன் மனதில் அறிந்தவாறு, தனக்கு வந்த மகிழ்ச்சியின் பாகத்தை மனப்பூர்வகமாக அவருக்குக் கொடுத்து, கருணை காட்டி அருளினார்.

ஞானிக[3]ளு தாவங்கி[3]கரிஸலு
ஹீன கெலஸக[3]ளாத[3] காலகு
ஏனு ஸ்ரமவத[3]ரிந்த[3] ப[3]ந்த[3]ரு பி[3]ட[3]தெ[3] பாலிபரு
ஸானுராக[3]தி[3] ஸகல ஜனரபி[4]
மான பூர்வக பொரெது[3] ப[4]க்தி
ஞானவித்து ஹரிய லோகதி[3] ஸுக[2]வ ப[3]டி[3]ஸுவரு ||12

ஞானிகளு - ஞானிகளானவர்கள்; தாவங்கிகரிஸலு - இவ்வாறு ஆசிர்வதிக்க / அருளினால்; ஹீன கெலஸகளாத காலகு - சிறிய வேலையே நமக்குக் கிடைத்தாலும்; ஏனு ஸ்ரவமவதரிந்த பந்தரு - அதனால் நமக்கு எவ்வித பிரச்னைகள் வந்தாலும்; பிடதெ பாலிபரு - நம்மை அவர்கள் விடாமல் காப்பாற்றுவார்கள்; ஸானுராகதி - எப்போதும்; ஸகல ஜனரபிமான பூர்வக - அனைத்து மக்களையும் மிகவும் அபிமானத்துடன்; பொரெது - அருளி; பக்தி ஞானவித்து - ஞான பக்தி வைராக்கியங்களை அளித்து; ஹரிய லோகதி - முக்தியில்; ஸுகவ படிஸுவரு - சுகத்தை அடையுமாறு செய்வார்கள்.

குருவின் அருளானாது / ஆசிர்வாதமானது நம்மை எப்படி காக்கிறது என்பதை இங்கு சொல்லியுள்ளார் ஸ்ரீதாஸர்.

ஞானிகளானவர்கள், இவ்வாறு ஆசிர்வதித்தால் / அருளினால், அது சிறிய வேலையே நமக்குக் கிடைத்தாலும், அதனால் நமக்கு எவ்வித பிரச்னைகள் வந்தாலும், நம்மை அவர்கள் விடாமல் காப்பாற்றுவார்கள். எப்போதும் அனைத்து மக்களையும் மிகவும் அபிமானத்துடன் அருளி, ஞான பக்தி வைராக்கியங்களை அளித்து, முக்தியில் சுகத்தை அடையுமாறு செய்வார்கள்.

தீர்த்த[2] ஸ்னானவமாடி[3] தாவா
தீர்த்த[2] ᳪᳪத்[3]தி[4]ய மாடோ[3]ரல்லதெ[3]
தீர்த்த[2] ஸ்னானக[3]ளிந்த[3]லவரிகெ[3] ஏனு ப[2]லவில்லா
பார்த்த[2] ஸாரதி[2] பாத[3] மனத[3]லி
ஸ்வார்த்த[2]வில்லதெ[3] ப[4]ஜனெகெ[3]ய்து[3] க்ரு
தார்த்த[2]ராகி[3] ஜக[3]தி[3] சரிபரு ஸதத நிர்ப[4]யதி[3] ||13

தீர்த்த ஸ்னானவமாடி - தீர்த்த ஸ்னானத்தினை செய்து; தாவா தீர்த்த - தாம் அந்த தீர்த்தத்தினை; ᳪᳪத்திய மாடோரல்லதெ - சுத்தம் செய்கிறார்களே தவிர; தீர்த்த ஸ்னானகளிந்தலு - அத்தகைய தீர்த்த ஸ்னானங்களால்; அவரிகெ - அவர்களுக்கு; ஏனு பலவில்லா - எவ்வித பலன்களும் இல்லை; பார்த்த ஸாரதி பாத மனதலி - மனதில் பார்த்தஸாரதியின் பாதங்களை; ஸ்வார்த்தவில்லதெ - எவ்வித பலன்களும் எதிர்பார்க்காமல்; பஜனெகெய்து - பஜனை செய்து; க்ருதார்த்தராகி - தன்யராகி; ஈ ஜகதி - இந்த உலகில்; சரிபரு -

நிலைப்பார்கள்; ஸதத நிர்பயதி - எவ்வித பயமும் இன்றி எப்போதும் திகழ்வார்கள்.

ஞானிகளின் நடவடிக்கைகளை இங்கு விளக்கியுள்ளார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

தீர்த்த ஸ்னானத்தினை செய்து, தாம் அந்த தீர்த்தத்தினை சுத்தம் செய்கிறார்களே தவிர, அத்தகைய தீர்த்த ஸ்னானங்களால் அவர்களுக்கு எவ்வித பலன்களும் இல்லை. மனதில் பார்த்தஸாரதியின் பாதங்களை, எவ்வித பலன்களும் எதிர்பார்க்காமல் பஜனை செய்து, தன்யராகி, இந்த உலகில் நிலைப்பார்கள். எவ்வித பயமும் இன்றி எப்போதும் திகழ்வார்கள்.

இதையே ஸ்ரீஜகன்னாத தாஸர், ஹரிகதாம்ருதஸாரத்தில் இவ்வாறு விளக்கியுள்ளார்.

கண்ட³ நீரொளு முளுகி³ தே³ஹவ
த³ண்டிஸலு ப²லவேனு த³ண்ட³க
மண்டலுக³ளனெ த⁴ரிஸி யதியெந்தெ³னிஸி ப²லவேனு |
அண்டஜாதி⁴பனம்ஸக³ன பத³
புண்டரீகதி³ மனவஹர்னிஷி
ப³ண்டு³ணியவோலிரிஸி ஸுக²ப³ட³தி³ப்ப மானவனு ||

தேனி எப்போதும் மலர்களையே சுற்றி வந்து கொண்டிருப்பதைப் போல, யார் எப்போதும் கருடாரூடனான ஸ்ரீபரமாத்மனின் பாத கமலங்களில் தன் மனதை வைப்பதில்லையோ, அத்தகைய மனிதன் கண்ணுக்குத் தெரியும் தண்ணீர் அனைத்திலும் மூழ்கி, குளிர் முதலானவைகளால் தேகத்தை தண்டித்தவாறு இருப்பதில் என்ன பலன்? தண்ட, காஷ்ட, கமண்டலம் ஆகியவற்றை தரித்து தான் ஒரு சன்னியாசி என்று புகழ்பெற்றால் அதனால் ஆகும் பலன்தான் என்ன?.

பு³த⁴ர த³ருஶனதி³ந்த³ பாதக
ஸத³³து³ பா⁴ஷணதி³ந்த³ முகுதிய
பத³³த³ தா³ரிய தோரி கொடு³வரு ஸத³³னதொ³ளகி³ரலு
ஒத³³கிஸுவரு பா⁴க்³ய ஜனரிகெ³
மத³³வு ஏரித³ க³ஜத³ தெரெத³லி

பது³மனாப⁴ன தா³ஸரவரிக³ஸாத்⁴யவேனிஹதோ³ ||14

புதர தருஶனதிந்த - இத்தகைய ஞானிகளின் தரிசனத்தினால்; பாதக ஸதது - கெட்ட விஷயங்கள் அழிகின்றன; பாஷணதிந்த - அவர்களின் பேச்சினால் (வாக்கினால்); முகுதிய பதத - முக்தி மார்க்கத்தின்; தாரிய தோரி கொடுவரு - வழியை காட்டிக் கொடுக்கின்றனர்; ஸதனதொளகிரலு - அவரவர்களின் வீட்டில் இருந்தாலும்; ஜனரிகெ - மக்களுக்கு; பாக்ய ஒதகிஸுவரு - அவர்களுக்கு நலன்களைக் கொண்டு சேர்ப்பார்கள்; மதவு ஏரித கஜத தெரெதலி - மதம் ஏறிய யானையைப் போல; பதுமனாபன - ஸ்ரீஹரியின்; தாஸரவரிகெ - தாஸர்களான இவர்களுக்கு; அஸாத்யவேனிஹதோ - அஸாத்தியமான விஷயம்தான் என்ன இருக்கிறது?

ஞானிகள் அருள் நம்மை எப்படி மாற்றுகிறது என்பதை இங்கு விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

இத்தகைய ஞானிகளின் தரிசனத்தினால் கெட்ட விஷயங்கள் அழிகின்றன. அவர்களின் பேச்சினால் (வாக்கினால்), முக்தி மார்க்கத்தின் வழியை காட்டிக் கொடுக்கின்றனர். அவரவர்களின் வீட்டில் இருந்தாலும் மக்களுக்கு நலன்களைக் கொண்டு சேர்ப்பார்கள். மதம் ஏறிய யானையைப் போல, ஸ்ரீஹரியின் தாஸர்களான இவர்களுக்கு அஸாத்தியமான விஷயம்தான் என்ன இருக்கிறது?

இதையே ஸ்ரீகனகதாஸர் இந்த கிருதியில் மிகவும் அழகாக பாடியுள்ளார்.

பண்டனாகி பாகில காயுவெ நா
வைகுண்ட ஸ்ரீ ஹரிய தாஸர மனெய

ஹொரெஸுத்து ப்ராகார ஸுத்தி நா பருவெ
பருவ ஹோகுவர விசாரிஸுத்திருவே
கரதி கம்பிய ஹொத்து திருகுதலிருவெ
ஸ்ரீஹரிய ஸம்முகத ஒதகதல்லிருவே

யதிகுலோத்தம வ்யாஸராயர
மிதியுயில்லத³ மஹிமெயிந்த³லி
பதித பாமரரெல்லரு த்⁴ருதராது³தே³னரிது³

ஸதத பி³ம்போ³பாஸனோச்ரித
விதத ஞானத³ விப⁴வதி³ந்த³லி
ப்ரதியியில்லதெ³ தானு ராஜிப ஸூர்யனந்த³த³லி ||15

யதிகுலோத்தம வ்யாஸராயர - யதிகுலோத்தமரான ஸ்ரீவ்யாஸராயரின்; மிதியுயில்லத மஹிமெயிந்தலி - அபாரமான எல்லைகளற்ற மகிமைகளால்; பதித பாமரரெலரு - ஏதும் அறியா பாமர மக்கள் அனைவரும்; உத்தருதராதுது - மேம்பட்டனர் (ஞானம் பெற்றனர்); ஸதத பிம்போபாஸன - எப்போதும் பிம்போபாஸனையை; ஆஸரித - செய்தவாறு; விதத ஞானத விபவதிந்தலி - தன்னுடைய அபாரமான ஞானத்தினால்; ப்ரதியியில்லதெ - எவ்வித ஒப்புமையும் இல்லாமல்; ஸூர்யனந்ததலி - ஒரு சூரியனைப் போல; தானு ராஜிப - தான் வீற்றிருந்தார்.

ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமையை இந்த பத்யத்தில் விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

யதிகுலோத்தமரான ஸ்ரீவ்யாஸராயரின் அபாரமான எல்லைகளற்ற மகிமைகளால், ஏதும் அறியா பாமர மக்கள் அனைவரும் மேம்பட்டனர் (ஞானம் பெற்றனர்). எப்போதும் பிம்போபாஸனையை செய்தவாறு, தன்னுடைய அபாரமான ஞானத்தினால் எவ்வித ஒப்புமையும் இல்லாமல் ஒரு சூரியனைப் போல தான் வீற்றிருந்தார். அத்தகைய ஞானத்தை, தமது செய்கைகளாலும், கிரந்தங்களாலும், உபதேசங்களாலும் நமக்குக் கொடுத்தார்.

இதையே ஸ்ரீவிஜயதாஸர் தமது 'ஒந்து திவஸ நாரத முனீஸ்வரரு' என்று துவங்கும் சுளாதியில் இவ்வாறு பாடிப் போற்றியுள்ளார்.

குருவ்யாஸமுனியெந்து தாருணியொளு பெஸராகி
நெரது ஸஜ்ஜனரிகெ கரெது ந்யாய ஸாஸ்த்ர
அருஹி வைஷ்ணவ மத ஆதரதிந்த உத்தரிஸி
பொரெது நம்பிதவர எரடொந்து ஜன்ம
ஸுந்தர கர்பதலி பந்து
பரிபூர்ண ஞான பக்தி வைராக்யதல்லி நடெது.

மோத³தீர்த்த²ர ஶாஸ்த்ர ஜலதி⁴கெ³

மோத³தா³யக ஸோமனோ பர
வாதி³ வாரிஜஹம்ஸ சந்தி³ர ஸ்வமத ஸத்குமுத³
காத³ தா நிஜ ஸுஜன கைரவ
போ³த⁴கர தா சந்த்³ரமண்டல
பாத³ ஸேவகரெனிப ஸுஜன சகோர சந்த்³ரமனோ ||16

மோததீர்த்தர ஶாஸ்த்ர ஜலதிகெ - ஸ்ரீமதாசார்யரின் சாஸ்திர கிரந்தங்கள் என்னும் கடலுக்கு; மோததாயக ஸோமனோ - எழுச்சியைக் கொடுக்கும் சந்திரனோ; பரவாதி வாரிஜ ஹம்ஸ சந்திர - பரவாதிகள் என்னும் தாமரைக்கு சந்திரனோ; ஸ்வமத ஸத்குமுத - ஸ்வ மதவாதிகளுக்கு குமுதனோ; காத தா நிஜ ஸுஜன - தன் சஜ்ஜனர்களை காப்பவன்; கைரவ போதகர தா சந்த்ரமண்டல - அவர்களுக்கு தான் சந்திரமண்டலத்தைப் போல; பாத ஸேவகரெனிப ஸுஜன - பாதங்களை வணங்குபவர்களான சஜ்ஜனர்களுக்கு; சகோர சந்த்ரமனோ - நிலவின் ஒளியை உண்ணும் சகோர பறவைகளைப் போல இருக்கிறார்.

சந்திரன் (நிலா) என்னும் ஒரேயொரு உவமையை வைத்துக்கொண்டு, பல உதாரணங்களை இந்த பத்யத்தில் கொடுத்து, மிகவும் அற்புதமாக ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமையை விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீமதாசார்யரின் சாஸ்திர கிரந்தங்கள் என்னும் கடலுக்கு எழுச்சியைக் கொடுக்கும் சந்திரனோ, பரவாதிகள் என்னும் தாமரைக்கு சந்திரனோ, ஸ்வ மதவாதிகளுக்கு குமுதனோ, ஸஜ்ஜனர்களுக்கு சந்திரமண்டலத்தைப் போல, பாதங்களை வணங்குபவர்களான ஸஜ்ஜனர்களுக்கு நிலவின் ஒளியை உண்ணும் சகோர பறவைகளைப் போல இருக்கிறார்.

இதையே ஸ்ரீஷ்யாம சுந்தர தாஸர், இவ்வாறு பாடியுள்ளார்.
குரு வ்யாஸராயா பாலிஸோ
மொரெ ஹொக்கெ நின்னா
ஸரணன்ன மாது லாலிஸோ

மத்வமுனி ஸுமதோத்தாரா யதிகுலதிலகா
அத்வைதாரண்ய பாவகா வித்வஜ் ஜனததி
ஸத்வினுதனே பத பத்மகெ நமிஸுவெ

அடுத்த சில பத்யங்களில், ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமையானது இன்னொரு சம்பவம் மூலமாக எப்படி வெளிப்பட்டது என்று விளக்குகிறார். அதாவது, கனகதாஸரின், தனக்கு கடவுளைக் காட்டு என்று கூறி, அதன் மூலம் அவர் செய்தது என்ன என்பதை இந்த பத்யங்களில் பார்க்கலாம்.

ஹரியரூப ஸமாதி³யோக³தி³
நிந்து (நிருத) காணுதலிப்ப கு³ருவர
ஹொரகெ³ காணுவனெம்ப³ காரண கனககி³னிதெந்தா³
சரண தெரத³லி நின்ன ஸங்க³ட³
திருகு³திப்பனு ஸர்வகாலதி³
ஸிரியரமணன எனகெ³ தோரிஸு மரியபே³டெ³ந்தா³ ||17

ஸமாதியோகதி நிந்து - தன் மனதில், சமாதி யோகத்தில் இருந்து; ஹரியரூப காணுதலிப்ப - ஸ்ரீஹரியின் ரூபத்தை பார்க்கும்; குருவர - குருவரரானவர்; ஹொரகெ காணுவனெம்ப - வெளியேயும் பார்க்க வேண்டும் என்று; எம்ப காரண - என்னும் காரணத்தால்; கனகினிதெந்தா - கனகரிடம் இவ்வாறு கூறினார்; சரண தெரதலி ஸர்வகாலதி - எப்போதும்; நின்ன ஸங்கட திருகுதிப்பனு - உன்னுடனேயே இருப்பவனான; ஸிரியரமணன - ஸ்ரீஹரியை; எனகெ தோரிஸு - எனக்கு காட்டுவாயாக; மரியபேடெந்தா - இதனை மறந்துவிடாதே.

தனக்கு கடவுளைக் காட்டுவாயா என்று ஸ்ரீவ்யாஸராஜர், கனகதாஸரின் கேட்ட விதத்தினை இந்த பத்யத்தில் சொல்லியுள்ளார் ஸ்ரீதாஸர்.

தன் மனதில் சமாதி யோகத்தில் இருந்து ஸ்ரீஹரியின் ரூபத்தை பார்க்கும் குருவரரானவர், அவனை வெளியேயும் பார்க்க வேண்டும் என்னும் காரணத்தால் கனகரிடம் இவ்வாறு கூறினார். எப்போதும் உன்னுடனேயே இருப்பவனான ஸ்ரீஹரியை எனக்கு காட்டுவாயாக.

அந்த³ முனிவர வசன மனஸிகெ³
தந்து³ கனகனு ஹரிகெ³ பேளித³
ஒந்து³ காலதி³ முனிகெ³ தருஶன நீடு³ ஜக³தீ³ஶா
இந்தி³ராபதி கேளி வசனவ

மந்த³ஹாஸவ மாடி³ நுடி³த³³னு
ப³ந்து³ ஶ்வான ஸ்வரூபதி³ந்த³லி முனிகெ³ தோருவெனு ||18

அந்த முனிவர வசன - என்று கூறிய ஸ்ரீவ்யாஸதீர்த்தரின் வாக்கினை; மனஸிகெ தந்து - மனதில் நினைத்தவாறு; கனகனு - ஸ்ரீகனகதாஸர்; ஹரிகெ பேளித - ஸ்ரீஹரியிடம் இவ்வாறு கூறினார்; ஜகதீஶா - ஹே ஸ்ரீஹரியே; ஒந்து காலதி - ஒரு முறை; முனிகெ தருஶன நீடு - ஸ்ரீவ்யாஸதீர்த்தருக்கு தரிசனம் அளிப்பாயாக; இந்திராபதி - ஸ்ரீஹரியாவனர்; வசனவ கேளி - இந்த வசனத்தைக் கேட்டு; மந்தஹாஸவ மாடி - சிரித்தவாறு; நுடிதனு - இவ்வாறு கூறினார்; ஶ்வான ஸ்வரூபதிந்தலி - ஒரு நாய் ரூபத்தில்; பந்து - வந்து; முனிகெ தோருவெனு - ஸ்ரீவ்யாஸதீர்த்தருக்கு தரிசனம் அளிப்பேன்.

குருகளின் வாக்கினை கேட்ட ஸ்ரீகனகதாஸர், ஸ்ரீஹரிடம் என்ன சொல்லி வேண்டினார் என்று இங்கு பார்ப்போம்.

என்று கூறிய ஸ்ரீவ்யாஸதீர்த்தரின் வாக்கினை மனதில் நினைத்தவாறு, ஸ்ரீகனகதாஸர் ஸ்ரீஹரியிடம் இவ்வாறு கூறினார். ஹே ஸ்ரீஹரியே, ஒரு முறை ஸ்ரீவ்யாஸதீர்த்தருக்கு தரிசனம் அளிப்பாயாக. ஸ்ரீஹரியானவர், இந்த வசனத்தைக் கேட்டு சிரித்தவாறு இவ்வாறு கூறினார். ஒரு நாய் ரூபத்தில் வந்து ஸ்ரீவ்யாஸ தீர்த்தருக்கு தரிசனம் அளிப்பேன்.

தே³வதார்ச்சனெமாடி³ கு³ருவர
ஸாவதா³னதி³ ப⁴க்ஷ்ய போ⁴ஜ்யவ
காவனய்யகெ³ நீடோ³காலதி³ ஶ்வான பரலாக³
கோவிதா³க்⁴ரணி வ்யாஸமுனியு
பா⁴விஶ்யாக³லெ ஹரிய மஹிமெய
தே³வதே³வனெ ஈ விதா⁴னதி³ தோர்த்த³ தனகெ³ந்து³ ||19

தேவதார்ச்சனெமாடி - தேவபூஜையை முடித்து; குருவர - ஸ்ரீவ்யாஸதீர்த்தர்; ஸாவதானதி - பிறகு; பக்ஷ்ய போஜ்யவ - உணவு பதார்த்தங்களை; காவனய்யகெ - ஸ்ரீஹரிக்கு; நீடோகாலதி - நைவேத்தியம் செய்யும் காலத்தில்; ஶ்வான பரலாக - ஒரு நாய் அங்கு வர; கோவிதாக்ரணி வ்யாஸமுனியு - ஸ்ரீவ்யாஸதீர்த்தர்; ஹரிய மஹிமெய - ஸ்ரீஹரியின் மகிமைகளை; பாவிஶ்யாகலெ - அப்போதே

சிந்தித்து; தேவதேவனே - ஸ்ரீஹரியே; ஈ விதானதி - இப்படியாக; தோர்த்த - வந்து தரிசனம் அளித்தான்; தனகெந்து - தனக்கு என்றான்.

அனைவருக்கும் ஸ்ரீஹரி தான் கூறியதைப் போல எப்படி வந்து தரிசனம் அளித்தான் என்பதை இங்கு சொல்லியுள்ளார் ஸ்ரீதாஸர்.

தேவபூஜையை முடித்து ஸ்ரீவ்யாஸ தீர்த்தர், பிறகு உணவு பதார்த்தங்களை ஸ்ரீஹரிக்கு நைவேத்தியம் செய்யும் காலத்தில் ஒரு நாய் அங்கு வர, ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் ஸ்ரீஹரியின் மகிமைகளை அப்போதே சிந்தித்து, ஸ்ரீஹரியே இப்படியாக வந்து தரிசனம் அளித்தான் என்றான்.

த்³ருஷ்டியிந்த³லி கண்டு³ முனிவர
த²ட்டனெது³குல திலக கிருஷ்ணன
பி³ட்டு தா ஜட³மூர்த்தி பூஜெய ஶுனகத³ர்ச்சனெயா
முட்டி ப⁴ஜிஸித³ ப⁴குதியிந்த³லி
கொட்ட தா நைவேத்³ய த்வரத³லி
தட்டி மங்க³ள தா³ர்த்தி மாடி³ ஶிரதி³ நமிஸித³னு ||20

முனிவர - ஸ்ரீவ்யாஸதீர்த்தர்; தட்டனெ - உடனடியாக; யதுகுல திலக கிருஷ்ணன - ஸ்ரீகிருஷ்ணனை; த்ருஷ்டியிந்தலி கண்டு - தன் கண்பார்வையினால் கண்டு; தா ஜடமூர்த்தி பூஜெய பிட்டு - தன் தேவபூஜையை விட்டு; ஶுனகதர்ச்சனெய - அந்த நாய்க்கு அர்ச்சனையை; முட்டி பஜிஸித - தொட்டு பூஜித்தார்; பகுதியிந்தலி - பக்தியுடன்; தா நைவேத்ய - தான் நைவேத்தியத்தை; த்வரதலி - உடனடியாக; கொட்ட - கொடுத்தார்; தட்டி மங்கள தார்த்தி மாடி - தான் மங்கள ஆரத்தி செய்து; ஶிரதி நமிஸிதனு - தலை குனிந்து வணங்கினார்.

அந்த நாயிலேயே ஸ்ரீஹரியை அனுசந்தானம் செய்து, அதனை ஸ்ரீவ்யாஸராஜர் பூஜை செய்த விதத்தினை இங்கு சொல்லியுள்ளார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் உடனடியாக ஸ்ரீகிருஷ்ணனை தன் கண் பார்வையினால் கண்டு, தன் தேவபூஜையை விட்டு , அந்த நாய்க்கு அர்ச்சனையை செய்து தொட்டு பூஜித்தார். பக்தியுடன் தான்

நைவேத்தியத்தை உடனடியாக கொடுத்தார். தான் மங்கள ஆரத்தி செய்து தலை குனிந்து வணங்கினார்.

அல்லி த்விஜவரரித³னு நோடி³
எல்லியில்லத³ சரிய யதிவர
ரல்லி நடெ³யிது இன்னு முந்தெ³ மடி³யு மைலிகெ³யு
இல்லதா³யிது நாயி பூஜெயு
எல்ல ஜனரிகெ³ மதவு எனிபது³
கு²ல்ல கனகன மாதிகி³யதி மரளு கொண்டி³ஹனு ||21

அல்லி த்விஜவரரு - அங்கிருந்த த்விஜ வரர்கள்; இதனு நோடி - இதனை பார்த்து; எல்லியில்லத சரிய - எங்கும் இல்லாத விஷயமாக; யதிவரரல்லி நடெயிது - இந்த யதிவரரின் நடவடிக்கைகளானது இருக்கிறது; இன்னு முந்தெ - இனி எதிர்காலத்தில்; மடியு மைலிகெயு இல்லதாயிது - மடி, மைலிகெ ஆகியவை இல்லாததாகவே ஆயிற்று; நாயி பூஜெயு - நாய் பூஜையானது; எல்ல ஜனரிகெ - அனைத்து மக்களுக்கும்; மதவு எனிபது - இதுவே சரி என்பது சரியல்ல; குல்ல கனகன - சிறியவனான கனகனின்; மாதிகெ - பேச்சிற்கு; ஈ யதி மரளு கொண்டிஹனு - இந்த யதியானவர், மயங்கியிருக்கிறார்.

ஸ்ரீவ்யாஸராஜரின் நடவடிக்கைகளைக் கண்டு அவரது சிஷ்யர்கள் சொல்லியது என்ன? என்பதை இங்கு பார்க்கலாம்.

அங்கிருந்த த்விஜ வரர்கள், இதனைப் பார்த்து, எங்கும் இல்லாத விஷயமாக இந்த யதிவரரின் நடவடிக்கைகளானது இருக்கிறது. இனி எதிர்காலத்தில் மடி, மைலிகெ ஆகியவை இல்லாததாகவே ஆயிற்று. நாய் பூஜையே ஆகிறது. இது சரியல்ல. சிறியவனான கனகனின் பேச்சிற்கு, இந்த யதியானவர் மயங்கியிருக்கிறார்.

ஈ தெரதி³ தாவெல்ல விபு⁴த³ரு
மாதனாடி³த³³ரெம்போ³ வார்த்தெய
தூ³தபரிமுக²தி³ந்த³ கேளீவ்யாஸமுனிராய
நீதவாத³பரோக்ஷதி³ந்த³லி
ஜாத ஞானதி³ ஹரிய ரூபவ
ஸோத்துமா த்³விஜரொளகெ³ ஓர்வகெ³ தோரி மோதி³ஸித³ ||22

ஈ தெரதி - இவ்வாறாக; தாவெல்ல விபுதரு - அந்த அனைத்து பண்டிதர்களும்; மாதனாடிதரெம்போ - பேசினார்கள் என்னும்; வார்த்தெய - செய்தியை; தூதபரிமுகதிந்த - தன் சிஷ்யர்கள் மூலமாக; கேளி - கேட்டு; வ்யாஸமுனிராய - ஸ்ரீவ்யாஸதீர்த்தர்; நீதவாத - சிறந்ததான / சரியான ; அபரோக்ஷதிந்தலி - அபரோக்ஷத்தில்; ஜாத ஞானதி - தமக்கிருந்த ஞானத்தினால்; ஹரிய ரூபவ - ஸ்ரீஹரியின் ரூபத்தினை; ஸோத்துமா த்விஜரொளகெ - அந்த பண்டிதர்களில்; ஓர்வகெ - ஒருவருக்கு; தோரி மோதிஸித - காட்டி மகிழ்வித்தார்.

சிஷ்யர்களின் மனவோட்டத்தினை அறிந்த ஸ்ரீவ்யாஸராஜர் என்ன செய்தார் என்பதை இங்கு அழகாக விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

இவ்வாறாக அந்த அனைத்து பண்டிதர்களும் பேசினார்கள் என்னும் செய்தியை தன் சிஷ்யர்கள் மூலமாக கேட்டு, ஸ்ரீவ்யாஸதீர்த்தர் சிறந்ததான / சரியான அபரோக்ஷத்தில் தமக்கு இருந்த ஞானத்தினால், ஸ்ரீஹரியின் ரூபத்தினை அந்த பண்டிதர்களில் ஒருவருக்கு காட்டி மகிழ்வித்தார்.

ஸர்வஜனரிகெ³ ஸம்மதாயிது
கு³ருவரேண்யன மஹிமெ பொக³ளுத
ஊர்விதளத³லி க்²யாதிமாட்³த³ரு ஸர்வஸஜ்ஜனரு
ஶர்வநாலயத³ல்லி ஸூர்யன
பர்வகாலதி³ விப்ர புத்ரன
த³ர்வி ஸர்ப்பவு கச்சலாக்ஷண ம்ருதியனெய்தி³த³னு ||23

ஸர்வஜனரிகெ ஸம்மதாயிது - அனைவருக்கும் இப்போது புரிந்தது; குருவரேண்யன மஹிமெ பொகளுத - ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமையை புகழ்ந்தவாறு; ஊர்விதளதலி - இந்த பூமண்டலத்தில்; ஸர்வஸஜ்ஜனரு - அனைத்து சஜ்ஜனர்களும்; க்யாதிமாட்தரு - குருகளை புகழ்ந்தனர். ஶர்வநாலயதல்லி - ஸ்ரீஹரியின் ஆலயத்தில்; ஸூர்யன பர்வகாலதி - சூர்ய கிரகண பர்வ காலத்தில்; விப்ர புத்ரன - ஒரு பிராமண புத்திரனை; தர்வி ஸர்ப்பவு - படம் எடுத்த ஒரு பாம்பு; கச்சலு - கடிக்க; ஆக்ஷண - அதே நொடியில்; ம்ருதியனெய்திதனு - அந்த புத்திரன் இறந்தான்.

அனைவரும் அறிந்த ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமைகளை இங்கு விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

அனைவருக்கும் இப்போது புரிந்தது. ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமையை புகழ்ந்தவாறு இந்த பூமண்டலத்தில் அனைத்து சஜ்ஜனர்களும் குருகளை புகழ்ந்தனர். ஸ்ரீஹரியின் ஆலயத்தில் சூர்ய கிரகண பர்வ காலத்தில் ஒரு பிராமண புத்திரனை, படம் எடுத்த ஒரு பாம்பு கடிக்க, அதே நொடியில் அந்த புத்திரன் இறந்தான்.

ம்ருதியனெய்தித³ விப்ரபுத்ரன
ம்ருதிய தா பரிஹரிஸி ஶீக்⁴ரதி³
பிதகெ³ நீடி³த³³ ஸர்வஜனரு நோடு³திரலாகா³
வ்ரதி வரோத்தம மஹிமெ ஜக³தொ³ள
க³துளவெனுதலி முனிய கு³ணக³ள
துதிஸி பொக³ளுத பாத³கமலகெ நமன மாடி³த³ரு ||24

ம்ருதியனெய்தித விப்ரபுத்ரன - அப்படி மரணமடைந்த அந்த பிராமணரின் மகனின்; ம்ருதிய - மரணத்தை; தா பரிஹரிஸி - தான் பரிகரித்து; ஸர்வஜனரு நோடுதிரலாகா - அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கையில்; ஶீக்ரதி - உடனடியாக; பிதகெ நீடித - அவனை அவனின் தந்தையிடம் ஒப்படைத்தார்; வ்ரதி வரோத்தம - பகவத் பக்தர்களில் சிறந்தவரான ஸ்ரீவ்யாஸ தீர்த்தரின்; மஹிமெ - மகிமையானது; ஜகதொளகெ - இந்த உலகில்; அதுளவெனுதலி - அபாரமாக பரவ; முனிய குணகள துதிஸி - முனிவரின் குணங்களை துதித்து; பொகளுத - புகழ்ந்தவாறு; பாதகமலகெ நமன மாடிதரு - காலில் விழுந்து வணங்கினர்.

மரணமடைந்தவரை பிழைக்க வைத்த ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமைகளை இங்கு விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

அப்படி மரணமடைந்த அந்த பிராமணரின் மகனின் மரணத்தை தான் பரிகரித்து, அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கையில், உடனடியாக அவனை அவனின் தந்தையிடம் ஒப்படைத்தார். பகவத் பக்தர்களில் சிறந்தவரான ஸ்ரீவ்யாஸ தீர்த்தரின் மகிமையானது, இந்த உலகில் அபாரமாக பரவ, முனிவரின் குணங்களை துதித்து புகழ்ந்தவாறு அவரது கால்களில் விழுந்து வணங்கினர்.

ஸ்ரீபாதராஜர், தனது சிஷ்யரான வ்யாஸராயரைக் குறித்தான இந்தப் பாடலில் இவ்வாறு விளக்கியுள்ளார்.

இதிராவது நினகீ தரெயொளு
பதுமனாபன தாஸ பரமோல்ஹாஸ

யதிகளொளகெ நிம்மந்தவருகளனா
ப்ரதி காணெனு ஈ க்ஷிதியொளகெ வ்யாஸராய
ஹம்மனளிது ஸ்ரீபதி ரங்க விட்டலன்ன
ஸும்மானதிம் ஸேவிப வ்யாஸமுனிராய

வித்யாரண்யன வாத³த³³லி தா
கெ³த்³த³³ ஸ்ரீஜயதீர்த்த விரசித
ஶுத்த ஸ்ரீமன் ந்யாய ஸத்ஸுத³³ நாம ஸத்க்ருதிகெ³
எத்³து³³ தோருவ சந்த்³ரிகாபி¹த⁴⁴
முத்³து³³ டிப்பணி ஸஹித பாட²வ
மத்⁴வராயர ப³³ளியெ பேளுதலித்³த³³ நாஸ்²தளதி³³ ||25

வித்யாரண்யன - வித்யாரண்ய என்னும் அத்வைத பண்டிதரை; வாததலி தா கெத்த - வாதத்தில் வென்ற; ஸ்ரீஜயதீர்த்த விரசித - ஸ்ரீடீகாராயர் இயற்றிய; ஶுத்த ஸ்ரீமன் ந்யாய ஸுத்ஸுத நாம ஸ்த்க்ருதிகெ - ஸ்ரீமன் ந்யாய ஸுதா என்னும் அற்புத கிருதிக்கு; எத்து தோருவ - அர்த்தத்தை விளக்கும்படியான; சந்த்ரிகாபித - சந்த்ரிகா என்னும்; முத்து டிப்பணி ஸஹித - அருமையான டிப்பணியுடன்; பாடவ - பாடத்தை; மத்வராயர பளியெ - யந்த்ரோத்தாரக ஹனுமந்தனின் அருகில்; பேளுதலித்தனு ஆஸ்தளதி - அந்த இடத்திலேயே தன் சிஷ்யர்களுக்கு கூறினார்.

தமது சிஷ்யர்களுக்கு ஸ்ரீவ்யாஸராஜர் பாடம் எடுத்த விதத்தினையும், சந்திரிகா கிரந்தத்தை இயற்றி, சந்திரிகாசார்யர் என்னும் பட்டத்தைப் பெற்ற விதத்தினையும் இங்கு சொல்லியுள்ளார் ஸ்ரீதாஸர்.

வித்யாரண்ய என்னும் அத்வைத பண்டிதரை வாதத்தில் வென்ற ஸ்ரீடீகாராயர் அவர்கள் இயற்றிய ஸ்ரீமன் ந்யாய ஸுதா என்னும் அற்புத கிருதிக்கு அர்த்தத்தை விளக்கும்படியான சந்த்ரிகா என்னும் அருமையான டிப்பணியுடன், அதன் பாடத்தை யந்த்ரோத்தாரக ஹனுமந்தனின் அருகில், அந்த இடத்திலேயே தன் சிஷ்யர்களுக்கு கூறினார்.

இதையே ஸ்ரீபிராணேஷ தாஸர் தனது இந்த கிருதியில் அற்புதமாக பாடியுள்ளார் என்பதை பார்க்கிறோம்.

சந்த்ரிகாசார்யர பாத த்வயதி
எரகுவெ பிரதி வாஸரதி

மந்த்ராக்ஷதெய மஹிமெய தோரிஸி
சித்ததலிட்டு சந்த்ரிகெ ரசிஸி
பஞ்ச முகத ப்ராணேஷ விட்டலன
பஞ்ச மந்த்ரதிம் பூஜிஸி யாசிஸித

மத்தெ பம்பா க்ஷேத்ரத^{3}லி தா
நித்ய நித்யத^{3}லி ஹரிய ப^{4}ஜிஸுத
ஸத்ய ஸங்கல்பானுஸாரதி^{3} க்ருத்ய தாமாடி^{3}
உத்தமோத்தமவெனிப ஸ்தா^{2}னவு
ஹத்தலிஹ க^{3}ஜக^{3}ஹ்வராபி^{4}த^{4}
எத்த நோட^{3}லு துங்க^{3} நதி^{3}யுண்டத^{3}ர மத்^{4}யத^{3}லி ||26

மத்தெ - மறுபடி; பம்பா க்ஷேத்ரதலி - ஹம்பி க்ஷேத்திரத்தில்; தா - ஸ்ரீவ்யாஸதீர்த்தர்; நித்ய நித்யதலி - தினம்தோறும்; ஹரிய பஜிஸுத - ஸ்ரீஹரி பூஜையை செய்தவாறு; ஸத்ய ஸங்கல்பானுஸாரதி - ஸத்ய ஸங்கல்பரைப் போல; க்ருத்ய தாமாடி - செயல்களை தாம் செய்து; உத்தமோத்தமவெனிப ஸ்தானவு - மிகச் சிறந்த இடம் எனப்படுபவதான; ஹத்தலிஹ - அருகில் இருந்த; கஜகஹ்வராபித - ஆனெகொந்தி எனப்படும் இடத்திற்கு அருகிற்கு (சென்றார்); எத்த நோடலு துங்க நதி உண்டு - அந்த இடத்தை சுற்றிலும் துங்கா நதி இருக்கிறது (இது ஒரு தீவு); அதர மத்யதலி - அதன் நடுவில் (இந்த ஆனெகொந்தி இருக்கிறது).

ஸ்ரீவ்யாஸதீர்த்தர் ஆனெகொந்திக்கு வந்து சேர்ந்த விதம் இங்கு சொல்லப்பட்டுள்ளது.

மறுபடி ஹம்பி க்ஷேத்திரத்தில் ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் தினம்தோறும் ஸ்ரீஹரி பூஜையை செய்தவாறு, ஸத்ய ஸங்கல்பரைப் போல செயல்களை தாம் செய்து, மிகச் சிறந்த இடம் எனப்படுவதான, அருகில் இருந்த ஆனெகொந்தி எனப்படும் இடத்திற்கு அருகில்

சென்றார். அந்த இடத்தை சுற்றிலும் துங்கா நதி இருக்கிறது. இது ஒரு தீவு. அதன் நடுவில் இந்த ஆனெகொந்தி இருக்கிறது.

ச²ந்த³யிப்பது³ நோடி³ முனிவர
ப³ந்து³ துங்கா³ நதி³ய ஜலத³லி
மிந்து³ புண்ட³்ரவ த⁴ரிஸி ஜபதப நேம கர்மக³ளா
ஒந்து பிட³த³லெ மாடி³ ஹ்ருத³யதி³
இந்தி³ரேஶன பூஜெகெ³ய்து³
பொந்தி³ஸ்யாதன பத³தி³ மனவனு ஸார்த³ வைகுண்ட² ||27

சந்தயிப்பது நோடி - இந்த இடம் நன்றாக இருப்பதைக் கண்டு; முனிவர பந்து - ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் அங்கு வந்து; துங்கா நதிய ஜலதலி - துங்கா நதியில்; மிந்து - ஸ்னானம் செய்து; புண்ட்ரவ தரிஸி - நாம முத்ரைகளை தரித்து; ஜபதப நேம கர்மகள - ஜப தப நிஷ்டைகளை; ஒந்து பிடதலெ மாடி - ஒன்றும் விடாமல் செய்து; ஹ்ருதயதி இந்திரேஶன பூஜெகெய்து - மனதில் ஸ்ரீஹரியை பூஜை செய்து; ஆதன பததி - அவனின் பாதத்தில்; மனவனு பொந்தி - மனதினை வைத்து; ஸார்த வைகுண்ட - வைகுண்டத்தை அடைந்தார்.

ஆனெகொந்தியில் ஸ்ரீவ்யாஸதீர்த்தர் பிருந்தாவனஸ்தர் ஆன விதம் இங்கு சொல்லப்பட்டுள்ளது.

இந்த இடம் நன்றாக இருப்பதைக் கண்டு, ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் அங்கு வந்து, துங்கா நதியில் ஸ்னானம் செய்து, நாம முத்ரைகளை தரித்து, ஜப தப நிஷ்டைகளை ஒன்றும் விடாமல் செய்து, மனதில் ஸ்ரீஹரியை பூஜை செய்து, அவனின் பாதத்தில் மனதினை வைத்து, வைகுண்டத்தை அடைந்தார்.

இதையே ஸ்ரீ குருகோவிந்த விட்டல தாஸர், தனது இந்த கிருதியில் இவ்வாறு பாடிப் போற்றியுள்ளார்.
ஏஸு மஹிம நோடோ
ஸ்ரீவ்யாஸமுனியு தானு

சந்ததிந்தலி நவ வ்ருந்தாவனகெ பந்து
வ்ருந்தாவனதி நிந்து இந்தீவராக்ஷனு
நந்தகந்த குரு கோவிந்த விட்டலன ஹ்ருன்

மந்திரதலி நோடி நந்தவ படுதிர்ப

இந்தி³கி³ருதிஹுத³ல்லி ஶுப⁴னவ
சந்த³ ப்³ருந்தா³வனக³ளொளகி³
ஸுந்த³ராத்மகவாத³ வ்ருந்தா³வனதி³ முனிராயா
பொந்தி³யிப்பனு ஸதத தன்னனு
வந்தி³ஸுபரி ப⁴ஜிப ஜனரிகெ³
குந்த³த³லெ ஸர்வார்த்த² கொடு³தலியிப்ப நம்மப்ப ||28

இந்திகு - இன்று; இருதிஹுதல்லி - அங்கு இருப்பதான; ஶுப - சுபத்தை தரக்கூடியதான; சந்த - அழகான; நவ ப்ருதாவனகளொளு - நவ பிருந்தாவனங்களில்; ஸுந்தராத்மகவாத - மிகவும் அழகான; வ்ருந்தாவனதி - பிருந்தாவனத்தில்; முனிராயா பொந்தியிப்பனு - ஸ்ரீவ்யாஸதீர்த்தர் இருக்கிறார்; ஸதத தன்னனு - எப்போதும் தன்னை; வந்திஸி ஈபரி பஜிப - வணங்கி, பஜிக்கும்; ஜனரிகெ - மக்களுக்கு; குந்ததலெ - எவ்வித குறைகளும் இன்றி; ஸர்வார்த்த கொடுதலியிப்ப நம்மப்ப - அனைத்தையும் கொடுக்கிறார், நம் குருகள்.

நவ பிருந்தாவனத்தில் ஸ்ரீவ்யாஸதீர்த்தர் நிலைத்திருந்து பக்தர்களை எவ்வாறு காக்கிறார் என்பதை இங்கு சொல்லியுள்ளார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

இன்று, அங்கு இருப்பதான சுபத்தை தரக்கூடியதான அழகான நவ பிருந்தாவனங்களில் மிகவும் அழகான பிருந்தாவனத்தில் ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் இருக்கிறார். எப்போதும் தன்னை வணங்கி பஜிக்கும் மக்களுக்கு எவ்வித குறைகளும் இன்றி அனைத்தையும் கொடுக்கிறார் நம் குருகள்.

ஆனெகொந்தி நவவிருந்தாவனத்தில் இருக்கும் யதிகளை இந்த ஸ்லோகம் இவ்வாறு சொல்கிறது.

பத்மனாபம் கவீந்திரம் ச வாகீஷம் வ்யாஸராஜகம்
ரகுவர்யம் ஸ்ரீனிவாஸம் ராம தீர்த்த ததைவ ச |
ஸ்ரீ சுதீந்திரம் ச கோவிந்தம் நவ வ்ருந்தாவனம் பஜே ||

இன்று அந்த இடம் நவவ்ருந்தாவன எனப்படுகிறது. ஆனால் ஸ்ரீவ்யாஸராஜர் பிருந்தாவனஸ்தர் ஆகும்போது, அங்கு அவருக்கு

முன்னர், ஏற்கனவே, கோவிந்த ஒடெயரு வையும் சேர்த்து 5 பேர் இருந்தனர் என்பதை அறிகிறோம்.

* ஆண்டு 1324ல் பிருந்தாவனஸ்தர் ஆன ஸ்ரீபத்மனாப தீர்த்தர்
* ஆண்டு 1398ல் பிருந்தாவனஸ்தர் ஆன ஸ்ரீகவீந்திர தீர்த்தர்
* ஆண்டு 1406ல் பிருந்தாவனஸ்தர் ஆன ஸ்ரீவாகீஷ தீர்த்தர்
* ஆண்டு 1537ல் பிருந்தாவனஸ்தர் ஆன ஸ்ரீரகுவர்ய தீர்த்தர்
* ஆண்டு 1534ல் பிருந்தாவனஸ்தர் ஆன ஸ்ரீகோவிந்த ஒடெயரு

* ஆண்டு 1539ல் பிருந்தாவனஸ்தர் ஆன ஸ்ரீவ்யாஸராயருக்குப் பிறகு, அங்கு வந்தவர்கள் இவ்வாறு:

* ஆண்டு 1564ல் ஸ்ரீஸ்ரீனிவாஸ தீர்த்தர்
* ஆண்டு 1584ல் ஸ்ரீராம தீர்த்தர்
* ஆண்டு 1623ல் ஸ்ரீசுதீந்திர தீர்த்தர்

இவர்கள் அனைவரையும் சேர்த்து, தற்போது அந்த இடம் 'நவ வ்ருந்தாவனம்' என்று அழைக்கப்படுகிறது.

வ்யாஸராயர மஹிமெ தி³னதி³ன
ப்³யாஸரில்லதெ³ படி²ப ஜனரிகெ³
க்லேஶ தே³ஹாயாஸ க⁴னதர தோ³ஷ ஸமனிஸவு
வாஸுதே³வன கருணவவனலி
ஸுஸிதுளகோது³ ஸம்ஶயாதகெ
கீஶ கு³ரு ஜக³ன்னாத² விட்டலனு ப்ரீதனாகு³வனு ||29

வ்யாஸராயர மஹிமெ - ஸ்ரீவ்யாஸராயரின் மகிமையானது; தினதின - தினம்தோறும்; ப்யாஸரில்லதெ - எவ்வித சோர்வும் இன்றி; படிப ஜனரிகெ - படிக்கும் மக்களுக்கு; க்லேஶ தேஹாயாஸ - பிரச்னைகள், உடற்சோர்வு, கனதர தோஷ - மிகப்பெரிய தோஷங்கள் (என எதுவும்); ஸமனிஸவு - ஏற்படாது; வாஸுதேவன கருணவு - ஸ்ரீஹரியின் அருள்; அவனலி - அந்த பக்தரில்; ஸுஸிதுளகோது - நிரம்பி வழியும்; ஸம்ஶயாதகெ - இதில் எதற்கு சந்தேகம்?; கீஶ - ஆனந்தமயனான; குரு ஜகன்னாத விட்டலன்; ப்ரீதனாகுவனு - மிகவும் மகிழ்கிறான்.

ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமைகளை இவ்வாறு பல சந்திகளில் சொல்லி, இத்துடன் அந்த மகிமைகளையும், இந்த சந்தியையும் முடிக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஸ்ரீவ்யாஸராயரின் மகிமையானது தினம்தோறும் எவ்வித சோர்வும் இன்றி படிக்கும் மக்களுக்கு, பிரச்னைகள், உடற்சோர்வு, மிகப்பெரிய தோஷங்கள் என எதுவும் ஏற்படாது. ஸ்ரீஹரியின் அருள் அந்த பக்தரில் நிரம்பி வழியும். இதில் எதற்கு சந்தேகம்?. ஆனந்தமயமான ஸ்ரீகுரு ஜகன்னாத விட்டலன் இதனால் மிகவும் மகிழ்கிறான்.

ஸ்ரீவ்யாஸராஜரின் மகிமைகளைப் போற்றும் ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் தனது கிருதியில் இவ்வாறு பாடியுள்ளார்.

வ்யாஸராயர சரணவனெ ஸேவிஸி ||ப

ஜயஜய ஷுபகாய ஜயஜயது வ்யாஸார்ய
ஜய மத்வமுனி ப்ரீய ஜய சந்த்ரிகாசார்ய
ஜயது வித்வத்தார்ய ஜயது ஸுரமுனி ப்ரீய
ஜயஜயது யதிவர்யனெ ||
காய பவ பித குரு கோவிந்த விட்டலகெ
ப்ரீய குருவ்யாஸார்ய ஸ்தோத்ரவனு பாவ ஸு
த்தியொளாவ பஜிஸுவனவகெ
பவவனதி உத்தரிஸெ நாவெயெனிஸுவுதிது

****

ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸரின்
கன்னட ஸ்ரீராகவேந்திர விஜயம்

சந்தி - 7

சந்தி 7ன் விஷய சுருக்கம்
ஸ்ரீராயரின் மகிமைகள், பல்வேறு உதாரணங்களுடன் / ஒப்பீடுகளுடன் இந்த சந்தியில் விளக்கப்பட்டுள்ளது.

ராக^{4}வேந்தி^{3}ரர விஜய பேளுவெ
ராக^{4}வேந்தி^{3}ரர கருண ப^{3}லத^{3}லி

ராக⁴வேந்திரர ப⁴குதராத³வரித³னு கேளுவுது³ ||

ஜய ஜயது கு³ருராய ஶுப⁴கர
ஜய ஜயது கவிகே³ய ஸுந்த³ர
ஜய ஜயது க⁴ன போ³த⁴ கு³ணக³ணபூர்ண க³ம்பீ⁴ர
ஜய ஜயது ப⁴க்தாலிபாலக
ஜய ஜயது ப⁴க்தேஷ்ட தா³யக
ஜய ஜயது கு³ருராக⁴வேந்தி³ரனெ பாஹி மாம் ஸதத ||1

ஜய ஜயது குருராய ஶுபகர - ஸ்ரீகுருராயருக்கு; நலன்களையே கொடுப்பவருக்கு; கவிகேய - மிகச்சிறந்த பண்டிதருக்கு; ஸுந்தர - அழகான தேகம் கொண்டவருக்கு; கன போத - மிகச்சிறந்த ஞானம் கொண்டவருக்கு; குணகணபூர்ண - நற்குணங்கள் பல கொண்டவருக்கு; கம்பீர - கம்பீரருக்கு; பக்தாலிபாலக - பக்தர்களின் வரிசையை காப்பவரான; பக்தேஷ்ட தாயக - பக்தர்கள் விரும்பியவற்றை கொடுப்பவரான; குருராகவேந்திரனே; பாஹி மாம் ஸதத - என்னை எப்போதும் காப்பாயாக.

ஸ்ரீராயரை வணங்கும் பிரார்த்தனை பத்யமாக இந்த முதல் பத்யத்துடன் சந்தியினை துவக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஸ்ரீகுருராயருக்கு, அனைவருக்கும் நலன்களையே கொடுப்பவருக்கு, மிகச்சிறந்த பண்டிதருக்கு, அழகான தேகம் கொண்டவருக்கு, மிகச்சிறந்த ஞானம் கொண்டவருக்கு, நற்குணங்கள் பல கொண்டவருக்கு, கம்பீரருக்கு, பக்தர்களின் வரிசையை காப்பவருக்கு, பக்தர்கள் விரும்பியவற்றை கொடுப்பவருக்கு வெற்றி / மங்களம் உண்டாகட்டும். ஹே ஸ்ரீகுருராகவேந்திரனே, என்னை எப்போதும் காப்பாயாக.

ஆதி³யலி ப்ரஹ்லாத நாமக
நாத³ த்ரேதாயுக³தி³ லக்ஷ்மண
நாத³ த்வாபரயுக³தி³ ப³ல பா³ல்ஹிக நாமத³லி
யாத³வேஶன ப⁴ஜிஸி கலியுக³
பாத³தொ³ளு தா எரடு³ ஜன்மவ
ஸாத³ரதி³ தா த⁴ரிஸி மெரெத³னு தே³வகு³ருராய ||2

ஆதியலி ப்ரஹ்லாத நாமகனாத - க்ருத யுகத்தில் ப்ரகலாத நாமகன் ஆனார்; த்ரேதாயுகதி லக்ஷ்மணனாத - த்ரேதாயுகத்தில் லட்சுமணனாக ஆனார்; த்வாபரயுகதி - த்வாபர யுகத்தில்; பல பால்ஹிக நாமதலி - பலராம மற்றும் பால்ஹிக ராஜராக; யாதவேஶன பஜிஸி - ஸ்ரீகிருஷ்ணனை வணங்கி; கலியுக பாததொளு - கலியுகத்தின் இந்த பாதத்தில்; தா எரடு ஜன்மவ - இரு அவதாரங்களை; ஸாதரதி - பக்தி மரியாதைகளுடன்; தா தரிஸி - தான் தரித்து; மெரெதனு தேவகுருராய - தான் திகழ்ந்தார்.

ஸ்ரீராயரின் முந்தைய அவதாரங்களை இந்த பத்யத்தில் விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

க்ருத யுகத்தில் பிரகலாதனாக அவதரித்தார்; த்ரேதாயுகத்தில் லட்சுமணனாக; த்வாபர யுகத்தில் பலராம மற்றும் பால்ஹிக ராஜராக அவதரித்து, ஸ்ரீகிருஷ்ணனை வணங்கி, பின், கலியுகத்தில் இந்த பாதத்தில் தான் இரு அவதாரங்களை பக்தி மரியாதைகளுடன் தான் தரித்து, ஸ்ரீராயர் திகழ்ந்தார்.

இவற்றில்: லக்ஷ்மண மற்றும் பலராமன் - சேஷனின் அவதாரங்கள்; மற்றவர்களெல்லாம் சேஷனின் ஆவேசங்கள். பகவந்தனே சங்குகர்ணனிடம் கூறியதைப் போல, சேஷனின் ஆவேசம் இருப்பவர்கள் - பிரகலாதன், பால்ஹிக ராஜா, ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீராயர் - இவர்கள் மட்டுமே அவதாரக் கிரமங்களாக கருதப்படுகிறார்கள்.

மேலும் விபீஷணனும்கூட சேஷனின் அவதாரம் என்று சொல்கிறோம். ஆனால், அந்தப் பெயர் இந்த பத்யத்தில் வரவில்லை.

ஸார ஸுந்த^{3}ரகாய ஸுகு^{3}ணோ
தா^{3}ர ஷுப^{4}தம ஸ்வீய மஹிமா
பாரகவினுத க^{2}யாத நிர்ஜிததோ^{3}ஷ ஹரிதோஷ
தா^{4}ருணீஸுர குமுதசந்தி^{3}ர
கோ^{4}ரபாதக திமிரதி^{3}னகர
தீ^{4}ர மத்^{4}வ மதாப்^{4}ஜ பா^{4}ஸ்கரனெனிஸி ராஜிபனு ||3

ஸார - உண்மையான அர்த்தத்தை உரைப்பவரே; ஸுந்தரகாய - அழகான தேகம் கொண்டவரே; ஸுகுணோதார - அற்புதமான நற்குணங்களைக் கொண்டவரே; ஷுபதம - நலன்களைக் கொடுப்பவரே; ஸ்வீய மஹிமா - சொந்தமான மகிமைகளைக் கொண்டவரே; பாரகவினுத - தெள்ளத்தெளிவாக உரைப்பவரே; க்யாத - புகழ்பெற்றவரே; நிர்ஜிததோஷ - தோஷங்கள் அற்றவரே; ஹரிதோஷ - அபாரமான நம்பிக்கையை அளிப்பவரே; தாருணீஸுர - பூலோக தேவதையே; குமுதசந்திர - வெண் சந்திரனே; கோரபாதக திமிர தினகர - கடுமையான தோஷங்களை / பிரச்னைகளை எரிக்கும் சூரியனே; தீர - தீரரே; மத்வ மதாப்ஜ - மத்வ மதத்தில் பிறந்த தாமரையே; பாஸ்கரனெனிஸி ராஜிபனு - அவரே சூரியனாக ஒளிர்கிறார்.

ஸ்ரீராயரின் மகிமைகளை இந்த பத்யத்தில் அருமையாக விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

உண்மையான அர்த்தத்தை உரைப்பவரே, அழகான தேகம் கொண்டவரே, அற்புதமான நற்குணங்களைக் கொண்டவரே, நலன்களைக் கொடுப்பவரே, சொந்தமான மகிமைகளைக் கொண்டவரே, தெள்ளத்தெளிவாக உரைப்பவரே, புகழ் பெற்றவரே, தோஷங்கள் அற்றவரே, அபாரமான நம்பிக்கையை அளிப்பவரே, பூலோக தேவதையே, வெண் சந்திரனே, கடுமையான தோஷங்களை / பிரச்னைகளை எரிக்கும் சூரியனே, தீரரே, மத்வ மதத்தில் பிறந்த தாமரையே, ஸ்ரீராயரே, சூரியனாக ஒளிர்பவரே.

ஸ்ரீஜகன்னாததாஸர் இயற்றிய 'ரோக ஹரணே' என்னும் பாடலில் ஸ்ரீராயரின் மகிமைகளை அற்புதமாக பாடியுள்ளார் என்பதை பார்க்கலாம்.

ஸந்தத துர்மத த்வாந்த திவாகர
ஸந்த வினுத மாத லாலிஸோ
ரோக ஹரணே க்ருபா ஸாகர ஸ்ரீகுரு
ராகவேந்திர பரிபாலிஸோ

ஸுரிஜன ஹ்ருத³யாப்³ஜ மந்தி³ர
ஹீர ஹார விபூ⁴ஷிதாங்க³னு
சாரு ரத்ன கிரீட குண்ட³ல ரத்ன மாலெக³ள

வாரிஜாக்ஷி மணியு துலஸி
ஸாரமாலெய த[4]ரிஸி யதிவர
தோருதிப்பனு பா[3]லஸூர்யன தெரதி[3] லோகத[3]லி ||4

ஸூரிஜன ஹ்ருதயாப்ஜ மந்திர - கற்றறிந்தவர்களின் இதய தாமரையில் வசிப்பவர்; ஹீர ஹார விபூஷிதாங்கனு - முத்துக்களால் கோர்க்கப்பட்ட மாலைகளை அணிந்தவர்; சாரு ரத்ன கிரீட குண்டல ரத்ன மாலெகள - அழகான ரத்தின கிரீடம், ரத்ன குண்டலம் ஆகியவற்றை அணிந்தவர்; வாரிஜாக்ஷி துலஸி மணியு - ஸ்ரீதுளசி மணி; ஸாரமாலெய தரிஸி - சரம்சரமாக அணிந்து; யதிவர - யதிவரனான ஸ்ரீராகவேந்திரர்; பாலஸூர்யன தெரதி - ஒரு பாலசூரியனைப் போல; லோகதலி - இவ்வுலகில்; தோருதிப்பனு - ஒளிர்கிறார்.

ஸ்ரீராயரின் தேக வர்ணனையை இங்கு அற்புதமாக செய்திருக்கிறார் ஸ்ரீதாஸர்.

கற்றறிந்தவர்களின் இதய தாமரையில் வசிப்பவர், முத்துக்களால் கோர்க்கப்பட்ட மாலைகளை அணிந்தவர், அழகான ரத்தின கிரீடம், ரத்ன குண்டலம் ஆகியவற்றை அணிந்தவர், ஸ்ரீதுளஸி மணிகளை சரம்சரமாக அணிந்து, ஒரு பாலசூரியனைப் போல ஸ்ரீராயர் இவ்வுலகில் ஒளிர்கிறார்.

இதையே ஸ்ரீகமலேஷ விட்டல தாஸர் தனது 'துங்கா தீர விராஜம் ' கிருதியில் இவ்வாறு பாடியுள்ளார்.

நிருபம சுந்தர காய சுஷீலம்
வர கமலேஷார்ப்பித நிஜ ஸகலம்
ராகவேந்திர குரு ராஜம் பஜமன
துங்கா தீர விராஜம்...

சாருதர கௌபீன பாது[3]க
தா[4]ரி த[3]ண்ட[3] கமண்ட[3] லாஞ்சித
ஸார த்[3]வாத[3]ஶ புண்ட்[3]ர முத்[3]ரெக[3]ளிந்த[3] சின்ஹிதனு
ஸாரித[3]வரக[4] ஹரிது[3] ஸுக[2]ப[2]ல
ஸூரி கொடு[3]தலி ஸர்வகாலதி[3]

தா⁴ருணி தளத³ல்லி ஈபரி மெரெத³ கு³ருராய ||5

சாருதர - அழகானவர்; கௌபீன பாதுக தாரி தண்ட கமண்ட லாஞ்சித - கௌபீன, பாதுகை, தண்டம், கமண்டலங்களை தரித்தவர்; ஸார த்வாதஶ புண்ட்ர முத்ரெகளிந்த சின்ஹிதனு - 12 அழகான புண்ட்ரங்களை, முத்திரைகளை தரித்தவர்; ஸாரிதவரக ஹரிது - பக்தர்களின் துக்கங்களை போக்கி; ஸுகபல கொடுதலி - சுகபலன்களைக் கொடுப்பதில்; ஸுரி - தேவதை; ஸர்வகாலதி - அனைத்து காலங்களிலும்; தாருணி தளதல்லி - இந்த பூமியில்; ஈபரி மெரெத குருராய - இவ்வாறாக திகழ்ந்த குருராயரே.

ஸ்ரீராயரின் தேக வர்ணனை இங்கும் தொடர்கிறது.

அழகானவர். கௌபீன, பாதுகை, தண்டம், கமண்டலங்களை தரித்தவர், 12 அழகான புண்ட்ரங்களை முத்திரைகளை தரித்தவர், பக்தர்களின் துக்கங்களை போக்கி, சுகபலன்களைக் கொடுப்பதில் தேவதை; அனைத்து காலங்களிலும் இந்த பூமியில் இவ்வாறாக திகழ்ந்த குருராயரே.

ஸ்ரீஅபினவ ஜனார்த்தன விட்டல தாஸர் பாடியுள்ள இந்தப் பாடலில் ஸ்ரீராயரின் தேக வர்ணனை அருமையாக வந்துள்ளது.

செலுவ ஸுமுக பணெயல்லி திலக நாமகளு நோடம்மா
ஜலமணிய கொரளல்லி துளஸிமாலெகளு பேளம்மா
ஸுலலித கமண்டலு தண்டவனெ தரிஸிஹனெ நோடம்ம
க்ஷுள்ள ஹிரண்யகனல்லி ஜனிஸித ப்ரகலாதனு தானில்ல்லிஹனம்ம ||
துங்கா தீரதி நிந்த ஸுயதிவரன்யாரே பேளம்மய்யா

மதிமதாம்வர ராக⁴வேந்தி³ரனு
மிதியுயில்லதெ³ மஹிமெ ஜனரிகெ³
ஸதத தோருத பொரெயுதிருவனு ஸகல ஸஜ்ஜனர
ஸதிஸுதாதி³ ஸுபா⁴க்³ய ஸம்பத³
மதியு ஞான ஸுப⁴க்தி தி³னதி³ன
விததவாகி³த்தகி²ல ஜனரனு ப்ரீதிகொ³ளிஸுதலி ||6

மதிமதாம்வர ராகவேந்திரனு - அறிஞர்களில் சிறந்தவரான ஸ்ரீராயர்; மதியுயில்லதெ - எவ்வித எல்லைகளும் இல்லாமல்; ஜனரிகெ - மக்களுக்கு; ஸதத மஹிமெ தோருத - எப்போதும் மகிமைகளைக் காட்டியவாறு; பொரெயுதிருவனு - அருள்கிறார்; ஸகல ஸஜ்ஜனர - அனைத்து ஸஜ்ஜனர்களையும்; ஸதி ஸுதாதி ஸுபாக்ய ஸம்பத மதியு ஞான ஸுபக்தி - மனைவி, மக்கள், பாக்கியம், செல்வம், அறிவு, ஞானம், பக்தி ஆகியவை; தினதின விததவாகித்து - தினம்தினம் வளருமாறு; அகில ஜனரனு - அனைத்து மக்களையும்; ப்ரீதிகொளிஸுதலி - அன்புடன் அருளியவாறு இருக்கிறார்.

ஸ்ரீராயர் அருளும் விஷயங்களை ஒரு பட்டியலாக இங்கே தந்திருக்கிறார் ஸ்ரீதாஸர்.

அறிஞர்களில் சிறந்தவரான ஸ்ரீராயர், எவ்வித எல்லைகளும் இல்லாமல் மக்களுக்கு எப்போதும் மகிமைகளைக் காட்டியவாறு, அருள்கிறார். அனைத்து ஸஜ்ஜனர்களையும், மனைவி, மக்கள், பாக்கியம், செல்வம், அறிவு, ஞானம், பக்தி ஆகியவை தினம்தினம் வளருமாறு அன்புடன் அருளியவாறே இருக்கிறார்.

இதையே ஸ்ரீஅப்பண்ணாசார்யர் இயற்றிய ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரத்திலும் இந்த வரிகளில் பார்க்கிறோம்.

சந்தான சம்பத் பரிஷுத்த பக்தி
விக்ஞான வாக்தேஹ ஸுபாடவாதீன் தத்வா...

ஸுரர நதி[3]யந்த[3]த[3]லி பாபவ
தரிவ நர்கன தெரதி[3] கத்தலெ
ஶரதி[4]தனயன தெரதி[3] தாபவ களெது[3] ஸுக[2]வீவ
ஸரியுகா[3]ணெனு இவர சர்யகெ
ஹரியு தானே ஸிரிய ஸஹிததி[3]
இருவ தானானந்த[3] முனிவர ஸகலஸுர ஸஹித ||7

ஸுரர நதியந்ததலி - தேவ நதியான கங்கையைப் போல; பாபவ தரிவனு - பாவங்களை போக்குகிறார்; அர்கன தெரதி கத்தலெ - சூரியனைப் போல இருட்டினை போக்குகிறார் (அஞ்ஞான); ஶரதிதனயன தெரதி - சமுத்ரனின் மகனான சந்திரனைப் போல;

தாபவ களெது - தாபத்தை களைந்து; ஸுகவீவ - சுகத்தைக் கொடுக்கிறார்; ஸரியுகாணெனு இவர சர்யகெ - இவருடைய மகிமைகளுக்கு ஈடு இணை என்று யாரையும் நான் காணவில்லை; ஹரியு தானெ ஸிரிய ஸஹிததி - ஸ்ரீஹரி, ஸ்ரீலட்சுமியுடனேயே; இருவ - இருக்கிறான்; தானானந்த முனிவர ஸகல ஸுர ஸஹித - தான், அனைத்து தேவதைகளுடன், மகிழ்ச்சியுடன் இருக்கிறான்; (ஸ்ரீராயரில், அவரின் பிருந்தாவனத்தில்).

ஸ்ரீராயரை கங்கை, சூரியன், சந்திரன் ஆகியோருடன் ஒப்பிடுகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

தேவ நதியான கங்கையைப் போல பாவங்களைப் போக்குகிறார். சூரியனைப் போல அஞ்ஞான இருட்டினை போக்குகிறார். சமுத்ரனின் மகனான சந்திரனைப் போல தாபத்தை களைந்து சுகத்தைக் கொடுக்கிறார். இவருடைய மகிமைகளுக்கு ஈடு இணை என்று யாரையும் நான் காணவில்லை. ஸ்ரீராயரில் / அவரது பிருந்தாவனத்தில் - ஸ்ரீஹரி, ஸ்ரீலட்சுமியுடனேயே இருக்கிறான்.

ஸ்ரீராயரின் பிருந்தாவனத்தில், ஸ்ரீஹரி நின்று அனைத்து செயல்களை செய்கிறான் என்பதை லட்சுமிபதி விட்டல தாஸர் இந்த கிருதியில் இவ்வாறு பாடுகிறார்.

ஈதனெ குரு ராகவேந்திர - க்யாத காணிரோ

சதுர்வித பலகளனு கொடுத யதிஷிரோமணி நாமதலி ஸ்ரீ
பதியு தானெ சக்ர ரூபதலி - இவரலி நிந்து
க்ருதிய நடெசுவ ஸர்வகாலதலி - ஈ மஹிமெயனு நா
துதிஸ பல்லனெ அல்பமதியல்லி ஸத்பக்தியல்லி
துதிஸுவர பாலிஸுவ லக்ஷ்மி பதிவிட்டலன ஸத்கருணதலி ||

இனிதெ மொத³லாத³மித கு³ணக³ண
வனதி⁴யெனிஸுதலவனிதளத³லி
அனுபமோபவ தானெ தன்னனு நம்பி³ ப⁴ஜிபரிகெ³
கனஸிலாத³ரு ஶ்ரமவ தோரதெ³
மனத³ ப³யகெய ஸலிஸி காயுவ
தனுஸுசா²யவ தெரதி³ திருகு³வ தன்ன ஜனரொட³னெ ||8

இனிதெ - இவ்வாறாக; மொதலாதமித குணகண வனதி - மேற்கூறிய அபாரமான மகிமைகளின் குண கணங்களின் கூட்டத்தில்; எனிஸுதலி - இத்தகைய கூட்டத்தில்; அவனிதளதலி - ஸ்ரீராயர் இந்த பூமியில்; அனுபமோபவ தானெ - ஒப்புமை இல்லாதவரான ஸ்ரீராயர்; தன்னனு நம்பி பஜிபரிகெ - தன்னை நம்பி வந்து சேவை செய்பவர்களுக்கு; கனஸிலாதரு ஶ்ரமவ தோரதெ - கனவில்கூட அவர்களுக்கு சிரமம் / கஷ்டம் வராமல்; மனத பயகெய ஸலிஸி காயுவ - மனதின் விருப்பங்களை அருளி காக்கிறான்; தனுஸுசாயவ தெரதி திருகுவ - சொந்த நிழலைப் போல இருக்கிறார்; தன்ன ஜனரொடனெ - தன் மக்களுடன் எப்போதும் இருக்கிறார்.

தன்னை நம்பி வந்த பக்தர்களை ஸ்ரீராயர் எப்படி காக்கிறார் என்று ஸ்ரீதாஸர் சொல்கிறார்.

இவ்வாறாக மேற்கூறிய அபாரமான மகிமைகளின் குண கணங்களின் கூட்டத்தில், இந்த பூமியில் ஒப்புமை இல்லாதவரான ஸ்ரீராயர், தன்னை நம்பி வந்து சேவை செய்பவர்களுக்கு கனவில் கூட அவர்களுக்கு சிரமம் / கஷ்டம் வராமல் மனதின் விருப்பங்களை அருளி காக்கிறார். சொந்த நிழலைப் போல இருக்கிறார். தன் மக்களுடன் எப்போதும் இருக்கிறார்.

இதையே ஸ்ரீஅபினவ ஜனார்த்தன விட்டல தாஸர் தனது 'துங்கா தீரதி' என்னும் தேவரநாமாவிலும் அழகாகப் பாடியுள்ளார் என்பதை பார்க்கலாம்.

ஸுந்தர சரணரவிந்தக்கெ பகுதியலிந்தா நோடம்மய்யா
வந்திஸி ஸ்துதிஸுவ பூஸுரவ்ருந்த நோடமய்யா
சந்ததலங்க்ருதியிந்த ஷோபிஸுவ ஆனந்த நோடம்மய்யா
ஹிந்தெ வ்யாஸமுனி எந்தெனிஸித கர்மந்திகளரஸக திந்த ரஹிதனெ ||

துங்கா தீரதி நிந்த ஸுவர யதிவரன்யாரே பேளம்மய்யா

ஏனு கருணியோ ஏனு தா³தனோ
ஏனு மஹிமெயோ ஏனு ஶகுதியோ
ஏனு இவரலி ஹரிய கருணவோ ஏனு தப ப³லவோ

ஏனு கீர்த்தியோ ஜக³தி³ மெரெவது³
ஏனு புண்யத³³ ப²லவோ இவரன
ஏனு வர்ணிபெ இவர சரியவனாவ ப³ல்லவனு ||9

ஏனு கருணியோ - எத்தகைய கருணாளு?; ஏனு தாதனோ - எத்தகைய அருளாளனோ?; ஏனு மஹிமெயோ - என்ன இவருடைய மகிமையோ?; ஏனு ஶகுதியோ - என்ன இவருடைய சக்தியோ?; ஏனு இரவலி ஹரிய கருணவோ? - இவரில் ஸ்ரீஹரியின் கருணை எத்தகையதோ?; ஏனு தப பலவோ - என்ன இவரது தவ வலிமையோ?; ஏனு கீர்த்தியோ ஜகதி மெரெவது? - உலகில் இருப்பதான இவரது புகழ் எத்தகையதோ?; ஏனு புண்யத பலவோ - இவரது புண்ணிய பலன் எத்தகையதோ?; இவரன ஏனு வர்ணிபெ - இவரை என்னவென்று சொல்லி வர்ணிப்பேன்?; இவர சரியவனாவ பல்லவனு - இவருடைய நடவடிக்கைகளை யார்தான் அறிவார்கள்?.

ஸ்ரீராயரின் மகிமைகளை எப்படி வர்ணிப்பது என்று சொல்லி சொல்லி வியக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

இவர் எத்தகைய கருணாளு? எத்தகைய அருளாளன்? என்ன இவருடைய மகிமையோ? என்ன இவருடைய சக்தியோ? இவரில் ஸ்ரீஹரியின் கருணை எத்தகையதோ? என்ன இவரது தவ வலிமையோ? உலகில் இருப்பதான இவரது புகழ் எத்தகையதோ? இவரது புண்ணிய பலன் எத்தகையதோ? இவரை என்னவென்று சொல்லி வர்ணிப்பேன்? இவருடைய நடவடிக்கைகளை யார்தான் அறிவார்கள்?.

இதையே ஸ்ரீஜகன்னாத தாஸரும் தனது ஒரு கிருதியில் இவ்வாறு சொல்லி ஸ்ரீராயரின் மகிமைகளை பாடுகிறார்.
பாரோ ராகவேந்திர பாரோ காருண்ய வாரிதி பாரோ
ஆராதிப பக்தர பீஷ்ட பூரயிஸுவ ப்ரபுவே பாரோ

த⁴ரணி தளத³லி மெரெவ கு³ருவர
சரிய திளியலு ஸுரரெ யோக³யரு
அரியரெந்தி³கு³ நரரு து³ருளரு பரமமோஹிதரு
மருளுமய ப⁴வதா³ஶ பாஶத³
உருளு கண்ணிகெ³ ஶிலுகி ஹக³லு

இருளுயனத³லெ ஏகவாகீ³ தொளலி ப³ளலுவரு ||10

தரணி தளதலி மெரெவ - இந்த பூமியில் திகழும்; குருவர சரிய திளியலு - குருவரரான ஶ்ரீராயரின் மகிமைகளை அறிவதற்கு; ஸுரரெ யோக்யரு - தேவதைகளே தகுதி பெற்றவர்கள்; நரரு - மக்கள்; அரியரெந்திகு - எப்போதும் அதனை அறியமாட்டார்கள்; துருளரு பரமமோஹிதரு - தாமஸர்கள் (அசுரர்கள்) எப்போதும் தற்காலிக சுகங்களை விரும்புபவர்கள்; மருளுமய பவதாஶ பாஶத - மயக்கும்படியான சம்சாரத்தின் ஆசாபாசம் என்னும்; உருளு கண்ணிகெ - மாலைக் கண் நோய் போல கண் தெரியாமல் இருக்கும் நோய்க்கு; ஶிலுகி - சிக்கி; ஹகலு இருளுயனதலெ - இரவு பகல் என்று சொல்ல முடியாதவாறு; ஏகவாகீ தொளலி பளலுவரு - எப்போதுமே அதில் சிக்கி மூழ்கி கஷ்டப்படுவார்கள்.

ஶ்ரீராயரின் மகிமைகளை நம்மால் புரிந்து கொள்ள முடியுமா என்று சொல்லி மலைக்கிறார் ஶ்ரீதாஸர்.

இந்த பூமியில் திகழும் குருவரரான ஶ்ரீராயரின் மகிமைகளை அறிவதற்கு தேவதைகளே தகுதி பெற்றவர்கள். மக்கள் எப்போதும் அதனை அறியமாட்டார்கள். தாமஸர்கள் எப்போதும் தற்காலிக சுகங்களை விரும்புபவர்கள். மயக்கும்படியான சம்சாரத்தின் ஆசாபாசம் என்னும் மாலைக் கண் நோய் போல கண் தெரியாமல் இருக்கும் நோய்க்கு சிக்கி, இரவு பகல் என்று சொல்ல முடியாதவாறு எப்போதும் அதில் சிக்கி மூழ்கி கஷ்டப்படுபவார்கள்.

இதே கருத்தினை ஶ்ரீதந்தெ ஹனுமேஷ விட்டல தாஸர் கீழ்க்கண்ட பாடலில் பாடியிருக்கிறார் என்பதையும் பார்க்கலாம்.

குரு ராகவேந்திர தவ சரண தருஷனகெ
பரலில்லவெந்து கோபவ மாட்வத்யாகோ

கெலுவில்ல மனதொளகெ பலவில்ல ஸம்ஸார
பாளெயொளகெ ஸிலுகி நா பெஸத்தனோ
ஹலபுவெனோ தாரித்ர்ய பவனெயனு தப்பிஸி
ஸுலப ஸாதனெ பேளி ஸலஹோ குருவரனே

கருணவாரிதி[4] ஶரணபாலக
தருண தி[3]னகரனெனிப கு[3]ருவர
சரண ஸேவக ஜனரபாலிப ஜனனி தெரத[3]ந்தெ
ஸுர தருவரத[3]ந்தெ ஸந்தத
பொரெது[3] தன்னய ப[4]குத ஜனரனு
த[4]ரணி மண்ட[3]லதொ[3]ளகெ[3] ராஜிப நதி[1]ப ஜனபூ[4]பா ||11

கருணவாரிதி - கருணைக்கடலான ஸ்ரீராயர்; ஶரணபாலக - தன்னை வணங்குபவர்களை காப்பவர்; தருண தினகரனெனிப - உதய சூரியன் எனப்படும்; குருவர சரண ஸேவக - குருவரரின் சரணங்களை வணங்கும்; ஜனரபாலிப - மக்களை காக்கிறார்; ஜனனி தெரதந்தெ - அவர்களின் சொந்த தாய் போல; ஸுர தருவரதந்தெ - தேவ வ்ருட்சத்தைப் போல (கல்பவ்ருட்சம்); தன்னய பகுத ஜனரனு - தன் பக்தர்களை; ஸந்தத பொரெது - எப்போதும் காத்து; தரணி மண்டலதொளகெ - இந்த பூமியில்; ராஜிப - திகழ்கிறார்; நதிப ஜனபூபா - மக்களின் அரசன் இவ்வாறாக நடந்து கொள்கிறார் (அருள்கிறார்).

சொந்தத் தாய் போல ஸ்ரீராயர் தன் பக்தர்களை காக்கும் விதத்தினை இந்த பத்யத்தில் சொல்லியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

கருணைக்கடலான ஸ்ரீராயர், தன்னை வணங்குபவர்களை காப்பவர். உதய சூரியன் எனப்படும் குருவரரின் சரணங்களை வணங்கும் மக்களை காக்கிறார். அவர்களின் சொந்தத் தாய் போல தேவ வ்ருட்சத்தைப் போல தன் பக்தர்களை எப்போதும் காத்து இந்த பூமியில் திகழ்கிறார். மக்களின் அரசன் இவ்வாறாக நடந்து கொள்கிறார்.

இதையே ஸ்ரீ அபினவ ஜனார்த்தனவிட்டல தாஸர், மந்த்ராலய மந்திர மாம்பாஹி என்னும் கிருதியில் இவ்வாறு பாடியிருக்கிறார்.

ஸுரதேனு கல்பதரு வரசிந்தாமணி
சரணாகதஜன பரிபாலத்வம்
அபினவ ஜனார்த்தன விட்டல பாதங்கள
அபிவந்திப முனி குலோத்தம

ஏனு சோத்³யவோ கலிய யுக³த³³லி
ஏனு ஈதன புண்ய ப³லவோ
ஏனு ஈதன வஶதி³ ஸ்ரீஹரி தானெ நிந்திஹனோ
ஏனு கருணாநிதி⁴யோ ஈதனு
ஏனு ப⁴குதரிக³ப⁴யதா³யக
ஏனு ஈதன மஹிமெ லோகக க³ம்யவெனிஸிஹுதோ³ ||12

ஏனு சோத்யவோ - என்ன ஆச்சரியமோ?; கலிய யுகதலி - இந்த கலியுகத்தில்; ஏனு ஈதன புண்ய பலவோ - என்ன இவரது புண்ணிய பலனோ?; ஏனு ஈதன வஶதி ஸ்ரீஹரி தானே நிந்திஹனோ - ஸ்ரீஹரி இவர் வசமாக இருப்பது என்ன விஷயமோ?; ஏனு கருணாநிதியோ ஈதனு?; - என்ன கருணாளுவோ இவர்?; ஏனு பகுதரிகபயதாயக - இவர் எப்படியாக பக்தர்களின் கஷ்டங்களை போக்குகிறாரோ?; ஏனு ஈதன மஹிமெ - என்ன இவரது மகிமையோ; லோகக கம்யவெனிஸிஹுதோ - உலகில் எல்லையற்றது எனப்படுகிறதே?;

ஸ்ரீராயரின் மகிமைகள், நமக்கு எவ்வளவு வியப்பாக இருக்கின்றன என்று சொல்கிறார் ஸ்ரீதாஸர்.

என்ன ஆச்சரியமோ? இந்த கலியுகத்தில் என்ன இவரது புண்ணிய பலனோ? ஸ்ரீஹரி இவரது வசமாக இருப்பது என்ன விஷயமோ? இவர் என்ன கருணாளுவோ? இவர் எப்படியாக பக்தர்களின் கஷ்டங்களை போக்குகிறாரோ? என்ன இவரது மகிமையோ, உலகில் எல்லையற்றது எனப்படுகிறதே?

இதையே ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரத்தில் உள்ள - அகம்ய மஹிமா லோகே; ராகவேந்திர பிரஸாதத: - என்னும் வரிகளும் சொல்கின்றன.

ஸ்ரீஜகன்னாத தாஸர் - யாகெ மூகனாத்யோ குருவே நீ - என்னும் கிருதியில் இவ்வாறு பாடியிருக்கிறார்.
நின்னந்த கருணியில்ல என்னந்த க்ருபணில்ல
கன்ன மஹிம நீ என்னனு பிட்டீஹ

விதி⁴யு ப³ரதி³ஹ லிபிய கார்யவ
ப³த³³லுமாடு³வ ஶகுதி நினகே³
பது³மனாப⁴னு த³³யதி³ தானேயித்த காரணதி³

ஸத³ய நின்னய பாத³பது³மவ
ஹ்ருத³ய மத்³யதி³³ ப⁴ஜிப ஶகுதிய
ஒத³கி³ஸுவது³யெந்து³³ நின்னனு நமிஸி பே³டு³வெனு ||13

விதியு பரதிஹ லிபிய கார்யவ - விதி எழுதியிருக்கும் எழுத்தினை; பதலுமாடுவ ஶகுதி - மாற்றுவதான சக்தியை; பதுமனாபனு நினகே தயதி தானேயித்த காரணதி - ஸ்ரீஹரியானவர் உனக்கு கொடுத்திருக்கிறார் என்பதால்; ஸதய நின்னய பாதபதுமவ - எப்போதும் உன் பாதங்களை; ஹ்ருதய மத்யதி - என் இதயத்தின் நடுவில்; பஜிப ஶகுதிய - வைத்து பூஜிக்கும் சக்தியை; ஒதகிசுவதுயெந்து - கொடுக்க வேண்டும் என்று; நின்னனு நமிஸி பேடுவெனு - உன்னை வணங்கி வேண்டிக் கொள்கிறேன்.

விதியையே மாற்றுவதான சக்தி ஸ்ரீராயருக்கு இருக்கிறது என்னும் செய்தியை இங்கு ஸ்ரீதாஸர் கூறுகிறார்.

விதி எழுதியிருக்கும் எழுத்தினை மாற்றுவதான சக்தியை ஸ்ரீஹரியானவர் உனக்கு கொடுத்திருக்கிறார் என்பதால் எப்போதும் உன் பாதங்களை என் இதயத்தின் நடுவில் வைத்து பூஜிக்கும் சக்தியை கொடுக்க வேண்டும் என்று உன்னை வணங்கி வேண்டிக் கொள்கிறேன்.

இதே கருத்தினை ஸ்ரீகமலேஷ விட்டலதாஸர் இவ்வாறு பாடியுள்ளார் என்பதை பார்க்கிறோம்.

வர மந்த்ராலய புர மந்திர தவ
சரண சேவகரு கரவ முகிது
கரெதரெ பரபாரதெ குருவே

க⁴டனவாக³த³³ கார்யக³ள நீ
க⁴டனமாடு³வ விஷயத³³லி நீ
தி⁴டனுயெனுதலி பே³டி³³கொம்பெ³னோ கருணவாரிதி⁴யே
ஶட²தி நின்னனு ப⁴ஜிஸதி³³ப்பர
ஶடவ களெத³³தி ஹிததி³³ நின்னய
ப⁴ட²ர கோடிகெ³³ க⁴டன மாடு³வதே³³னு அச்சரவோ ||14

கடனவாகத கார்யகள - நடக்கவே முடியாத செயல்களை; நீ கடனமாடுவ விஷயதலி - அதனை நிறைவேற்றி வைக்கும் விஷயத்தில்; நீ திடனுயெனுதலி - நீ கெட்டிக்காரர் என்பதாலேயே; பேடிகொம்பெனோ - உன்னை வேண்டிக் கொள்கிறேன்; கருணவாரிதியே - கருணைக்கடலே; ஜடதி நின்னனு - பிடிவாதத்தினால் (அறியாமையினால்) உன்னை; பஜிஸதிப்பர ஜடவ - வணங்காதவர்களின் அடத்தினை; களெது - நீக்கி; அதி ஹிததி - மிகவும் கருணையுடன் (அவரை); நின்னய படர கோடிகெ - உன் பக்தர்களின் குழுவில்; கடன மாடுவதேனு அச்சரவோ - சேர்த்துக் கொள்வதில் என்ன ஆச்சரியமோ?.

ஸ்ரீராயரைக் குறித்த பிரார்த்தனை ஸ்லோகமாக இது இருக்கிறது.

நடக்கவே முடியாத செயல்களை, செய்து முடிக்கும் விஷயத்தில் நீ கெட்டிக்காரர் என்பதாலேயே உன்னை வேண்டிக் கொள்கிறேன். கருணைக்கடலே, பிடிவாதத்தினால் / அறியாமையால் உன்னை வணங்காதவர்களின் அடத்தினை நீக்கி, மிகவும் கருணையுடன் அவரை உன் பக்தர்களின் குழுவில் சேர்த்துக் கொள்வதில் என்ன ஆச்சரியமோ?.

பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றும் ஸ்ரீராயரை ஸ்ரீஜகன்னாத தாஸர் இவ்வாறு வணங்கிப் பாடுகிறார்.
பாரோ ராகவேந்திர பாரோ காருண்ய வாரிதி பாரோ
ஆராதிப பக்தர அபீஷ்ட பூரயிஸுவ பிரபுவே பாரோ

நின்ன கருணகெ³ எணெய காணெனோ
நின்ன ஜகுதிகெ³ நமன மாடு³வெ
நின்ன கருணகடாக்ஷதி³ந்த³லி நோடோ³ கு³ருராய
நின்ன பத³யுக³த³லி ஸர்வத³
என்ன மனவனு நிலிஸி பாலிஸோ
நின்ன ஜன்யனு நானு என்னய ஜனக நீனல்லெ ||15

நின்ன கருணகெ எணெய காணெனோ - உன் கருணைக்கு இணையை நான் காணவில்லை; நின்ன ஜகுதிகெ - உன் சக்திக்கு (மகிமைக்கு); நமன மாடுவெ - வணங்குவேன்; நின்ன கருணகடாக்ஷதிந்தலி - உன் கருணைக் கடாக்ஷத்தால்; நோடோ குருராய - பார்ப்பாயாக

குருராயரே; நின்ன பதயுகதலி - உன் பாதங்களில்; ஸர்வத என்ன மனவனு நிலிஸி - என் மனதினை எப்போதும் நிறுத்தி; பாலிஸோ - அருள்வாயாக; நின்ன ஜன்யனு நானு - உன் மகன் நான்; என்னய ஜனக நீனல்லெ - என் தந்தை நீயல்லவா?.

ஸ்ரீராயரை தந்தையாக பாவித்து அவரிடம் ஸ்ரீதாஸர் முறையிடுவதாக இந்த பத்யம் உள்ளது.

உன் கருணைக்கு இணையை நான் காணவில்லை. உன் சக்திக்கு / மகிமைக்கு நான் வணங்குகிறேன். உன் கருணைக் கடாக்ஷத்தால் என்னை பார்ப்பாய், குருராயரே. உன் பாதங்களில் என் மனதினை எப்போதும் நிறுத்தி அருள்வாயாக. உன் மகன் நான். என் தந்தை நீயல்லவா?.

இதையே ஸ்ரீமத்வேஷ விட்டல தாஸரும் தனது பாடலில் ஸ்ரீராயரை தந்தையாக நினைத்து இவ்வாறு பாடுகிறார் என்பதை பார்க்கிறோம்.

பந்த துரிதகள களெயோ தந்தெ குருராயா
கந்தன பவணெய இந்து நோடதிரய்யா ||ப

பகவந்தனை தந்தையாக பாவித்து அவனின் கருணையை இவ்வாறு ஹரிகதாம்ருதஸாரத்தில் வர்ணிக்கிறார் ஸ்ரீஜகன்னாததாஸர்.

ஜனக தன்னாத்மஜகெ வரபூ
ஷண துகூலவ தொடிஸி தா வ
ந்தனெய கைகொளுதவன ஹரசுத ஹருஷபடுவந்தெ |

ஹிந்தெ³ மாடி³த³³ நின்ன மஹிமெக³
ளொந்து³ திளியது³ பேளோ ஶகுதியு
எந்தி³கா³த³ருபுட்டலாரது³ மனுஜராத³மகெ³
இந்து³ மஹிமவ தோரி ப⁴குதர
வ்ருந்த³ மோத³தி³ பாடி³குணிவது³
நந்த³ஸாக³ரமக்⁴ன வாது³த³ நோடி³ ஸுகி²ஸுவெனு ||16

ஹிந்தெ மாடித - நீ முன்னர் செய்த; நின்ன மஹிமெகளொந்து திளியது பேளோ - உன் மகிமையானது எனக்கு எதுவும் தெரியாது, நீயே சொல்வாயாக; எந்திகாதரு ஶகுதியு புட்டலாரது - அதனை அறியும்

சக்தியும் என்றுமே தோன்றாது; மனுஜராதமகெ - அதம மனிதர்களுக்கு; இந்து மஹிமவ தோரி - இன்று உன் மகிமையைக் காட்டுவாயாக; பகுதர வ்ருந்த - உன் பக்தர்களின் குழு; மோததி பாடி குணிவது - மகிழ்ச்சியுடன் பாடி ஆடுவது; நந்தஸாகரமக்ன வாதுத நோடி - மகிழ்ச்சிக் கடலில் மூழ்குவதைக் கண்டு; ஸுகிஸுவெனு - நான் மகிழ்வேன்.

ஸ்ரீராயரின் மகிமைகள் புரிந்து கொள்ளவே முடியாது என்கிறார் ஸ்ரீதாஸர்.

நீ முன்னர் செய்த உன் மகிமையானது எனக்கு எதுவும் தெரியாது. நீயே சொல்வாயாக. அதனை அறியும் சக்தியும் என்றுமே எனக்கு தோன்றாது. அதம மனிதர்களுக்கு இன்று உன் மகிமையைக் காட்டுவாயாக. உன் பக்தர்களின் குழு மகிழ்ச்சியுடன் பாடி ஆடுவது கண்டு நான் மகிழ்வேன்.

ஸ்ரீராயரின் மகிமைகளை ஸ்ரீவெங்கட விட்டல தாஸர் இவ்வாறு ஒரு கிருதியில் பாடியுள்ளார்.

வ்ருந்தாவன நோடி - ஆனந்த மதவேரி
சந்ததி த்வாதஸ பௌண்ட்ராங்கிதகொம்ப

தேஷதேஷதி மெச்சுத இல்லிகெ பந்து
வாஸவாகி ஸேவிப
பாஷெ கொட்டந்ததி பஹுவித வரகள
ஸுசுவ கர மஹாமஹிமெயிந்தொப்புவ

வ்யாஸமுனி கு³ருவர்ய என்னய
க்லேஷ நாஶனமாடி³ கருணதி³
வாஸுதே³வன ஹ்ருத³ய ஸத³னதி³ தோரி பொரெயெந்தே
வாஸ வாஸரத³ல்லி தவ பத³
ஆஶெயிந்த³லி ஸேவெ மாள்பெனு
தா³ஸனெனிஸி ப⁴வத³ ஸ்ரமபரிஹரிஸோ கு³ருராயா ||17

வ்யாஸமுனி குருவர்ய - ஸ்ரீவ்யாஸராய குருவர்யரே; க்லேஷ நாஶனமாடி - என்னுடைய கஷ்டங்களை போக்கி; கருணதி - கருணையுடன்; என்னய - என்னுடைய; ஹ்ருதய ஸதனதி - என்

இதயத்தில்; வாஸுதேவன தோரி - ஸ்ரீஹரியைக் காட்டி; பொரெயெந்தெ - அருள்வாயாக என்றேன்; வாஸ வாஸரதல்லி - தினமும்; தவ பத - உன்னுடைய பாதங்களை; ஆஒெயிந்தலி - மிகவும் பக்தியுடன்; ஸேவெ மாள்பெனு - சேவை செய்கிறேன்; தாஸனெனிஸி - உன்னுடைய தாஸன் என்று சொல்லிக் கொண்டு; ஈ பவத ஸ்ரம - இந்த சம்சார சாகரத்தின் கஷ்டங்களை; பரிஹரிஸோ குருராயா - பரிகரிப்பாயாக, குருராயரே.

சம்சார சாகரத்திலிருந்து உன் பக்தனை காப்பாற்றுவாயாக என்று ஸ்ரீதாஸர் மனமுருகி வேண்டிக் கொள்கிறார்.

ஸ்ரீவ்யாஸராய குருவர்யரே, என்னுடைய கஷ்டங்களைப் போக்கி கருணையுடன் என்னுடைய இதயத்தில் ஸ்ரீஹரியைக் காட்டி அருள்வாயாக என்றேன். தினமும் உன்னுடைய பாதங்களை மிகவும் பக்தியுடன் சேவை செய்கிறேன். உன்னுடைய தாஸன் என்று சொல்லிக் கொண்டு இந்த சம்சார சாகரத்தின் கஷ்டங்களை பரிகரிப்பாயாக, குருராயரே.

இதையே ஸ்ரீதந்தெ ஹனுமேஷ விட்டல தாஸர், தனது இந்த கீர்த்தனையில் இவ்வாறு பாடியுள்ளார்.

குரு ராகவேந்திரா தவ சரண தருஷனகெ
பரலில்லவெந்து கோபவ மாட்வத்யாதகோ

கெலுவில்ல மனதொளகெ பலவில்ல ஸம்ஸார
பளெயொளகெ ஸிலுகி நா பேஸட்டனோ
ஹலுபுவேனோ தாரித்ர்ய பவணெயனு தப்பிஸி
ஸுலப ஸாத்யனெ பேளி ஸலஹோ குருவரனே

தத்வஸாரவ திளிஸு ப[4]வதி[3] வி
ரக்த மதியனுயித்து தத்வத[3]
ஸக்த சித்தனமாடி[3] ப[4]க[3]வத் ப[4]க்தனெந்தெ[3]னிஸு
கெத்தவோல் மன்மனதி[3]யிருதிஹ
கத்தலெய பரிஹரிஸி தி[3]னதி[3]ன
உத்தமோத்தம ஞானப[4]குதியனித்து பொரெயென்ன ||18

தத்வஸாரவ திளிஸு - தத்வ ஸாரத்தை எனக்கு தெரிவிப்பாயாக; பவதி விரக்த மதியனுயித்து - சம்சாரத்தில் விரக்த மனதினைக் கொடுத்து; தத்வத அஸக்த சித்தனமாடி - தத்வத்தில் ஈடுபாடு கொள்ளும் மனதினைக் கொடுத்து; பகவத் பக்தனெந்தெனிஸு - பகவத் பக்தன் என்று என்னை சொல்ல வை; கெத்தவோல் - மிகவும் கருப்பாக; மன்மதியிருதிஹ - என்னுடைய மனதில் பரவியிருக்கும்; கத்தலெய - இருட்டினை (அஞ்ஞானத்தினை); பரிஹரிஸி - பரிகரித்து; தினதின - தினம்தோறும்; உத்தமோத்தம - மிகச்சிறந்த; ஞானபகுதியனித்து - ஞானபக்திகளைக் கொடுத்து; பொரெயென்ன - என்னை அருள்வாயாக.

ஞான பக்தி வைராக்கியங்களை வேண்டுவதான ஶ்ரீதாஸரின் பிரார்த்தனை வடிவமான பத்யம் இது.

தத்வ ஸாரத்தை எனக்கு தெரிவிப்பாயாக. சம்சாரத்தில் விரக்தி மனதினைக் கொடுத்து, தத்வத்தில் ஈடுபாடு கொள்ளும் மனதினைக் கொடுத்து, பகவத் பக்தன் என்று என்னை சொல்ல வை. மிகவும் கருப்பாக என் மனதில் பரவியிருக்கும் இருட்டினை (அஞ்ஞானத்தினை) பரிகரித்து, தினம்தோறும் மிகச்சிறந்த ஞான பக்திகளைக் கொடுத்து என்னை அருள்வாயாக.

பக்தர்களைக் காப்பவரான ஶ்ரீராயரைக் குறித்து ஶ்ரீஆனந்த விட்டல தாஸர் பாடிய ஒரு கீர்த்தனை இவ்வாறு உள்ளது.

தேரனேரி மெரெது பருவா பூஸுரவந்த்யா யாரக்கா
குரு ராகவேந்திரரெந்தெம்போ யதிகுலதிலகா கேள்தங்கி ||

வரஹஜ நதிய தீரதி இத்து பகுதர பொரெவவ யாரக்கா
ஹருஷதி ஆனந்த விட்டலன ஸாரித பரிமளார்ய கேள்தங்கி ||

ப்ரணத ஜனமந்தா³ர காமத³
க்ஷண க்ஷணக்கெ நின்ன கு³ணக³ள
க³ணனபூர்வக மனதி³ ஸந்தத ப⁴ஜனெகெ³ய்வந்தெ
மணிஸு மனவனு நின்ன பத³த³லி
கு³ணிஸி நின்னய ரூப நோடி³
த³ணிஸு நின்னவரொளகெ³ ஸந்தத எணிஸோ கருணாளோ ||19

காமத - விரும்பியவற்றை கொடுப்பவனான உன்னை; ப்ரணத ஜனமந்தார - (உன்னை) வணங்குபவர்களான மக்கள் குழுவினர்; க்ஷண க்ஷணக்கெ - ஒவ்வொரு நொடியும்; நின்ன குணகள - உன் குணங்களை; கணனபூர்வக - உன் மகிமைகளை அறிந்து; மனதி - அவர்களின் மனதில்; ஸந்தத பஜனெகெய்வந்தெ - எப்போதும் பஜனை செய்வதைப் போல; மனவனு - எங்களின் மனதினை; நின்ன பததலி - உன் பாதங்களில்; மணிஸு - வணங்கச் செய்; நின்னய ரூப நோடி - உன் ரூபத்தைப் பார்த்து; குணிஸி தணிஸு - ஆடி மகிழ்ச்சி செய்; நின்னவரொளகெ - நானும் உன்னுடையவன் என்று; ஸந்தத எணிஸோ கருணாளோ - என்றே எப்போதும் நினைப்பாயாக கருணாளோ.

ஸ்ரீராயரிடம் சரணாகதி அடைந்து அவரது அருளை இந்த பத்யத்தில் வேண்டுகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

விரும்பியவற்றைக் கொடுப்பவனான உன்னை வணங்குபவர்களான மக்கள், ஒவ்வொரு நொடியும் உன் குணங்களை, உன் மகிமைகளை அறிந்து, அவர்களின் மனதில் எப்போதும் பஜனை செய்வதைப் போல, எங்களின் மனதினை உன் பாதங்களில் வணங்கச் செய். உன் ரூபத்தைப் பார்த்து, ஆடி மகிழ்ச்சிப்படுத்து. நானும் உன்னுடையவன் என்றே எப்போதும் நினைப்பாயாக, கருணாளோ.

இதே கருத்தினை இந்த புகழ் பெற்ற பாடலில் ஸ்ரீகுருஸ்ரீஷ விட்டல தாஸர் இவ்வாறு வேண்டிக் கொள்கிறார்.

ஸேவகனெலோ நானு நின்னய பாத
ஸேவெ நீடெலோ நீனு
ஸேவகன ஸேவெயனு சேவிஸி
ஸேவ்ய ஸேவக பாவ வீயுத
தாவிஸ்யென்னனு பொரெயோ தரெயொளு
பாவனாத்மக காயோ கருணிஸி

பாரோ குருராகவேந்திரா

நின்ன கதெ²க³ள ஶ்ரவணமாடி³ஸு
நின்ன கு³ணகீர்த்தெனய மாடி³ஸோ

நின்ன ஸ்மரணெய நீடு³ ஸந்தத நின்ன பத³ஸேவா
நின்ன அர்ச்சனெகெ³யிஸோ கு³ருவர
நின்ன வந்த³னெகெ³யிஸோ தா³ஸ்யவ
நின்ன கெ³ளெதன நீடோ³ யதிவர என்னனர்ப்பிஸுவெ ||20

நின்ன கதெகள ஸ்ரவண மாடிஸு - உன் கதைகளையே / மகிமைகளையே கேட்கச் செய்வாயாக; நின்ன குணகீர்த்தனெய மாடிஸோ - உன் குண கானங்களையே சொல்லச் செய்; நின்ன ஸ்மரணெய நீடு - உன் சிந்தனையைக் கொடு; ஸந்தத நின்ன பதஸேவா - எப்போதும் உன் பாத சேவைகளை; நின்ன அர்ச்சனெகெயிஸோ - உன் அர்ச்சனையையே செய்ய வை; குருவர - ஹே குருவரனே; நின்ன வந்தனெகெயிஸோ - உன்னை வணங்கச் செய்; தாஸ்யவ, நின்ன கெளெதன நீடோ - தாஸ்யத்தையும், உன் நட்பினையும் எனக்குக் கொடு; யதிவர - யதிவரனே; என்னனர்ப்பிஸுவெ - நான் என்னையே அர்ப்பணம் செய்கிறேன்.

உன்னை வணங்குவதற்கும் நீயே அருள வேண்டும் - என்று பிரார்த்தனை செய்கிறார் ஸ்ரீதாஸர்.

உன் கதைகளையே / மகிமைகளையே கேட்கச் செய்வாயாக. உன் குண கானங்களையே சொல்லச் செய். உன் சிந்தனையைக் கொடு. எப்போதும் உன் பாத சேவைகளை, உன் அர்ச்சனையை செய்ய வை. ஹே குருவரனே, உன்னை வணங்கச் செய். உன் தாஸ்யத்தையும், நட்பினையும் எனக்குக் கொடு. நான் என்னையே உனக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

இதையே ஸ்ரீவிஜயதாஸர் மிகவும் மனமுருகி இந்த தேவரநாமாவில் வேண்டிக் கொள்கிறார்.

ராகவேந்திர குரு பாவனகாயா

ஷரணு ஹொக்கெனு இந்து கிரண போலுவ நிம்ம சரண
ஸ்மரணெ கருணிஸுவுது கருணாதிந்த குரு ||

அமித மஹிமனெ நின்ன பாத³கெ
நமிபெ மத்க்ருத தோ³ஷவெணிஸதெ³
க்ஷமிஸி ஸௌக்யவனித்து பாலிஸோ ஸுமனஸோத்தமனே

அமரரரியரக³ம்ய மஹிமவ
விமலகு³ணமய ப்ரப³லதம நீ
நமரதரு சிந்தாமணியு ஸுரதே⁴னு நீனய்யா ||21

அமித மஹிமனெ - அபாரமான மஹிமனெ; நின்ன பாதகெ நமிபெ - உன் பாதங்களில் விழுந்து வணங்குகிறேன்; மத்க்ருத தோஷவெணிஸதெ - நான் செய்த தோஷங்களை எதையும் எண்ணாமல்; க்ஷமிஸி ஸௌக்யவனித்து - என்னை மன்னித்து, எனக்கு நலன்களைக் கொடுத்து; பாலிஸோ - காப்பாயாக; ஸுமனஸோத்தமனே - நல் மனதினைக் கொண்ட உத்தமனே; அமரரரியரு - தேவதைகளும்கூட அறிய மாட்டார்கள்; அகம்ப மஹிமவ - உன் அபாரமான மகிமையை; விமலகுணமய - அற்புதமான குணங்களைக் கொண்டவரே; ப்ரபலதம - புகழ்பெற்றவரே; நீனு அமரதரு சிந்தாமணியு - நீயே கல்பவ்ருக்ஷ, சிந்தாமணி; ஸுரதேனு நீனய்யா - காமதேனு நீனய்யா.

கல்பவ்ருட்ச காமதேனு சிந்தாமணியான ஸ்ரீராயரை மேலும் ஸ்தோத்திரம் செய்கிறார் ஸ்ரீதாஸர்.

அபாரமான மஹிமனே. உன் பாதங்களில் விழுந்து வணங்குகிறேன். நான் செய்த தோஷங்களை எதையும் எண்ணாமல் என்னை மன்னித்து, எனக்கு நலன்களைக் கொடுத்து, காப்பாயாக. நல் மனதினைக் கொண்ட உத்தமனே, உன் அபாரமான மகிமைகளை தேவதைகள் கூட அறிய மாட்டார்கள். நீயே கல்பவ்ருக்ஷ, சிந்தாமணி, காமதேனு நீனய்யா.

இந்த ஸ்லோகத்தில் உள்ளதையே ஸ்ரீதாஸர் பாடியிருக்கிறார் என்பதாக அறிய வேண்டும்.
பூஜ்யாய ராகவேந்திராய ஸத்யதர்ம ரதாயச
பஜதாம் கல்பவ்ருக்ஷாய நமதாம் காமதேனவே

ஶிரதி³ நமனவ மாடி³ நின்னனு
கரத³ ஸம்புடமாடி³ வினயதி³
மரெயத³லெ நா பே³டி³கொம்பெ³னோ ஶரணபரிபால
பரம கருணியெ த்³விஜகெ ப³ந்தி³ஹ
மரண பி³டி³ஸி ஸுக²வ நீடி³தெ³

அரியலெந்தி³கு³ ஸாத்⁴யவல்லவோ நின்ன மஹமஹிமெ ||22

ஶிரதி நமனவ மாடி - தலையால் குனிந்து உன்னை வணங்கி; நின்னனு - உன்னை; கரத ஸம்புடமாடி - கைகளை குவித்து; வினயதி - பக்தி மரியாதைகளுடன்; மரெயதலெ - மறக்காமல்; நா பேடிகொம்பெனோ - நான் வேண்டிக் கொள்கிறேன்; ஶரணபரிபால - பக்தர்களை காப்பவனே; பரம கருணியே - கருணைக்கடலே; த்விஜகெ பந்திஹ - அந்த பிராமணனுக்கு வந்த; மரண பிடிஸி - மரணத்தை விடுவித்து; ஸுகவ நீடிதெ - சுகத்தைக் கொடுத்தாய்; நின்ன மஹமஹிமெ - உன்னுடைய மகா மகிமைகளை; அரியலெந்திகு - அறிவதற்கு என்றும்; ஸாத்யவல்லவோ - சாத்தியம் இல்லை.

ஸ்ரீராயரின் மகிமைகளை ஒரு உதாரணம் கொடுத்து இங்கு விளக்கியுள்ளார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

தலையால் குனிந்து உன்னை வணங்கி, உன்னை கைகளைக் குவித்து பக்தி மரியாதைகளுடன் மறக்காமல் நான் வேண்டிக் கொள்கிறேன். பக்தர்களைக் காப்பவனே, கருணைக்கடலே, அந்த பிராமணனுக்கு வந்த மரணத்தை விடுவித்து சுகத்தைக் கொடுத்தாய். உன்னுடைய மகா மகிமைகளை அறிவதற்கு என்றும் சாத்தியம் இல்லை.

ஸகலகு³ணக³ண பூர்ண ப⁴குதகெ³
அகி²ளகாமித³தா³த ஸுக²மய
விக²னஸாண்ட³தி³ ப்ரப³லதம நீனெனிஸி நெலிஸிர்ப்பெ
லகுமிரமண ப்ரீதிபாத்ரனெ
ப⁴குத கைரவஸ்தோம சந்தி³ர
முகுதிதா³யக மௌனிகுலமணி நமிபெ ஸலஹென்ன ||23

ஸகலகுணகண பூர்ண - அனைத்து குணகணங்களை முழுமையாகக் கொண்டவனே; பகுதகெ - உன் பக்தர்களுக்கு; அகிளகாமிததாத - அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றும் தந்தையே; ஸுகமய - சுகமயமானவனே; விகனஸண்டதி - இந்த பிரம்மாண்டத்தில்; ப்ரபலதம - புகழ்பெற்றவன்; நீனெனிஸி நெலிஸிர்ப்பெ - நீயே என்று திகழ்கிறாய்; லகுமிரமணன ப்ரீதிபாத்ரனெ - லட்சுமி ரமணனின் அன்பினைப் பெற்றவனே; பகுத கைரவ - தாமரை போன்ற பக்தர்களை; ஸ்தோம சந்திர - பூக்க வைக்கும் சந்திரனே; முகுதிதாயக - முக்தியைக்

கொடுப்பவரே; மௌனிகுலமணி - முனிவர்களில் சிறந்தவரே; நமிபெ ஸலஹென்ன - உன்னை வணங்குகிறேன், என்னை காப்பாயாக.

ஸ்ரீராயரின் நற்குணங்களை பாடியவாறு பக்தியுடன் இவ்வாறு வேண்டிக் கொள்கிறார் ஸ்ரீதாஸர்.

அனைத்து குணகணங்களை முழுமையாகக் கொண்டவனே. உன் பக்தர்களுக்கு அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றும் தந்தையே. சுகமயமானவனே. இந்த பிரம்மாண்டத்தில் புகழ்பெற்றவனே. லட்சுமி ரமணனின் அன்பினைப் பெற்றவனே. தாமரை போன்ற பக்தர்களை பூக்க வைக்கும் சந்திரனே. முக்தியைக் கொடுப்பவரே. முனிவர்களில் சிறந்தவரே. உன்னை வணங்குகிறேன். என்னை காப்பாயாக.

ஸ்வஸ்தி ஸ்ரீ கு³ருராக⁴வேந்த்³ரகெ³
ஸ்வஸ்தி கு³ணக³ண ஸாந்த்³ர மூர்த்திகெ³
ஸ்வஸ்தி ஸ்ரீயதிநாத² லோகதி³ க்²யாத மம நாத²
ஸ்வஸ்தி ஸ்ரீ கு³ரு ஸார்வபௌ⁴மகெ³
ஸ்வஸ்தி ஸ்ரீ ஸர்வக்³ஞ தமகே³
ஸ்வஸ்தி ஸ்ரீ ஸுரதே⁴னு ஸுரதரு நமிப ப⁴குதரிகெ³ ||24

ஸ்வஸ்தி ஸ்ரீ குருராகவேந்த்ரகெ - ஸ்ரீராகவேந்திரருக்கு மங்களம்; குணகண ஸாந்த்ர மூர்த்திகெ - குணங்களின் கடலான மூர்த்திக்கு; ஸ்ரீயதி நாத - யதிகளில் சிறந்தவரே; லோகதி க்யாத - உலகில் புகழ்பெற்றவரே; மம நாத - என் தலைவரே; ஸ்ரீகுரு ஸார்வபௌமகெ - குருகளில் சிறந்தவரே; ஸர்வக்ஞ - அனைத்தும் அறிந்தவர்; தமகெ - உங்களுக்கு மங்களம்; நமிப பகுதரிகெ - உன்னை வணங்கும் பக்தர்களுக்கு, நீயே; ஸுரதேனு - காமதேனு; ஸுரதரு - கல்பவ்ருக்ஷ.

ஸ்ரீராகவேந்திரருக்கு மங்களம் சொல்லியவாறு இந்த சந்தியினை முடிக்கும் நிலைக்கு வருகிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீராகவேந்திரருக்கு மங்களம். குணங்களின் கடலான மூர்த்திக்கு, யதிகளில் சிறந்தவருக்கு, உலகில் புகழ்பெற்றவருக்கு, என் தலைவருக்கு, குருகளில் சிறந்தவருக்கு, அனைத்தும் அறிந்தவருக்கு,

உங்களுக்கு மங்களம். உன்னை வணங்கும் பக்தர்களுக்கு நீயே காமதேனு, கல்பவ்ருக்ஷ.

க்²யாதனாத³னு ஸகலலோகக
நாத² பாலகனெம்போ³ பி³ருத³னு
ஈத ஸந்தத பொத்து மெரெவனு ஹரிய கருணத³லி
ஈதனே மஹதா³த ஜக³தொ³ளு
க்²யாத மஹிமனு ஶரணவத்ஸல
தா³த கு³ரு ஜக³ன்னாத² விட்டலன ஸேவகாக்³ரணியோ ||25

க்யாதனாதனு - புகழ்பெற்றவர்; ஸகலலோககனாத பாலகனெம்போ - அனைத்து உலகங்களின் மக்களை அருள்பவன் என்னும்; பிருதனு - விருதினை; ஈத ஸந்தத பொத்து மெரெவனு - இவர் எப்போதும் தாங்கி திகழ்கிறார்; ஹரிய கருணதலி - ஸ்ரீஹரியின் கருணையில்; ஈதனெ மஹதாத - இவரே அனைவருக்கும் தந்தை; ஜகதொளு க்யாத மஹிமனு - உலகில் புகழ்பெற்ற மகிமை பொருந்தியவர்; ஶரணவத்ஸல - பக்தர்களை காப்பவன்; தாத குரு ஜகன்னாதவிட்டலன - தந்தையான ஸ்ரீகுரு ஜகன்னாத விட்டலனின்; ஸேவகாக்ரணியோ - சேவைகளை செய்வதில் முதல்வன் இவரே.

ஸ்ரீராகவேந்திர விஜயத்தின் 7ம் ஸந்தியினை இவ்வாறு சொல்லி, ஸ்ரீகுரு ஜகன்னாத விட்டலனுக்கு அர்ப்பணம் செய்கிறார் ஸ்ரீதாஸர்.

உலகில் புகழ்பெற்றவர், அனைத்து உலக மக்களை அருள்பவர் என்னும் விருதினை இவர் எப்போதும் தாங்கித் திகழ்கிறார். ஸ்ரீஹரியின் கருணையில் இவரே அனைவருக்கும் தந்தை. உலகில் புகழ்பெற்ற மகிமை பொருந்தியவர். பக்தர்களை காப்பவர். தந்தையான ஸ்ரீகுரு ஜகன்னாத விட்டலனின் சேவைகளை செய்வதில் முதல்வன் இவரே.

இவ்வாறாக ஏழாம் சந்தியில், ஸ்ரீராயரின் நற்குணங்கள் / மகிமைகள், அவரிடம் ஸ்ரீதாஸர் செய்யும் பிரார்த்தனைகள் ஆகியவற்றை செய்து கொண்டாடியிருக்கிறார். இதையே மேலும் அடுத்த சந்திகளிலும் செய்திருக்கிறார் என்பதை பார்க்கப் போகிறோம்.

***

ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸரின்
கன்னட ஸ்ரீராகவேந்திர விஜயம்

சந்தி - 8

சந்தி 8ன் விஷய சுருக்கம்
ஸ்ரீராயரின் நற்குணங்கள் மகிமைகளை, பலவித உதாரணங்கள் / ஒப்பீடுகளுடன் இந்த சந்தியில் மிகவும் அற்புதமாக விளக்கியுள்ளார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ராக⁴வேந்தி³ரர விஜய பேளுவெ
ராக⁴வேந்தி³ரர கருண ப³லத³லி
ராக⁴வேந்திரர ப⁴குதராத³வரித³னு கேளுவுது³ ||

ஶரணு ஸ்ரீ கு³ருராஜ நின்னய
சரணகமலகெ மொரெய ஹொக்கெனோ
கருணவன்னொளகி³ரிஸி பாலிஸு கருண ஸாக³ரனெ
கரண மானிக³ளாத³ தி³விஜரு
ஶரணு பொக்கரு பொரெயரென்னனு
கருண நிதி⁴ நீனெந்து³ பே³டி³தெ³ ஶரண வத்ஸலனெ ||1

ஶரணு நீ குருராஜ - ஹே குருராஜரே, உன்னை சரணடைகிறேன்; நின்னய சரணகமலகெ - உன் சரண கமலங்களுக்கு; மொரெய ஹொக்கெனோ - நான் விழுந்து வணங்குகிறேன்; கருணவன்னொளகிரிஸி - உன் கருணையை எனக்குள் வைத்து; பாலிஸு கருண ஸாகரனெ - கருணைக்கடலே, என்னை காப்பாற்றுவாயாக; கரண மானிகளாத திவிஜரு - கரணாபிமானிகளான தேவதைகள்; ஶரணு பொக்கரு - உன்னையே சரணடைந்தனர் (அவர்களையே நீ காப்பாற்றினாய்); பொரெயரென்னனு - அப்படியே என்னையும் காப்பாற்றுவாயாக; கருண நிதி நீனெந்து - நீயே கருணாநிதி என்று; பேடிதெ - வணங்கினேன்; ஶரண வத்ஸலனே - பக்தவத்ஸலனே.

ஸ்ரீராயரின் பிரார்த்தனை வடிவமான பத்யமான இந்த முதல் பத்யத்தை இயற்றியிருக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஹே குருராஜரே, உன்னை சரணடைகிறேன். உன் சரண கமலங்களுக்கு நான் விழுந்து வணங்குகிறேன். உன் கருணையை எனக்கு காட்டி, என்னை காப்பாற்றுவாயாக. கரணாபிமானிகளான தேவதைகளை நீ காப்பற்றியதைப் போல, என்னையும் காப்பாற்றுவாயாக. நீயே கருணாநிதி என்று வணங்கினேன். பக்தவத்ஸலனே.

பாஹி பங்கஜனயன பாவன
பாஹி கு³ணக³³ண நிலய ஶுப⁴கர
பாஹி பரமோதா⁴ர ஸஜ்ஜனபால கம்பீ⁴ர
பாஹி சாருவிசித்ர சர்யனெ
பாஹி கர்மந்தீ⁴ஶ ஸர்வத³
பாஹி ஞான ஸுப⁴க்தி தா³யக பாஹி பரமாப்த ||2

பாஹி - காப்பாற்றுவாயாக; பங்கஜ நயன - தாமரைக் கண்ணனே; பாவன - பவித்ரமானவனே; குணகண நிலய - நற்குணங்களின் நிலயனே; ஶுபகர - நன்மைகளை செய்பவரே; பரமோதார - மிகவும் கருணாளுவே; ஸஜ்ஜனபால - சஜ்ஜனர்களை காப்பவரே; கம்பீர - கம்பீரரே; சாருவிசித்ர சர்யனே - மிகவும் அற்புதமான சரித்திரத்தைக் கொண்டவரே; கர்மந்தீஶ - யதிகளின் அரசனே; ஸர்வத - எப்போதும் இருந்து அருள்பவரே; ஞான ஸுபக்தி தாயக - ஞான பக்திகளைக் கொடுப்பவரே; பாஹி பரமாப்த - மிகவும் உற்றவனே, காப்பாற்றுவாயாக.

ஸ்ரீராயரின் பல்வேறு குணங்களை ஒரு பட்டியலாக இங்கு பாடியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

தாமரைக் கண்ணனே, பவித்ரமானவனே, நற்குணங்களின் நிலயனே, நன்மைகளை செய்பவரே, மிகவும் கருணாளுவே, ஸஜ்ஜனர்களை காப்பவரே, கம்பீரரே, மிகவும் அற்புதமான சரித்திரத்தைக் கொண்டவரே, யதிகளின் அரசனே, எப்போதும் இருந்து அருள்பவரே, ஞான பக்திகளைக் கொடுப்பவரே, மிகவும் உற்றவரே, என்னை காப்பாற்றுவாயாக. எனக்கு அருள்வாயாக.

ஏனு பே³ட³³லு நின்ன பே³டு³வெ
ஹீனமனுஜர கேளராலெனோ

தீ⁴ன ஜனருத்³தா⁴ரி ஈப்ஸிததா³னி நீனெந்து³
ஸானுராக³தி³ நின்ன நம்பிதெ³
நீனெ என்னபி⁴மான ரக்ஷக
நானா வித³வித³தி³ந்த³ க்லேஶக³ளின்னு ப³ரலேனு ||3

ஏனு பேடலு நின்ன பேடுவெ - என்ன வேண்டுமென்றாலும் அதனை உன்னிடமே வேண்டுவேன்; ஹீனமனுஜர கேளராலெனோ - வேறு சிறியவர்களைச் சென்று நான் கேட்க மாட்டேன்; தீன ஜனருத்தாரி - உன் பக்தர்களை/ எளியவர்களை அருள்பவனே; ஈப்ஸிததானி - விரும்பியவற்றை அருள்பவனே; நீனெந்து - இவை அனைத்தும் நீயே என்று; ஸானுராகதி - எப்போதும்; நின்ன நம்பிதெ - உன்னையே நம்பினேன்; நீனெ என்னபிமான ரக்ஷக - நீயே எனக்கு மிகவும் பிடித்த ரக்ஷகன்; நானா விதவிததிந்த - பற்பல விதங்களான; க்லேஶகளின்னு பரலேனு - கஷ்டங்கள் எனக்கு வந்தாலும் என்ன?.

எனக்கு இருக்கும் ஒரே கதி நீதான். உன்னைத் தவிர வேறு யாரையும் வேண்ட மாட்டேன் என்கிறார் ஸ்ரீதாஸர்.

நான் என்ன வேண்டுமென்றாலும், அதனை உன்னிடமே வேண்டுவேன். வேறு சிறியவர்களைச் சென்று நான் கேட்க மாட்டேன். உன் பக்தர்களை / எளியவர்களை அருள்பவனே. விரும்பியவற்றை அருள்பவனே. இவை அனைத்தும் நீயே என்று, எப்போதும் உன்னையே நம்பினேன். நீயே எனக்கு மிகவும் பிடித்த ரக்ஷகன். பற்பல விதங்களான கஷ்டங்கள் வந்தால்தான் என்ன?.

நீசரல்லிகெ போகி யாசிஸதெ - என்று ஸ்ரீஜகன்னாததாஸர், பலவிது பாள்துதக்கெ' வில் பாடியதையே இங்கு சொல்லியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

முகி³லு பரிமித கல்லுமுரிது³
ஹெக³ல ஶிரத³லி பீ³ளலேனோ
ஹக³லிருளு ஏகாகி³ பெ³ங்கிய மளெயு ப³ரலேனு
ஜக³வனாளுவ த்⁴வரியு முனிது³
நிக³ட³ காலிகெ³ ஹாகலேனோ
மிகி³லு து³க்க² தரங்க³ த²ரத²ர மீரி ப³ரலேனு ||4

முகிலு பரிமித கல்லுமுரிது - மேகமோ; பரிமித கல்லுமுரிது - ஒரு பெரிய கல்லோ / பாறையோ உடைந்து; ஹெகல ஶிரதலி - என் முதுகில் / தலையில்; பீளலேனோ - விழுந்தால் என்ன?; ஹகலிருளு ஏகாகி - இரவும் பகலுமாக தொடர்ந்து; பெங்கிய மளெயு பரலேனு - நெருப்பு மழை பொழிந்தால்தான் என்ன?; ஜகவனாளுவ - இந்த நாட்டை ஆளும்; த்வரியு முனிது - அரசன், கோபம் கொண்டு; காலிகெ - காலுக்கு; நிகட - சங்கிலி; ஹாகலேனோ - கட்டினால் என்ன?; மிகிலு துக்க தரங்க - துக்கங்களின் கடல் அதிகமாகி; தரதர மீரி பரலேனு - அலைகளாக பாய்ந்து வந்தால்தான் என்ன?

எவ்விதமான கஷ்டங்கள் வந்தாலும்தான் என்ன என்று போன பத்யத்தில் கூறியதற்கு இங்கு சில உதாரணங்களை சொல்லி, ஸ்ரீராயரிடம் சரணடைகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

மேகமோ, ஒரு பெரிய பாறையோ உடைந்து என் முதுகில் / தலையில் விழுந்தால் என்ன? இரவும் பகலுமாக தொடர்ந்து நெருப்பு மழை பொழிந்தால்தான் என்ன? இந்த நாட்டை ஆளும் அரசன் கோபம் கொண்டு என் காலில் சங்கிலி கட்டினால் என்ன? துக்கங்களின் கடல் அதிகமாகி அலைகளாக பாய்ந்து வந்தால்தான் என்ன?

ராக[4]வேந்த்[3]ரனெ நின்ன கருணத[3] அ
மோக[4] வீக்ஷணலேஶ என்னலி
யோக[3]வாது[3]த[3]ரிந்த[3] சிந்தெயு யாதகெனகி[3]ன்னு
யோகி[3]குல ஶிரோரத்ன நீனிரெ
ஜோகி[3] மானவக[3]ணக[3]ளிந் தெ[3]ன
கா[3]க்[3]வ கார்யக[3]ளேனுயில்லவோ நீனெ ஸர்வக்ஞ ||5

ராகவேந்திரனே - ஸ்ரீராயரே; நின்ன கருணத - உன் கருணையின்; அமோக வீக்ஷணலேஶ - உன் அபாரமான பார்வையின் ஒரு துளி; என்னலி - என்னில்; யோகவாதுதரிந்த - விழுந்ததால்; எனகின்னு - எனக்கு வேறு எந்த; சிந்தெயு யாதகெ - கவலையும் எனக்கு எதற்கு?; யோகிகுல ஶிரோரத்ன - யோகிகளில் சிறந்தவரான; நீனிரெ - நீங்கள் இருக்கையில்; ஜோகி மானவகளிந்த - சாதாரண மனிதர்களால்; எனகாக்வ – எனக்கு ஆக வேண்டிய; கார்யகளேனுயில்லவோ - காரியங்கள் எதுவும் இல்லை; நீனே ஸர்வக்ஞ - நீயே ஸர்வக்ஞன் ஆக இருக்கிறாய்.

ஸ்ரீராயரின் கருணைப் பார்வையை வேண்டியவாறு இந்த பத்யத்தை பாடியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீராயரே, உன் கருணையின், அபாரமான பார்வையின் ஒரு துளி, என்னில் விழுந்ததால் எனக்கு வேறு எந்த கவலையும் இல்லை. யோகிகளில் சிறந்தவரே, நீங்கள் இருக்கையில் சாதாரண மனிதர்களால் எனக்கு ஆக வேண்டிய காரியங்கள் வேறு எதுவும் இல்லை. நீயே ஸர்வக்ஞனாக இருக்கிறாய்.

அமரஜக்வரி மனெயொளிருதிரெ
ப்ரமதி[3] கோ[3]மய புடு[3]கி தருவரெ
அமலதர ஸுரவ்ருக்ஷ நீனிரெ திந்த்ரிணி பயகே ?
அமிதமஹிமோபேத நீனிரெ
ப்[4]ரமிதராகி[3]ஹ நரர பே[3]டு[3]த[3] அ
ப்ரமித வந்தி[3]த பாத[3]யுக[3]ளனெ நினகெ[3] ஸம்மதவெ ||6

அமரஜக்வரி - தேவநதி(யான கங்கை); மனெயொளிருதிரெ - நம் வீட்டிலேயே இருக்கையில்; ப்ரமதி கோமய புடிகி தருவரெ - மிகவும் கஷ்டப்பட்டு கோமயத்தை தேடிக் கொண்டு வருவாரா?; அமலதர - அனைத்தையும் தரக்கூடிய அற்புதமான; ஸுரவ்ருக்ஷ நீனிரெ - கல்பவ்ருக்ஷமாக நீ இருக்கையில்; திந்த்ரிணி பயகெ? - புளிப்பான புளியை யாராவது விரும்புவார்களா?; அமிதமஹிமோபேத - அபாரமான மகிமைகளைக் கொண்ட; நீனிரெ - நீ இருக்கையில்; ப்ரமிதராகிஹ நரர - மயக்கத்தில் இருப்பவர்களான மனிதர்களை; பேடுத - வேண்டுவது; அப்ரமித - எல்லைகளற்ற; வந்தித - வணங்கத்தக்க; பாதயுகளனெ - பாதங்களைக் கொண்ட; நினகெ - உனக்கு; ஸம்மதவெ - சம்மதமா?

ஸ்ரீராயரை கல்பவ்ருக்ஷமாக, கங்கையுடன் ஒப்பிட்டு கூறுகிறார் ஸ்ரீதாஸர்.

தேவநதியான கங்கை நம் வீட்டிலேயே இருக்கையில், மிகவும் கஷ்டப்பட்டு கோமயத்தை தேடிக்கொண்டு வருவாரா? அனைத்தையும் தரக்கூடிய அற்புதமான கல்பவ்ருக்ஷமாக நீ இருக்கையில் புளிப்பான புளியை யாராவது விரும்புவார்களா?. அபாரமான மகிமைகளைக் கொண்ட நீ இருக்கையில் மயக்கத்தில்

இருப்பவர்களான மனிதர்களை வேண்டுவது என்பது, எல்லைகளற்ற வணங்கத்தக்க பாதங்களைக் கொண்ட உனக்கு சம்மதமா?

எதைக் கேட்டாலும் கொடுப்பதான காமதேனு இருக்க, கோமயத்தை யாராவது விரும்புவார்களா? என்று இந்த பத்யத்தில் ஸ்ரீஜகன்னாததாஸர் கேட்டிருப்பதையே இங்கு ஸ்ரீதாஸரும் சொல்லியிருக்கிறார்.

க்ஷோணிபதி ஸுதனெனிஸி கை து[3]
க்[3]கா[3]ணிகொ[3]ட்டுவ தெரதி[3] ஸுமனஸ
தே[4]னு மனெயொளகி[3]ரலு கோ[3]மய ப[3]யஸுவந்த[3]த[3]லி |
வேணுகா[3]னப்ரியன அஹிக ஸு
கா[2]னுப[4]வ பே[3]ட[3]த[3]லெ லகுமி
ப்ராண நாத[2]ன பாத[3]ப[4]கு[3]தி[1]ய பே[3]டு[3] கொண்டா[3]டு[3] ||

பூ[4]ப நந்த[3]னனெனிஸி தா கர
தீ[3]பதெ[3]ண்ணிகெ[3] திருபெ பே[3]ட்[3]வரெ
ஆ பயோநிதி[4] தடதி[3] ஸந்தத வாஸவாகி[3]ர்த்து[3]
கூபஜல தா ப[3]யஸுவந்த[3]தி[3]
தாப மூரர ஹாரி நீனிரெ
ஈபரீ பரியிந்த[3] பரரிகெ[3] பே[3]டி[3]கொம்புவுதெ[3] ||7

பூப நந்தனனெனிஸி - அரசன் என்று நினைத்துக் கொண்டு; தா - அவன்; கரதீபதெண்ணிகெ - கை விளக்குக்குக்கான எண்ணெய்க்காக; திருபெ பேட்வரெ - காசு கேட்பாரோ?; ஆ பயோநிதி தடதி - அந்த பாற்கடலின் கரையிலேயே; ஸந்தத வாஸவாகிர்த்து - எப்போதும் வசித்து வந்து; கூபஜல தா பயஸுவந்ததி - கிணற்றுத் தண்ணீரை விரும்புவதைப் போல; தாப மூரர - ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதெய்விக என்னும் மூன்று தாபங்களை; ஹாரி நீனிரெ - அவற்றைப் போக்குபவனாக நீ இருக்கையில்; ஈபரீ பரியிந்த - இப்படியாக பல்வேறு வழிகளில்; பரரிகெ பேடிகொம்புவுதெ - பிறரிடம் போய் வேண்டிக் கொள்ள முடியுமா?.

நம்முடைய மூன்று வித தாபங்களை போக்கக்கூடியவர் ஸ்ரீராயர் என்கிறார் ஸ்ரீதாஸர்.

அரசன் என்று தன்னை சொல்லிக் கொண்டு, அவன் கைவிளக்குக்கான எண்ணெய்க்காக பிறரிடம் காசு கேட்பாரோ?. அந்த பாற்கடலில் கரையிலேயே எப்போதும் வசித்து வந்து, கிணற்றுத் தண்ணீரை விரும்புவதைப் போல, ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதெய்விக என்னும் மூன்று தாபங்களை அவற்றைப் போக்குபவனாக நீ இருக்கையில், இப்படியாக பல்வேறு வழிகளில் பிறரிடம் போய் நான் வேண்டிக் கொள்ள முடியுமா?.

ப³ல்லித³ரிக³தி ப³ல்லித³னு நீ
நெல்ல திளித³வரொளகெ³ திளித³வ
நெல்லி காணெனோ நினகெ³ ஸமஸூர ஸங்க³தொ³ளகி³ன்னு
எல்லகாலதி³ ப்ராணலகுமி
நல்ல நின்னொளு நிந்து கார்யக³
ளெல்ல தானேமாடி³ கீர்த்திய நினகெ³ கொடு³திப்ப ||8

பல்லிதரிகதி பல்லிதனு - உன்னை அறிந்தவர்களுக்கு, நீ மிகவும் நெருங்கியவன்; நீ எல்ல திளிதவரொளகெ திளிதவ - அனைத்தும் அறிந்தவர்களில் அறிந்தவன்; எல்லி காணெனோ நினகெ ஸம - உனக்கு சமமானவர்கள் என நான் எங்கு பார்ப்பேன்?; ஸூர ஸங்கதொளகின்னு - நீ எப்போதும் சுரர்களின் சங்கத்திலேயே இருக்கிறாய்; (எப்படியென்றால்); எல்லகாலதி - எப்போதும்; ப்ராணலகுமினல்ல - முக்யபிராணாந்தர்கத லட்சுமி நாராயணன்; நின்னொளு நிந்து - உனக்குள் நின்று; கார்யகளெல்ல தானேமாடி - அனைத்து செயல்களையும் தானே செய்து; நினகெ - உனக்கு; கீர்த்திய கொடுதிப்ப - புகழினைக் கொடுக்கிறார்கள்.

பகவந்தன், மற்ற தேவர்களுடன் ஸ்ரீராயரில் / அவரது பிருந்தாவனத்தில் இருக்கிறார் என்பதை மறுபடி இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

உன்னை அறிந்தவர்களுக்கு நீ மிகவும் நெருங்கியவன். அனைத்தும் அறிந்தவர்களில் நீ அறிந்தவன். உனக்கு சமமானவர்களை நான் எங்கு பார்ப்பேன்?. நீ எப்போதும் சுரர்களின் சங்கத்திலேயே இருக்கிறாய். எப்போதும் முக்யபிராணாந்தர்கத லட்சுமி நாராயணன், உனக்குள் நின்று அனைத்து செயல்களையும் தானே செய்து, உனக்கு புகழினைக் கொடுக்கிறார்.

உன்னை அறிந்தவர்களுக்கு நீ மிகவும் அறிந்தவன் என்று ஸ்ரீஜகன்னாததாஸர் ஹரிகதாம்ருதஸாரத்தில் பகவந்தனைக் குறித்து பாடியிருக்கிறார். இதே பதத்தினை இங்கும் ஸ்ரீதாஸர் பயன்படுத்தியிருக்கிறார் என்று பார்க்கிறோம்.

ப[3]ல்லித[3]ரிக[3]தி[1] பல்லித[3]னு ஸரி
யில்ல இவகா[3]வல்லி நோட[3]லு
கு[2]ல்ல மானவரொல்லன ப்ரதி[1]மல்ல ஜகக்கெ[1]ல்ல ||

ஏனு புண்யவோ நின்ன வஶத[3]லி
ஸ்ரீ நிவாஸனு ஸததயிப்பனு
நீனெ லோகத்ரயதி[3] த[4]ன்யனு மான்ய ஸுரரிந்த[3]
தீ[4]னராகி[3]ஹ ப[4]குத ஜனரிகெ[3]
நானகாமித நீடோ[3]கோ[3]ஸுக[3]
தானெ ஸர்வ ஸ்த[2]ளதி[3] நிந்து[1] கொடு[3]வனகி[2]ளார்த்த[2] ||9

ஏனு புண்யவோ நின்ன வஶதலி - உன்னிடம் எவ்வளவு புண்ணியம் இருக்கிறதோ?; ஸ்ரீநிவாஸனு ஸததயிப்பனு - ஸ்ரீனிவாஸன் எப்போதுமே உன்னிடம் இருப்பான்; நீனே லோகத்ரயதி தன்யனு - நீனே மூன்று உலகங்களிலும் தன்யன்; ஸுரரிந்த மான்ய - தேவதைகளாலும் மதிக்கப்படுபவன்; தீனராகிஹ பகுத ஜனரிகெ - வேறு கதியற்ற உன் பக்தர்களுக்கு; நானகாமித - சதுர்வித பல புருஷார்த்தங்களை; நீடோகோஸுக - கொடுப்பதற்காக; தானெ ஸர்வ ஸ்தளதி - ஸ்ரீனிவாஸனே அனைத்து இடங்களிலும்; நிந்து - நின்று; கொடுவனகிளார்த்த - அகிளார்த்தங்களைக் கொடுக்கிறான்.

ஸ்ரீராயரால் சிபாரிசு செய்யப்பட்டவர்களுக்கு பகவந்தன் அனைத்து நலன்களையும் அளிக்கிறான் என்று இங்கு விளக்கியிருக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

உன்னிடம் எவ்வளவு புண்ணியம் இருக்கிறதோ?. ஸ்ரீனிவாஸன் எப்போதுமே உன்னிடம் இருப்பான். நீயே மூன்று உலகங்களிலும் தன்யன். தேவதைகளாலும் மதிக்கப்படுபவன். வேறு கதியற்ற உன் பக்தர்களுக்கு சதுர்வித பல புருஷார்த்தங்களை கொடுப்பதற்காக ஸ்ரீனிவாஸனே அனைத்து இடங்களிலும் நின்று அகிளார்த்தங்களைக் கொடுக்கிறான்.

க்ஷாந்தி கு³ணத³லி ஶிவனதெர ஸ்ரீ
காந்த ஸேவெகெ³ பொ³ம்ம போலுவ
நந்தரங்க³ க³ம்பீ⁴ர தனத³லி ஸிந்து⁴ ஸமனெனிப
தாந்த ஜனரகு⁴ குலகெ வருணன
காந்தெ தெர தானிப்ப ஶப்³த³த்³ய
நந்த போலுவனர்த்த²த³லி கு³ரு ராஜ்யத³லி ராம ||10

க்ஷாந்தி குணதலி ஶிவனதெர - பொறுமை குணத்தில் சிவனைப் போல; ஸ்ரீகாந்த ஸேவெகெ பொம்ம போலுவ - ஸ்ரீகாந்தனின் சேவை செய்வதில் பிரம்மனைப் போல; அந்தரங்க கம்பீர தனதலி - அந்தரங்க கம்பீரத்தில்; ஸிந்து ஸமனெனிப - கடல் போல இருக்கிறார்; தாந்த ஜனரகு குலகெ - பக்தர்களின் குலத்திற்கு; வருணன காந்தெ தெர தானிப்ப - கங்கையைப் போல இருக்கிறார்; ஷப்தத்யனந்த போலுவனர்த்ததலி - ஷப்தங்கள் ஆதியிலிருந்து அனந்த காலம் வரைக்கும் இருப்பதைப் போல; குரு - குரு இருக்கிறார்; ராஜ்யதலி ராம - ஆட்சி செய்வதில் ராமனைப் போல இருக்கிறாய்.

ஸ்ரீராயரை சிவனை, பிரம்மனை, கடலை, கங்கையை, ஸ்ரீராமனை ஒப்பிட்டு அவரது குணங்களை போற்றுகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

பொறுமை குணத்தில் சிவனைப் போல, ஸ்ரீகாந்தனின் சேவை செய்வதில் பிரம்மனைப் போல, அந்தரங்க கம்பீரத்தில் கடல் போல இருக்கிறார். பக்தர்களின் குலத்திற்கு கங்கையைப் போல இருக்கிறார். ஷப்தங்கள் ஆதியிலிருந்து அனந்த காலம் வரை இருப்பதைப் போல, குரு இருக்கிறார். ஆட்சி செய்வதில் ஸ்ரீராமனைப் போல இருக்கிறாய்.

ஆருமொகனமரேந்த்³ர ராமரு
மூருஜன ஸரியில்ல நினகெ³
ஸாரி பேளுவெ தோ³ஷிக³ளு நிர்தோ³ஷி நீனெந்து³
ஆருவத³ன விஶாக நிந்த்ரகெ³
நூரு கோபவு ராமதே³வனு
ஸாரத⁴ர்மத³ ப⁴ங்க³மாடி³த³ தோ³ஷ நினகி³ல்ல ||11

ஆருமொகனு - ஷண்முக; அமரேந்திர - இந்திரன்; ராமரு - வருணன்; மூருஜன ஸரியில்ல நினகெ இந்த மூவரும் உனக்கு

சமானமானவர்கள் அல்ல; ஸாரி பேளுவெ - உறுதியாக சொல்கிறேன்; தோஷிகளு - இவர்கள் தோஷம் உள்ளவர்கள்; நிர்தோஷி நீனெந்து - நீ நிர்தோஷி என்கிறேன்; ஆருவதன விஶாக - ஷண்முகன் விசாகன்; இந்திரகே நூறு கோபவு - இந்திரனுக்கு பயங்கர கோபங்கள்; ராமதேவனு - வருணனானவன்; ஸாரதர்மத பங்கமாடித - தர்மத்தின் பங்கம் செய்தான்; தோஷ நினகில்ல - அத்தகைய தோஷங்கள் உன்னிடம் இல்லை.

* ராமன், ராமதேவனு என்று இங்கு வரும் சொற்களுக்கு, பகவந்தன், ஸ்ரீஹரி என்று பொருள் கொள்ளக்கூடாது.
* ராமன் என்னும் சொல் காமன், வருணன் என பல தேவதைகளுக்கும் பொருந்துகிறது.
* ஷண்முகன் (காமன்) ஏற்கனவே வந்துவிட்டதால், ராம என்பதை வருணனுக்கு பொருத்திப் படிக்க வேண்டும்.

ஷண்முகன், இந்திரன், வருணன் இந்த மூவரும் உனக்கு சமமானவர்கள் இல்லை. உறுதியாக சொல்கிறேன். இவர்கள் தோஷம் உள்ளவர்கள். நீ நிர்தோஷி என்கிறேன். ஷண்முகன் - விசாகன். இந்திரனுக்கு பயங்கரமாக கோபம் வருகிறது. வருணனானவன், தர்மத்தினை பங்கம் செய்கிறான். அத்தகைய தோஷங்கள் உன்னிடம் இல்லை.

* ஆருமொக - ஷண்முக (காம) - 8ம் கக்ஷை (வகுப்பு; அமரேந்த்ர - இந்திர - 8ம் வகுப்பு; ராமரு - வருண - 13ம் வகுப்பினை சேர்ந்தவர்கள்.
* விஸாகன் - பரம்பரை இல்லாதவன்; கங்கைக் கரையில் ஆறு தாமரை மலர்களில் பிறந்தவன் என்று சொல்கிறோம். அதே போல அவரது சிஷ்ய பரம்பரை பற்றி தகவல்களும் இல்லை. ஆனால் ராயருக்கு ஒரு சிறந்த (யதி) பரம்பரை இருக்கிறது.
* இந்திரனின் கோபம் - கோபாலகர்கள் தனக்கு தக்க மரியாதை செலுத்தவில்லை என்று கோபம் கொண்ட இந்திரன், கோகுலத்து மக்கள் மீது கடும் மழையை பெய்வித்தான். ஸ்ரீகிருஷ்ணன், கோவர்த்தன மலையை தூக்கி, அதன் கீழ் அனைத்து மக்களையும், பசுக்களையும் நிறுத்தி, காத்தான். பின், இந்திரன் தன் தவறினை உணர்ந்து மன்னிப்பு கேட்டான் என்பதை பாகவதத்தில் பார்க்கிறோம்.
* வருணன் - ஸ்ரீராமர் சீதாதேவியை மீட்பதற்கு கடலுக்கு வந்து, பாலம் கட்டவேண்டும் என்று எண்ணியபோது, வருணன் துவக்கத்தில்

அனுமதி அளிக்கவில்லை / ஸ்ரீராமரை வந்து பார்க்கவில்லை. பின்னர், வந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டு, அனுமதி அளித்தார்.

இத்தகைய தோஷங்கள் இந்த மூவரில் இருக்கிறது. ஆனால், அவை ஸ்ரீராயரிடம் இல்லை என்று பாடுகிறார் ஸ்ரீதாஸர்.

ஸகல ஶாக²க³ளுண்டு நினகெ³
விகல கோபக³ளில்லவெந்தி³கு³
நிகி²ள த⁴ர்மாசார்ய ஶுப⁴தமசர்ய கு³ருவர்ய
ப³க விரோதி⁴ய ஸக²கெ³ முத்³தி³ன
ப⁴குதவர நீனாத³ காரண
லகுமிரமணன கருண நின்னொளு பூர்ணவாகி³ஹதோ³ ||12

ஸகல ஶாகளுண்டு நினகெ - வேதங்களின் அனைத்து ஷாகைகளையும் அறிந்தவன் நீ; விகல கோபகளில்ல - அழிக்கக்கூடிய கோபங்கள் இல்லை; எந்திகு - என்றும் உன்னிடம்; நிகிள தர்மாசார்ய - எப்போதும் தர்மத்தை பின்பற்றுபவன்; ஶுபதமசர்ய - நல்ல பழக்கங்களை அனுஷ்டானங்களை கொண்டிருக்கிறாய்; குருவர்ய - குருவர்யனே; பக விரோதிய ஸககெ - பக விரோதியான பீமனின் நண்பனான ஸ்ரீகிருஷ்ணனின்; முத்தின பகுதவர - சிறந்த பக்தன்; நீனாத காரண - நீயே ஆன காரணத்தால்; லகுமிரமணன கருண - ஸ்ரீஹரியின் கருணை; நின்னொளு - உன்னில்; பூர்ணவாகிஹதோ - முழுமையாக இருக்கிறதோ?.

முந்தைய பத்யத்தில் சொன்ன தோஷங்கள் ஸ்ரீராயரிடம் இல்லை; மாறாக அவரிடம் நற்குணங்களே இருக்கின்றன என்பதை இந்த பத்யத்தில் சொல்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

வேதங்களின் அனைத்து ஷாகைகளையும் அறிந்தவன் நீ. என்றும் உன்னிடம் அழிக்கக்கூடிய கோபங்கள் இல்லை. எப்போதும் தர்மத்தை பின்பற்றுபவன் நீ. நல்ல பழக்கங்களை அனுஷ்டானங்களை கொண்டிருக்கிறாய். குருவர்யனே, பக விரோதியான பீமனின் நண்பரான ஸ்ரீகிருஷ்ணனின் சிறந்த பக்தன், நீயே ஆன காரணத்தால், ஸ்ரீஹரியின் கருணை உன்னில் முழுமையாக இருக்கிறதோ?.

ஹரியதெரத³லி ப³லவிஶிஷ்டனு
ஹரன தெரத³லி ராஜஶேக²ர
ஸரஸிஜோத்³ப⁴வனந்தெ ஸந்தத சதுர ஸத் வத³ன
ஶரதி⁴ தெரத³லனந்த ரத்னனு
ஸரஸிருஹ ஸன்மித்ர நந்த³தி³
நிருத நிர்ஜித தோ³ஷ பா⁴ஸுரகாய கு³ருராய ||13

ஹரிய தெரதலி பலவிஶிஷ்டனு - இந்திரனைப் போல வீரம் கொண்டவர்; ஹரன தெரதலி ராஜஶேகர - சந்திரனை தாங்கியவர் போல, அனைவருக்கும் குளிர்ச்சியைக் கொடுப்பவர்; ஸரஸிஜோத்பவனந்தெ - பிரம்மனைப் போல; ஸந்தத சதுர ஸத் வதன - எப்போதும் நான்கு முகங்களிலும் வேதங்களையே சொல்பவர்; ஶரதி தெரதலனந்த ரத்னனு - கடல் போல அனேக ரத்னங்களை உள்ளே கொண்டிருப்பவர்; ஸரஸிருஹ ஸன்மித்ர நந்ததி - தாமரையின் நண்பனான சூரியனைப் போல; நிருத நிர்ஜித தோஷ - அபாரமான தோஷங்கள் அற்றவர்; பாஸுரகாய குருராய - ஒளிபொருந்திய தேகம் கொண்ட, குருராயரே.

மறுபடி இந்த பத்யத்தில் ஸ்ரீராயரை, இந்திரன், சந்திரன், பிரம்மன், கடல், சூரியன் ஆகியோருடன் ஒப்பிட்டு அவரது நற்குணங்களை எடுத்துக் காட்டுகிறார் ஸ்ரீதாஸர்.

இந்திரனைப் போல வீரம் கொண்டவர். சந்திரனை தாங்கியவர் போல அனைவருக்கும் குளிர்ச்சியைக் கொடுப்பவர். பிரம்மனைப் போல எப்போதும் நான்கு முகங்களிலும் வேதங்களையே சொல்பவர். கடல் போல அனேக ரத்தினங்களை உள்ளே வைத்திருப்பவர். தாமரையின் நண்பனான சூரியனைப் போல தோஷங்கள் அற்றவர். ஒளிபொருந்திய தேகம் கொண்டவர் நம் குருராயர்.

இந்த்³ரதெரத³லி ஸுரபி⁴ ரம்யனு
சந்த்ரதெரத³லி ஸ்ரீத குவலயோ
பேந்த்ர தெரத³லி நந்தகதி³ ராஜிதனு கு³ருராஜ
மந்த்³ரகி³ரிதெர கூர்மபீட²னு
வீந்த்³ர நந்த³த³லருணகா³த்ரனு
இந்தி³ரேஶன தெரதி³ ஸந்தத சக்ரத³ர ஶோபி⁴ ||14

இந்த்ரதெரதலி - இந்திரனைப் போல; ஸுரபி ரம்யனு - காமதேனு; சந்த்ரதெரதலி - சந்திரனைப் போல; ஸ்ரீத குவலயோ - மலரும் குவளை மலரோ; உபேந்த்ர தெரதலி - உபேந்திர (வாமன) போல; நந்தகதி ராஜிதனு - மகிழ்ச்சியுடன் இருக்கிறாய்; குருராஜ; மந்த்ரகிரிதெர கூர்மபீடனு - மந்திரகிரியைப் போல கூர்ம பீடத்தில் அமர்ந்திருப்பவன்; வீந்த்ர - கருடன்; நந்ததல - போல; அருண காத்ரனு - திடமான தேகம் கொண்டவர்; இந்திரேஶன தெரதி - ஸ்ரீஹரியைப் போல; ஸந்தத - எப்போதும்; சக்ரதர ஶோபி - சக்ரங்களை (ஊர்த்வ) தரித்திருக்கிறாய்.

மேலும் பல ஒப்பீடுகளை இங்கு செய்கிறார் ஸ்ரீதாஸர். ஸ்ரீஹரி எப்படி சக்ர, சங்குகளை பிடித்திருக்கிறாரோ, அதைப்போல நம் ராயரும் சக்ர, சங்கு முத்திரைகளை தரித்திருக்கிறார் என்கிறார்.

இந்திரனைப் போல காமதேனு; சந்திரனைப் பார்த்து மலரும் குவளை மலரோ; உபேந்திர (வாமனனைப்) போல மகிழ்ச்சியுடன் இருக்கிறாய். மந்திரகிரியைப் போல கூர்ம பீடத்தில் அமர்ந்திருக்கிறான். கருடனைப் போல திடமான தேகம் கொண்டவர். ஸ்ரீஹரியைப் போல எப்போதும் ஊர்த்வ புண்ட்ர சக்ரங்களை தரித்திருக்கிறாய்.

ஜிததமனு தானெனிப ஸர்வத[3]
ரதுனவர தா பு[4]வன மத்[4]யதி[3]
விதத த[4]ரிகா[3]த[4]ர ஸந்தத பஞ்சமுக[2] மூர்த்தி
நத ஸுபாலக கஶ்யபாத்மஜ
ப்ரதி[2]தராஜ ஸுதேஜஹாரக
ஸதத தூ[4]ஷண வைரி கோ[3]குலபோஷ தானெனிப ||15

ஸர்வத - எப்போதும்; ஜிததமனு தானெனிப - அனைவரையும் வென்றவர் எனப்படுகிறார்; தா புவன மத்யதி - தான் இந்த பூமியில்; ரதுனவர - ஒரு ரத்தினம் போல ஜொலிக்கிறார்; ஸந்தத - எப்போதும்; விதத - எல்லா இடங்களிலும் வ்யாப்தனானவர்; தரிகாதர - (முக்திக்கான) வழிக்கு ஆதாரம்; ஸந்தத பஞ்சமுக மூர்த்தி - பஞ்சமுக மூர்த்தியை வணங்குபவர்; நத ஸுபாலக - வணங்குபவர்களை காப்பவர்; கஶ்யபாத்மஜ - சூரியனைப் போல; ப்ரதித - புகழ்பெற்ற; அரசர்; ஸுதேஜஹாரக - நல்முத்துக்களைக் கொண்ட மாலைகளை அணிந்தவர்; ஸத்த தூஷண வைரி - எப்போதும் இவரை தூஷணம்

செய்பவர்களை வெல்கிறார்; கோகுலபோஷ தானெனிப - வேதங்களை / பசுக்களைக் காப்பவர்.

ஸ்ரீராயரின் மகிமைகளை மிகவும் அழகாக இந்த பத்யத்தில் வர்ணித்துள்ளார் ஸ்ரீதாஸர்.

எப்போதும் அனைவரையும் வென்றவர் எனப்படுகிறார். தான் இந்த பூமியில் ஒரு ரத்தினம் போல ஜொலிக்கிறார். எப்போதும், எல்லா இடங்களிலும் இருப்பவர். முக்திக்கான வழிக்கு ஆதாரம் இவரே. எப்போதும் பஞ்சமுக மூர்த்தியை வணங்குபவர். வணங்குபவர்களை காப்பவர். சூரியனைப் போல புகழ்பெற்ற ஒளிரும் நல்முத்துக்களைக் கொண்ட மாலைகளை அணிந்தவர். எப்போதும் இவரை தூஷணம் செய்பவர்களை வெல்கிறார். வேதங்களை / பசுக்களைக் காப்பவர்.

விததகாந்திலி லஸ தி³க³ம்பர
பதித கலிக்ருத பாபஹாரக
ஸதத ஹரியவதார த³ஶகவ தாளி தானெஸெவ
க்ருதியரமணன கருணப³லத³லி
நதிபஜனக³கி²ளார்த்த² நீடு³வ
மதிமதாம்வரனெனிஸி லோகதி³ க்²யாதனாகி³ப்ப ||16

விதத காந்திலி லஸ - அனைத்து இடங்களிலும் பரவுவதான ஒளியைக் கொண்ட; திகம்பர - திசையையே ஆடையாக உடுத்தியிருக்கும் சன்யாசி; பதித - பக்தர்களின்; கலிக்ருத பாபஹாரக - கலியினால் உண்டான பாவங்களை நீக்குபவர்; ஸதத - எப்போதும்; ஹரியவதார தஶகவ தாளி தானெஸெவ - ஹரி அவதாரத்தைப் போல 10 அவதாரங்களை எடுத்து தான் திகழும்; க்ருதியரமணன கருணபலதலி - ஸ்ரீஹரியின் கருணையால்; நதிப ஜனககிளார்த்த நீடுவ - வணங்கும் பக்தர்களுக்கு இஷ்டார்த்தங்களைக் கொடுக்கும்; மதிமதாம்வரனெனிஸி - சிறந்த ஆளுமை தான் என்று சொல்லிக் கொண்டு; லோகதி - உலகில்; க்யாதனாகிப்ப - புகழ்பெற்றவனாக இருக்கிறார்.

ஸ்ரீஹரியின் அருளால் பக்தர்களுக்கு ஸ்ரீராயர் அருள்கிறார் என்பதை மிகவும் அழகாக விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர்.

அனைத்து இடங்களிலும் பரவுவதான ஒளியைக் கொண்ட, திசையையே ஆடையாக உடுத்தியிருக்கும் சன்யாசி. பக்தர்களின் பாவங்களை போக்குபவர். ஸ்ரீஹரியின் 10 அவதாரங்களைப் போல, பல அவதாரங்களை எடுப்பவர். ஸ்ரீஹரியின் கருணையால் வணங்கும் பக்தர்களுக்கு இஷ்டார்த்தங்களை கொடுக்கும் சிறந்த ஆளுமை தான் என்று சொல்லிக் கொண்டு, உலகில் புகழ்பெற்றவனாக இருக்கிறார்.

வரவிபூ[4]திய த[4]ரிஸி மெரெவனு
ஹரனு தானேனல்ல ஸர்வத[3]
ஹரி நிவாஸனு எனிஸலா பால்கட[3]லுதானல்ல
ஸுரபி[4]ஸம்யுதனாகி[3] இரலு
மிருபுகோ[3]குல வல்லதானு
ஸுர ஸந்ததி ஸந்ததிரலு ஸ்வர்க்க[3]தானல்ல ||17

வரவிபூதிய தரிஸி மெரெவனு - வரம் பொருந்திய விபூதியை (பகவந்தனின் சிறப்பு ரூபங்களை) தரித்து திகழ்கிறார்; ஹரனு தானேனல்ல - இவர் சிவன் அல்ல; ஸர்வத ஹரி நிவாஸனு - ஸ்ரீஹரியை எப்போதும் தாங்கியிருக்கிறார்; எனிஸலா - என்று சொன்னால்; பால்கடலுதானல்ல - இவர் பாற்கடலும் அல்ல; ஸுரபி ஸம்யுதனாகி இரலு - காமதேனு உடனேயே இருக்கிறார்; மிருபு கோகுலவல்ல தானு - ஆனால் இவர் கோகுலத்தில் இல்லை; ஸுர ஸந்ததி ஸந்ததிரலு - இவரில் ஸ்வர்க்கத்தின் தேவதைகள் அனைவரும் இருக்க; ஸ்வர்க்கதானல்ல - இவர் ஸ்வர்க்கம் அல்ல.

சிவன், பாற்கடல், காமதேனு, ஸ்வர்க்கம் - ஆகியவற்றுடன் ஸ்ரீராயரை எதிர்மறையாக இங்கு ஒப்பிட்டுள்ளார். அவர்களைப் போலவே இருக்கிறார். அனால் அவர்கள் அல்ல என்கிறார் ஸ்ரீதாஸர்.

வரம் பொருந்திய விபூதியை (பகவந்தனின் சிறப்பு ரூபங்களை) தரித்திருக்கிறார். இவர் சிவன் அல்ல. ஸ்ரீஹரியை எப்போதும் தாங்கியிருக்கிறார். இவர் பாற்கடல் அல்ல. காமதேனு உடனேயே இருக்கிரான். ஆனால் கோகுலத்தில் இல்லை. இவரில் ஸ்வர்க்கத்தின் தேவதைகள் அனைவரும் இருக்க, இவர் ஸ்வர்க்கம் அல்ல.

துருக[3] கரி ரத[2] நர ஸமேதனு
நர வரேஙன த[3]ளவுயெனிஸனு

நிருத பரிமள ஸேவியாத³ரு ப்ரமர தானல்ல
கரதி³ த³ண்ட³வ பி³டி³து³யிருவனு
நிரயபதிதானல்லவெந்தி³கு³
ஸுரரிக³ஸத³ளவெனிபோதீ³தன சர்யவாஶ்சர்ய ||18

துருக கரி ரத நர ஸமேதனு - குதிரை, யானை, ரத, மனிதர்கள் சமேதனாக இருக்கிறார் (அனைத்து ஊர்வலம், பல்லக்கு); நர வரேஸன - அரசன்; தளவுயெனிஸனு - தான் என்று அழைத்துக் கொள்வதில்லை; நிருத பரிமள ஸேவியாதரு - எப்போதும் பரிமளத்துடன் இருக்கிறார் (சந்தனம் / கிரந்தம்); ப்ரமர தானல்ல - இவர் தேனீ அல்ல; கரதி தண்டவ பிடிதுயிருவனு - கையில் தண்டம் பிடித்திருக்கிறார்; எந்திகு - என்றும்; நிரயபதிதானல்ல - யமதர்மன் அல்ல; ஸுரரிகஸதள எனிபோது - தேவதைக்கு சமானமாக எனப்படும்; ஈதன சர்யவாஶ்சர்ய - இவருடைய செயல்கள் மிகவும் வியப்பாக இருக்கிறது.

சென்ற பத்யத்தைப் போலவே இங்கும் எதிர்மறை ஒப்பீடுகள் தொடர்கின்றன.

குதிரை, யானை, ரத, மனிதர்கள் சமேதனாக இருக்கிறார். (அனைத்து ஊர்வலம், பல்லக்கு). ஆனால் தன்னை அரசன் என்று அழைத்துக் கொள்வதில்லை. எப்போதும் பரிமளத்துடன் இருக்கிறார் (நறுமண சந்தனம் / பரிமள கிரந்தம்). ஆனால் இவர் தேனீ அல்ல. கையில் தண்டம் பிடித்திருக்கிறார். ஆனால் இவர் யமதர்மன் அல்ல. தேவதைக்கு சமானமாக எனப்படும் இவரது செயல்கள் மிகவும் வியப்பாக இருக்கிறது.

கரதி³ பிடி³தி³ஹ கு³ருவரேண்யனு
ஶரண ஜனராபீ⁴ஷ்ட ப²லக³ள
த்வரதி³ ஸலிஸுதலவர பா⁴ரவ தானெ பொத்திஹனு
மரெய பே³ட³வொ கருண நிதி⁴யனு
ஸ்மரணெ மாட³லு ப³ந்து³ நில்லுவ
பரம பாவனரூப தோரிஸி தானே காய்தி³ஹனு ||19

குருவரேண்யனு - ஸ்ரீராயர்; ஶரண ஜனராபீஷ்ட பலகள - பக்தர்களின் விருப்பங்களை / அதன் பலன்களை; கரதி பிடிதிஹ - கையில்

வைத்திருக்கிறார் (அருள்கிறார்); த்வரதி - உடனடியாக; ஸலிஸுதலவர பாரவ - அவருடைய பாரங்களை; தானெ பொத்திஹனு - தானே தாங்குகிறார்; மரெய பேடவோ கருண நிதியனு - கருணாளுவை மறக்காதே; ஸ்மரணெ மாடலு - நினைத்த உடனேயே; பந்து நில்லுவ - வந்து நிற்பார் (அருள்வார்); பரம பாவனரூப தோரிஸி - தன்னுடைய பவித்ரமான ரூபத்தை காட்டி; தானே காய்திஹனு - தானே அவர்களை காக்கிறார்.

பகவந்தனைப் போல ஸ்ரீராயரும் பக்தவத்ஸலனே என்பதை இந்த பத்யத்தில் சொல்கிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீராயர் பக்தர்களின் விருப்பங்களை கையில் வைத்திருக்கிறார் (அருள்கிறார்). உடனடியாக அவருடைய பாரங்களை தானே தாங்குகிறார். கருணாளுவை மறக்காதே. நினைத்த உடனேயே வந்து நின்று அருள்வார். தன்னுடைய பவித்ரமான ரூபத்தைக் காட்டி தானே அவர்களை காக்கிறார்.

அதஸி பூ[1] நிப[4]கா[3]த்ர ஸர்வத[3]
ஸ்மிதஸு நீரஜ நேத்ர மங்க[3]ள
ஸ்மிதயுதாம்பு[3]ஜ வத[3]ன ஶுப[4]தமரதன ஜிதமத[3]ன
அதுல துளஸிய மூலகந்த[4]ர
நதிப ஜனததிலோல காமத[3]
பதித பாவன சரண ஶரணாம்ப[4]ரண கு[3]ருகருணா ||20

அதஸி பூ நிபகாத்ர - அதஸி பூ போன்ற நீல நிறத்தைக் கொண்டவர்; ஸர்வத - எல்லா இடங்களிலும் இருப்பவர்; ஸ்மிதஸு நீரஜ நேத்ர - எப்போதும் சிரிப்பதான தாமரைக் கண்களைக் கொண்டவர்; மங்கள - மங்களங்களை தருபவர்; ஸ்மிதயுதாம்புஜ வதன - புன்னகையுடன் கூடிய வதனம்; ஶுபதமரதன - அதில் நலன்களை தரக்கூடிய பற்கள்; ஜிதமதன - காமத்தை வென்றவர்; அதுல துளஸிய மூலகந்தர - துளஸி புஷ்பத்தை தரித்த தோள்கள்; நதிப ஜனததிலோல - வணங்கும் பக்தர்களை காப்பவர்; காமத - விரும்பியவற்றை அருள்பவர்; பதித பாவன - பக்தர்களை காப்பவர்; சரண ஶரணாம்பரண - தன்னை சரணடைந்தவர்களை காப்பவர்; குருகருணா - கருணாளுவான குருவே.

ஸ்ரீராயரின் தேக வர்ணனையை இங்கு மிகவும் அற்புதமாக செய்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

அதஸி பூ போன்ற நீல நிறத்தைக் கொண்டவர் ஸ்ரீராயர். எல்லா இடங்களிலும் இருப்பவர். எப்போதும் சிரிப்பதான தாமரைக் கண்களைக் கொண்டவர். மங்களங்களை தருபவர். புன்னகையுடன் கூடிய வதனம். அதில் நலன்களை தரக்கூடிய பற்கள். காமத்தை வென்றவர். துளஸி புஷ்பத்தை தரித்த தோள்கள். வணங்கும் பக்தர்களை காப்பவர். விரும்பியவற்றை அருள்பவர். பக்தர்களை காப்பவர். தன்னை சரணடைந்தவர்களை காப்பவர். கருணாளு இவரே.

சந்த்³ரமண்ட³லவத³ன நகெ³ நவ
சந்தி³ரிகெயதெர மெரெயோ மேண்க⁴ன
சந்த்³ரதிலகத³ ராக³ மனத³னுராக³ ஸுசிபது³
இந்த்³ர நீலத³ மணிய மீருவ
ஸாந்த்³ரதே³ஹத³ காந்தி ஜனனய
நேந்த்³ரியத்³வய க⁴டித பாதகதரிது³ ரக்ஷிபுது³ ||21

சந்த்ரமண்டலவதன நகெ - சந்திரனைப் போல வெண்மையான / தூய்மையான புன்னகை; நவ சந்திரிகெயதெர - பௌர்ணமி நிலவைப் போல சஞ்சரிக்கும் இவரது ஆளுமை; சந்த்ர திலகத ராக - இவரது அங்கார அக்ஷதை ஆகியவை; மனதனுராக ஸுசிபது - அவரது அன்பினை / கருணையை குறிப்பிடுகிறது; இந்த்ர நீலத மணிய மீருவ - இந்திர நீல மணியை மீறுவதான; ஸாந்த்ரதேஹத காந்தி - இவரது தேக காந்தியானது; ஜன நயனேந்த்ரியத்வய - மக்களைப் பார்க்கும் இரு கண்களானது; கடித பாதகதரிது ரக்ஷிபுது - கடுமையான பாவங்களையும் அழித்து நம்மை காக்கிறது.

ஸ்ரீராயரின் தேக வர்ணனை மிகவும் அற்புதமாக இங்கும் தொடர்கிறது.

சந்திரனைப் போல வெண்மையான / தூய்மையான புன்னகை கொண்டவர். பௌர்ணமி நிலவைப் போல சஞ்சரிக்கும் இவரது ஆளுமை, இவரது அங்கார அக்ஷதை ஆகியவை அவரது அன்பினை / கருணையை குறிப்பிடுகிறது. இந்திர நீல மணியை மீறுவதான இவரது தேக காந்தியானது, மக்களைப் பார்க்கும் இரு கண்களானது, கடுமையான பாவங்களையும் அழித்து நம்மை காக்கிறது.

ஶரண ஜனபாபௌக[4] நாஶன
ஶரண நீரஜ ஸூர்ய ஸன்னிப[4]
ஶரண குவலயசந்த்[3]ர ஸத்கு[3]ண ஸாந்த்[3]ர ராஜேந்த்[3]ர
ஶரண ஸங்க[4]சகோர சந்த்[3]ரிக
ஶரண ஜனமந்தா[3]ர ஶாஷ்வத
ஶரணபாலக சரணயுக[3] வாஶ்ரயிஸி பா[3]ளுவெனோ ||22

ஜனபாபௌக நாஶன ஶரண - மக்களின் பாவங்களைப் போக்கக்கூடிய சரணங்கள்; ஶரண நீரஜ - தாமரைப் பாதங்கள்; ஸூர்ய ஸன்னிப - சூரியனைப் போன்ற ஒளி; ஶரண குவலயசந்த்ர - சந்திரனைப் பார்த்து மலரும் குவளை மலர்களைப் போல பாதங்கள்; ஸத்குண ஸாந்த்ர - நற்குணங்களைக் கொண்டவர்; ராஜேந்த்ர - யதிகளின் அரசன்; ஸங்கசகோர சந்த்ரிக ஶரண - சகோர பறவைகளைப் போன்ற அழகான பாதங்கள்; ஶரண ஜனமந்தார - பாதங்களை வணங்கியவர்களை காப்பவர்; ஶாஷ்வத - நிரந்தரமாக பக்தவத்ஸலர்; ஶரண பாலக - பாதங்களை வணங்கியவர்களை காப்பவர்; சரணயுகவாஶ்ரயிஸி பாளுவெனோ - இரு பாதங்களை வணங்கியவாறு நான் வாழ்ந்திடுவேன்.

ஸ்ரீராயரின் சரண மகிமைகளை இங்கு விளக்குகிறார் ஸ்ரீதாஸர்.

மக்களின் பாவங்களை போக்கக்கூடிய சரணங்கள்; சூரியனைப் போல ஒளிர்கின்றன; சந்திரனைப் பார்த்து மலரும் குவளை மலர்களைப் போல பாதங்கள் இவை. நற்குணங்களைக் கொண்டவர். யதிகளின் அரசன்; சகோர பறவைகளைப் போன்ற அழகான பாதங்கள்; பாதங்களை வணங்கியவர்களை காப்பவர். இத்தகைய பாதங்களை வணங்கியவாறு நான் வாழ்ந்திடுவேன்.

பாதகாத்[3]ரிகெ[3] குலிஶனெனிஸுவ
பாதகாம்பு[3]தி[4] கும்ப[4]ஸம்ப[4]வ
பாதகாவளி வ்யாளவீந்த்[3]ரனு து[3]ரித க[3]ஜஸிம்ஹ
பாதகாபி[4]த[4]திமிர ஸூர்யனு
பாதகாம்பு[3]த[3]வாத[3] கு[3]ரு ஜக[3]
ந்னாத[2] விட்டலகெ[3] ப்ரீதிபாத்ரனு நீனெ மஹாராய ||23

பாதாகாத்ரிகெ - பாவங்களின் மலைக்கு; குலிஶனெனிஸுவ - கோடலியைப் போன்றவர்; பாதகாம்புதி - பாவங்கள் என்னும் கடலுக்கு; கும்பஸம்பவ - அகஸ்த்ய முனிவர் போன்றவர்; பாதகாவளி - பாவங்கள் என்னும் வரிசைக்கு; வ்யாள - பாவங்கள் என்னும் பாம்பிற்கு; வீந்த்ரனு - கருடன் போன்றவர்; துரித கஜஸிம்ஹ - கஷ்டங்கள் என்னும் யானைக்கு, சிம்மம் போன்றவர்; பாதகாபித - பாவங்கள் என்னும்; திமிர - இருட்டிற்கு; ஸூர்யனு - சூரியனைப் போன்றவர்; பாதகாம்புத - மேகங்கள்; ஆத - அவனே / அத்தகைய; குரு ஜகன்னாத விட்டலகெ - குரு ஜகன்னாத விட்டலனுக்கு; நீனெ மஹாராயா - மகாராஜனே, நீயே; ப்ரீதிபாத்ரனு - பிடித்தமானவன்;

பாவங்களைப் போக்குபவரான ஸ்ரீராயர், குரு ஜகன்னாத விட்டலனுக்கு மிகவும் பிரியமானவர் என்கிறார் ஸ்ரீதாஸர்.

பாவங்களின் மலைக்கு கோடலியைப் போன்றவர். பாவங்கள் என்னும் கடலுக்கு அகஸ்த்ய முனிவர் போன்றவர். பாவங்கள் என்னும் பாம்பிற்கு கருடன் போன்றவர். கஷ்டங்கள் என்னும் யானைக்கு, சிம்மம் போன்றவர். பாவங்கள் என்னும் இருட்டிற்கு சூரியனைப் போன்றவர். குரு ஜகன்னாத விட்டலனுக்கு நீயே பிடித்தமானவன்.

இவ்வாறு ஸ்ரீராயரின் மகிமைகள் / தேக வர்ணனை / சிறப்புகள் என இந்த சந்தி முழுவதுமே வர்ணித்த ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர், அதையே அடுத்த கடைசி பத்யத்திலும் எப்படி தொடர்கிறார் என்பதை பார்க்கலாம்.

****

ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸரின்
கன்னட ஸ்ரீராகவேந்திர விஜயம்

சந்தி - 9

சந்தி 9ன் விஷய சுருக்கம்

ஸ்ரீராயரின் மகிமைகளை பல்வேறு உதாரணங்கள் / ஒப்பீடுகளும் இந்த கடைசி சந்தியில் செய்திருக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ராக⁴வேந்தி³ரர விஜய பேளுவெ
ராக⁴வேந்தி³ரர கருண ப³லத³லி
ராக⁴வேந்திரர ப⁴குதராத³வரித³னு கேளுவுது³ ||

ஸ்ரீராயரின் மகிமைகளை பல்வேறு உதாரணங்கள் / ஒப்பீடுகளும் இந்த கடைசி சந்தியில் செய்திருக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஜயது ஜய கு³ருராஜ ꣳப⁴தம
ஜயது கவிஜனகே³ய ஸுந்த³ர
ஜயது நிஜ ஜன ஜாலபாலக ஜயது கருணாளோ
ஜயது ஸஜ்ஜன விஜயதா³யக
ஜயது குஜனாரண்ய பாவக
ஜயது ஜய ஜய த்³விஜவரார்ச்சித பாத³ பங்கேஜ ||1

ஜயது ஜய - ஜய ஜய; குருராஜ ꣳபதம - குருகளில் ராஜரே; மங்களகரமானவரே; கவிஜனகேய - கவிஞர்களால் போற்றப்படுபவரே; ஸுந்தர - அழகானவரே; நிஜ ஜன ஜாலபாலக - உன் உண்மையான பக்தர்களை காப்பவரே; கருணாளோ - கருணாமூர்த்தியே; ஸஜ்ஜன விஜயதாயக - ஸஜ்ஜனர்களுக்கு வெற்றியைக் கொடுப்பவரே; குஜனாராண்ய பாவக - கெட்ட செயல்களை விலக்குபவரே; த்விஜவரார்ச்சித பாத பங்கேஜ - கற்றறிந்தவர்கள் போற்றும் பாத கமலங்களைக் கொண்டவரே.

ஸ்ரீராயரை வணங்கியவாறு பிரார்த்தனை விதமாக இந்த ஒன்பதாவது சந்தியை துவக்குகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

குருகளில் ராஜரே, மங்களகரமானவரே. கவிஞர்களால் போற்றப்படுபவரே. அழகானவரே. உன் உண்மையான பக்தர்களை காப்பவரே. கருணாமூர்த்தியே. ஸஜ்ஜனர்களுக்கு வெற்றியைக் கொடுப்பவரே. கெட்ட செயல்களை விலக்குபவரே. கற்றறிந்தவர்கள் போற்றும் பாத கமலங்களை கொண்டவரே.

ஹிந்தெ நீ ப்ரஹ்லாத³வெனிஸி
த³ந்தெ³ஸங்க³ட³ வாத³ மாடி³
இந்தி³ரேꣳன தந்து³ கம்ப³தி³ அந்து³ தோரிஸிதெ³
முந்தெ³ நின்னய பிதகெ³ ஸத்க³தி

சந்ததி³ந்த³லி கொடி³ஸி மெரெதெ³யோ
எந்து³ நின்னய மஹிமெ பொக³ளலு எனகெ³ வஶவல்லா ||2

ஹிந்தெ நீ ப்ரஹ்லாதவெனிஸி - முன்னர் நீ பிரகலாதன் என்று பெயர் பெற்றிருந்து; தந்தெ ஸங்கட வாத மாடி - உன் தந்தையான ஹிரண்யகசிபுவுடன் வாதம் செய்து; இந்திரேஶன தந்து - ஸ்ரீஹரியை; கம்பதி அந்து தோரிஸிதெ - கம்பத்தில் வந்து காட்டினாய்; முந்தெ நின்னய பிதகெ - அடுத்து, உன் தந்தைக்கு; ஸத்கதி சந்ததிந்தலி கொடிஸி - நற்கதியை கொடுக்கச் செய்து; மெரெதெயோ - திகழ்ந்தாய்; எந்து நின்னய மஹிமெ - என்றும் உன்னுடைய மகிமைகளை; பொகளலு - விளக்குவதற்கு; எனகெ வஶவல்லா - எனக்கு சாத்தியம் இல்லை.

ஸ்ரீராயர் பிரகலாத அவதாரத்தை செய்த சமயத்தை இங்கு நினைவுபடுத்துகிறார் ஸ்ரீதாஸர்.

முன்னர் நீ பிரகலாதன் என்று பெயர் பெற்றிருந்து, உன் தந்தையான ஹிரண்யகசிபுவுடன் வாதம் செய்து, ஸ்ரீஹரியை கம்பத்தில் வந்து காட்டினாய். அடுத்து, உன் தந்தைக்கு நற்கதியை கொடுக்கச் செய்தாய். என்றும் உன்னுடைய மகிமைகளை விளக்குவதற்கு எனக்கு சாத்தியம் இல்லை.

தொளபுனாஶிக கத³புக³ளு ப³லு
பொளெவ கங்க³ளு நீள பூர்ப⁴க³
ளெஸெவ தாபெரெனொஸலு த²ளத²ள நாம அக்ஷதியு
லலித அருணாத⁴ரதி³ மினுகு³வ
ஸுலித³த³ந்த ஸுபங்க்தி ஸுஸுவ
எளெனகெ³ய மொக³த³ல்லி ஶோபி⁴ப சுபு³க தானொப்ப ||3

தொளபு நாஶிக - பளபளக்கும் மூக்கு; கதபுகளு - கன்னங்கள்; பலு பொளெவ கங்களு - ஒளிர்வதான கண்கள்; நீள பூர்பகளெஸெவ தாபெரெனொஸலு - நீளமான முடிகள் ஆடும் பிறை போன்ற நெற்றி; தளதாள நாம அக்ஷதியு - அதில் தெரியும் பளபளவான அக்ஷதை; லலித அருணாதரதி மினுகுவ - அழகான சூரிய ரேகையைப் போன்ற மினுக்கும்; ஸுலலிதந்த பங்க்தி - பல்வரிசை; ஸுஸுவ எளெனகெய

மொகதல்லி - ஒளிரும் புன்னகையுடன் கூடிய முகத்தில்; ஸோபிப சுபுக தானொப்ப - கழுத்துடன் அவர் இருந்தார்.

ஸ்ரீராயரின் தேக வர்ணனை இங்கு தொடங்குகிறது. அவரது முக வர்ணனையை செய்கிறார் ஸ்ரீதாஸர்.

பளபளக்கும் மூக்கு, கன்னங்கள், ஒளிர்வதான கண்கள், நீளமான முடிகள் ஆடும் பிறை போன்ற நெற்றி, அதில் தெரியும் பளபளவான அக்ஷதை. அழகான சூரிய ரேகையைப் போன்ற மினுக்கும் பல்வரிசை. ஒளிரும் புன்னகையுடன் கூடிய முகத்தில் ஒளிரும் கழுத்துடன் ஸ்ரீராயர் இருக்கிறார்.

கம்பு³ கண்ட²வு ஸிம்ஹ ஸ்கந்த³வு
கும்பி⁴கரஸம பா³ஹு யுக்³மவு
அம்பு³ஜோபம ஹஸ்த யுக³ளவு நீலபெ³ரளுக³ளு
அம்பு³ஜாம்ப³க ஸத³ன ஹ்ருத³யதி³
அம்பு³ஜாக்ஷீ துலஸி மாலா
லம்பி³தாமல குக்ஷிவளி த்ரய கு³ம்ப⁴ஸுளினாபி⁴ ||4

கம்புகண்டவு - சங்கு போன்ற கழுத்து; ஸிம்ஹ ஸ்கந்தவு - சிங்கத்தைப் போன்ற பின் (முதுகுக்கு மேல்) பாகம்; கும்பிகரஸம பாஹு யுக்மவு - யானை தும்பிக்கையைப் போன்ற இரு தோள்கள்; அம்புஜோபம ஹஸ்த யுகளவு - தாமரைத் தண்டுகளைப் போன்ற இரு கைகள்; நீலபெரளுகளு - நீல வண்ண விரல்கள்; அம்புஜாம்பக - தாமரைக் கண்கள்; அம்புஜாக்ஷி ஸதன ஹ்ருதயதி - லட்சுமிதேவி வசிக்கும் இடமான இதயத்தில்; துலஸி மாலா - துளசி மாலை; லம்பிதாமல - கழுத்தில் தொங்கும் ஒரு பதக்கம்; குக்ஷிவளி த்ரய - வயிற்றில் மூன்று ரேகைகள்; கும்பஸுளினாபி - குடத்தைப் போன்றதான நாபி.

ஸ்ரீராயரின் நடுப்பாக தேக வர்ணனை இங்கு செய்யப்படுகிறது.

சங்கு போன்ற கழுத்து, சிங்கத்தைப் போன்ற பின் (முதுகுக்கு மேல்) பாகம். யானை தும்பிக்கையைப் போன்ற இரு தோள்கள். தாமரைத் தண்டுகளைப் போன்ற இரு கைகள். நீல வண்ண விரல்கள். தாமரைக் கண்கள். லட்சுமிதேவி வசிக்கும் இடமான இதயத்தில் துளசி மாலை. கழுத்தில் தொங்கும் ஒரு பதக்கம். வயிற்றில் மூன்று ரேகைகள்.

குடத்தைப் போன்றதான நாபி -- ஆகியவற்றைக் கொண்டு ஸ்ரீராயர் திகழ்கிறார்.

தொளபுனாம ஸமுத்³ரிகாவளி
பொளெவோ பொணெயொள கூ³ர்த்⁴வ புண்ட்³ரவு
திலகதோபரி மினுகொ³த³³க்ஷதி ரத்ன மணியொப்பெ
லலித மேக²ல கைப கடிதட
சலுவ ஊரூயுக³ள ஜானு
ஜலஜ ஜங்கெ³யு கு³ல்ப பத³³யுக³³ பெ³ரளு நக²வஜ்ர ||5

தொளபு நாம - சூரிய கிரணங்களைப் போன்ற நாமங்கள்; ஸமுத்ரிகாவளி - கடல் அலையைப் போன்ற; பொளெவோ பொணெயொள - ஒளிரும் நெற்றியில்; ஊர்த்வ புண்ட்ரவு - ஊர்த்வ புண்ட்ரம்; திலகதோபரி மினிகொதக்ஷதி - திலகத்தின் மேல் மினுக்கும் அக்ஷதியானது; ரத்ன மணியொப்பெ - ரத்னமணியைப் போல ஜொலிக்கிறது; லலித மேகல - அழகான ஒட்டியாணம்; கைப கடிதட - குறுகலான இடை; சலுவ் ஊருயுகள - அழகான இரு தொடைகள்; ஜானு ஜலஜ - தாமரை போன்ற முழங்கால்; ஜங்கெயு - முழங்கால்களுக்குக் கீழே; குல்ப - கணுக்கால் (ஆகியவை அழகாகவும்); பதயுக பெரளு நகவஜ்ர - இரு கால்களின் விரல்களும் வஜ்ரத்தைப் போல திடமானதாகவும் இருக்கின்றன.

ஸ்ரீராயரின் கீழ் பாக தேக வர்ணனையை இங்கு செய்திருக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

சூரிய கிரணங்களைப் போன்ற நாமங்கள். கடல் அலைகளைப் போன்ற ஒளிரும் நெற்றியில் ஊர்த்வ புண்ட்ரமானது, திலகத்தின் மேல் மினுக்கும் அக்ஷதியானது,ரத்னமணியைப் போல ஜொலிக்கிறது. அழகான ஒட்டியாணம், குறுகலான இடை, அழகான இரு தொடைகள், தாமரை போன்ற முழங்காலைக் கொண்டிருக்கிறார். முழங்கால்களுக்குக் கீழே கணுக்கால் ஆகியவை அழகாகவும்; மற்றும் இரு கால்களின் விரல்களும் வஜ்ரத்தைப் போல திடமானதாகவும் இருக்கின்றன.

அருண ஶாடி²யு ஶிரத³லிந்த³லி
சரண பரியந்தரத³ லொப்பிரெ

சரணபாது³கயுக³ள புரத³லி நிருத ஶோபி⁴பது³
கருணபூர்ண கடாக்ஷதி³ந்த³லி
ஶரண ஜனரன பொரெயோ காரண
கரெத³ராக்ஷண ப³ருவனெம்போ³ பி³ருது³ பொத்திஹனு ||6

ஶிரதலிந்தலி சரண பரியந்தரதலி - தலை முதல் கால் வரை; ஒப்பிரெ - பார்த்தால்; அருண ஶாடியு - அது சூரியனைப் போல ஒளிர்கிறது; சரண பாதுகயுகள புரதலி - இரு கால்கள் இருக்கும் பகுதியானது; நிருத ஶோபிபது - அருமையாக ஒளிர்கிறது; கருணபூர்ண கடாக்ஷதிந்தலி - கருணை நிரம்பிய கடாக்ஷப் பார்வையினால்; ஶரண ஜனரன பொரெயோ காரண - உன்னை சரணடைந்தவர்களை காப்பாற்றும் காரணத்தினால்; கரெதராக்ஷண பருவனெம்போ பிருது - அழைத்தால் உடனே வருகிறான் என்னும் விருது / பெருமை; பொத்திஹனு - பெற்றிருக்கிறார்.

அடுத்து இந்த பத்யத்தில் ஸ்ரீராயரின் முழு தேக வர்ணனை செய்யப்பட்டுள்ளது.

தலை முதல் கால் வரை பார்த்தால், அது சூரியனைப் போல ஒளிர்கிறது. இரு கால்கள் இருக்கும் பகுதியானது அருமையான ஒளிர்கிறது. கருணை நிரம்பிய கடாக்ஷப் பார்வையினால், உன்னை சரணடைந்தவர்களை காப்பாற்றும் காரணத்தினால் / அழைத்தால் உடனே வருகிறான் என்னும் விருது / பெருமையை பெற்றிருக்கிறார்.

ராயனம்மீஜக³கெ யதிகுல
ராயனம் கல்யாண கு³ணக³ண
காயனம் நிஸ்ஸீம ஸுக²ததி தா³யனெனிஸிர்ப்ப
ராய வாரிதி⁴ வ்ருத்³த⁴ கு³ணக³ண
ராய நிர்மல கீர்த்திஜோத்ஸ்னனு
ராயராயனுயெனிஸி ஶோபி⁴பனெந்து³ காம்பு³வெனு ||7

ராயனம் - ஸ்ரீராயர்; ஈ ஜகக்கெ யதிகுல - இந்த உலகிற்கு யதிகுல திலகர்; கல்யாண குணகண காயனம் - கல்யாண குணங்களைக் கொண்ட தேகத்தினைக் கொண்டவர்; நிஸ்ஸீம - எல்லைகள் அற்றவர்; ஸுகததி தாயனெனிஸிர்ப்ப - அபாரமான சுகங்களைக் கொடுப்பவர் எனப்படும்; ராய - ஸ்ரீராயர்; வாரிதி வ்ருத்த குணகண -

கடல் போன்ற வளரும் குணங்களைக் கொண்டவர்; நிர்மல கீர்த்தி ஜோத்ஸ்னனு - தூய்மையான புகழினைக் கொண்ட விளக்கு போன்றவர் (வழிகாட்டி); ராயராயனுயெனிஸி - ராஜராஜர் என்று அழைக்கப்பட்டு; ஶோபிபனெந்து காம்புவெனு - ஒளிர்கிறார் என்பதாக பார்க்கிறேன்.

ஸ்ரீராயரின் மகிமைகளை இங்கு அற்புதமாக கொண்டாடியுள்ளார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீராயர், இந்த உலகிற்கு யதிகுல திலகர். கல்யாண குணங்களைக் கொண்ட தேகம் கொண்டவர். எல்லைகள் அற்றவர். அபாரமான சுகங்களைக் கொடுப்பவர். கடல் போன்ற அபாரமான குணங்களைக் கொண்டவர். தூய்மையான புகழினைக் கொண்ட விளக்கு போன்றவர் (வழிகாட்டி). ராஜராஜர் என்று அழைக்கப்பட்டு ஒளிர்கிறார்.

க³ங்கி³கா³து³³து³³ யமுனெஸங்க³தி³³
துங்க³³தர பால்க³³ட³³லிகா³து³³து³³
ரங்க³³ நங்க³தி³³ நைல்யதோர்ப்பது³³ ஸர்வகாலத³³லி
ஸிங்க³³ராத³³ ஸுவாணிதே³³விகெ³³
உங்க³³ரோருஸு கு³³ருலு ஸர்வத³³
மங்க³³ளாங்கி³³யு கௌ³³ரி ஹரனிம் கப்பு எனிஸிஹலோ ||8

கங்கிகாதுது யமுனெஸங்கதி - வெளுப்பான கங்கையில், கருப்பான யமுனை சேர்ந்ததைப் போல; துங்கதர - கருப்பான துங்கா நதி; பால்கடலிகாதுது - பாற்கடலில் சேர்ந்ததைப் போல; ரங்கனங்கதி - ஸ்ரீஹரியின் தேகத்தில்; ஸர்வகாலதலி - அனைத்து காலங்களிலும்; நைல்ய தோர்ப்பது - நீலமாக தெரிகிறது; ஸிங்கராத - அழகான / வெண்மையான; ஸுவாணிதேவிகெ - ஸ்ரீசரஸ்வதி தேவிக்கு; ஸர்வத - எப்போதும்; குருலு உங்கரோருஸு - முன் வந்து விழும் சுருள் முடிகள் போல; மங்களாங்கியு கௌரி - மங்களாங்கியான பார்வதி; ஹரனிம் கப்பு - ஹரனைவிட கருப்பு; எனிஸிஹலோ? - என்று அழைக்கப்படுவாளா?.

முந்தைய பத்யங்களில் சொல்லப்பட்ட ஸ்ரீராயரின் தேகத்தில் உள்ள அங்கார அக்ஷதையை, இங்கு பல உவமைகள் கொடுத்து விளக்கியுள்ளார் ஸ்ரீதாஸர். வெண்மையான ஸ்ரீராயரின் தேகத்தில்,

கருப்பான அங்கார அக்ஷதையானது எப்படியிருக்கிறது என்றால், கீழ்க்கண்ட உதாரணங்களைப் போல உள்ளதாம்.

வெளுப்பான கங்கையில் கருப்பான யமுனை சேர்ந்ததைப் போல; கருப்பான துங்கா நதி, பாற்கடலில் சேர்ந்ததைப் போல; ஸ்ரீஹரியின் தேகத்தில் அனைத்து காலங்களிலும் நீலமாக தெரிகிறது. அழகான வெண்மையான ஸ்ரீசரஸ்வதி தேவிக்கு எப்போதும் முன் வந்து விழும் சுருள் முடிகள் போல; மங்களாங்கியான பார்வதி, ஹரனைவிட கருப்பு என்று சொல்லப்படுவாளா?

மத³வுயேரோது³ தே³வஜக³கே
ரத³னத³லி நஞ்சுண்டு ப²ணிகெ³
மத³வு மஹவிஷ கப்பு தோ³ஷவு நினகெ³யில்லெம்ப³
முத³தி³³ லோகத்ரயதி³³ தானே
ஒத³கி³³ தி³னதி³³ன பேள்வ தெரத³லி
ஸத³மலாத்மகராத³³ ராயர கீர்த்தி ஶோபி⁴பது³³ ||9

மதவுயேரோது தேவகஜகே - தேவகஜமான ஐராவதத்திற்கு மதம் பிடிக்கும்; பணிகெ - பாம்பிற்கு; ரதனதலி - வாயில் / பற்களில்; நஞ்சுண்டு - விஷம் இருக்கிறது; மதவு மஹவிஷ கப்பு தோஷவு - கருப்பாகவும், தோஷமாகவும் சொல்லப்படும் இந்த மதம், மகாவிஷம் இந்த இரண்டும்; நினகெயில்லெம்ப - உனக்கு இல்லை என்னும்; முததி - மகிழ்ச்சியில்; லோகத்ரயதி தானெ ஒதகி - மூன்று உலகங்களுக்கும் தானே சென்று தினமும் சொல்வதைப் போல; ஸதமலாத்மகராத - எப்போதும் தூய்மையானவரான; ராயர கீர்த்தி - ஸ்ரீராயரின் புகழ்; ஶோபிபது - ஒளிர்கிறது.

ஸ்ரீராயரை யானை, பாம்பிற்கு ஒப்பிட்டு அப்படிப்பட்ட கம்பீரத்துடன் இவர் இருந்தாலும், இவருக்கு மதம் / விஷம் என்னும் தோஷங்கள் இல்லை என்று புகழ்கிறார் ஸ்ரீதாஸர்.

தேவகஜமான ஐராவதத்திற்கு மதம் பிடிக்கும்; பாம்பிற்கு வாயில் / பற்களில் விஷம் இருக்கிறது; கருப்பாகவும், தோஷமாகவும் சொல்லப்படும் இந்த மதம் / விஷம் இரண்டும் உனக்கு இல்லை என்னும் மகிழ்ச்சியில், மூன்று உலகங்களுக்கும் தானே சென்று

தினமும் சொல்வதைப் போல, எப்போதும் தூய்மையானவரான, ஸ்ரீராயரின் புகழ் ஒளிர்கிறது.

ஸர்வ ஸம்பத³ நீடோ³கோ³ஸுக³
ஸர்வத⁴ர்மவ மாடோ³கோ³ஸுக³
ஸர்வவிக்⁴னவ களீயோகோ³ஸுக³ கார்யனேர்விகெகெ³
ஸர்வஜனரிகெ³ காமிதார்த்த²வ
ஸர்வரீ திலி ஸலிஸலோகோ³ஸுக³
ஊர்விதளதொ³ளு தானெ பெள³கோது³ அமலகு³ருகீர்த்தி ||10

ஸர்வ ஸம்பத நீடோகோஸுக - (பக்தர்களுக்கு) அனைத்து செல்வங்களையும் வழங்குவதற்காக; ஸர்வதர்மவ மாடோகோஸுக - அனைத்து தர்மங்களையும் செய்வதற்காக; ஸர்வவிக்னவ களியோகோஸுக - அனைத்து தடைகளையும் களைவதற்காக; கார்ய நேர்விகெகெ - அனைத்து காரியங்களையும் சரியாக நிறைவேற்றுவதற்காக; ஸர்வஜனரிகெ காமிதார்த்தவ - அனைத்து மக்களுக்கும் அவர்களின் இஷ்டார்த்தங்களை; ஸர்வரீதிலி - அனைத்து விதங்களிலும்; ஸலிஸலோகோஸுக - கொடுப்பதற்காக; ஊர்விதளதொளு - இந்த பூமியில்; அமலகுருகீர்த்தி - ஸ்ரீராயரின் தூய்மையான புகழ்; தானெ பெளகோது - தானே சென்று பரவும்.

ஸ்ரீராயரின் புகழானது, பக்தர்களுக்கு அருள்வதற்காகவே இந்த உலகம் முழுக்க பரவியிருக்கிறது என்கிறார் ஸ்ரீதாஸர்.

பக்தர்களுக்கு அனைத்து செல்வங்களையும் வழங்குவதற்காக, அனைத்து தர்மங்களையும் செய்வதற்காக, அனைத்து தடைகளையும் களைவதற்காக, அனைத்து காரியங்களையும் சரியாக நிறைவேற்றுவதற்காக, அனைத்து மக்களுக்கும் அவர்களின் இஷ்டார்த்தங்களை அனைத்து விதங்களிலும் கொடுப்பதற்காக, இந்த பூமியில் ஸ்ரீராயரின் தூய்மையான புகழ் தானே சென்று பரவும்.

இந்து³ மண்ட³ல ரோசியோ பா
ல்ஸிந்து⁴ ராஜன வீசியோ ஸுர
நிந்த³ரனொஜ்ர மரீ சியோ ஸுரதுரக³ ஸத்ருசியோ
கந்து³கொரளன கி³ரியோ ராக⁴
வேந்த³ர கு³ருக³ள கீர்த்தி பேள்வடே³

மந்த³பு⁴த்தி³கெ³ தோரத³தி³ந்த³ கீர்த்தி ராஜிபது³ ||11

இந்து மண்டல ரோசியோ - சந்திர மண்டலத்தின் ரேகையோ (ஒளியோ); பால்ஸிந்து ராஜன வீசியோ - பாற்கடலின் அலைகளோ; ஸுரனிந்த்ர - இந்திரனின்; வஜ்ர - வஜ்ராயுதத்தின்; மரீசியோ - (சக்தியோ) ஒளியோ; ஸுரதுரக - தேவலோக குதிரையின் (உச்சஸ்ரவஸ்); ஸத்ருசியோ - நல்ல குணமோ; கந்துகொரளன - ருத்ரதேவரின்; கிரியோ - மலையோ (இமாலய மலையோ); ராகவேந்த்ர குருகள - ஸ்ரீராயரின்; கீர்த்தி - புகழைப் பற்றி; பேள்வடெ - கூறினால்; மந்தபுத்திகெ - மந்தபுத்தி உள்ளவர்களுக்குக்கூட; தோரததிந்த - சொல்ல முடியாத அளவிற்கு; கீர்த்தி ராஜிபது - அவரது புகழ் புரிந்துவிடும்.

ஸ்ரீராயரின் புகழை, சந்திர மண்டலம், பாற்கடல், இந்திரனின் வஜ்ராயுதம், தேவலோக குதிரை, ருத்ரரின் மலை ஆகியவற்றுடன் ஒப்பிட்டு புகழ்ந்திருக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

ஸ்ரீராயரின் புகழானது - சந்திர மண்டலத்தின் ரேகையோ (ஒளியோ), பாற்கடலின் அலைகளோ, இந்திரனின் வஜ்ராயுதத்தின் சக்தியோ; தேவலோக குதிரையான உச்சஸ்ரவஸ்ஸின் நல்ல குணமோ, ருத்ரதேவரின் இமாலய மலையோ, ஸ்ரீராயரின் புகழைப் பற்றி கூறினால், மந்த புத்தி உள்ளவர்களுக்குக் கூட சொல்ல முடியாத அளவிற்கு அவரது புகழ் புரிந்துவிடும்.

நிடில நேத்ரன தெரதி³ ஸித ஸுர
தடினி யந்த³தி³ கௌரகா³தர
ஸ்படிகமணிமய பீட²த³ந்த³தி³ த⁴வள ராஜிபது³
மட²தொ³ளுத்தம மத்⁴யமண்டப
ஸ்புடித ஹாடகரத்ன முகுரத³
கடகமயவர பீட²த³லி கு³ருராய ஶோபி⁴ஸித³ ||12

நிடில நேத்ரன தெரதி ஸித - ருத்ரதேவரைப் போல வெண்மையான / தூய்மையான தேகம்; ஸுர தடினி யந்ததி - சுர நதியைப் போல; கௌரகாதர - வெண்மை; ஸ்படிகமணிமய பீடதந்ததி - வெண்மையான பீடத்தைப் போல; தவள ராஜிபது - இவரது ஒளி வீசுகிறது; மடதொளுத்தம - மடத்தில் உத்தமமான; மத்யமண்டப - மத்ய

மண்டபத்தில்; ஸ்புடித ஹாடகரத்ன முகுரத கடகமயவர பீடதலி - ஸ்படிக, ரத்ன மாலைகள் சூடிய, வைடூரியங்கள் கூடிய பீடத்தில்; குருராய ஸோபிஸித - குருராயர் அமர்ந்திருந்தார்.

ஸ்ரீராயரை மறுபடி இங்கு ருத்ரதேவருடன், கங்கையுடன் ஒப்பிட்டு பாடியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

ருத்ரதேவரைப் போல வெண்மையான / தூய்மையான தேகம். சுர நதியான கங்கையைப் போல வெண்மை; ஸ்படிக மணியப் போல வெண்மையாக இவரது ஒளி வீசுகிறது. மடத்தில் உத்தமமான மத்ய மண்டபத்தில், ஸ்படிக, ரத்ன, மாலைகள் சூடிய வைடூரியங்கள் கூடிய பீடத்தில், குருராயர் அமர்ந்திருந்தார்.

ஹரிய தெரத³லி லட்சுமி நிலயனு
ஹரன தெரத³லி ஜிதமனோஜனு
ஸரஸிஜோத³ர தெரதி³ ஸர்வத³ ஸ்ருஷ்டி காரணனு
மருதனந்தா மோத³காரியு
ஸுரபனந்தெ ஸுதா⁴கரனு தா
ஸுரர தருவரத³ந்தெ காமத³ நெனிப கு³ருராய ||13

ஹரிய தெரதலி லட்சுமி நிலயனு - ஸ்ரீஹரியைப் போல லட்சுமி உள்ளவன்; ஹரன தெரதலி ஜிதமனோஜனு - ஹரனைப் போல காமத்தை வென்றவன்; ஸரஸிஜோதர தெரதி - பிரம்மனை போல; ஸர்வத ஸ்ருஷ்டி காரணனு - பக்தர்களுக்கு ஞான, பக்தி, வைராக்கியங்களை படைத்துக் கொடுக்கிறார்; மருதனந்தா மோதகாரி - மருதனைப் போல (தென்றல்) மகிழ்ச்சியைக் கொடுப்பவர்; ஸுரபனந்தெ ஸுதாகரனு - இந்திரனைப் போல அமிர்தத்தைக் கொண்டவர்; தா - ஸ்ரீராயர்; ஸுரர தருவரதந்தெ - கல்பவ்ருக்ஷத்தைப் போல; காமத நெனிப குருராய - விருப்பங்களை நிறைவேற்றுபவரான ஸ்ரீராயர்.

அடுத்து, ஸ்ரீராயரை, ஸ்ரீஹரியிலிருந்து தொடங்கி பல்வேறு தேவதைகளுடன் ஒப்பிட்டு, இவரது குணங்களை பாடியிருக்கிறார் என்பதை பார்க்கலாம். இங்கு ஸ்ரீஹரி, லட்சுமிதேவி, சிவன், பிரம்மன், வாயுதேவர், இந்திரன் ஆகியோருடன் ஒப்பிட்டிருக்கிறார்.

ஸ்ரீஹரியைப் போல லட்சுமியைக் கொண்டவன். ஹரனைப் போல காமத்தை வென்றவன். பிரம்மனைப் போல படைப்பவன். மருதனைப் போல மகிழ்ச்சியைக் கொடுப்பவர். இந்திரனைப் போல அமிர்தத்தைக் கொண்டவர். கல்பவ்ருக்ஷத்தைப் போல விருப்பங்களை நிறைவேற்றுபவரான ஸ்ரீராயர்.

* ஸ்ரீஹரி - ஸ்ரீஹரி எப்படி ஸ்ரீலட்சுமிதேவியைக் கொண்டிருக்கிறாரோ, அப்படியே ஸ்ரீராயரும், ஞான பக்தி வைராக்கியம் என்னும் லட்சுமியை / செல்வத்தை வைத்திருக்கிறார்.
* ருத்ரர் எப்படி காமனை எரித்தாரோ, அதைப் போலவே ஸ்ரீராயரும் சன்யாசியாகி, காமத்தை வென்றிருக்கிறார் (இந்திரிய நிக்ரஹம் செய்திருக்கிறார்).
* பிரம்மன் எப்படி ஜீவர்களை படைக்கிறானோ, அதைப் போல ஸ்ரீராயர், பக்தர்களில் ஞான, பக்தி, வைராக்கியங்களை படைக்கிறார்.
* வாயு எப்படி தென்றல் மூலமாக மகிழ்ச்சியை கொடுக்கிறதோ, அதைப் போல ஸ்ரீராயர், பக்தர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறார்.
* இந்திரன் எப்படி அமிர்தம் வைத்திருக்கிறாரோ, அதைப் போல ஸ்ரீராயரும், ஞான அமிர்தத்தை வைத்திருக்கிறார்.

சித்தக³த அபி⁴லாஷத³ந்த³தி³
மத்தெ மத்தெ நவீன தா க⁴ன
உத்தமோத்தம லகுமியந்த³தி³ விப⁴வகாஸ்பத³னோ
மத்தெ சந்த்ரனதெரதி³ கு³ருவர
நித்யத³லி ஸுகளாதி⁴ நாத²னு
ம்ருத்யுயில்லத³ ஸ்வர்க்க³ தெரத³லி ஸுரபி⁴ ஸம்ப்⁴ருதனு ||14

சித்தகத - மனதில் இருப்பதான; அபிலாஷதந்ததி - ஆசைகளைப் போல; மத்தெ மத்தெ - திரும்பத்திரும்ப; நவீன தா கன உத்தமோத்தம - புதிதான, மிகச்சிறந்த; லகுமியந்ததி - லட்சுமியைப் போல; விபவகாஸ்பதனோ - செல்வத்தைக் கொண்டிருக்கிறான்; மத்தெ - பிறகு; சந்த்ரனதெரதி - சந்திரனைப் போல; குருவர - ஸ்ரீராயர்; நித்யதலி - எப்போதும்; ஸுகளாதி நாதனு - நல்ல களைகளை பொழிபவர்; ம்ருத்யுயில்லத ஸ்வர்க்க தெரதலி - மரணம் இல்லாத ஸ்வர்க்கத்தைப் போல; ஸுரபி ஸம்ப்ருதனு - காமதேனுவைக் கொண்டிருக்கிறார்.

இங்கு மேலும் சில ஒப்புமைகளை கொடுத்து, ஸ்ரீராயரின் மகிமைகளை விளக்கியுள்ளார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

மனதில் இருப்பதான ஆசைகளைப் போல, திரும்பத் திரும்ப புதிதான; மிகச் சிறந்த லட்சுமியைப் போல செல்வத்தைக் கொண்டிருக்கிறார். சந்திரனைப் போல ஸ்ரீராயர் எப்போதும் நல்ல களைகளை பொழிபவர்; மரணம் இல்லாத ஸ்வர்க்கத்தைப் போல காமதேனுவைக் கொண்டிருக்கிறார்.

க³க³னத³ந்த³தி³ குஜஸு ஶோபி⁴த
நிக³மத³ந்த³தி³ நிஶ்சிதார்த்த²னு
ரகு⁴குலேஶன தெரதி³ ஸர்வத³ ஸத்யபா⁴ஷணனு
நக³வரோத்தமனந்தெ நிஶ்சல
க³க³ன நதி³தெர பாபமோசக
முகி³லினந்த³தி³ சித்ரசர்யயெனிஸி தா மெரெவ ||15

ககனதந்ததி - வானத்தில்; குஜஸு ஶோபித - செவ்வாய் ஒளிர்வதைப் போல; நிகமதந்ததி - வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும்; நிஶ்சிதார்த்தனு - உண்மையான அர்த்தத்தை விளக்குகிறார்; ரகுகுலேஶன தெரதி - ஸ்ரீராமனைப் போல; ஸர்வத - எப்போதும்; ஸத்யபாஷணனு - உண்மையே பேசுபவர்; நகவரோத்தமனந்தெ - இமய பர்வதத்தைப் போல; நிஶ்சல - நிஸ்சலமானவர்; ககன நதிதெர - ஆகாய கங்கை நதியைப் போல; பாபமோசக - பாவங்களை போக்குபவர்; முகிலினந்ததி - மேகங்களைப் போல; சித்ரசர்யயெனிஸி - பலவிதமாக சஞ்சரிப்பவர் என்று சொல்லி; தா மெரெவ - தான் சஞ்சரிக்கிறார்.

இங்கு மேலும் சில ஒப்புமைகளை கொடுத்து, ஸ்ரீராயரின் மகிமைகளை விளக்கியுள்ளார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

வானத்தில் செவ்வாய் ஒளிர்வதைப் போல, வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் உண்மையான அர்த்தத்தை விளக்குகிறார். ஸ்ரீராமனைப் போல எப்போதும் உண்மையே பேசுபவர். இமய பர்வதத்தைப் போல நிஸ்சலமானவர். ஆகாய கங்கை போல பாவங்களை போக்குபவர். மேகங்களைப் போல பலவிதமாக சஞ்சரிப்பவர் என்று சொல்லி, தான் சஞ்சரிக்கிறார்.

ஸரஸிஜோத்ப[4]வனந்தெ ஸர்வத[3]
ஸரஸ விபு[3]த[4]ர ஸ்தோமவந்தி[3]த
ஸுரவரேந்த்[3]ரன தெரதி[3] ஸாஸிர நயனகாஶ்ரயனு
தருக[3]ளாரிய தெரதி[3] ஸந்தத
ஸுரக[3]ணாननனெனிப காலன
தெரதி[3] ஸந்தத குஜனரிகெ[3] தாபவனெ கொடு[3]திப்ப ||16

ஸரஸிஜோத்பவனந்தெ - பிரம்மனைப் போல; ஸர்வத - எப்போதும்; ஸரஸ விபுதர ஸ்தோமவந்தித - அனைத்து பண்டிதர்களாலும் / தேவதைகளாலும் வணங்கப்படுகிறார்; ஸுரவரேந்த்ரன தெரதி - தேவேந்திரனைப் போல; ஸாஸிர நயனகாஶ்ரயனு - 1000 கண்கள் கொண்டவர் (பக்தர்கள் அனைவரையும் பார்த்து அருள்கிறார் ஸ்ரீராயர்); தருகளாரிய தெரதி - கட்டைகளுக்கு எதிரியான அக்னியைப் போல; ஸந்தத - எப்போதும்; ஸுரகணாननனெனிப - சுரர்களுக்கு முகம் போல இருக்கிறார்; காலன தெரதி - எமனைப் போல; ஸந்தத - எப்போதும்; குஜனரிகெ - கெட்டவர்களுக்கு; தாபவனெ கொடுதிப்ப - கஷ்டங்களையே கொடுக்கிறார்.

இங்கு பிரம்மனில் துவங்கி, அடுத்து அஷ்ட திக் தேவதைகளை ஸ்ரீராயருடன் ஒப்பிட்டு, இவரது குணங்களை புகழ்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

பிரம்மனைப் போல எப்போதும் அனைத்து பண்டிதர்களாலும் / தேவதைகளாலும் வணங்கப்படுகிறார். தேவேந்திரனைப் போல 1000 கண்கள் கொண்டவர். கட்டைகளுக்கு எதிரியான அக்னியைப் போல எப்போதும் சுரர்களுக்கு முகம் போல இருக்கிறார். எமனைப் போல எப்போதும் கெட்டவர்களுக்கு கஷ்டங்களையே கொடுக்கிறார்.

கிழக்கு திசைக்கு அபிமானி - இந்திரன்
தென் கிழக்கு திசைக்கு அபிமானி - அக்னி
தெற்கு திசைக்கு அபிமானி - யம

* பிரம்மன் அனைத்து தேவதைகளாலும் வணங்கப்படுகிறர். அதே போல ஸ்ரீராயரும் தேவதைகளால் / பண்டிதர்களால் வணங்கப்படுகிறார்.

* தேவேந்திரன் 1000 கண்களைக் கொண்டவர். ஸ்ரீராயர் ஒரே சமயத்தில் அனேக பக்தர்களை பார்த்து அருள்வதால், அவருக்கும் 1000 கண்கள் என்று சொல்லலாம்.
* அக்னியை 'தேவதைகளின் முகம்' என்று சொல்கிறோம். அதைப் போலவே, ஸ்ரீராயரை வணங்கினால் அனைத்து தேவதைகளும் / ஸ்ரீஹரியும் மகிழ்கிறார் என்பதால் இவரையும் சுரமுக எனலாம்.
* எமன் கெட்டவர்களுக்கு கஷ்டங்களையே கொடுக்கிறார். ஸ்ரீராயரும் அப்படியே எனலாம்.

நிருத நிரருதியந்தெ மத்குரு
வர ஸதா நவவிப வனெனிபனு
வருண நந்த தி ஸிந்து ராஜித நமித ப லியுதனு
மருதனந்தெ ஸ்வஸத்வதா ரித
பரம ஸ்ரீபூ ரமண ஸேவக
ஹரன மித்ரன தெரதி மஹத னகோ ஸம்யுதனோ ||17

நிருத நிரருதியந்தெ - எப்போதும் நிரருதியைப் போல; மத்குருவர - நம்முடைய குருவரரான ஸ்ரீராயர்; நவவிபவனெனிபனு - பல செல்வங்களைக் கொடுக்கிறார்; வருணனந்ததி - வருணனைப் போல; சிந்துராஜித - கடலில் உள்ளவற்றைக் கொடுக்கிறார் (அபூர்வமான முத்து ரத்தினங்களை); நமித பலியுதனு - வணங்குபவர்களை காக்கிறார்; மருதனந்தெ - வாயுவைப் போல; ஸ்வஸத்வதாரித - அவர், ஸத்வ விஷயங்களையே அருள்கிறார்; பரம ஸ்ரீபூரமண ஸேவக - ஸ்ரீஹரியின் பரம ஸேவகர் (வாயு & ஸ்ரீராயர்); ஹரன மித்ரன தெரதி - குபேரனைப் போல; மஹதனகோ ஸம்யுதனோ - மிகப்பெரிய செல்வங்களை வைத்திருக்கிறார்.

ஸ்ரீராயரை அஷ்ட திக் தேவதைகளுடன் ஒப்பிடுவது தொடர்கிறது.

எப்போதும் நிரருதியைப் போல நம்முடைய குருவரரான ஸ்ரீராயர், பல செல்வங்களைக் கொடுக்கிறார். வருணனைப் போல கடலில் உள்ளவற்றைக் கொடுக்கிறார். தன்னை வணங்குபவர்களை காக்கிறார். வாயுவைப் போல அவர், ஸத்வ விஷயங்களையே அருள்கிறார். ஸ்ரீஹரியின் பரம ஸேவகர் (வாயு & ஸ்ரீராயர்); குபேரனைப் போல மிகப்பெரிய செல்வங்களை வைத்திருக்கிறார்.

தென்மேற்கு திசைக்கு அபிமானி - நிரருதி
மேற்கு திசைக்கு அபிமானி - வருண
வடமேற்கு திசைக்கு அபிமானி - வாயு
வடக்கு திசைக்கு அபிமானி - குபேரன்

* நிரருதியைப் போல ஸ்ரீராயரும் பக்தர்களுக்கு செல்வங்களை அருள்கிறார்.
* வருணன் (கடல்) தனக்குள் அபாரமான செல்வங்களை வைத்திருக்கிறான். அதைப் போலவே ஸ்ரீராயரும் ஞான, பக்தி, வைராக்கியங்களை தனக்குள் வைத்துக்கொண்டு அவற்றை பக்தர்களுக்கு அளிக்கிறார்.
* வாயுதேவரைப் போல ஸத்வ விஷயங்களையே உபதேசம் செய்கிறார்.
* குபேரனைப் போல ஸ்ரீராயரும் பக்தர்களுக்கு செல்வங்களை அருள்கிறார்.

ஈஶனந்தெ விபூ⁴திதா⁴ரக
பே⁴ஶனந்தெ களாஸூபூரண
கேஶனந்தெ ஜிதாக்ஷ நிர்ஜிதகாம ஸுப்ரேமா
வ்யாஸனந்தெ ப்ரவீண ஶாஸ்திர தி³
நேஶனந்த³தி³ விக³ததோ³ஷ ந
ரேஶனந்த³தி³ கப்ப காணிகெ நிருத கொளுதிப்பா ||18

ஈஶனந்தெ - ருத்ரரைப் போல; விபூதிதாரக - விபூதியைப் (செல்வம் / பகவந்தனின் கருணை) பூசியிருக்கிறார்; பேஶனந்தெ - சந்திரனைப் போல; களாஸூபூரண - பூர்ணமான களைகளைக் கொண்டவர்; கேஶனந்தெ - ப்ரஜாபதியைப் போல; ஜிதாக்ஷ - அமைதியானவர்; நிர்ஜிதகாம - இந்திரியங்களை வசப்படுத்தியவர்; ஸுப்ரேமா - அன்பானவர்; வ்யாஸனந்தெ - ஸ்ரீவேதவ்யாஸரைப் போல; ஶாஸ்திர ப்ரவீண - சாஸ்திரங்களில் வல்லவர்; தினேஶனந்ததி - சூரியனைப் போல; விகததோஷ - தோஷங்கள் அற்றவர்; நரேஶனந்ததி - ஒரு அரசனைப் போல; கப்ப காணிகெ நிருத கொளுதிப்ப - கப்பம், காணிக்கைகளை எப்போதும் பெற்றுக் கொண்டிருப்பார்.

இங்கு மேலும் சில தேவதைகளின் ஒப்பீடு நடந்திருக்கிறது என்பதை பார்க்கலாம்.

ருத்ரரைப் போல விபூதியைப் பூசியிருக்கிறார். சந்திரனைப் போல பூரணமான களைகளைக் கொண்டவர். ப்ரஜாபதியைப் போல அமைதியானவர். இந்திரியங்களை வசப்படுத்தியவர். அன்பானவர். ஸ்ரீவேதவ்யாஸரைப் போல சாஸ்திரங்களில் வல்லவர். சூரியனைப் போல தோஷங்கள் அற்றவர். ஒரு அரசனைப் போல கப்பம், காணிக்கைகளை எப்போதும் பெற்றுக் கொண்டிருப்பார்.

வடகிழக்கு திசையின் அபிமானி - ருத்ரர்

* ருத்ரர் விபூதியை பூசியிருக்கிறார். ஸ்ரீராயரும் தனக்குள் பகவந்தனின் விபூதி ரூபங்களை எப்போதும் தரித்திருக்கிறார்.
* சந்திரன் தன் 16 களைகளைக் கொண்டிருக்கிறான். அதைப் போல, ஸ்ரீராயரும் தன் கருணைப் பார்வை என்னும் களைகளைக் கொண்டிருக்கிறார்.
* ப்ரஜாபதி போல ஸ்ரீராயரும் அமைதியானவர்; இந்திரியங்களை வசப்படுத்தியவர்.

வனத[3]தெர ஸுரலோக தெரத[3]லி
அனவரத ஸுமனோபி[4]வாஸனு
இனன தெரத[3]லி இந்து தெரத[3]லி கமலகாஸ்ரயனு
வனஜ நேத்ரன தெரதி[3] நப[4]தெர
மினுகோ[3] ஸத்[3]விஜராஜரஞ்சித
கனக கவிதெய தெரதலம்பு[3]தி[4] தெரதி[3] தா ஸரஸ ||19

வனததெர - கார்மேகம் போல; ஸுரலோக தெரதலி - தேவலோகம் போல; அனவரத ஸுமனோபிவாஸனு - (நம் குருவானவர்) எப்போதும் நம் மனதில் நிலைத்திருப்பவர்; இனன / இந்து தெரதலி - சூரியன் சந்திரனைப் போல; கமலகாஸ்ரயனு - தாமரைக்கு ஆதரவு அளிக்கிறார்; வனஜ நேத்ரன தெரதி - தாமரைக் கண்ணனைப் போல; நபதெர - நட்சத்திரத்தைப் போல; மினுகோ - மினுப்பதான; ஸத்விஜ - திவ்யமான தேவதை; ராஜரஞ்சித - ஒளிர்பவரான; கனக கவிதெய தெரதலி - சிறந்த அறிஞரான; அம்புதி தெரதி - சிறந்த ஞானக் கடலாக; தா ஸரஸ - ஸ்ரீகுருவானவர் திகழ்ந்தார்.

இந்த பத்யத்திலும் ஸ்ரீராயரின் குணங்களை பல்வேறு பொருட்களுடன் ஒப்பிட்டு பாடியிருக்கிறார் ஸ்ரீதாஸர்.

கார்மேகம் போல, தேவலோகம் போல, நம் குருவானவர், நம் மனதில் எப்போதும் நிலைத்திருக்கிறார். சூரிய சந்திரனைப் போல தாமரைக்கு ஆதரவு அளிக்கிறார். தாமரைக் கண்ணன் போல நட்சத்திரத்தைப் போல மினுப்பதான திவ்யமான தேவதை இவர். ஒளிர்பவரான சிறந்த அறிஞரான, சிறந்த ஞானக் கடலான ஸ்ரீகுரு இவரே.

இனதெ கு³ண க³ளு நின்னொளிப்பவோ
க⁴னமஹிம நீனொப்³ப³ லோகக்கெ
கனஸிலாத³ரு காணெ கு³ருவர நின்ன ஹொரதின்னு
மனவசன காயக³ள பூர்வக
தனுவு மனி மொத³லாது³தெ³ல்லனு
நினகெ³ நீடிதெ³யித³கெ எனக³னுமானவினிதில்ல ||20

இனதெ குணகளு - எண்ணிக்கையற்ற குணங்கள்; நின்னொளிப்பவோ - உன்னில் இருக்கின்றன; கனமஹிம - அற்புதமான மகிமைகளைக் கொண்டவன்; நீனொப்ப லோகக்கெ - இந்த உலகில் நீ ஒருவனே; குருவர நின்ன ஹொரதின்னு - குருவரனே உன்னைத் தவிர வேறு யாரையும்; கனஸிலாதரு காணெ - நான் கனவில் கூட காண்பதில்லை; மனவசன காயகள பூர்வக - மனம், வாக்கு, தேகத்தினால் செய்த செயல்களை அனைத்தையும் மற்றும்; தனுவு மனி மொதலாதுதெல்லனு - தேகம், வீடு என என் அனைத்தையும்; நினகெ நீடிதெயிதகெ - உனக்கே சமர்ப்பித்தேன் இதற்கு; எனகனுமானவினிதில்ல - (நீ என்னை காப்பாய்) என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

நாம் செய்வது அனைத்தையும் ஸ்ரீராயருக்கே சமர்ப்பிக்கிறோம். நமக்கு அவரே கதி என்பதாக இந்த பத்யம் இருக்கிறது.

எண்ணிக்கையற்ற குணங்கள் உன்னில் இருக்கின்றன. அற்புதமான மகிமைகளைக் கொண்டவன் இந்த உலகில் நீ ஒருவனே. குருவரனே, உன்னைத் தவிர வேறு யாரையும் நான் கனவில் கூட காண்பதில்லை. மனம், வாக்கு, தேகத்தினால் செய்த செயல்கள் அனைத்தையும் மற்றும் என் தேகம், வீடு என அனைத்தையும் உனக்கே சமர்ப்பித்தேன். நீ என்னை காப்பாய் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

இது நாம் தினம்தோறும் சொல்வதான இந்த ஸ்லோகத்தின் கன்னட வடிவமாகவே இருக்கிறது என்பதை பார்க்கிறோம்.

காயேன வாசா மனஸேந்த்ரியைர்வா
புத்யாத்மனாவா ப்ரக்ருதே ஸ்வபாவாத் |
கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை
ஸ்ரீமன் நாராயணேதி ஸமர்ப்பயாமி ||

ஹரியு ப[4]குதர பொரெத[3] தெரத[3]லி
கு[3]ருவெ நின்னய ப[4]குத ஜனரனு
த[4]ரெய தளத[3]லி பொரெயோகோ[3]ஸுக[3] நின்ன அவதார
கொரதெயித[3]கேனில்ல நிஶ்சய
பரம கருணீயு நீனெ என்னனு
ஷிரதி[3] கரக[3]ளனிட்டு பாலிஸோ ப[4]குதபரிபாலா ||21

ஹரியு பகுதர பொரெத தெரதலி - ஸ்ரீஹரியானவர் தன் பக்தர்களை காப்பது போல; குருவெ நின்னய பகுத ஜனரனு - குருவே ராயரே, நீ உன் பக்தர்களை; தரெய தளதலி - இந்த பூலோகத்தில்; பொரெயோகோஸுக - காப்பதற்காக; நின்ன அவதார - உன் அவதாரம் ஆகியிருக்கிறது; நிஸ்சய பரம கருணீயு நினெ - நிச்சயமாக பரம கருணாளு நீயே; கொரதெயிதகேனில்ல - இதில் எனக்கு எவ்வித குறைகளும் இல்லை; என்னனு ஷிரதி கரகளனிட்டு - என்னை என் தலை மேல் கைகளை வைத்து; பாலிஸோ பகுதபரிபாலா - பக்தர்களை காப்பவனே, என்னையும் காப்பாயாக.

நம்மை காப்பதற்காகவே ஸ்ரீராயர் அவதாரம் செய்திருக்கிறார் என்று இங்கு சொல்கிறார் ஸ்ரீதாஸர்.

ஸ்ரீஹரியானவர் தன் பக்தர்களை காப்பது போல; குருவே ராயரே, நீ உன் பக்தர்களை இந்த பூலோகத்தில் காப்பதற்காக அவதாரம் செய்திருக்கிறாய். நிச்சயமாக பரம கருணாளு நீயே. இதில் எனக்கு எவ்வித குறைகளும் இல்லை. என்னை என் தலை மேல் கைகளை வைத்து, காப்பாயாக, பக்தர்களை காப்பவனே.

என்ன பாலக நீனே ஸர்வத[3]
நின்ன பா[3]லக நானெ கு[3]ருவர

என்ன நின்னொளு ந்யாயவ்யாதகெ க[4]ன்ன கு[3]ண நிதி[4]யே
ப[3]ன்ன ப[3]டிஸுவ ப[4]வதி[3] தொளலுவ
தன்னு நோடி[3] நோட[3]த[3]ந்த[3]தி[3]
இன்னு காயத[3]லிருவரேனாபன்ன பரிபாலா ||22

என்ன பாலக நீயே ஸர்வத - எப்போதும் என்னை காப்பவன் நீயே; நின்ன பாலக நானெ குருவர - குருவரனே, உன் மகன் நானே; என்ன நின்னொளு ந்யாயவ்யாதகெ - இதைத் தவிர வேறு ந்யாயங்கள் (விஷயங்கள் / பேச்சுக்கள்) எதற்கு? கன்ன குண நிதியே - அபாரமான குணங்களைக் கொண்டவரே; பன்ன படிஸுவ பவதி தொளலுவதன்னு - மிகவும் கஷ்டங்களைக் கொடுக்கும் சம்சாரத்தில் மூழ்கியிருப்பதை; நோடி நோடதந்ததி - பார்த்தும் பார்க்காததைப் போல; ஆபன்ன பரிபாலா - பக்தர்களை காப்பவனே; இன்னு காயதலிருவரேனு? - இன்னும் காத்திருப்பாயா?.

உன் பக்தனான என்னை காப்பாற்றுவதற்கு ஏன் இன்னும் தாமதம் என்று உரிமையுடன் ஸ்ரீராயரை வேண்டுகிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

என்னை எப்போதும் காப்பவன் நீயே. குருவரனே, உன் மகன் நானே. இதைத் தவிர வேறு ந்யாயங்கள் / பேச்சுக்கள் எதற்கு?. அபாரமான குணங்களைக் கொண்டவரே. மிகவும் கஷ்டங்களைக் கொடுக்கும் சம்சாரத்தில் நான் மூழ்கியிருப்பதை பார்த்தும் பார்க்காததைப் போல, இன்னும் காத்திருப்பாயா?.

நம்பி[3] ப[4]ஜிஸுவ ஜனகெ கு[3]ருவர
இம்பு[3]கொ[3]ட்டவரன்னு காயுவி
எம்போ[3] வாக்யவுயெல்லி போயிதோ தோரோ நீனத[3]னு
பி[3]ம்ப[3] மூருதி நீனே விஷ்வ கு[3]
டும்பி[3] என்னனு ஸலஹோ ஸந்தத
அம்பு[3]ஜோபம நின்ன பத[3]யுக[3] நமிபெனனவரத ||23

நம்பி பஜிஸுவ ஜனகெ - தன்னை நம்பி வணங்கும் பக்தர்களுக்கு; குருவர இம்புகொட்டவரன்னு காயுவி - குருவரரான ஸ்ரீராயர் அனுமதி செய்தவர்களை காக்கிறாய்; எம்போ வாக்யவுயெல்லி போயிதோ - என்னும் வாக்கியம் எங்கு போயிற்று?; நீனதனு - நீ அதனை; தோரோ -

காட்டுவாயாக; பிம்ப மூருதி நீனே - என் பிம்ப மூர்த்தி நீயே; விஷ்வ குடும்பி என்னனு ஸலஹோ - விஷ்வகுடும்பி என்பவனே என்னை காப்பாற்றுவாயாக; ஸந்தத அம்புஜோபம நின்ன பதயுக - எப்போதும் தாமரை போன்ற உன் இரு கால்களை; நமிபெனனவரத - நான் வணங்குவேன்.

கடைசியான இந்த இரு பத்யங்களில் தன்னுடைய பிம்பமூர்த்தியான ஸ்ரீகுரு ஜகன்னாத விட்டலனை வணங்குகிறார் ஸ்ரீதாஸர்.

தன்னை நம்பி வணங்கும் பக்தர்களை, குருவரரான ஸ்ரீராயர் சிபாரிசு செய்பவர்களை காக்கிறாய் - என்னும் வாக்கியம் எங்கே போயிற்று?. என் பிம்பமூர்த்தி நீயே. விஷ்வகுடும்பி என்பவனே என்னை காப்பாற்றுவாயாக. எப்போதும் தாமரை போன்ற உன் இரு கால்களை நான் வணங்குவேன்.

மாதெ தன்னய பா³லனாடி³த³³
மாதினிந்த³லி தானு ஸந்தத
ப்ரீதளாகு³வ தெரதி³ என்னய நுடி³த³³ நுடி³யிந்த³
தாத! நீனே எனகெ³ ஸர்வத³
ப்ரீதனாகு³வுத³³ய்ய காமித
தா³தகு³ரு ஜக³³ன்னாத² விட்டல லோல பரிபால ||24

தன்னய பாலனாடித மாதினிந்தலி - தன் குழந்தையானது பேசிய பேச்சுக்களால்; மாதெ தானு - தாயானவள்; ஸந்தத ப்ரீதளாகுவ தெரதி - மிகவும் மகிழ்வதைப் போல; என்னய நுடித நுடியிந்த - என்னை இயற்ற வைத்து, நான் இயற்றிய இந்த நுடிகளால்; தாத - தந்தையே. நீயே எனகெ ஸர்வத - நீயே எனக்கு எப்போதும்; ப்ரீதனாகுவுதய்ய - ப்ரியமாக இருக்க வேண்டும். காமித தாதகுரு - விரும்பியவற்றை கொடுப்பதான குருவான - ஜகன்னாத விட்டலனே; லோல பரிபால - தலைவனே; அனைவரையும் காப்பவனே.

இந்த கிருதியின் கடைசி சந்தியின் கடைசி பத்யத்தை தன் பிம்பமூர்த்தியான ஸ்ரீகுருஜகன்னாத விட்டலனுக்கு சமர்ப்பிக்கிறார் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர்.

தன் குழந்தையானது பேசிய பேச்சுக்களால் தாயானவள் மிகவும் மகிழ்வதைப் போல, என்னை இயற்ற வைத்து, நான் இயற்றிய இந்த நுடிகளால் தந்தையே நீயே எனக்கு எப்போதும் ப்ரியமாக இருக்க வேண்டும். விரும்பியவற்றைக் கொடுப்பதான ஜகன்னாத விட்டலனே. தலைவனே. அனைவரையும் காப்பவனே.

இத்துடன் ஸ்ரீகுரு ஜகன்னாத தாஸர் 9 ஸந்திகளில் இயற்றிய ஸ்ரீராகவேந்திர விஜயத்தின் தமிழ் விளக்கங்கள் முடிந்தன. ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

குருபூர்வ ஜகன்னாத தாஸஸ்யாமித தேஜஸ: |
தஸ்யபாதாப்ஜ ஸம்பூதா ரஜாம்ஸி ஷிரஸாவஹே ||

ஒந்தின கனஸினலி அப்பா ஹாகு அண்ணனவர தர்ஷன
அந்தெ அனு நயதி அண்ணனவரிந்த பாட பிரவசன
தந்தெ குருகோபால விட்டலதாஸரிந்த அங்கித ப்ரதான
முந்தெ குரு ஜகன்னாத விட்டலனெந்து அபிதான
திந்த ஸ்துதிஸிஹரு தேவ மங்களாங்க ஹரி விட்டலன ||

இதில் உள்ள சந்தேகங்களைக் களைய உதவிய என் குருவான ஸ்ரீஜாம்பவதிப்ரிய விட்டல தாஸருக்கும், ஹரிதாஸினியான திருமதி. ஜெயம்மா அவர்களுக்கும் முக்கியமாக கன்னடத்தில் இதன் உரையை சொல்லியிருக்கும் திரு. குரோம்பேட்டை ஸ்ரீதரன் சாருக்கும் மிக்க மிக்க நன்றிகள். இந்த அனைத்து பகுதிகளையும் கேட்டு வந்தவர்களுக்கும் மிக்க நன்றிகள்.

ஸ்ரீகுரு ஜகன்னாததாஸரின் மற்றும் ஸ்ரீராயரின் அருளும் நம் அனைவருக்கும் கிடைக்கட்டும் என்று இந்த கன்னட ஸ்ரீராகவேந்திர விஜய உபன்யாஸ மாலிகையை குர்வந்தர்கத பாரதிரமண முக்யபிராணாந்தர்கத ஸ்ரீஜகன்னாத கேசவனுக்கு சமர்ப்பணம் செய்கிறேன். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

பூஜ்யாய ராகவேந்திராய ஸத்யதர்ம ரதாயச
பஜதாம் கல்பவ்ருக்ஷாய நமதாம் காமதேனவே

***